தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண் 338

திருவேட்டை நல்லூர்
அய்யனார் பள்ளு

சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர்

சிரவையாதீனக் கவிஞர்

புலவர் ப. வெ. நாகராசன் பி.லிட்., விஷாரத்

வெளியீடு:

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்-613 009

1992] [விலை உரு. 26-00

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீடு எண்: 338

திருவேட்டைநல்லூர்
அய்யனார் பள்ளு

சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர்
சிரவையாதீனக் கவிஞர்
புலவர் ம. வெ. நாகராசன் பி.லிட்., விஷாரத்

வெளியீடு:

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர் - 613 009

1992] [விலை உரு. 26—00

நூற் பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	திருவேட்டைநல்லூர் அய்யனார் பள்ளு
பதிப்பாசிரியர்	:	புலவர் ப.வெ. நாகராசன் பி.லிட்., விஷாரத்.
வெளியிடுபவர்	:	திரு. தி. சண்முக ராஜேஸ்வரன் இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர் (பொ.) சரசுவதி மகால் நூலகம்
வெளியீட்டு எண்	:	338
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற்பதிப்பு
வெளியீட்டு ஆண்டு	:	1992 மார்ச்
தாள்	:	SPB 14.2 Kg.
நூல் அளவு	:	21 × 14 செ.மீ.
பக்கங்கள்	:	204
படிகள்	:	1200
எழுத்து	:	10 புள்ளி
அச்சிட்டோர்	:	ஸ்ரீ வேலன் பிரஸ், சிதம்பரம்
பொருள்	:	சிற்றிலக்கியம்
விலை	:	உரு. 26—00

வெளியீட்டாளர் முகவுரை

பள்ளு என்னும் சிற்றிலக்கிய வகை கி. பி. 16 ஆம் நூற்றாண்டு வாக்கில் தமிழில் தோன்றிய ஒரு பிரபந்த வகையாகும். பள்ளு வகை இலக்கியங்களில் தலைசிறந்ததாக முக்கூடற் பள்ளு விளங்குகின்றது. பற்பல பள்ளு இலக்கிய நூல்கள் இதுவரை அச்சுவாகனமேறித் தமிழார்வலர்க்கு விருந்தாகியுள்ளன. அவ்வரிசையில் 'திருவேட்டைநல்லூர் அய்யனார் பள்ளு' என்னும் இந்நூல் சரசுவதி மகால் நூலகத்தின் மூலம் இப்போது வெளிவருகின்றது.

இப் பள்ளு நூல் திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோவில் வட்டம் புளியங்குடிக்கு அருகில் உள்ள திருவேட்டை நல்லூர் என்னும் ஊரில் கோயில் கொண்டு விளங்கும் அய்யனாரைப் பாட்டுடைத் தலைவராகப் போற்றிப் பாடப்பெற்றதாகும். இப்பள்ளு இலக்கியத்தின் ஆசிரியர் பொன். சுப்பிரமணிய நாவலர் என்பவராவார்.

இந்நூல் 1882 இல் பாடி அரங்கேற்றப் பெற்றதாக ஓலைச் சுவடிக் குறிப்பின்மூலம் அறியமுடிகிறது.

சரசுவதி மகால் நூலகத் தமிழ்த்துறை ஓலைச்சுவடித் தொகுப்பில் இடம் பெற்றுள்ள 1865 ஆம் எண்ணிடப் பெற்ற ஓலைச்சுவடியே இப்பதிப்புக்கு அடிப்படையாக அமைந்த சுவடியாகும். இச்சுவடியினைச் சரசுவதி மகால் நூலகத்திற்குத் திருவேட்டைநல்லூரைச் சேர்ந்த ஆங்கிலப் பேராசிரியர் **திரு டி. எஸ். திருமலைவேலு** அவர்கள் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்கள். அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை அருமையான ஆராய்ச்சி முன்னுரையோடும் தகுந்த குறிப்புரையோடும் சொல்லடைவு முதலியவற்றோடும் சிறப்பான முறையில் **புலவர் ப. வெ. நாகராசன்** அவர்கள் பதிப்பித்திருக்கின்றார்கள். அவர்களுக்கு எனது நன்றியை உரித்தாக்கி மகிழ்கின்றேன்.

இதுபோன்ற பல அரிய நூல்கள் வெளிவருதற்கு நிதியுதவி புரிந்துவரும் நடுவண் அரசுக்கு எனது நன்றி.

இந்நூலை நன்முறையில் அச்சிட்டுத் தந்துள்ள **சிதம்பரம் ஸ்ரீ வேலன் அச்சகத்தாருக்கு** என் பாராட்டுக்கள்.

தமிழிலக்கிய ஆர்வலர்ளுக்கும் ஆய்வாளர்களுக்கும் இந்நூல் விருந்தாக அமைவது திண்ணம்.

தி. சண்முக ராஜேஸ்வரன் இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்
இயக்குநர் (பொறுப்பு)
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
20—3—92

Introduction

(Special Indroduction given by Thiru. T.S. Thirumalai velu, Professor of English, Government Arts College, Karur who is a native of Thiruvettanallur and the descendent of Kalingakone who founded the village and the Aiyanar deity in the present temple in the 18th century.)

It is quite rare to find a village in Tamilnadu without an Aiyanar Temple. Aiyanar Deity has gained so much importance along with the religious culture of Tamilnadu as the God stands for protecting the village and the village folks from evil spirits and black influences. It is no wonder that Swamy Thiruvettaiyanar happens to be the presiding deity of Thiruvettanallur situated about 2km south east of Puliankudi in Sankaran Koil taluk of Nellai district.

The deity was first consecrated by Kalingakone who was also the founder of the village. He had built the sanctum sanctoram and the tower above it. Arthamandapa and Manimandapa were added later by the concubine of the zamindar of Chockampatti Zamin. The Mani mandapa is called even to-day as Dhasimandapa in order to commemorate her memory. The significance of her service to the Lord is based on a miracle in which Aiyanar saved her from the thieves who tried to rob her of all her valuables when she was going near the temple precincts on her way to the palace of Chockampatti Zamindar.

The Lord is also called by other names such as Thirukoodapathy, Thiruvettapotri and Potriyappan. Potriyappan means a venerable sire. There are twenty one pandis (கோயில் பந்திகள்) in the temple. Each pandi is owned by the descendents of Kalingakone who are called Komarathans or the communes of the divine seat. The respective god of the seat is the household deity of the respective families. Aiyanar or Potriyappan is the chief of the deities.

Aiyanar is consulted for all good doings by the people of the village. It is called Utharavu or divine decree. It is done as a last resort. People are not satisfied with the prosperous period in their horoscopes. They are satisfied only when the Lord gives his permission.

'Utharavu' is similar to the Greeks' divine oracle. But the Greek came to know the divine oracle only through the priest or in otherwords, the priest in Greece consulted Apollo and conveyed the oracle to the people. Here, the people consult the Lord directly in the following manner.

Tuesdays and Fridays, before dawn in the morning and after dusk in the evening, are the auspicious days and times for consulting the oracle in the temple. People go there at the prescribed days and times with purity of mind and body and stand before Therku Sannathi (The Holy Gate in the South) and speak out their grievances before the Lord and wait for his decree (order). If a sound made by a KEVULI (Wall Lizard) is heard, on the left hand side and from the SouthWesterly direction of the people, it is a good omen. If it is heard minutes after the prayerful. request was made by the people the matter will be very much successful. If it

takes time, the matter will be successful after a good amount of struggle and caution. If it is heard on the wrong side, it is a bad omen and the matter should be dropped If the sound is not heard at all, it means that the time is not ripe for the matter and the people may come after sometime. In my own personal experience, I find that the Oracle thus consulted becomes hundred percent successful.

The temple, combines Saivism and Vaishnavism into one as Aiyanar's birth is behind the legendary story of Basmasura. The Demon received a powerful boon from Lord Siva through his severe penance and wanted to destroy Siva himself with it. Terrified by the Demon's act, Lord Siva asked Lord Vishnu's protection who destroyed the Demon after taking an Avatar of Mohini. Siva was enamoured by Mohini and as a result, Aiyanar was born. The story is sung in Villupattu in every temple festival and people do Samiyattam (a dance in divine trance) with the traditional weapons of their respective deities in front of the Villupattu group while the performance is going on. It is a rare scene to be seen which unites divinity and the folk art into one.

Mohini is worshipped in the temple as Pattukkari which means the silkenclad goddess or the lady as good and beautiful as silk. Mohini is sublime in beauty. She is placed beside Lord Vishnu who is called Arasumagan or Arassamman. He holds the regality of the temple and is worshipped with much devotion and piety next only to Aiyanar. Perumal, another name of Maha-Vishnu is the deity who is doing penance in order to promote the welfare of the people. Lord Siva too is in a mystic form. He is called Ladasinnu or Thavasi natha in this

temple. It may be the Gin deity which is worshipped by other religious men especially by Muslims and Turks. Sangili Poothathan, the pet son of Lord Aiyanar could be found on the left hand side circumbulation (Vadakku Prakaram) of the temple.

Lord Muruga in this temple is called Athimuruga who does not carry his spear (வேல்). He is structured in an archetypal form. The Man-hunter and the Maid-hunter who guard the maingate of the temple are the royal hunters of Lord Aiyanar.

Punga tree (*Dalbergia arborea*) is the holy tree of the temple. The temple has two tanks, one for the devotees and another for laymen and animals.

Maha Sivarathri is the annual temple celebration and this is known as மாசிப்படைப்பு. Besides, there are the marathon worship as and when people decide which is called Koilkodai and celeberated for 3 days.

The History of the village and the temple speak of the history of the life of Kalingakone. He is remembered by the Kalingan Tank which he had made and which exists today in between the temple and the village. His statue is found in front of Arthamandapam of Lord Aiyanar with folded hands. The appearance of the statue in all aspects speaks of his royal position which he had commanded with king Pooliththevan of Nelkattumcheval King Pooliththevan is the first Indian freedom fighter. Besides, from an evidence which is found at the second tier of Sankaranainar Temple in Sankaran Kovil, it is presumed that Kalingakone might have helped King Pooliththevan in constructing the Gopuram of Sankara nainar Temple.

Kalingakone is an emigrant to the present place from Arcot (Tamilnadu) in the early part of the 18th century. Though no reliable evidence could be found, authentic informations might be available if inscriptions in and around Thiruvettanallur and Government archives are analysed. The fact that Thiruvettanallaur was a head village for 18 villages shows clearly the eminence of Kalingakone as a Feudal Lord before and after his migration. However as folklore, Kalinga Kone's migration is sung in Villuppattu in all functions of the temple and of the village which is a special feature for the people. Before we go briefly into the history of Kalingakone, let us peep into the history of Gingey kingdom which has some bearing on it.

Gingey kingdom was founded by Anandakone, a Yadava in the early part of the 13th century. Kalingakone's ancestors might have been powerful lords in the court of king Anandakone. The Hindu Kingdom fell with the fall of King Desingh in the 17th century and Arcot came under the regality of the Nawabs. It is learnt from the Villusong that Kalingakone wielded power as a trustworthy vassel and chief of the Yadavas in the court of the Nawabs and having his headquarters at Ayarpadi which was at the bank of the Palar river in Arcot.

The story in the Villusong further goes on to say that the Nawab's daughter and Kalinga kone's daughter had altercations over baling drinking water from the royal well one day and the Yadava girl accused the Muslims of as meat eating ruffians. As the princess could not bear the insult, she made a complaint to the Nawab. The Nawab on his part wanted Kalingakone

and his men to be meat eaters. He had arranged a royal function for it. The Yadavas who resisted this insult collected their retinue with Kalingakone as their head and made an exodus towards the South. Though the fleeing Yadavas were chased by the Nawab's army, they were protected by the chastity of Kalingakone's wife and the spate in the Palar river. They had reached the present place because they had found that Pandiya kingdom was comparitively peaceful and secure from invasions by alien religious rulers.

Kalingakone and his men reached a place in between the spherical rock (உருண்டைப்பாறை) and the shepherdess rock (இடைச்சிப்பாறை) which is situated about one kilometre northeast of Thiruvettanallur and camped. Immediately they saw a bright torch flame moving towards them from the north. They thought that it would be the Nawab's army chasing. But one of Kalingakone's sons got divine inspiration and assuaged their fear as that it was Lord Muruga of the hoary past (ஆதி முருகன்) who was coming with his torch to protect them from all evils. That day was the last Friday of the Tamil month Aippasi. It is celebrated with offerings every year till date.

Kalingakone was accompanied by his three sons namely Sankarakone, Gnaniakone and Periakone and slso by two sons of his sister namely Pandiakone and Sonayakone. Chera, Chozha and Pandia deities worshipped in the temple are the brothers-in-law's deities. Kalingakone has established a tradition in which brothers-in-law are given the first honour in all festivals in the temple and in the village next only to Periakone.

Each of Kalingakone's three sons were given three vocations. The first was given the right to decide upon

the professional disputes and look after agricultural works. He was more authoritative and wielded more power than the other two brothers and helped to bring peace and amity in the village. The second son Gnaniakone was given the job of looking after the rituals the maintenance and offerings in the temple. He was also acting as the high priest in the temple till a potter came and offered himself to the Lord. Eversince the potters' families in the village are doing the offering services to Aiyanar on ordinary days. On special occasions, the brahmin priests take charge of the rituals.

The last son Periakone was educated and was appointed by Kalingakone as the administrative head and charge-de-affairs of the village. He was given the first honour in all temple festivals and functions in the village by the other two elder brothers and brothers-in-law. He presided over village commitees during disputes and pronounced his verdict. It was implemented by the other two elder brothers and brothers-in-law. This practice is continued even today. My grand father was the Periakone in the last generation. Besides, it was during my grand father's tenure, i. e. in June 1882 that this Pallu was presented in the Temple in a forum of learned audience by the poet, the poet is mentioned in the Manuscript as Pon. Subramanian while he is remembered as Sivagiri Subramanya Desikar by the public of the village.

By appointing the youngest son as the head of the village, Kalingakone has achieved yet another social order which is a feat of social stratification. In addition to the decentralisation of powers in the village administration, his social strategy was to make the weaker sections dominate the stronger ones with regard to authority and

possessions. Though many attempts were made in the bygone years to overpower Periakone in village administration by the vested interests in the elder brothers' families, they proved futile and the divine pronouncement of Kalingakone withstood them all.

The founding of the present Aiyanar temple yet peaks of another story which took place in Kalingakone's life time. After forming the village conveniently and settling his men comfortably, Kalingakone tendered his cows in the nearby dry Mountain (வரட்டுமலை) in the Western Ghats. He used to bring to the village everyday from the mountain pots full of milk with his men. A Pungatree-root which was lying on their way at the place where the present sanctum sanctoram is constructed, would knock him down and the milk would spill on the root. That happened for several occasions and the irate Kalingakone started cutting the roots one day. While he was doing it, blood came oozing out from the roots. He got divine inspiration and knew that something must have been hidden under the roots. He dug the ground and found the Aiyanar Statue along with his consorts Deviyal and Thirunama Azhaki. He consecrated them in the sanctum sanctoram of the temple which we find today and added other deities and brought the temple to the present shape. The statues unearthed by Kalingakone were replaced by the present ones at a later date. The old ones could be found even today under a pecpal tree in the Southwest boundary of the temple. The temple, is being reconstructed now as per agama sastras. The temple is maintained by the Hindu religious endowmen board of Tamil Nadu Government.

Kalingakone in his lifetime laid the village in a proper order and sank many irrigation tanks. The main

கலிங்கக்கோன்

(கோயிற்சிற்பம்)

tank is called Kalingan tank which commemorates the memory of the founder of the village and the Aiyanar Temple.

The site where the village is now situated had been forest area once. The Zamindars of Chockampatti and Nelkattum Cheval had been treating Kalingakone and his descendents with much respect because of their honesty, integrity and piety. The area around happens to be the border area of the erstwhile Trivancore royal power and there had been places for elephant tending in the vicinity of the village which is even today identified as "Yanaikuppam". Oldmens' urns are found around this village in certain places which show that the place might have been inhabited by the tribals of early ages. The present Arithavanachiyamman Temple which is worshipped today by the people of Thiruvettanallur had been worshiped by the people of Kerala in the name of Ammachi amman. There had been a temple tank to the west of the cremation ground of the village which was called Mayandi Mukil Theppakkulam. It has been reclaimed in course of time and converted into paddv fields of the Kalingan tank. It is said that the Mayandi Temple is the present Palavesakkaran Temple.

The people of Thiruvettanallur are mostly agriculturists. Except the village artisans and craftsmen, the yadavas dominate the population. There is one Kshathiya family and many Pulavar families.

The pulavars of Thiruvettanallur need special mention. They are well versed in Tamil literature and ethics. They move from place to place and even country to country and spread Tamil language and culture among people. They call themselves Wandering Minstrels or Yathiraivasi.

In the last century Vadakasi pulavar and Appavu pulavar were scholars with divine blessings (Katatsha-vidwans). Appavuppulavar was an adept in composing extempore and inspired verses. Such a poet could bless or spoil anybody through his poems.

Some pulavars were also magicians. They learn magic and jugglary from Lalgudi Pitchai Aiyar alias Annakutti Aiyar. They call their magic Peedambara Jala Viddai because Pitchai Aiyar was very reverently called Peethambara Dhari. In the beginning of this century, Pandiappulavar was both a magician and Katatsha Vidwan. There was one Muthukkaruppa pulavar and Rathnamurthy Asari who excelled in dramatic art. Mookaiah Asari was proficient in poetic art especially in Tamil prosody.

I owe much to my kinsmen in the village namely-Mr Chellappakone (former stage actor) and Mr. I.R. Ramaiakkone (a divine) who helped me to recover this palmleaf manuscrpt from Mr. Arasappap pulavar of Thiruvettanallur. Mr. Chellappakone and Mr. Ramaiah-kone are the descendants of Kalingakone's brothers-in-law. Arasappap pulavar's ancestors were renowned Tamil scholars and his father Vellayappap pulavar was thefirst wandering minstrel or yathiraivasi in the village.

It would be ingratitude if I do not thank Pulavar P.V. Nagarajan-a well known scholar in Manuscripto-logy. He is a multilinguist and an expert in editing Tamil literature. He is having many good publications to his credit already. He is the Adheena Vidhvan of Siravai Adheenam of Coimbatore District and now working at Tamil University, Thanjavur. This pallu is edited by him with the help of a single palmleaf manu-

script. The notes alongwith the scholarly preface make this edition very useful not only to the public but also to the research scholars. I thank him wholeheartedly.

I thank on behalf of the people of Thiruvettanallur Thiru M. Sadasivam, Director of Saraswathy Mahal and the staff of the library for bringing out this Prbhandham as a Saraswathy Mahal edition.

Karur
24-6-91

T. S. THIRUMALAIVELU

பதிப்புரை

பள்ளின் தோற்றம்

பள்ளு என்னும் சிற்றிலக்கிய வகை கி.பி. 16 ஆம் நூற்றாண்டுவாக்கில் தமிழில் தோன்றிய ஒரு பிரபந்த வகை ஆகும். ஆனால் பள்ளைப்பற்றிக் குறிப்பிடும் ஆய்வாளர் பலர் தங்கள் ஆய்வைச் சிலப்பதிகாரத்தில் கூறப்பெற்ற விருந்திற்பாணி, ஏர்மங்கலம், முகவைப்பாட்டு போன்றவற்றில் பிற்காலப் பள்ளு நூல்களுக்கான வித்துகள் இருப்பதாகச் சொல்லித் தொடங்குவர். எந்த ஒரு பொருளையும் மிகப் பழமையுடையதாகக் காட்டினால் அதன் மதிப்பு உயரும் என்னும் ஓர் அபிமான உணர்வே இதற்குக் காரணம்.

சிலம்பின் உழவியற் பாடல்கள்

உண்மையில் நாடுகாண் காதை காட்டும் விருந்திற்பாணி தான் என்ன? "கடைசியர் கடுக மயக்கும், கள்ளையுண்டு தொலைத்ததனால் உண்டான பண்நிறத்திற் சேர்ந்து பழகிப் போகாத பாட்டு"[1] என்பதே அது. வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள பள்ளியர் தம் உடலுழைப்பின் வருத்தம் தெரியாமலிருப்பதற்காக வெறிப்புனலுண்டு பாடுவர் என்பதே இது. இது நாட்டுப்புறப் பாடல்களில் தொழிற் பாடல்களுள் அடங்கும். இவ் விருந்திற்பாணிக்குப் பாடுபொருள், யாப்பு, செய்யுள் எண் முதலிய வரையறைகள் இல்லாமையின் இது பிரபந்தங்களின்பாற்படாது.

அடுத்து ஏர்மங்கலத்தைக் காண்போம். "செந்நெற் கதிரோடே அறுகையும் குவளையையும் கலந்து தொடுத்த மாலையை மேழியிலே கட்டிப் பாரை இரண்டாகப் பிளப்

---

1. சிலம்பு. நாடுகாண் 127-131 அடியார்க். உரை
2. ,, ,, 132-135 ,,

பாரைப் போலப் போற்றுவார் தொழப் பொன்னேர் பூட்டி நின்றோரர் ஏரைப் பாடும் ஏர்மங்கலப் பாட்டு" இது ஏர்மங்கலம் ஆகிய இது புறப்பொருள் பாடாண் திணையைச் சேர்ந்த குடைமங்கலம்,[1] வாள் மங்கலம்,[2] மண்ணுமங்கலம்[3] போன்றதோர் புறத்துறையே ஆகும். மன்னனுக்குரிய துறைகளுக்கொப்ப உழவர்களுக்கும் உரைக்கும் மரபை வேளாண் வாகை,[4] கிணை நிலை[5] (இதனைக் களவழி வாழ்த்து என்பார் அடியார்க்கு நல்லார்[6]) என்னும் புறத் துறைகளால் அறியலாம். ஆக, இதனைப் பொன்னேர்பூட்டி நின்றோருடைய ஏரை வாழ்த்திப் பாடும் ஒரு தனிப்பாடல் எனக் கொள்ளலே தக்கதாம். இதன் பாடுபொருள் ஏரின் சிறப்புரைத்து வாழ்த்தல் ஆகும். இதற்கு யாப்பு வரையறை ஏதும் இல்லை.

இனி முகவைப்பாட்டிற்கு வருவோம். இதனை அடியார்க்கு நல்லார். "நெல்லை அரிந்து போரிட்டார் சூட்டைக் கடா விடுதலாலுண்டான முகவைப்பாட்டு" எனக் கூறி, "ஆவது பொலிபாடுதல்; முகக்கக் கொடுத்தலின் முகவை ஆயிற்று"[7] என விளக்குவார். இங்கும் பாடுபொருள், யாப்பு, பாடல்களின் எண்ணிக்கை முதலியன வரையறுக்கப்படாமையின் இதனைச் சிற்றிலக்கியவகை எனல் பொருந்தாது.

விருந்திற் பாணி

இவற்றுள் முதலாவதாகிய விருந்திற் பாணியை ஓரளவு கலம்பக உறுப்பாகிய பள்ளுடன் இணைத்துச் சிந்திக்கலாம். கடைசியர் நாற்று நடுவதைப் பற்றிய பாடலாகக் கலம்பகத்தில் இவ்வுறுப்பு அமைகிறது. வண்ணச்சரபம் தண்டபாணி

---

1. புறப்பொருள் வெண்பாமாலை பாடாண். 34
2. ,, ,, 35
3. ,, ,, 36
4. ,, வாகைப். 11
5. ,, ,, 32
6. சிலம்பு. நாடுகாண் காதை 138–139 அடியார்க். உரை
7. ,, 136–137 ,,

சுவாமிகளின் மயிலாசலக் கலம்பகம், சென்னைக் கலம்பகம் ஆகியவற்றிலும், எவ்வுளூர் இராமசாமிச் செட்டியார் இயற்றிய திருவிடைமருதூர்க் கலம்பகத்திலும், சிரவைக் கந்தசாமி சுவாமிகளின் திருப்பேரூர்க் கலம்பகத்திலும் பள்ளு இடம் பெற்றுள்ளது. அப் பகுதிகள் வருமாறு:

"...... மயில மால்வரை அருவி நீர் மிக வந்து பாயும் நல் வயலிலே, ஏரார் உழவர் களித்து மையல்கொண்டேப்ப மிட்டு வந்து அடுப்பதால் இனித்த மொழிகள் பேசிச் சரசத்திணங்கி நாழிகை போக்குறீர்; காரார் மென்குழல் சரியப் பெரிய களப முலைகள் குலுங்கிடக் கவிழ்ந்து நிமிர்ந்து நாற்றை எடுத்துக் கையாண்டிடுமின் பள்ளீரே".[1]

" . கழனித் தொகையில் நடுகைக் கிறங்கிக் காலங் கடத்துங் கடைசியீர்! மையேந் தவிர்கண் வெருட்டும் செங்கனி வாய்வக்/கணையும் நிறுத்திடீர்; வளர்ந்த / நாற்று இதன்று/ இளந்தையாத லின்ம டங்கிக் கசங்க மிதிக்கொணாது; ஐயோ உழவர் தம்மை மயக்கி அவர்கைப் பறம்பும் தடுக்கிறீர்; அகன்று போகாமல் நெருங்கி டாதெடுத்து அணிகுழம் பாமற் பதிமினே"[2].

" ..... மருத வானவன் புனித மாமலை அருவி யாம்நீர் பொதுளிப் பாயுந்தண் வயலிலே வாதார் களமர் மிகவும் களித்து மைய லூற்றுவந்து உறைதலான் மதர்த்த வசனம் உரைத்துச் சரச வகையிற் பொழுது போக்குவீர்! சூதார் பெரிய முலைகள் குலுங்கத் தொகுத்த கூந்தல் சரிந்திடத் தொடர்ந்து நிமிர்ந்து நாற்றை எடுத்துச் சுருக்காய் நடுமின் பள்ளீரே"[3]

"...... ஒப்பில் காஞ்சியம் புண்ணி யப்புனல் உவந்து பாய்ந் திடும் கழனியில் சித்தம் உவந்துபள் ளர்க னிந்துசி ரித்து வந்து வந்து அடுப்பதால் சிலுக்கி லும்தரு பிலுக்கி லும்விழிச் சிமிட்டி லும்காலம் போக்குறீர்; மைத்த குழல்கள் அவிழ்ந்து வியர்வை

1. மயிலாசலக் கலம்பகம் 93
2. சென்னைக் கலம்பகம் 98
3. திருவிடைமருதூர்க் கலம்பகம் 19

மழையில் நனைந்திட வல்லைநும் வளைகள் அலம்பிட நாற்றை
எடுத்துநீர் வைப்பீர் கைகளாற் பள்ளீரே".[1]

இப்பாடல்களின் பாடுபொருள் நடுகையாக இருப்பதுடன் இவை நாட்டுப்புற இசைக்கேற்ற தாழிசைகளாகவும் விளங்குகின்றன. பள்ளு நூல்களிலும் இத்தகைய சிந்துகள் பெரும்பாலும் இடம் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக முக்கூடற் பள்ளில் ஏழும் (128-134), வையாபுரிப்பள்ளில் பதின்மூன்றும் (173, 174, 176-186), செங்கோட்டுப்பள்ளில் ஒன்பதும் (802-810), கண்ணுடையம்மன் பள்ளில் பதினாறும் (91-106), இந்தத் திருவேட்டைஅய்யன் பள்ளில் இருபத்துமூன்றும் (137-159) இவ்வகையைச் சேர்ந்த பாடல்களாகும். பள்ளியர்கள் நாற்று நடும்போது பாடும் பாடல்களாக இவை அமைகின்றனவேயன்றிப் பள்ளின் பொருள்தொடர்புக்கு இவை இன்றியமையாதன அல்ல. இந் நடுகைச்சிந்துகளை முற்றிலுமாக விட்டு விட்டுப் படித்தாலும் பள்ளின் கதைத் தொடர்ச்சி அறுபட்டு விடாது. இதனால் பள்ளில் விருந்திற் பாணியைப் போன்ற ஒருசில பாடல்கள் இடம் பெற்றாலும் அவை இவ்வகை இலக்கியத்தின் முழுமைக்கு ஓர் இன்றியமையாத உறுப்பாக இல்லை என்பது தேற்றம்.

19 ஆம் நூற்றாண்டிற்குப் பின் தோன்றிய கலம்பகங்களில்தான் பள்ளு ஓர் உறுப்பாக உள்ளது. பள்ளு இலக்கியம் பரவலாகப் பெருகிய பிறகு அதன் தாக்கத்தால் இவ்வுறுப்பு கலம்பகத்தில் இடம் பெற்றுள்ளது என்பது தெளிவு.

ஏர்மங்கலம்

அடுத்த ஏர்மங்கலம் ஏரின் சிறப்புரைத்தல், ஏரை வாழ்த்துதல்,ஏரின் சிறப்புரைத்து வாழ்த்தல் என மூன்று வகையாக அமையலாம். பெரும்பாலும் இது தனிப்பாடலாலான ஒரு துறையே எனக் கண்டோம். உழவர்களின் வாழ்வியல் நூல் எனப்படும் பள்ளுகளில் ஏர்மங்கலப் பாடல்களே இடம் பெறவில்லை என்பது ஒரு வியப்பான உண்மை. உழவர்

1. திருப்பேரூர்க் கலம்பகம் 93

நாளோர் பூட்டினர் என்னுமிடத்தில் இத்துறையில் சில பாடல்களைப் பாடி இருக்கலாம். இங்கில்லாவிட்டாலும் பிரபந்தத்தின் இறுதியில் வாழ்த்திலாவது-குறைந்த பட்சம் ஒரு கண்ணியை-ஏர்மங்கலமாக அமைக்க நல்ல வாய்ப்பு இருந்தும் ஏனோ பள்ளு நூலாசிரியர்கள் பாடவில்லை. பள்ளு நூல் ஆசிரியர் எவரும் ஏர்மங்கலத்தைப் பற்றி நினைத்துக்கூடப் பார்க்கவில்லை என்பதையே இது ஐயமறக் காட்டுகிறது.

முகவைப்பாட்டு

அடுத்த முகவைப்பாட்டு என்பதோ களத்தில் சூடடிக்கும் போது பாடப்படும் பொலிப்பாட்டாகும். பள்ளில் இத்தொழில் விரித்துரைக்கப்படாததால் இத்தகைய பாடல்களுக்கு இடமில்லாமல் போயிற்று. எனவே முகவைப்பாட்டிற்கும் பள்ளாகிய சிற்றிலக்கிய வகைக்கும் தொடர்பு ஏதும் இல்லை. இவ்வாறாகச் சிலப்பதிகாரத்தில் நாடுகாண் காதையில் பள்ளேசலாகிய பிரபந்தத்திற்குரிய எவ்விதக் கருவையும் காண இயலவில்லை என்பதே உண்மை.

பல்வரிக் கூத்தும் பள்ளும்

ஓர் ஆய்வாளர், "உரையாசிரியர் அடியார்க்குநல்லார் வரிப்பாட்டை விளக்கும்போது ஆடும்பள்ளி, அழகுடைய பள்ளி ஆகிய இருவரைப் பற்றிக் கூறுகிறார். இவர்களில் முன்னவள் செயல்திறனும், பின்னவள் கவர்ச்சியியல்பும் கொண்டவள் என்ற குறிப்புகள் உணர்த்தப்படுகின்றன. இவற்றைக்காணில் அடியார்க்கு நல்லார் காட்டும் பள்ளியர் இருவரும் பள்ளுகளில் இடம்பெறும் மூத்தபள்ளி, இளையபள்ளி ஆகியோரின் முன் தோன்றல்களாக எண்ணலாம்"[1] என்கிறார். இந்த அரிய கண்டுபிடிப்பைச் சற்று ஆழமாகப் பார்க்கலாம்.

சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையின் 13 ஆம் அடியில் பயின்றுவரும் பலவகைக் கூத்திற்கு விளக்கஉரை வரைகையில் முதலில் அவை வென்றிக்கூத்து, வசைக்கூத்து, விநோதக் கூத்து என மூவகைப்படும் எனக்கூறி ஒவ்வொன்றையும்

---

1. தமிழ் இலக்கியக் கொள்கை 6, பக் 87.

விளக்குகிறார். இறுதியில் வரி எட்டு வகைப்படும் எனத் தன் கோளாகக் கூறி, "கண்கூடு காண்வரி உள்வரி புறவரி கிளர்வரி ஐந்தோடு ஒன்ற உரைப்பில் காட்சி தேர்ச்சி எடுத்துக் கோள்என மாட்சியின் வருஉம் எண்வகை நெறித்தே" என்னும் நூற்பாவை மேற்கோள் காட்டுகிறார். இதுவே அடியார்க்கு நல்லாரின் சொந்தக் கருத்தாகும்.

தொடர்ந்து பிறர்கோள் கூறலாக, "இவ்வரி என்பதனை பல்வரிக் கூத்து என்பாரும் உளர்" எனக் கூறி ஒரு நீண்ட கலிவெண்பாவை மேற்கோள் காட்டுகிறார். அதில் இந்த ஆய்விற்குத் தொடர்புடைய பகுதியைக் காண்போம்.

" ....
கிழவன் கிழவியே கிள்ளும் பிறாண்டி
அழகுடைய பள்ளி[1] விகடாங்கம் திகழ்செம்பொன்
அம்மனை பந்து கழங்காடல் ஆலிக்கும்
விண்ணகக் காளி விறற்கொந்தி அல்லாத
வாய்ந்த தனிவண்டு வாரிச்சி பிச்சியுடன்
சாந்தம் உடைய சடாதாரி ஏய்ந்தவிடை
தக்கபிடார் நிர்த்தம் தளிப்பாட்டுச் சாதுரங்கம்
தொக்க தொழில்புனைந்த சோணாண்டு மிக்க
மலையாளி வேதாளி வாணி குதிரை
சிலையாடு வேடு சிவப்புத் தலையில்
திருவிளக்குப் பிச்சி திருக்குன் றயிற்பெண்டு
இருண்முகத்துப் பேதை இருளன் பொருமுகத்துப்
பல்லாங் குழியே பகடி பகவதியான்
நல்லார்தம் தோள்வீச்சு நற்சாழல் அல்லாத
உந்தி அவலிடி ஊராளி யோகினிச்சி
குந்திவரும் பாரன் குணலைக்கூத்து அந்தியம்போது
ஆடுங் களிகொய்யும் உள்ளிப்பூ ஐயனுக்குப்
பாடும்பாட்டு **ஆடும் படுபள்ளி** நாடறியும்

---

1 இங்கு டாக்டர் அய்யரவர்களின் பாடம் அழகுடைய **பண்ணி** என்பதே. பள்ளி என்பது பாடபேதமாகத் தான் காட்டப் பெற்றுள்ளது. (பக். 88)

கும்பீடு நாட்டம் குணாட்டம் குணாலையே
துஞ்சாத சும்மைப்பூச் சோனக மஞ்சரி
ஏற்ற ஊழைமை பறைமைமுதல் என்றெண்ணிக்
கோத்தவரிக் கூத்தின் குலம்."[1]

இம்மேற்கோளை மேலெழுந்தவாரியாகப் பார்த்தாலே அழகுடைய பள்ளிக்கும் (இப்படியே பாடங்கொண்ட போதிலும்) ஆடும்படு பள்ளிக்கும் தொடர்பேதும் இல்லை என்பதும், இந்த இரண்டிற்கும் இடையே வேறுவகையான வரிப்பாடல்கள் பல இடம் பெற்றுள்ளன என்பதும் தெற்றென விளங்கும். இவர்கள் இருவரை மட்டும் சக்களத்திகளாக்கி விட்டால் இடையிலுள்ள பிச்சி, அயிற்பெண்டு, இருள்முகத்துப் பேதை போன்றவர்களையெல்லாம் யாருக்கு மணமுடிப்பது? மேலும் இம்மேற்கோள் பாடலில் மூத்தவள் (முதலில் குறிப்பிடப்படுபவள்) அழகுடைய பள்ளிதான். ஆடும்படுபள்ளி (ஆய்வாளர் கருத்துப்படி செயல்திறன் மிக்கவள்) இளைய வளே ஆகிறாள். ஆய்வாளர் கொண்ட மூத்தாள், இளையாள் முறைவைப்பிற்குக் கூட இம்மேற்கோள் சான்றாக வில்லை.

பண்ணைக்காரனிடம் நல்ல செல்வாக்குள்ள மூத்த பள்ளியைச் செயல்திறன் மிக்கவளாகவும், கணவனின் அன்பை மட்டும் நம்பி வாழும் இளையவளைக் கவர்ச்சியியல்பு கொண்டவளாகவும் காட்ட முயலுதல் எப்படியேனும் அதிகாரத்தில் உள்ளவர்களைக் கைக்குள்போட்டுக்கொள்வதே அறிவுடைமை என்னும் இன்றைய நடைமுறைச் சிந்தனைக்குப் பொருந்தலாம்; ஆனால் அறத்தோடு கூடிய பண்டைய இலக்கியக் கொள்கைக்குச் சற்றும் பொருந்தாது. மேலும் பள்ளர்கள் அனைவரும் இரு மனைவியருடன்தான் வாழ்ந்தனர் எனச் சற்றும் ஐயத்திற்கு இடமின்றி நிலைநாட்டப் பெற்றால்தான் பெயர்மாத்திரத் தால் பள்ளி எனப்படுபவர் இருவரையும் ஒரு பள்ளனுக்குக்

---

1. சிலம்பு. அரங்கேற்றுகாதை 13 அடியார்க். உரை, மேற்கோள்

மனைவியராக்க முயலலாம். அழகுடையபள்ளி, ஆடும்படுபள்ளி ஆகிய இரண்டும் தனித்தனியான - ஒன்றற்கொன்று தொடர் பற்ற - இரு வேறு வரிப் பாடல்களாகும் என்பதே உண்மை.

தொல்காப்பியப் புலனும் பள்ளும்

"தெரிந்த மொழியால் செவ்விதிற் கிளந்து" என இளம் பூரணராலும், "சேரி மொழியால் செவ்விதிற் கிளந்து" எனப் பேராசிரியராலும் பாடங் கொள்ளப்படும் தொல்காப்பியச் செய்யுளியலின் 233 ஆம் நூற்பா புலன் என்னும் செய்யுளைக் கூறுவதாகும். ஒரு முறை காதில் கேட்ட அளவில் பொருள் விளங்கும் பாடல்கள் புலன் எனப்படும் என்பதே இதன் கருத்து. "புலனாவது பொருள் விளங்கியிருப்பது"[1] என்பது வீரசோழிய உரை. "தொல்காப்பியர் கூறும் புலன் தனிப் பாடலுக்கே உரியதாம்"[2] என்னும் அறிஞர் அடிகளாசிரியர் அவர்களின் ஆய்வுரை கவனமாகக் கருதத்தக்கது.

தொல்காப்பிய நூற்பா பள்ளு, குறவஞ்சி போன்ற இலக்கிய வகைகளை நினைந்து யாக்கப்பட்டதல்ல. தொல் காப்பியர் காலத்தில் - ஏன் உரையாசிரியர்கள் காலத்தில் கூட - இத்தகைய இலக்கியங்கள் தோன்றவே இல்லை. எனவே சேரிமொழி என்னும் பாடபேதத்தை மலையிலக்காகக் கொண்டு எளிய தனிப்பாடலாகிய புலனை ஒரு பிரபந்தமாகக் கருதிக் குழம்ப வேண்டியதில்லை.

பழந்தமிழில் பள்ளு இல்லை

தொல்காப்பியம், சங்க இலக்கியம், சிலப்பதிகாரம். இவற்றின் உரைகள் ஆகியவற்றிலிருந்து திண்ணமாகத் தெரிவது இரண்டு செய்திகளே:-

1. அக்காலத்தில் வேளாண்மை சிறப்புடைய முதற் றொழிலாக இருந்தது.

---

1. வீரசோழியம் 149 உரை
2. தொல்காப்பியம் - செய்யுளியல் - தமிழ்ப் பல்கலைக் கழகம், பக். 432

2. உழுதொழிலோடு தொடர்புடைய நாட்டுப்புறப் பாடல்கள் - பெரும்பாலும் தனிப்பாடல்களாகிய இசைப்பாடல்கள் - நிறைய வழக்கில் இருந்தன.

இச் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு பள்ளேசலைப் போன்ற தெளிவான வடிவத்தைப் பெற்ற ஓர் இலக்கிய வகைக்குக் கரு இருக்கிறது எனக் கூறுதல் சங்க காலத்தில் சந்திரன் இருந்ததால் அக்கோளிற்குச் செலுத்தப்படும் விண்வெளிக் கப்பலும் இருந்திருக்க வேண்டும் என்பதைப் போன்ற வாதமேயாகும்.

உழத்திப்பாட்டின் உண்மை

பள்ளைப்பற்றிக் கூறும்போதெல்லாம் அடுத்து நினைக்கப் படுவது கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் தோன்றிய பன்னிருபாட்டியலில் இடம் பெற்றுள்ள உழத்திப்பாட்டின் இலக்கணம் ஆகும். உழத்திப்பாட்டின் இலக்கணம்தான் என்ன?

"புரவலற் கூறி அவன்வா ழியஎன்று
அகல்வயல் தொழிலை ஒருமை உணர்ந்தனள்
எனவரும் ஈர்ஐந்து உழத்திப் பாட்டே".[1]

என்பது மூலம். பாட்டுடைத் தலைவனை முதலில் வாழ்த்திய பிறகு, உழத்தி ஒருத்தி வேளாண் தொழிலில் சிறப்பாக வல்லமை பெற்றாள் என்னும் செய்தியைப் பத்துப்பாடல்களில் பாடுவது உழத்திப்பாட்டு என்னும் இலக்கியம் ஆகும் என்பது இதன் கருத்து. இப்பாடல்கள் ஆசிரிய விருத்தமாக இருக்க வேண்டும் என்பதனை நூற்பா வைப்புமுறையால் அறியலாம். இவ்விலக்கணத்திற்குரிய இலக்கியம் இப்போது அச்சிலோ அல்லது ஓலைச்சுவடிகளிலோ இருப்பதாகத் தெரியவில்லை.

குறிப்பிட்ட பாடுபொருள் ஒன்றைப்பற்றி யாப்பில் பத்துப்பாடல்கள் பாடுவது பதிகம் எனப்படும். இந்த உழத்திப் பாட்டும் அதனைச் சேர்ந்ததே. பன்னிருபாட்டியல் கூறும்

1. பன்னிருபாட்டியல் 216

அறுபத்தெட்டு வகையான சிற்றிலக்கியங்களில் உழத்திப்பாட்டு (216), ஊர் விருத்தம் (178), குறத்திப் பாட்டு (217, 218), செங்கோல்விருத்தம் (178), செருக்களவஞ்சி (201), நயனப்பத்து 215), நாட்டு விருத்தம் (178), பணைமுலைப் பத்து (215) பரி விருத்தம் (178), யானை விருத்தம் (178), வாள் விருத்தம் (178), வில் விருத்தம் (178), என்னும் பதினான்கும் பதிகத்தின் விகற்பங்களே ஆகும். அரி பிறப்பு என்பது திருமாலின் பத்து அவதாரங்களையும் (188), தசாங்கப்பத்து என்பது ஓர் அரசனுக்குரிய பத்து அரசியற் சின்னங்களையும் (140) ஒரே யாப்பில் பாட்டிற்கொன்றாகப் பாடுவதாகும். ஒரு பதிகமே அந்தாதியாக அமைந்தால் அது ஒருபா ஒருபஃது எனப் பெயர் பெறுகிறது. (219)

ஒரு பொருளைப் பற்றி ஒரு தனிப் பாடலைப் பாடிய புலவன் அடுத்து ஒரு பொருளையே பற்றிப் பத்துப் பாடல்களை ஒரே யாப்பில் பாடுவது இயல்பான வளர்ச்சியாகும். சங்க காலத்திலேயே பதிற்றுப்பத்திலும், ஐங்குறுநூற்றிலும் இப்பதிக அமைப்பைக் காண்கிறோம். பதிற்றுப்பத்தின் நான்காம் பத்தும், ஐங்குறுநூற்றின் தொண்டிப் பத்தும் (171-180) அந்தாதித் தொடை பெற்று ஒருபா ஒருபஃதாக விளங்கக் காணலாம். இவை இலக்கிய வகைகளின் பரிணாம வளர்ச்சியைக் காட்டுகின்றன.

முதலில் ஒரு தலைவனை வாழ்த்த வேண்டும்; பிறகு உழவியல் தொழிலில் ஒருத்தி வல்லமை பெற்று விளங்குகிறாள் எனல் வேண்டும் என்னும் உழத்திப் பாட்டிற்குரிய பாடு பொருளே பள்ளு இலக்கியங்களுள் இடம்பெறவில்லை என்பதைப் பார்க்கவேண்டும். நடுகைச்சிந்துகள் பள்ளியரின் தொழில் திறமையைப் போற்றவில்லை; ஆனால் அவை பள்ளர்களின் காமக் களியாட்டங்களையே சித்தரிக்கின்றன. கலம்பக உறுப்பாகிய பள்ளுத் தாழிசையும் சரியாகப் பணி புரியாத பள்ளியர்களை ஒழுங்காக வேலை செய்யுமாறு கூறுவதையே பாடுபொருளாக உடையது. இது உழத்திப்

பாட்டிற்கு நேர் எதிர்மறையான பொருண்மை என்பதே உண்மை.

பொருண்மையாலோ செய்யுள் எண்ணிக்கையாலோ பள்ளேசலாகிய சிற்றிலக்கியத்திற்கும் பன்னிரு பாட்டியலின் உழத்திப்பாட்டிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஆனால் பலர் இதனைச் சிந்தித்ததாகவே தெரியவில்லை. பேராசிரியர் ந.வீ. செயராமன் அவர்கள், "பள்ளு நூலாசிரியர்களிடையேயும் பள்ளுநூல் பதிப்பாசிரியர்களிடையேயும்கூட இக் குழப்பங்கள் நேர்ந்தன. மாந்தைப் பள்ளு நூலாசிரியர் தாம் பாடிய பள்ளு நூலின் விநாயகர் துதியில் 'பார் கொண்டகன உழத்திப்பாட்டியம்ப' என்று பாடுகின்றார். செண்பகராமன் பள்ளின் பதிப்பாசிரியர் மரியஜான் காலிங்கராயன் 'பள்ளும் உழத்திப்பாட்டும் ஒன்றே எனத் தெரிகிறது' என ஆய்வுரை வழங்கினார். சிறந்த பதிப்பாசிரியரும் ஆய்வாளருமாகிய வையாபுரிப்பிள்ளையும்கூட, குருகூர்பள்ளின் முன்னுரையில் 'உழத்திப்பாட்டுஎனக் கூறப்படுவதுதான் பள்ளுப்பிரபந்தமாதல் வேண்டும்' என அறுதியிட்டுரைத்தார். வையாபுரிப் பள்ளின் முகவுரையில் தளவாய்புரம் அருணாசலம். "96 பிரபந்தங்களில் ஒன்றாகிய உழவர்பாட்டின் இனமாகும்" என்று இனமாக்கிக் காட்டினார். இங்ஙனம் நூலாசிரியர்களையும்* பதிப்பாசிரியர்களையும் பாட்டியலார் குழப்பத்தில் ஆழ்த்தினாலும், உழத்திப்பாட்டு என்பதும், பள்ளு என்பதும் வேறு வேறாய் இருவகைச் சிற்றிலக்கியங்கள் என்பதும், உழத்திப் பாட்டையும், பள்ளையும் ஒரேவகைச் சிற்றிலக்கியமாகக் கருதுவது எவ்வகையாலும் பொருந்தாது என்பதும் தெளிவாக அறியத்தக்க செய்திகளாகும் "[1] என விளக்கியிருப்பது உளங்கொளத்தக்கதாம்.

---

* பள்ளு நூலாசிரியர்கள் இவ்வகை இலக்கியத்தை உழத்திப் பாட்டு எனக் கூறும் இடங்களில் அதனைப் பள்ளியரைப் பற்றிய பாடல்களை உடையபிரபந்தம் என இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாகக் கொண்டு பொதுப்பொருள் கூற வேண்டும். அங்கு அது பாட்டியற் கலைச்சொல் ஆகாது.

1. பள்ளு இலக்கியம், பேரா.ந.வீ. செயராமன், பக்.18-19

கலித்துறைப் பாட்டியலில் கலப்படம்

உழத்திப்பாட்டு என்னும் ஓர் இலக்கியமில்லாத இலக்கணத்தையும், திருவாரூர்ப் பள்ளு முதலான அதுவரை இலக்கணந்தோன்றாதிருந்த ஒரு சிற்றிலக்கிய வகையையும் கண்ட ஒருவர் இவ்விரண்டையும் இணைத்து உழத்திப் பாட்டே பள்ளாகும் எனக் கூறும் நான்கு கட்டளைக் கலித்துறைகளை நவநீதநடனாரின் நவநீதப் பாட்டியலில் மிகைப் பாடல்களாக நுழைத்து விட்டார். அக் காரிகைகள் வருமாறு:–

"கடவுள் வணக்கம் உழத்திய ரும்குடும் பன்வரல்ஒன்று
அடைமுறை நாடும் வளம்குயில் கூமழைக் காம்கூறிஓர்ப்
படுமா றுவரல் சிறப்புள் துறைத்தலை வன்வரல்கூப்
படுமவன் அன்னாள் உரப்பல் வெளியாம்பண்
ணைச்செயலே

வினாச்சொலல் ஆயன் வருவிக் கவரல் தகைமுதலாள்
தனாதுஉரை கேட்டுக் குடும்பன் கிடையிருந் தான்எனவந்து
அனான்தொழு மாட்டப் புலம்பல்முற் பள்ளிகூழ்
கொண்டுவரல்

சொனான்அவள் மன்னித்தற் கேட்கவேண் டற்கு
மறுத்திடலே

சூள்அவ னைமீட்பு அவனைப் பணிவித்து உழவர்உழக்
காளை வெருள்பளை பாயப் புலம்பல் எழுந்துவித்தல்
ஆள்அத் தலைவற்கு உணர்த்தல் நடல்விளை செப்பம்
செய்நெல்

நீள அளத்தல் முதற்பள்ளி கூவுஏசல் மூட்டவையே

இவ்வம யங்களில் பாட்டுத் தலைவன் பெருமைஅங்கங்கு
ஒவ்விய சிந்து விருத்தம் விரவி வரத்தொடர்பு
செவ்விதிற் பாடும் அதுஉழத் திப்பாட்டு பள்ளும்என்பர்
நவ்வி எனக்கண் மடவீர் பிறவிதம் நாட்டுவரே".

இக்காரிகைகள் நவநீதப்பாட்டியலைச் சேர்ந்தன அல்ல என்பதை மிக எளிதில் பின்வரும் வலிமைமிக்க சான்றுகளால் சற்றும் ஐயத்திற்கு இடமின்றி உணரலாம்.

1. கலித்துறைப் பாட்டியலுக்குப் பழைய உரைகள் இரண்டு உள்ளன. இவை டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் நூலகத்தில்

மூன்று சுவடிகளில் உள்ளன. (சுவடி எண்கள் 387ஏ, 480, 704ஏ)[1] இவையன்றி மூலம் மட்டும் உள்ள சுவடி ஒன்றும் அங்கு உள்ளது[2] இச் சுவடிகள் நான்கிலும் ஒன்றில்கூட இம் மிகைப் பாடல்கள் காணப்படவில்லை. ஏதாவது ஒன்றில் இருந்திருந் தாலும் உ.வே.சா. நூல் நிலையத்தின் நவநீதப் பாட்டியல் பதிப்பில் இவை இடம் பெற்றிருக்கும். ஆனால் மேற்படி பதிப்பில் இக்காரிகைகள் காணப்படவில்லை. எனவே இச்சுவடி கள் அல்லது இவற்றின்முன்படிகள் - எழுதப்பட்ட காலத்தில் இந்த இடைச்செருகல் நிகழவில்லை என்பது தேற்றம்.

2. நவநீதப்பாட்டியல் பதினான்காம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது. அப்போது தமிழில் இன்றைய வடிவில் பள்ளு என்னும் இலக்கிய வடிவமே தோன்றவில்லை. ஆதிப்பள்ளே பதினாறாம் நூற்றாண்டில் தான் தலைகாட்டு கிறது. (முன்பு இருந்து அழிந்து போயிருக்கலாம் என்பது வெற்றூகமே) எனவே இந் நூற்பாக்கள் பதினான்காம் நூற்றாண்டில் தோன்றியிருக்க முடியாது. சில பள்ளுகள் தோன்றிய பிறகே இக் காரிகைகள் நுழைக்கப்பட்டிருக்க வேண்டும். 1732-இல் தோன்றிய சதுரகராதியில் பள்ளின் இலக்கணம் உரைநடையில் உள்ளது. அது நன்கு பரவியுள்ள ஓர் அகராதியாகும். இவ் வுரைநடை இலக்கணமே கட்டளைக் கலித்துறைகளாக்கப்பட்டு நவநீதப்பாட்டியலில் சேர்க்கப் பெற்றிருக்க வேண்டும். இப்போது கிடைக்கும் நவநீதப் பாட்டியல் பதிப்புகளோடு ஓலைச் சுவடிகள் காகிதச் சுவடிகள் போன்ற அனைத்தையும் நன்கு ஆராய்ந்தால் இந்த இடைச் செருகல் எப்போது எந்த இடத்தில் நடைபெற்றது என அறிய வாய்ப்பு உண்டு. எப்படியும் நவநீதப்பாட்டியல் மூலத்தில். பள்ளுக்கு இடமில்லை என்பது உறுதி.

---

1. தமிழ்ச் சுவடிகளின் நாமாவளி, உ.வே.சா. நூல்நிலையம் பக். 62

2. நவநீதப்பாட்டியல்-டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம் பக். V

பள்ளைக் கூறும் முதல் பாட்டியல்

சதுரகராதிக்குப் பிறகு தோன்றியிருக்கலாம் எனக் கருதப்படும் "பிரபந்தத் திரட்டு" என்னும் பாட்டியல் நூலில் பள்ளுக்கு இலக்கணம் காணப்படுகிறது. அது வருமாறு:—

"மாதர் இருவர் இறைவன்நாடு மீறுதிணை
ஓதுநதி மேகம்மழை ஒள்இறைவன் நீதியாம்
நெல்மாடு கோட்டை(யொடு) நாற்றிடல் நின்றுஏசல்
அன்னசிந்து பண்ணைவிசித் ரம்"[1].

இதில் பள்ளிற்குரிய பெரும்பான்மையான முக்கிய உறுப்புகளும், உரிய யாப்பாகிய சிந்து என்பதுவும் கூறப்பட்டுள்ளன. இவ்வாசிரியர் இவ்விலக்கிய வகையைப் பள்ளு என்னும். பெயரால் குறிப்பிடாமல் பண்ணை விசித்திரம் என்கிறார். இவ்வாறு வழக்கமான பெயரை விட்டுவிட்டுப் புதியதாக ஒரு பெயரைப் படைத்துக் கூறுதல் இவருக்கு இயல்பு. அனுராக மாலையைத் துனிவிசித்திரம் எனவும் (நூற்பா 6). குறவஞ்சியைக் குறியறி சிந்து எனவும் (நூற்பா 18), மறக்கள வஞ்சியை முரண்வஞ்சி எனவும் (நூற்பா 29) இவர் புதுப் பெயரிட்டு வழங்குவதால் இவர் போக்கை அறியலாம்.

சுட்டிச் செல்லும் சுவாமிநாதம்

சற்றேறக்குறைய இதே காலத்தில் தோன்றிய இலக்கண நூலாகிய சுவாமிநாதம் இவ் விலக்கிய வகையை

"இலங்குகுறம் மறம்பள்ளு நாடகங்கள் பிறவும்
ஏற்றுபிர பந்தமதாம்"[2]

எனப் பெயரளவில் சுட்டினாலும் இது நாடக வகையைச் சேர்ந்தது எனத் தெளிவாக்குகிறது.

விரித்துக்கூறும் பிரபந்த தீபிகை

பல பள்ளு நூல்களுக்குப் பிறப்பிடமாகிய தென்பாண்டி நாட்டில்—1849ஆம் ஆண்டு — இயற்றப்பெற்ற பிரபந்த

1. பிரபந்தத்திரட்டு 19
2. சுவாமிநாதம் 166

தீபிகை என்னும் பாட்டியல் நூல் பள்ளின் இலக்கணத்தை மிக விரிவாகக் கூறுகிறது. அது வருமாறு:

"கடவுளர் வணக்கமும் பள்ளன்இரு பள்ளியர்கள்
வரவும்அவர் கள்பெருமையைக்
கருதிஅவர் முறைவர லாறுநாட் டுளவளம்
கரியகுயில் கூவவேட்டல்
கார்மாரி வேட்டல்தெய் வத்துதிம ழைக்குறிகள்
கழறல்நீர் ஆற்றின்வரவு
காண்டலும் அதன்சிறப் புடன்அதற் கிடையிடைஅ-
கப்பொருள் துறைகள்கூறி
இடமுறும் பண்ணையின் தலைவன்வர வும்பள்ளி
இருவர்முறை யீடுகண்டே
இளையபள் ளியைவெகுண் டோதலும் பள்ளனும்
இல்விட்டு வெளிவருதலும்
ஏர்நிலம்வி ரைவினாவல் அவன்அது ரைத்திடல்பின்
இடையரைவ ருத்தல்அவர்கள்
இசைவிளம் பல்மூத்த பள்ளிமுறை யிடல்பள்ளன்
ஏர்கிடையி னின்றுவரல்போல்
திடமு(றவ ரும்போது) தொழுவினில் மாட்டல்(அவன்)
திகைத்துப் புலம்பல்அன்பு
சேர்பள்ள னுக்குஅடிசில் கொடுமூத்த பள்ளிவரல்
தீமைஅவ ளோடுரைத்தல்
தீர்க்கும்வகை வேண்டல்அதை மறுத்தல்பின் சூளுறச்
செய்தல்பண் ணைத்தலைவனைச்
சீருடன்வ ழுத்திவிடு தல்விரை மாடுசஞ்
சீவமும் எடுத்து (மொழிதல்)
வடம்அற்று எருதுபாய வேகண்ட பள்ளியர்
மனத்துயர் தவி(ர்)த்தெழு(தல்)
வருபண்ணை யானறிதல் நாறுநடல் விளைகதிர்
மணிகொய்த டித்தளத்தல்
வருமூத்த பள்ளிமுறை யீடுபள் ளியர்ஏசல்
மன்னுசிந் (தொடு) விருத்த

வகைவிரவி நாயகன் பெருமையைக் கூறியே
வரும்உழத் திப்பாட்டிதே."1 *

பல பள்ளு இலக்கியங்களைப் பார்த்து அவற்றின் அமைப்பை மிக விரிவாக விளக்கும் இவர் வழக்கில் இல்லாத உழத்திப்பாட்டு என்னும் பெயருக்கு வாழ்வளிக்கவோ அல்லது சதுரகராதியை மலையிலக்காகப் பின்பற்றியோ இதுவே உழத்திப்பாட்டு என்கிறார். இது சதுரகராதியால் நேர்ந்த குழப்பமாகவே இருக்கலாம்.

இதுகாறும் காணப்பெற்ற சான்றுகளால் இன்றைய பள்ளேசலுக்குப் பழைய இலக்கண இலக்கியங்களில் மூலம் இல்லை என்பது உறுதியாகிறது. இவ்வகைப் பிரபந்தம் பதினாறாம் நூற்றாண்டிற்குப் பிறகே கருக்கொண்டு உருப் பெற்றதாகும். அதனால்தான் பதினேழாம் நூற்றாண்டிற்குப் பிறகு தோன்றிய பாட்டியல் நூல்களில் மட்டுமே இதற்கான தெளிவான இலக்கணம் இடம் பெற்றுள்ளது.

தலபுராணமும் பள்ளும்

பள்ளைப்பற்றிப் பேசும்போது ஆய்வாளர்கள் தவறாமல் கச்சியப்பமுனிவரின் திருப்பேரூர்ப்புராணத்தில் இடம் பெற்றுள்ள பள்ளுப்படலத்தைக் குறிப்பிடுவதை ஒரு வழக்கு மாகக் கொண்டுள்ளனர். ஒருவர், "புராண இலக்கியங்களில் 'பள்ளுப் படலம்' இணைக்கப் பெற்றுள்ளது"2 என வேறொரு நூலை மேற்கோள் காட்டிச் சொல்கிறார். இதைப் பார்த்தால் ஏதோ பல தலபுராணங்களில் பள்ளேசல் இலக்கியமே அடங்கி யிருப்பதைப் போலத் தொனிக்கிறது. இது முற்றிலும் தவறான ஒரு கருத்தாகும்.

---

* இம்மேற்கோட் பாடலில் அடைப்புக்குறிக்குள் இருப்பவை இப்பதிப்பாசிரியரின் யூகபாடங்கள் ஆகும்

1. பிரபந்ததீபிகை 29
2. தமிழ் இலக்கியக்கொள்கை 6, பக். 88

திருப்பேரூர்ப் புராணத்தின் பள்ளுப்படலச் செய்தி என்ன? திருப்பேரூரில் சுந்தரமூர்த்தி நாயனார் காலத்தில் நிகழ்ந்த தாகக் கூறப்படும் ஒரு செவிவழி வரலாறு இப்படலத்தில் 69 விருத்தங்களில் கூறப்படுகிறது. முதல் 23 விருத்தங்களில் சுந்தரமூர்த்தி நாயனாருடைய வாழ்க்கை அவர் திருப்பேரூர்க் கோயிலுக்கு வரும்வரை கூறப்படுகிறது. தொடரும் வரலாறு வருமாறு:-

இறைவன் தன் தோழருக்கு உடனே காட்சி வழங்காமல் ஒரு திருவிளையாட்டியற்ற விரும்பினான். எனவே சுந்தரர் ஆலயத்திற்கு வரும்முன்பே இறைவன், அம்மை, மூத்த பிள்ளையார், முருகப்பெருமான் ஆகிய நால்வரும் முறையே ஒரு பள்ளன், ஒரு பள்ளி, இரு பள்ளச் சிறாராக உருமாறி ஒரு வயலிற் புகுந்து உழவுப்பணியில் ஈடுபட்டனர். (இப்பகுதி திருப்பேரூருக்குக் கிழக்கே பள்ளபாளையம் என வழங்கப்பெற்று அண்மையில் செல்வபுரம் எனப் பெயர்மாற்றம் செய்யப் பெற்றுள்ளது.) தேவர்கள் அனைவரும் இவருக்குத் துணை புரிவோராயினர்.

திருக்கோயிலை அடைந்த சுந்தரர் அங்கே சிவபெருமானைக் காணாமல் எங்கே என நந்தியம்பெருமானைக் கேட்டார். இறைவன் நந்திதேவருக்கு, "சுந்தரர் கேட்டால் ஒன்றும் **சொல்ல வேண்டாம்**" என ஆணையிட்டிருந்ததால் அவர் சுந்தரருக்கு இறைவன் இருக்கும் திசையைக் **கண்களால் காட்டி னார்**. உடனே சுந்தரர் அப்பக்கம் சென்று வயலில் பள்ளனாக இருந்த இறைவனைக் கண்டார். தோழமை உரிமை பற்றி அவரைப் பரிகசித்துப் போற்றினார். பிறகு எல்லோரும் கோயிலுக்கு மீண்டனர். (இது 24 முதல் 41-ஆம் பாடல் வரையான வரலாறு. இதற்குப் பின்னுள்ள பகுதி இந்த ஆய்விற்குத் தொடர்பற்றது.)

இங்கு பள்ளுப்படலம் என்பதற்கு (இறைவன்) பள்ளன் ஆன படலம் என்பதே பொருள். இதற்கும் பள்ளேசலாகிய நூலுக்கும் பொருண்மையாலோ யாப்பாலோ எத்தகைய தொடர்பும் இல்லை. இறைவன் பள்ளனாக உருமாறினான்

என்னும் செவிவழிச் செய்தி ஒன்று இத் தலத்தில்–பள்ளு இலக்கியம் தோன்றுவதற்கும் முன்பிருந்தே–வழக்கில் உள்ள தால் இப் புராணத்தில் இவ் வரலாறு இடம்பெற்றது. அவ்வளவே.

பள்ளேசலின் தாக்கம் இந்த வரலாற்றில் எங்கே உள்ளது? இதே ஆசிரியரால் இயற்றப்பெற்ற பிற தலபுராணங்களிலோ அல்லது இவரையே பின்பற்றிப் பற்பல தலபுராணங்களை வாரி வழங்கிய மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர் களின் தலபுராணங்களிலோ பள்ளுநூலின் தாக்கம் இல்லாதது ஏன்? பள்ளு என்னும் சொல்லைமட்டுங் கொண்டு எவ்வாறு அறிஞர்கள் இவ் விரண்டையும் ஒன்றாகக் கருதுகிறார்கள் என்பது விளங்கவில்லை.

இதனால் தலபுராணங்களில் பள்ளேசல் காணப்படவில்லை என்பது சற்றும் ஐயத்திற்கிடமில்லாமல் உறுதியாகிறது.

பள்ளு, பள்ளிசை, பள்ளேசல் என வழங்கப்படும் சிற்றிலக்கிய வகை சற்றேறக்குறையப் பதினாறாம் நூற்றாண்டில் நிலவிவந்த—சமய நிறுவனங்களுக்குச் சொந்த மான நிலங்களும், உழுவித்து உண்பாரின் செல்வாக்கும் மிகுந்திருந்த–ஒரு சமூக அமைப்பின் விளைவாகத் தோன்றியதே எனலாம். இத்தகைய ஒரு புது வரவிற்குப் பழைய ஆதாரங்களை வலியக் கூறுவதால் விளையும் பயன் ஏதுமில்லை.

தமிழில் தோன்றியுள்ள பள்ளேசல்கள்

கமலை. ஞானப்பிரகாசரால் இயற்றப் பெற்றதும் ஞானப் பள்ளு என வழங்கப்படுவதுமாகிய திருவாரூர்ப்பள்ளே தமிழில் தோன்றிய முதல் பள்ளேசலாகும் என்பது பொதுவாக அறிஞர் களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கருத்தாகும். குறவஞ்சி களுள் எவ்வாறு குற்றாலக் குறவஞ்சி தலைசிறந்து விளங்கு கிறதோ அவ்வாறே பள்ளுகளில் புகழ்பெற்று விளங்குவது முக் கூடற்பள்ளு ஆகும். இந்தத் திருவேட்டை அய்யன் பள்ளும் ஓர் இனிய பிரபந்தமே. இந்நூலின் இறுதியில் இதுவரை



திருவேட்டை நல்லூர் அய்யனார் திருக்கோயில்

நமக்குத் தெரியவந்துள்ள பள்ளு நூல்களின் பட்டியல் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது.

திருவேட்டைநல்லூர் அய்யனார் பள்ளு

இச் சிற்றிலக்கியம் திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோவில் வட்டம் புளியங்குடிக்கு அருகில் உள்ள திருவேட்டை நல்லூர் என்னும் ஊரில் கோயில்கொண்டு விளங்கும் அய்யனாரைப் பாட்டுடைத் தலைவனாகப் போற்றிப் பாடப் பெற்றதாகும். இதன் ஆசிரியர் பொன். சுப்பிரமணிய நாவலர் எனப்படுவார். இச் சிற்றிலக்கியத்தின் மொத்தப் பாடல் தொகை 197 ஆகும்.

நூலாசிரியர்

இந் நூலாசிரியராகிய பொன். சுப்பிரமணிய நாவலர் அவர்களின் தந்தையார் பெயர் பொன்னம்பலம் என்பதும், இவர்கள் வேளாண்குடியைச் சேர்ந்தவர்கள் என்பதும், "குவளைஅணிச் சுகவான் பொன்னம்பலவேள் ஈன்ற சுப்ரமணியன்",[1] "காராளர் குலத்துஉதித்த பொன்சுப்ர மணியன்எனும் கவிவல்லோனே"[2] என்னும் சாற்றுகவிகளால் விளங்குகின்றன.

இந் நூலாசிரியர் மதுரை அங்கயற்கண்ணம்மையின் மீது எல்லையற்ற பக்தி கொண்டவராதலால் மீனாட்சிதாசன் என்றே குறிக்கப்படுகிறார். சாற்றுகவி யாசிரியர்களும், "குகன்றனை ஈன்றருள் மீனாட்சிதாசன்"[1]. "சொக்கேசர் இடப்பாகச் செல்விதாசன்"[3]. "மீனாட்சி தேவி மாமலர்த்தாள் போற்றும் நாரணி குலத்தோன்" என்றே பாராட்டி மகிழ் கின்றனர். ஆசிரியரின் இப் பக்திக்கு இப்பள்ளிலும் ஓர் அழுத்த மான அகச்சான்று காணப்படுகிறது. பள்ளியர்கள் நாற்று நட்டு முடிந்த உடனே தெய்வங்களை வாழ்த்துகின்றனர். உள்ளூர்க்

---

1. இந்நூல் சாற்றுகவி 1
2. ,, ,, 3
3. ,, ,, 5

கடவுளர் வாழ்த்தை அடுத்து உடனே "தென்கூடற் பதிவாழும் சிலைச்சிலைக்கைச் சொக்கேசர் செல்விமீ னாட்சியம்மை சீர்பாதம் போற்றி"[1] வாழ்த்திய பிறகுதான் திருவேட்டை நல்லூருக்கு அருகிலுள்ள சங்கரனார் கோயில்வாழ்த்து இடம் பெறுகிறது.

நூல் அரங்கேறிய காலம்

இப் பள்ளு எழுதப்பட்டுள்ள ஓலைச்சுவடியில் இந்நூல் அரங்கேற்றத்தின் காலக் குறிப்பு எழுதப்பட்டுள்ளது. "(கொல்லம்)* 1057 ஆம் வருஷம் சித்திரபானு வருஷம் வைகாசி மாதம் 20 ஆம் தேதி குருவாரமும் பவுரணையும் அனுஷ நட்சத்திரமுங் கூடிய சுபதினத்தில் பொன்னம்பல பிள்ளை மகன் சுப்பிரமணியபிள்ளையால் சில முன்னூலாராய்ந்து சுவாமி திருவேட்டைநாதன் சன்னதியில் வைத்து அரங் கேற்றியது" என்பது அவ்வாசகம். இதில் குறிக்கப்பட்டுள்ள நாள் 1.6.1882 ஆகும். திதி, கிழமை, நட்சத்திரம் ஆகிய அனைத்தும் சரியாகப் பொருந்துகின்றன. எனவே இக்காலக் குறிப்பில் யாதொரு ஐயமும் இல்லை.

ஆனால் இச் சுவடியிலேயே இடம்பெற்றுள்ள இந்நூல் சாற்றுகவி ஒன்றில், "நேசமுடன் ஆயிரத் (தைம்பதுடன் ஏழாண்டில்)* நிகரற்ற மிதுனரவியில் நேருற்ற நவமான தெய்தியாம் தசமிஎன நேர்ந்தசுப யோகமதனில் நிதிபெருகு கோபாலர் கிளையோர்கள் அனைவோரும் நேர்ந்தசன் னிதியிருந்து நிலைமைபெறு மீனாட்சி தாசன்இப் பனுவலை நிகழ்த்தினான் வாழ்கவென்றே".[2] எனக் காலக்குறிப்பு இடம் பெற்றுள்ளது. இது சித்திரபானு வருடம் ஆனிமாதம் 9 ஆம் தேதி புதன்கிழமைக்குச் சரியான 21.6.1882 ஆகும். எனினும்

---

* அடைப்புக் குறிக்குள் உள்ள சொற்கள் காலக்குறிப்புகளின் உதவியால் இப்பள்ளின் பதிப்பாசிரியரால் ஊகபாடமாகக் கொள்ளப் பெற்றனவாகும்.

1. இந்நூல் 163
2. ,, சாற்றுகவி 6

இந்தத் தேதியன்று தசமி திதி இல்லை. வளர்பிறை ஷஷ்டியே உள்ளது. இவ்வேறுபாடு நேர்ந்த காரணம் விளங்கவில்லை.

வைகாசி நிறைமதி நன்னாள் சமயச் சிறப்புமிக்க தாதலின் இப் பள்ளுநூல் உரைநடைக் குறிப்பிலுள்ளவாறே 1—6—1882 அன்று அரங்கேற்றப்பட்டிருக்கும் எனக் கொள்வது மிகப் பொருந்தும்.

நூலாசிரியர் சமயம்

இச் சுப்பிரமணிய நாவலரின் சமயம் சைவம் என்பது தெளிவு. எனினும் இந்நூலில் திருமால் தொடர்பான செய்திகள் இடம்பெறும்போது அவரை மதிப்புடன் குறிப்பிடுகிறார். அரிஹர சுதனாகிய அய்யனாரை வணங்கும் இவர்பால் சைவ வைணவக் காழ்ப்புணர்ச்சி காணப்படவில்லை.

நூற்பெயர்

இச் சிற்றிலக்கியம் நூலாசிரியரால் பள்ளிசை என மூன்று இடங்களிலும் பள்ளேசல் என்று ஓர் இடத்திலும் வழங்கப்படுகிறது. "திருவேட்டை (யின்)நாதன் பள்ளிசை", "திருவேட்டை நம்பன் பள்ளிசை" "திருவேட்டை அய்யன் பள்ளிசை", "கோழிக் கொடியவர் பள்ளேசல்"[1] என்பன அவர் வாக்கு. இதனால் இந்நூலாசிரியர் இதை ஓர் இசைச் சார்புடைய நாடகமாகவே படைத்திருக்கிறார் என்பது தெளிவு.

சாற்றுகவியாசிரியர்கள் இதனை, "பள்ளேசல்", "பள் பனுவல்" "பள்ப்ரபந்தம்"[2] எனக் குறிப்பிடுகின்றனர். பள் என்பதே இலக்கிய வழக்கு. இவ்வடிவத்தையும், "பனசைப்பள்"[3] என ஆட்சியில் காணலாம். எப்படி இருப்பினும் பள்ளு என்பதே மிகுதியாக வழக்கில் காணப்படுகிறது. பள், பள்ளிசை, பள்ளு, பள்ளேசல், பள் பிரபந்தம், பள்பனுவல் என்பன வற்றோடு இவ்வகைச் சிற்றிலக்கியம் பள்ளியல் எனவும்

---

1 இந்நூல் 1, 2, 4, 3.

2 இந்நூல் சாற்றுகவி 1, 2, 7, 3, 4.

3 கண்ணுடையம்மன் பள்ளு. பாயிரம்.

வழங்கப்படுவதை, "சுழிகாபுரிநாதர் பள்ளியல் கூற"[1] என்பதனால் அறியலாம்.

பெரும்பான்மை வழக்கு நோக்கி இப்பதிப்பில் நூற்பெயர் திருவேட்டைநல்லூர் அய்யனார் பள்ளு என்று கொள்ளப் படுகிறது.

நூல்யாப்பு

முன்பே கூறியவண்ணம் இப்பள்ளு மொத்தம் 197 பாடல் களால் இயன்றதாகும். இவற்றுள் நூற்று நாற்பத்துநான்கு சிந்து வகையைச் சேர்ந்தனவாகும். அவையாவன:- 1-4, 6, 8, 10, 12, 13-15, 17, 18, 20-29, 31-33, 35-38, 44, 45, 47, 49, 51, 53, 55, 57, 59, 60, 62, 64, 65, 67, 68, 70, 71, 73, 74, 76-86, 89, 90, 92-97, 99, 100, 102, 104, 106, 107, 109, 111-114, 116, 117, 119-122, 124, 126, 127, 129, 131, 132, 134, 137-159, 161, 163, 165, 167, 169, 170, 172, 174, 176-196. நாற்பத்திரண்டு பாக்கள் வெண்டளைக் கலிப்பாக்களாம். அவை வருமாறு: 5,7,9,11,16,19,34,39,43,46,48,50,52,54,56,58, 61,63,66,69,72,75,87,88,91,101,103,105,108,110,115, 123, 125, 133, 135, 136, 162, 164,171,173,175,197. எஞ்சிய பதினொரு பாடல்களும் கொச்சகக் கலிப்பாக்கள் ஆகும். அவையாவன:- 30, 40-42,98,118,128,130,160,166,168.

சிந்துப் பாடல்கள் பெரும்பாலும் கதைமாந்தர் கூற்றாக வும், கலிப்பாக்கள் பெரும்பாலும் கவிக்கூற்றாகவும் விளங்கு கின்றன.

நூல் அமைப்பு

இச்சுவடியின் காலக்குறிப்பில், "சுப்பிரமணிய பிள்ளையால் சில முன்னூலாராய்ந்து...... அரங்கேற்றியது" என்னும் பகுதி முன்னர் எடுத்துக்காட்டப் பெற்றது. இந்நூலை நோக்கும் பொழுது ஆசிரியர் ஆராய்ந்து பின்பற்றியது பெரும்பாலும் முக்கூடற்பள்ளு, வையாபுரிப்பள்ளு ஆகிய இரண்டையுமே எனத் தோன்றுகிறது. இப் பள்ளிற்கும் அவ்விருபிரபந்தங்கட்கும்

---

1 திருச்சுழியற் பள்ளு. காப்பு.1

நிறைய ஒப்புமை காணப்படுகிறது. அவற்றுள் சில உரையில் ஆங்காங்கு காட்டப்பட்டுள்ளன. இப்பள்ளின் கதை அமைப்பு வருமாறு:

முதல் மூன்று சிந்துகள் முறையே விநாயகர், முருகப் பெருமான், கலைமகள் வணக்கமாகவும் நான்காவது அவையடக்கமாகவும் அமைந்துள்ளன. இந்த நான்கு பாடல் களைப் பாயிரம் எனலாம்.

அடுத்துப் பள்ளியர் தோன்றுவர் என்னும் அறிவிப்புக்குப் பின்னர் மூத்த பள்ளி, இளைய பள்ளி, குடும்பன் ஆகியோர் தோன்றுகின்றனர். மூத்தவள் உள்ளூரைச் சேர்ந்தவள்; இளையவள் குற்றாலம் எனப்படும் நன்னகர்ப் பகுதியினள். மூவரும் தம்மை அறிமுகம் செய்து கொண்ட பிறகு பள்ளியர் நாட்டு, நகர வளங்களைப் பாடுகின்றனர். குயிலைக் கூவ வேண்டுதலும், பள்ளர்கள் மழைவேண்டித் தெய்வத்தைப் பராவுதலும், மழைபெய்து வெள்ளம் பெருகுவதும் தொடரும் நிகழ்ச்சிகளாகும்,

மழைக்குப் பிறகு பண்ணைக்காரன் வருகிறான்; பள்ளியர் வரவேற்கின்றனர். பள்ளன் எப்போதுமே இளையாளுடன் பொழுதுபோக்கிக் கொண்டிருப்பதாகவும், பண்ணைப் பணி களை ஒழுங்காகக் கவனிப்பதில்லை எனவும் மூத்தவள் முறை யிடுகிறாள். இதனால் கோபங்கொண்ட பண்ணைக்காரன் இளையவளிடம் விசாரிக்கிறான். அவள் சரியாகப் பதில் கூறாததைக் கண்ட பண்ணைக்காரன் மிரட்டுகிறான். இதைக் கேட்ட பள்ளன் வீட்டில் தான் ஒளிந்திருந்த நிலைமாறி வெளிப்படுகிறான். பண்ணைக் கணக்குகளைக் கேட்கத் தாறுமாறாகப் பதில் சொல்கிறான். பண்ணைக்காரன் வயலில் கிடைவைக்க ஆயர்களை அழைத்து வருமாறு ஆணையிடுகிறான்.

பட்டித் தலைவன் ஆடுகளோடு வருகிறான். அவனை வயலில் விட்டுவிட்டுப் பள்ளன் மீண்டும் இளையவள் வீட்டிற்குச் சென்றுவிடுகிறான். மூத்தவள் மீண்டும் பண்ணைக் காரனிடம் சென்று கோள் மூட்டுகிறாள். வயலில் உரம் வைத்த

தாகப் பொய் சொல்லிக் கொண்டுவரும் பள்ளனைப் பண்ணைக்காரன் குட்டையில் போட்டு விடுகிறான். இளைய பள்ளி தன் கணவனைப் போய்ப் பார்த்துவிட்டு ஒன்றும் செய்யத் தோன்றாமல் திரும்பிவிடுகிறாள்.

மூத்த பள்ளி பண்ணைக்காரனின் அனுமதியுடன் சாப்பாடு கொண்டுவந்து கொடுக்கிறாள். பண்ணைக்காரனிடம் சொல்லித் தன்னை விடுவிக்குமாறு பள்ளன் வேண்டுகிறான். முதலில் மறுத்தவள் பின்பு மனமிரங்கிப் பண்ணைக்காரனிடம் இறைஞ்சிப் பள்ளனை விடுவிக்கிறாள். விடுபட்ட பள்ளன் பண்ணைச் செய்திகளைத் தெளிவாகக் கூறுகிறான். நாளேர் பூட்ட நல்லநாள் பார்க்கப் பெற்றுப் பொன்னேர் பூட்டு கின்றனர். அப்போது ஒரு காளை குடும்பனை முட்டித் தள்ளிவிடுகிறது. பள்ளன் மயங்கி வீழ்கிறான். பார்த்த பள்ளியர் இருவரும் புலம்புகின்றனர். சற்று நேரத்தில் மயக்கம் தீர்ந்து குடும்பன் எழுந்து விடுகிறான். பயிர்த்தொழில் தொடர் கிறது. பள்ளியர் நாற்று நட்டுத் திரும்புகின்றனர். மூத்த பள்ளியின் தலைமையில் பள்ளியர் அனைவரும் பண்ணைக் காரனிடம் சென்று தெய்வங்களை வாழ்த்திப் பரிசு பெறு கின்றனர்.

செந்நெல் நன்கு விளைய அறுவடைக்குரிய பருவம் வருகிறது. பண்ணைக்காரனின் ஆணைக்கிணங்க நாட்கதிர் அறுத்துவந்து அய்யனுக்குப் படைக்கிறார்கள். பிறகு அறுவடை செய்து எஞ்சிய பணிகளையும் செவ்வனே செய்து முடிக் கின்றனர். விளைந்த நெல்லை வழக்கப்படி உரியவர் பலர்க்கும் பகிர்ந்தளிக்கின்றனர்.

அப்போது, தனக்குச் சேரவேண்டிய நெல்லைக் குறை வாகப் பள்ளன் அளந்துவிட்டான் என்று மூத்தவள் எல்லோர் எதிரிலும் முறையிடுகிறாள். இளையபள்ளியும் எதிர்த்துப் பேசுகிறாள். வார்த்தை தடித்து இருவரும் மாறிமாறி ஏசிக் கொள்கின்றனர். சிறிது நேரத்தில் அவர்களே மனம்மாறி ஒற்றுமையாக இணைந்துவாழ முடிவெடுக்கின்றனர். ஒரு மங்களச் சிந்துடனும், வாழ்த்துப் பாவுடனும் இப்பிரபந்தம் இனிதே நிறைவுபெறுகிறது.

இப் பள்ளிற்கே உரிய சிறப்புக் கூறுகள்

நடவு முடிந்த பிறகு பள்ளியர் அனைவரும் நீராடி, ஒப்பனை செய்து கொண்டு, செந்நெல் நாற்று முடியை ஏந்தி, குரவையொலியோடு ஊருக்குள்வந்து பண்ணைக்காரன் முன்பு வைத்துக் கும்பிடுகின்றனர். பிறகு பள்ளியர் தெய்வங்களை நல்ல விளைச்சல் வேண்டி வாழ்த்துகின்றனர். அப்பொழுது பண்ணைக்காரன் அவர்களுக்கு வரிசை செய்து பரிசளித்துச் சேரிக்கு அனுப்புகிறான். பிற பள்ளு இலக்கியங்களில் இடம் பெறாத இச்செய்திகள் 161-164 ஆகிய நான்கு பாடல்களில் கூறப்பட்டுள்ளன. இச்சடங்கு இப்பகுதிக்குரிய ஒரு சிறப்பு வழக்கமாக இருக்கலாம். இதன் விளக்கத்தை 164 ஆம் பாடற் குறிப்புரையிற் காண்க.

நெற்பயிர் நன்றாக விளைந்து அறுவடைப்பருவம் வந்த உடனே நாட்கதிர் கொண்டு வருமாறு பண்ணைக்காரன் ஆணையிடுகிறான். கிழக்குத் திசையிலிருந்து, நல்ல கிழமையில் நாட்கதிர் கொய்து, சிவிகையில் ஏற்றிப் பண்ணைக்காரனிடம் கொண்டு வந்து காட்டியபிறகு பள்ளர்கள் அதனை அய்யனாருக்குப் படைக்கின்றனர் என நாட்கதிர் படைக்கும் நிகழ்ச்சி இப்பள்ளில் விரிவாக உள்ளது. (166, 167). ஆனால் முக்கூடற்பள்ளில், "முறுக விளைந்தவாறு முற்றுந் தேற்ற முக்கூடற் பண்ணைக்காரன் முன்பு கூற மறுபடி அவன் சொன்ன வகைநன் றென்ன மன்னர்பல ரும்நாடி வயலிற் கூடி உறுதெய்வ நிலைபோற்றி உரிமை சாற்றி ஒங்கு நாட் கதிர்கொய்தார் உவகை செய்தார்"[1] என ஒரு சிந்தின் மூன்றடிகளிலும், வையாபுரிப்பள்ளில், "விளைந்தஉடன் பள்ளர்எல்லாம் முழங்கிக் களிப்பேறி, வளைந்து மல்லாண்டப் பனுக்கு இளந்தை ஆடுவெட்டி, பொங்கலிட்டு நாட்கதிருங் கொய்துமே துங்கனாகிய சிவகிரிப் புங்கவன் முன்பதாய்க் குடும்பன் சங்கதியாகத்தானே அலகு கதிர்க்கோட்டை வைத்து இலகவெகு வரிசை தலைமேல் கொண்டு"[2] எனச்

1 முக்கூடற்பள்ளு 137

2 வையாபுரிப்பள்ளு 189

சிந்தின் ஒரு பகுதியாகவும் போகிறபோக்கில் சொல்லப் படுகிறது.

இதனால் இப்பகுதியில் நாட்கதிர் கொய்து படைத்தலும் சிறப்பாக ஒரு திருவிழாவைப்போல நிகழும் எனத் தெரிகிறது.

மாடு பள்ளனை முட்டிக் கீழே தள்ளிவிடுகின்ற விபத்து முக்கூடற்பள்ளு, வையாபுரிப் பள்ளு ஆகிய இரண்டையும்விட இந்நூலில் அழுத்தமாகவும். பள்ளன்பால் மிக்க பரிவுணர்வு தோன்றுமாறும் பாடப்பட்டுள்ளது. முக்கூடற் பள்ளில், "கோட்டு முனையால் அது **குத்துமளவில்** குடும்பன் **சற்றே மயக்கங்கொண்டு** விழுந்தான்; துள்ளி எழும் காளை தொடர்ந்து பள்ளனைப் பாய்ந்து தள்ளிவிடும் **சோர்வுகண்டு** சற்றும் தரியாமல் .... பள்ளியும் வந்துற்றாளே"[1] என்று தான் கூறப்படுகிறது.

வையாபுரிப் பள்ளுடையார் இவ்விபத்தை, "மிரண்டிடும் பொலிப் பெருதைப் போய் அவன் **முரண்டுத் தளமாய்ப் பிடிக்கையில்** குத்திப் பாயவே **மயங்கிப்** பெரிய உத்தி கையில் வையாபுரிக்குடும்பன் விழுந்து கிடக்கிறான் அந்த இடும்பைப் பாரும் பள்ளீரே" எனப் பள்ளியர்களின் வேடிக்கைப் பேச்சோடு பேச்சாகக் கூறிப் பிறகு கவிக்கூற்றாக, "துள்ளிப் பொலி எருது தொடர்ந்து பள்ளனைப் பாய்ந்து தள்ளிடவே மயங்கித் தான்விழுந்த சமயமதில் .... பள்ளியும் வந்தெய்தினளே"[2] என்கிறார்.

சுப்பிரமணிய நாவலர் இப் பள்ளில் மயிலைக்காளை பள்ளனை முட்டித் தள்ளுவதைத் தெளிவாக விவரிக்கிறார். "**காளை திரும்பி மகுப்பால் கோதி எறியப் பெருப்பெனச் சாய்ந்தான்**". சாய்ந்தவனை "**சீறிவரும் காளை கொம்பால் சீம்பக்** குடும்பன் அங்கே **மாறிவிழும்போது** கண்டு மனது தரியாமல்" பள்ளியர் வருகின்றனர் என்பதால் இவ் விபத்தின்

---

1 முக்கூடற்பள்ளு 115,116
2 வையாயுரிப்பள்ளு 163,164
3 இந்நூல் 129,130

கடுமை விளங்குவதுடன் குடும்பன்பால் நம் பரிவும் மிகுகிறது.

பள்ளியர் ஏசல்

இச் சிற்றிலக்கிய வகை பள்ளேசல் என்றே அழைக்கப் பெறுவதற்குக் காரணமாக அமைந்துள்ள பள்ளியரின் ஏசல் இந்நூலில் இயற்கையாகவும் சிறப்பாகவும் உள்ளது. மூத்த பள்ளி உள்ளூராகிய திருவேட்டைநல்லூரைச் சேர்ந்தவள். (கல்லக நாடு) இளையவள் அருகிலுள்ள நன்னகரைச் சேர்ந்தவள். இருவருமே சைவ சமயத்தினர். எனவே இவர்களிடம் நாடு அல்லது சமயம்பற்றிய கருத்துவேற்றுமைகள் இல்லை. குருகூர்ப்பள்ளின் பள்ளியரைப் போல இவர்கள் ஒரே சமயத்தின் ஆண்டவன் சிறந்தவனா அல்லது அடியார் பெரியவரா என்றும் பிணங்குவதில்லை. ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்ட இரு மனைவியருக்குள் இயல்பாக எழும் மனக்கசப்பே பூசலுக்கு வித்தாகிறது.

மூத்தவள் குடும்பனுக்கு மாமி மகளாகவும், உள்ளூரின் மிகப் பழங்குடி ஒன்றில் தோன்றியவளாகவும் இருக்கிறாள். திருமணத்திற்குரிய உறவு உரிமைபற்றிப் பள்ளனால் முதலில் மரபு வழுவாமல் திருமணம் செய்துகொள்ளப் பெற்றவள் என்னும் பெருமித உணர்வு உடையவள். இவள் இளைய பள்ளியைப் பள்ளனுடைய மனைவி எனக் கருதாமல் ஒரு வைப்பாகவே எண்ணுகிறாள். (மூத்தவளின் கருத்து 177, 188, 190 ஆகிய பாடல்களில் புலப்படுகிறது.)

இளையவள் நன்னகரைச் சேர்ந்தவள். நீண்டகாலமாகப் பண்ணையில் பணியாற்றும் ஒரு பழங்குடியைச் சேர்ந்தவள். சிறுமியாக இருக்கும்பொழுதே இவளுடைய அழகில் மயங்கிய பள்ளன் இவள் பருவமடையும்முன்பே முறைப்படி மணந்து கொள்கிறான். '**'பூக்கும்முன்னே தாலிகட்டிச்** சேர்க்கை பிரியான்'' என்றும், ''குன்றெனவே **முலைதிரளும் முன்பு தாலிகட்டிக்** குடும்பன் எனைக் கூட்டிவந்த பின்பு''[1] என்றும்

---

1 இந்நூல் 18, 70

வாய்ப்புள்ளபோதெல்லாம் வலியுறுத்துகிறாள். இதனால் பருவமடைந்தபிறகு பள்ளனைத் தானே மயக்கித் தனக்கு வசப்படுத்திக் கொண்டவள் அல்லள் என்பதையும், அவனால் முறையாக வரைந்து ஏற்றுக்கொள்ளப்பெற்ற மனைவி என்பதையும் அழுத்தமாகக் கூறுகிறாள். மூத்தவள் இவ் வுண்மையை ஏற்க மறுப்பது இளையாள் உள்ளத்தை அறுத்துக் கொண்டே இருக்கிறது. அவளை நோக்கி, "வெட்கம் என்ன நீயும் எனக்கு அச்சி அல்லவோ? என்னை மிஞ்சிப் பேசினால் உனக்குக் கொஞ்சமல்லவோ?"[1] என்று கேட்கிறாள். மூத்தவள் பள்ளனை முற்றிலுமாகக் கவர இயலாமல்தான் அவனை இழந்து இப்படிப் பதனழிந்து கிடக்கிறாள் எனவும் குத்திக் காட்டுகிறாள். (பா.187)

இரு பள்ளியருக்குமிடையே உள்ள பூசலுக்கு இந்த மாறு பட்ட நிலையே காரணம். மூத்தவளுக்குக் கணவனின் கவனிப்பும், இளையவளுக்கு முறையான மனைவி என்னும் கவுரவமும் கிடைத்துவிட்டால் பிரச்சினை இல்லை. ஏசலில் மூத்தவள் இளையவளைத் தன் தங்கையாக-பள்ளனின் உரிமை உள்ள மனைவியாக-ஏற்றுக்கொண்ட உடனேயே (பா.192) பூசலுக்கான அடிப்படைக் காரணம் நீங்கி விடுகிறது. அதனால் கருத்தொற்றுமை எளிதில் ஏற்பட்டு விடுகிறது.

இப் பள்ளுடையாரின் உளவியலறிவு மிகச் சிறப்பானது. இந்த மனமாற்றத்தைத் தெரிவிக்கும் அருமையான பகுதியில் இருக்க வேண்டிய நான்கு வரிகளின் சிதைவு ஓர் இழப்பேயாகும். மற்ற பள்ளு நூல்களில் இருப்பதைவிட இதில் அமைந்துள்ள ஏசல் இயல்பாகவும், உளவியலுக்குப் பொருந்துவதாகவும், தனிச் சிறப்புடையதாகவும் விளங்குகிறது.

அகத்துறைப் பாடல்கள்

நூலில் ஆங்காங்கே சில அகத்துறைப் பாடல்களை அமைப்பது பள்ளாசிரியர்களின் மரபாகும். இப் பள்ளிலும் ஆறு அகத்துறைப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. ஒருசில

1 இந்நூல் 191

பள்ளுகளைப் போலக் கதைக்கு நடுவே-இடைப்பிறவரலாக-இவை வராமல் ஆற்று வருணனைகளுக்கிடையே மட்டும் வருவதால் கதைப்போக்கில் குறிக்கீடு இல்லாமல் இருக்கிறது. இதிலும் இந் நூலுடையார் முக்கூடற்பள்ளும் வையாபுரிப் பள்ளும் காட்டிய வழியிலேயே செல்கிறார். அவ்விரு நூல் களிலும் எந்த எந்த இடங்களில் துறைப்பாடல்கள் உள்ளனவோ அந்த அந்த இடங்களிலேயே இதிலும் உள்ளன. அகத் துறையைப் பாடக் கட்டளைக் கலித்துறை மிகப் பொருத்த மான யாப்பென்ற போதிலும் இவர் பள்ளுக்குரிய கலிப்பாவை யே - அவ்விரு நூல்களைப் பின்பற்றி - பயன்படுத்துகிறார். (திருவாரூர்ப் பள்ளில் பின்முடுகு வெண்பாவையும் (பா.21), குருகூர், திருமலைப் பள்ளுகளில் கட்டளைக் கலித்துறையையும் (முறையே பா. 5, 109), பறாளை விநாயகர், தண்டிகைக் கனகராயன் பள்ளுகளில் எண்சீர் விருத்தத்தையும் (பா.79,28) காணலாம்.

இப் பள்ளில் இடம்பெற்றுள்ள ஆறு அகத்துறைப் பாடல் களில் முல்லைத் திணைக்கு உரியவை மூன்று (48, 50,52); பாலை, நெய்தல், பெண்பாற் கைக்கிளை ஆகியவற்றிற்கு உரியது ஒவ்வொன்று (54, 56, 58). பெருமழை பெய்து ஆற்றில் வெள்ளம் பெருகியோடும் கார் காலத்திற்கு முல்லைத் திணையே சாலப் பொருத்தமாதல்பற்றி அப்பாடல்கள் செம்பாதி ஆயின. ஆறு அகத் துறைகளில் மூன்று பாடல்கள் தலைவன் கூற்றாகவும் (50, 52, 54), தலைவி, தோழி கூற்று ஒவ்வொன்றாகவும் (48, 58) ஒன்று கவிக் கூற்றாகவும் (56) அமைந்துள்ளன. பெண்பாற் கைக்கிளைத் தோழி கூற்றை (58) தலைவி கூற்றாகவும் கொள்ளலாம். இத் துறைப்பாடல்கள் அனைத்திலும் பாட்டுடைத் தலைவன் அய்யனாராகவும், கிளவித்தலைவன் வேறாகவும் அமைந்து அகப்பொருள் மரபு காக்கப்படுகிறது.

48-ஆம் பாடல் வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைவன் மீண்டு வருவேன் எனக் குறிப்பிட்ட கார் காலம் வந்தும், தான் வராததால் தலைவி வருந்திக் கூறுத

லாகும். இது சுருக்கமாகப் பருவங்கண்டு பெருமகள் புலம்பல் எனப்படும். 60-ஆம் பாடல் பொருள் முற்றி மீளும் தலைவன் தலைவியை நினைந்து (ஓதிமத்தொடு) புலம்பல் என்னும் துறையின்பாற்படும். 52-ஆம் பாடல் மீண்ட தலைவன் தலைவியோடு கலந்து மகிழ்தல் ஆகும். இதன் மூன்றாமடியில் உள்ள பள்ளியர் என்னும் சொல் இப் பள்ளிலக்கியத்தின் நாடக மாந்தரைக் குறிக்காமல், ஒரு கிளவித் தலைவியைச் சுட்டி நிற்கிறது. இவ்வடி "ஒன்றிக் கொடுங்கை உதவியெழிற் பள்ளியிற்செய்'' என இருப்பின் பொருள் சிறக்கும். எனினும் சுவடியில் உள்ளவாறே பாடங்கொள்ளப்பட்டது. இவ்வாறு இம் மூன்று பாடல்களும் பொருள் தொடர்புடைய ஒரு நாடக மாக அமைந்து மகிழ்விக்கின்றன,

54-ஆம் பாடல் உருவெளிப்பாடு என்னும் துறையாம். பொருள்வயிற் பிரிந்து பொருள் முற்றி மீளும் தலைவன் வழியில் தலைவியின் உருவெளித் தோற்றத்தைக் கண்டு புலம்புதலாகும் இது. 56-ஆம் பாடல் நெய்தல் திணையைச் சேர்ந்த கவிக்கூற்று. 58-ஆம் பாடல் பெண்பாற் கைக்கிளையின் பாற்படும். உலாவந்த ஒரு தலைவனைப் பார்த்துத் தலைவி காதல் கொள்கிறாள். எப்படியாவது அவனை அடைய வேண்டுமென்பதற்காக அவன்பால் தூதனுப்புகிறாள். சென்ற தூது தலைவனின் மாலையை வேண்டிப்பெற்று வெற்றியுடன் மீளும் எனத் தோழி கிளியிடம் சொல்வாள் போலக் கூறி-ஆற்றுவித்ததாகும் இத்துறை. அல்லது தலைவியே கிளியை நோக்கித் தலைவன் தண்ணளி செய்வான் எனக் கூற மாட்டாயா என இரங்குகிறாள் எனினுமாம்.

இப் பள்ளில் அமைந்துள்ள அகத்துறைப் பாடல்களை நோக்கும்போது இதன் ஆசிரியர் அகப்பொருள் இலக்கணத்தில் நல்ல தேர்ச்சியும் பழைய இலக்கியங்களில் சிறந்த பயிற்சியும் உடையவர் என விளங்குகிறது.

நூலாசிரியர் கால ஆட்சித்தலைவர்

பெரும்பாலும் பள்ளு நூலாசிரியர்கள் தம் காலத்து ஆட்சியாளர்களைத் தம் நூலில் சுட்டிக் காட்டுவது வழக்கம்.

"வயன் இருவர் பரவு முத்து வடுக நாகேந்த்ரதுரை எனவும் மார்க்கண்டன் போலிருக்கக் கூவாய் குயிலே"[1] "துறை விசையகிரி வேலச்சின்னோவய்யன் பட்டம் துருவப் பட்டம் போல் விளங்கக் கூவாய் குயிலே"[2] எனவும் வருதல் காணலாம். இவ்வாறே இவ்வாசிரியரும் வடகரையாதிக்கம் எனப்படும் சொக்கம்பட்டி ஜமீன்தார் செம்புலிப் பெரியசாமிப் பாண்டியன் அவர்களைப்பற்றி 6, 18, 33, 158 ஆக நான்கு பாடல்களில் குறிப்பிடுகிறார். சாற்றுகவியின் 6ஆம் பாடலிலும் இவரைப்பற்றிய குறிப்பு உள்ளது.

இவர் செண்பகநல்லூர் ஆலயத்தில் திருப்பணி செய்தவர்; (18) இவர் திருவேட்டை அய்யன் ஆலயத்திற்கு ஒரு வயலை மானியமாக வழங்கியிருந்தார்; (158) இவர் பெயரால் ஒரு சத்திரம் இருந்தது (172) என்னும் செய்திகளையும், கல்லக நாட்டை இவருக்காகப் பார்த்துவந்தவர் கருணாலய பாண்டியன் என்பதையும் (சா.க.6) அறிய முடிகிறது.

வேறு பெரியோர்கள்

பள்ளு நூலாசிரியர்கள் தம்மால் நன்கு மதிக்கப்பெறும் சில புரவலர்களையும் தம் இலக்கியத்தில் இடமளித்து வாழ வைப்பர். இவர்கள் ஏதாவது ஒருவகையில் கவிஞருக்கு உதவி புரிந்திருப்பர். அந்த நன்றியைப் பாராட்டுமுகமாகவோ அல்லது சில கல்விவல்லாரின் பெயரை நிலைநிறுத்தவோ இங்ஙனம் செய்வர். நன்றாக உழைத்துச் சிறப்பாகப் பணிபுரியும் சில தொழிலாளர்களையும் இத்தகைய நூல்கள் சுட்டிக் காட்டுவதுண்டு. இந் நூலிலும் அத்தகைய சிலரைப் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. அவர்கள் வருமாறு:—

ஏமருணாசலம் - (150) இவர் ஒரு நிலக்கிழார் போலும். இவருடைய நிலம் திருவேட்டைஅய்யன் கீழ்ப்பத்திலே இருந்தது.

---

1 கண்ணுடையம்மன் பள்ளு 40

2 வையாபுரிப் பள்ளு 26

கயிலாசம் -(153) இவர் விசுவகர்ம வகுப்பைச் சேர்ந்தவர்: கலைகளிலே வல்லவர்: புகழ்மிக்கவர். இவருடைய வயலும் கீழ்ப்பத்திலேயே இருந்தது.

சங்கரநாராயணன் பிள்ளை - (159) இவர் வேளாளர்: பெருஞ்செல்வர்; அரசாட்சியிலும் இவருக்குப் பொறுப்பு இருந்திருக்கும் போலும். இவர் வயல் இடைச்சிப்பாறைப் பத்தில் இருந்தது.

செவிகேட்கும்பெருமான் - (174) இவர் நூலாசிரியரின் காலத்திலிருந்த ஒரு புலவர் போலும். உள்ளூர்ப் பள்ளிக்கூட ஆசிரியராகவும் இருந்திருக்கலாம்.

பரசுராமய்யர்-(123) சோதிடத்தில் வல்லவர்; மக்களிடம் குறிப்பறிந்து நன்கு பழகுபவராகவும், நல்ல செல்வராகவும் இருந்தார் என்பதை, 'இங்கிதபூமான்' என்னும் அடைசுட்டுவ தாகக் கொள்ளலாம். இப் பள்ளில் பொன்னேர் பூட்ட இவர் நாள் குறித்துத்தந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

வெள்ளை வடகாசி - (174) இவர் சாலவித்தையில் மிகத் தேர்ந்தவர். நல்ல புலமையும் தந்திரமும் உடையவர் என்னும் பொருள்பொதிந்த அடையை நூலாசிரியர் இவருக்குத் தருகிறார். சம்பாநெல் பத்துக் கோட்டை இவருக்குக் களப்பேறாகக் கொடுக்கப்படுகிறது.

தொழிலாளர்கள்

இத் திருவேட்டைஅய்யன் பள்ளில் அக்காலத்திலிருந்த தொழிலாளர் சிலரின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. இவர்களைக் கற்பனைப் பாத்திரங்கள் எனக் கருத வேண்டிய தில்லை. வாழ்ந்த பணியாளர்களாகவே இருக்கலாம்.

காளி - (62) இவர் சலவைத் தொழிலாளி.

அரியான்-(174) அணைகளையும், வாய்க்கால்களையும் பராமரிக்கும் பொறுப்பில் இருந்தவர். களமானியமாக இவருக்குப் பூம்பாளை நெல் 1000 கோட்டையும் மணல்வாரி

நெல் 1000 கோட்டையும் கொடுக்கப்பட்டதாம். இந்த அளவு மட்டுமே கற்பனையாக இருக்கலாம்.

தருமன் – (103) இவர் தண்டல்காரர். பண்ணையாரின் ஆணைப்படி இவரே பள்ளனைக் குட்டையில் போடுகிறார்.

புராணக் கதைகள்

இப் பள்ளின் பாட்டுடைத் தலைவராகிய அய்யனார் ஹரிஹரசுதன் ஆதலின் இதில் சிவபெருமான், திருமால் பற்றிய பல புராண வரலாறுகள் சுருக்கமாகச் சுட்டப் பெறுகின்றன.

சிவபெருமான் பன்றியாகத் திருமாலாலும், அன்னப் புள்ளாகப் பிரமனாலும் தேடப்பட்டவர் (31, 80, 81); தாருகாவன முனிமகளிரிடம் பிட்சாடனராகச் சென்று இரந்துண்டவர் (34); கண்ணப்பநாயனார் கடித்துப் பதம் பார்த்துக் கொடுத்த எச்சில் இறைச்சியை உண்டவர் (143); கடலைக் கடைந்தபோது தோன்றிய நஞ்சை அருந்தினவர்(128); தன் மாமனாராகிய தக்கனை அவன் செய்த பெருவேள்வியில் கொன்றவர்(78); கரிவலம்வந்தநல்லூரில் களாமர நிழலில் முகலிங்கநாதர் என்னும் பெயருடன் எழுந்தருளியிருப்பவர்(90).

திருமால் பாற்கடலில் பள்ளிகொண்டிருப்பவர்(90); ஆலிலையில் துயின்றவர் (80); வராகாவதாரத்தில் நிலத்தைத் தம் கொம்பில் தாங்கியவர் (76); முதலையாற் கவ்வப்பட்ட கசேந்திரனைக் காத்தருள் புரிந்தவர் (44); இராமாவதாரத்தில் இலங்கைக்குச் செல்ல வழிவேண்டி வருணனை நோக்கித் தவமியற்றியவர்(90); ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் தன் தாய் மாமனாகிய கம்சனைக் கொன்றவர் (78).

விநாயகர் பாரதத்தை மேருவில் எழுதியவர் (1).

முருகப் பெருமான் பல அரக்கர்களைக் கொன்றவர் (82); சூரனைப் பிளந்து மயிலும் சேவலுமாய் ஏற்றுக்கொண்டவர் (78); அகத்திய முனிவருக்குத் தமிழ் அறிவுறுத்தியவர்(2); அய்யனாருக்குத் தமையன் (141).

இந்திரன் மனலகளின் சிறகுகளை அரிந்தவன் (78).

மீன் வகைகளும் நெல் வகைகளும்

பெரும்பாலான பள்ளு நூலாசிரியர்கள் தம் நூலில் பல வகையான மீன்களின் பெயர்களையும், பல வகையான நெற் பெயர்களளையும் பட்டியலிட்டுத் தருவதை ஒரு மரபாகவே கொண்டுள்ளனர். இம் முறையையே இந் நூலாசிரியரும் பின்பற்றுகிறார்.

மீன் வகைகள் —ஆறல் (60), உளுவை (59). எண்ணெய்மீன் (60), கசலி(59), கயல் (51,168,169,) குரவை (59), கெளிறு(59), செய்மீன் (60), சேல் (59, 61), திருக்கை (60), நுள்மீன் (59), நெய்மீன் (60), மசரி (60), முள்மீன் (59), வரால் (86), வாளை (57, 59, 71, 168), வெண்ணெய்ச் சாளை (60), வெள்மீன் (59) ஆகியன இந் நூலில் இடம் பெற்றுள்ளன. மீன் என்னும் பொதுப்பெயர் 59, 88 ஆகிய இரு பாடல்களில் ஆளப் பெற்றுள்ளது,

நெல் வகைகள்—அலவன் (119), ஆனைக்கொம்பன் (79, 119), கருஞ்சூரை (78, 119, 174) கலவன் (119), காடைக் கழுத்தன் (119, 174), குரும்பை (77), சடையன் (119), சம்பா (174), சாலி (55), சித்திரைக்காலி (119), செந்தாளை (83), செம்பாளை (174), செம்முளகி (119), சொரி குரும்பை (77, 119), துய்யமல்லி (119), பாரக் கடுக்கை (78), புழுதி பிரட்டி (119), பூம்பாளை (28, 174), பெருவெள்ளை (119, 174), மணல்வாரி (78,174), மலை முண்டன் (78,96,174), முத்துவிளங்கி (119), வீதிவிடங்கன் (119) ஆகிய நெல் வகைகள் இப்பள்ளில் கூறப் பெற்றுள்ளன. 55 ஆம் பாடலில் சாலி என்றும், 59, 95, 96 ஆம் பாடல்களில் நெல் என்றும் பொதுவாகச் சொல்லப்பட்டுள்ளது.

பழமொழிகள்

பள்ளேசல் நாட்டுப்புற இலக்கியத்தின்பாற்பட்டது. இதில் கிராமிய மக்களின் உரையாடல்கள் அதிகமாக இடம்பெறு கின்றன. எனவே இத்தகைய நூல்களில் மக்களின் வாய்மொழி

யாகிய பழமொழிகள் நிரம்ப இடம்பெறுதல் இயல்பே. இந்தத் திருவேட்டை அய்யனார் பள்ளிலும் பல பழமொழிகள் உள்ளன; அவை வருமாறு:

அங்கைதான் புறத்து எங்கும் போகாது (85); எலி நாளும் பூனை உள்ள வீட்டில் கிளை சூழ இருக்கும் (106); ஏறவிட்டு ஏணியை எடுத்தல் (95); (ஒருவர்) கிழித்த கீற்றைத் தாண்டா திருத்தல் (95, 114, 189); கொள்ளி கொண்டு தலை சொரிதல் (186); தண்ணீர்த் தாகத்துக்கு (வேறு) என்னதான் குடித் தாலும் தாகம் தீருமோ (67); பாம்பும் எலிக்கு அஞ்சுமோ (190); வந்த விருந்து அயல்வீட்டிற்குப் போ என்றால் போமோ (107); வெந்த புண்ணில் துரும்பிடுதல் போல (67).

பலவிதமான கிடாய்ப்பலிகள்

திருவேட்டைநல்லூர்ப் பள்ளின் பாட்டுடைத் தலைவ ராகிய அய்யனார் உயிர்ப்பலி கொள்ளாமல் தூயபூசை ஏற்பவர்தான். அய்யனாருக்கு எங்குமே மது, மாமிசம், சுருட்டு படைக்கப்படுவது இல்லை என்பார் தவத்திரு ஹென்றி வொயிட்ஹெட் அடிகளார் அவர்கள்.[1] எனினும் ஊரிலுள்ள மற்ற சிறு தேவதைகளுக்கு விலங்குப் பலியூட்டு உண்டு. எனவே இப் பள்ளிலும் மழைவேண்டி அத் தெய்வங்களுக்குக் கடா வெட்டுதல் கூறப்படுகிறது. அப்படிச் சொல்லும்போது இந்த இந்தத் தெய்வத்திற்கு இந்த இந்த வகையான கடா வெட்டப் பட்டது எனக் குறிப்பாகச் சொல்கிறார். ஒருவேளை இதுதான் அத்தெய்வத்திற்குரிய சிறப்புப் படையலா என அறியக்கூட வில்லை. பலிக்கிடாய் விவரம் வருமாறு:—

கண்டல் உணா நிறக்கிடாய் - முருகனுக்கு? (37).

கருங்கிடாய் - வீரவாள் கருப்பன் (36); கீரன் என்மாடன் வீரபோத்தி, வீரசங்கிலிமாடன் இவர்களுக்கு (37).

கருவல் சுட்டிக் கிடாய்-ஏமநீதியானுக்கு (36).

கருவறாக் கிடாய்-பிணமாலை சூடும் பெருமாளுக்கு; இப்பலி முழுச் சருவாங்கமாய் எனவும் கூறப்படுகிறது. (36),

---

1 The Village Gods of South India. Page 18

செங்கிடாய் - இருளப்பனுக்கு (36).
போர்க்கிடாய்-பலவேசக் கருப்பனுக்கு (37).
மரைக்கிடாய்-சித்தன் பெருமான் போற்றிக்கு (36).

நாட்டுப்புறச் சிறுதெய்வ வழிபாட்டைப்பற்றி ஆழமாக ஆராய விரும்பும் ஆர்வலர்கள் இத்தகைய வழிபாட்டு முறைகளையும் இதற்குச் சொல்லப்படும் காரணங்களையும் உண்மையாகத் தொகுத்து முறையாக ஆராய்ந்தால் மிகத் தொன்மையான சமயச் சடங்குகள் பற்றிய சில கருதுகோள்களை உருவாக்க இயலும்.

அய்யனார் வழிபாடு

மாரியம்மனுக்கு அடுத்தபடியாக மிக அதிகமாகத் தமிழர்களால் வணங்கப்படும் கிராம தெய்வம் அய்யனார் என்றும், இவர் நற்பண்புகளை உடையவராகவும், வேண்டிய வரங்களை வழங்குபவராகவும், காவல் தெய்வமாகவும் மதிக்கப்படுகிறார் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.[1]

சங்க இலக்கியத்தில் சாத்தனார்

சங்க காலத்தில் அய்யனார் சாத்தனார் என வழங்கப் பெற்றார். சங்கப் புலவர்களில் பலர் சாத்தனின் பெயரை அடையோடு சேர்த்துப் பூண்டவர்களாக உள்ளனர். சங்க காலத்திற்குப் பிற்பட்ட சீத்தலைச் சாத்தனாரையும் மணிமேகலை ஆசிரியர் - அறிவோம். பாடியோரேயன்றிப் பாடப்பட்டோனாகவும் பிடவூர்கிழான் மகன் பெருஞ்சாத்தன் ஒரு புறப்பாடலில் (395) போற்றப்படுகிறான். இப் பிடவூரில் மாசாத்தனார் கோயில் உண்டு எனவும், சாத்தனார்தான் திருக்கைலாயஞானஉலாவை திருப்பிடவூரில் வெளிப்படுத்தினார் எனவும் டாக்டர் ஐயர் அவர்கள் தம் புறநானூற்றுக் குறிப்புரையில் சுட்டிக்காட்டிப் பெரியபுராணச் சான்றையும் வழங்குகிறார்.[2] அவர் எடுத்துக்காட்டுகின்ற

1 The village Gods of South India page 33
2 புற நானூறு 395. டாக்டர் ஐயர் குறிப்புரை.

தெய்வச் சேக்கிழார் திருவாக்கு வருமாறு:-

"சேரர் காவலர் விண்ணப்பம் செய்த அத் திருஉலாப்புறம் அன்று சாரல் வெள்ளியங் கயிலையில் கேட்ட மாசாத்தனார் தரித்து இந்தப்பாரில் வேதியர் திருப்பிடவூர்தனில் வெளிப்படப் பகர்ந்து எங்கும் நாரவேலைசூழ் உலகினில் விளங்கிட நாட்டினர் நலத்தாலே.[1]"

சிலம்பில் சாத்தனார்

கண்ணகியின் தோழியாகிய தேவந்தியின் கணவனாகச் சாத்தன் மனிதஉருவில் எட்டு வருடங்கள் அவளோடு வாழ்ந்து பின் தன் தெய்வத் தன்மையை அறிவுறுத்திப் பிரிந்தான். இதனை இளங்கோ அடிகள், "காப்பியத் தொல்குடிக் கவின் பெற வளர்ந்து தேவந்திகையைத் தீவலஞ்செய்து, நாலீராண்டு நடந்ததற் பின்னர், மூவா இளநலம் காட்டி என் கோட்டத்து நீ வா என்றே நீங்கிய சாத்தன்"[2] என்கிறார். சாத்தன் பிரிந்தபின் தேவந்தி அவன் கோவிலில் வழிபட்டு வரலானாள். இறுதியில் மலைநாட்டில் கண்ணகி கோயிலில் செங்குட்டுவனுக்கு எதிரில் சாத்தன் தேவந்தியின்மேல் ஆவேசித்துச் சில செய்திகளை வெளிவரச் செய்தான்.

சாத்தன் தேவந்தியின் கணவனாக வந்த சூழ்நிலை கனாத்திறம் உரைத்த காதையில் கூறப்படுகிறது. மாலதி என்னும் ஓர் அந்தணப்பெண் தன் மாற்றாள் குழந்தைக்குப் பால் ஊட்டிக் கொண்டிருந்தபோது பால் விக்கி அது இறந்து விட்டது. தன் கணவனும், மாற்றாளும் தான் வேண்டு மென்றே பாலகனைக் கொன்றுவிட்டதாகப் பழி சுமத்துவரோ என அஞ்சிய மாலதி ஒவ்வொரு கோயிலாகச் சவத்தை ஏந்திச் சென்று குழந்தையை எழுப்பித்தர வேண்டி இறைஞ்சி னாள். சாத்தன் கோயிலில் இறைஞ்சியபோது அவள்மீது இரக்கங்கொண்ட சாத்தன் குழந்தையாக மாறி வந்தான். இவனே வளர்ந்து தேவந்தியை மணந்து கொண்டவன்.

---

1 பெரியபுராணம், வெள்ளானைச் சுருக்கம் 52.

2 சிலப்பதிகாரம், வரந்தருகாதை. 83-87.

இவ் வரலாற்றால் சிலப்பதிகாரக் காலத்தில் சாத்தன் பொதுமக்களால் பெரிதும் போற்றி வணங்கப்பெற்ற ஒரு தெய்வமாக விளங்கினான் என்பது புலனாகிறது.

சைவத் திருமுறைகளில் அய்யனார்

திருநாவுக்கரசர் தம் தேவாரத்துள் "சாத்தனை மகனா வைத்தார்"[1] என்பதால் அய்யனாரைச் சிவகுமாரன் என்னும் வழக்கு அவர் காலத்திற்கு முன்பே தமிழகத்தில் நிலைத்து விட்டது என்பது பெறப்படுகிறது. சேரமான் பெருமாள் நாயனார் தம் திருக்கயிலாய ஞான உலாவில் சிவபிரான் திருஉலாவாக எழுந்தருளும்போது உடன் செல்பவர்களில் சாத்தனாரை, "கதக்காரி வாமன் புரவிமேல் வந்தணைய"[2] எனக் குறிப்பிடுகிறார். பெரியபுராணக் குறிப்பு மேலே காட்டப் பெற்றது.

அய்யனாரின் அவதாரம்

கந்தபுராணம் அசுரகாண்டத்தின் மகா சாத்தாப் படலம் அய்யனாரின் பிறப்பையும் பெருமையையும் பேசுகிறது. இப் புராணம் கூறும் வரலாறு வருமாறு:-*

தேவர்களும் அசுரர்களும் அமுதத்தை விழைந்து திருப்பாற் கடலைக் கடைந்தனர். பல இடுக்கண்களுக்குப் பிறகு அமுதம் தோன்றியது. ஆனால் தேவர்கள் அமுதத்தை அசுரர்களுக்குச் சற்றும் கொடுக்காமல் தாமே முழுவதையும் கொள்ள விரும் பினர். இதற்காகத் திருமால் பேரழகுமிக்க மோகினியாக வந்து அசுரர்களை மயக்கி அமுதத்தைத் தேவர்களுக்குமட்டும் கிடைக்கச் செய்தார். இந்தப் பேரெழில் வடிவைக் கண்ட

1 அப்பர் தேவாரம் 4-32-5.

2 திருக்கயிலாய ஞான உலா 40.

* பஸ்மாசுரனால் சிவபெருமானுக்கு இடுக்கண் நேர்ந்தபோது திருமால் மோகினியாக வந்தார். அந்நிலையில் அய்யனார் பிறந்தார் என்னும் ஒரு வரலாறும் உண்டு. இது கேரளத்தில் ஐயப்பனுக்குக் கூறப்படும் பிறப்பாகும்.

சிவபிரான் மோகினிமேல் விருப்பங் கொண்டு கூடியதால் அரிகர புத்திரனாக அய்யனார் அவதரித்தார். இவர் நீல நிற மேனியராகவும், சிவந்த சடைகளை உடையவராகவும், செண்டாயுதத்தை ஏந்திய கரத்தினராகவும் உதித்தார். சிவபெருமான் இவருக்குக் காவற்பணியை வழங்கினார். இதனைக் கச்சியப்ப சிவாசாரியார், "இந்தவண்ணம் இருக்க முராரியும் அந்தி வண்ணத் தமலனும் ஆகியே முந்து கூடி முயங்கிய எல்லையில் வந்தனன் எமைவாழ்விக்கும் ஐயனே;" "மைக்கருங் கடல் மேனியும் வான்உலாம் செக்கர் வேணியும் செண்டுறு கையுமாய் உக்கிரத்துடன் ஓர்மகன் சேர்தலும் முக்கண் எந்தை முயக்கினை நீங்கினான்;" "அங்கண் மேவி அரிகரபுத்திரன் சங்கையில் பெருஞ் சாரதர் தம்மொடும் எங்குமாகி இருந்து எவ்வுலகையும் கங்குலும் பகல் எல்லையும் காப்பனால்"[1] எனப் பாடுவார். இம் மகா சாத்தாவின் பெருமை "மண்ணகத் தரும் வானவரும் மலர் அண்ணலும் தினம் அர்ச்சிக்கும் நீர்மையான் கண்ணனும் புகழப்படு காட்சியான் எண்ணின் அங்கு அவனுக்கு எதிர் இல்லையே"[2] எனப்படுகிறது.

அய்யனார் யானை வாகனத்தை உடையவர்; பல பூத கணங்களைப் படையாக உடையவர்; பூரணை புட்கலை என்னும் இரு தேவியரை உடையவர் என்னும் செய்திகளையும் கந்தபுராணத்தால் அறிகிறோம். "கார்உறழ் வெய்ய களிற்றிடை ஆகிப் பாரிடர் எண்ணிலர் பாங்குற நண்ணப் பூரணை புட்கலை பூம்புறம் மேவ"[3] என்பது அப்பகுதி.

சூரனால் துயருற்ற இந்திரன் தான் கயிலைக்குச் செல்லும் போது தன் மனைவியைக் காக்கும்படி சாத்தனை வேண்டினான். அவ்வேண்டுகோளை ஏற்ற அய்யனார் மாகாளன் என்னும் தம் படைத்தலைவரைக் கொண்டு இந்திராணியைக் காத்து வந்தார். பின்னர் அசமுகியால் துன்பம் நேர்ந்தகாலை இம்மகாகாளன் இந்திராணியைக் காத்தார். இவ்வராறு

---

1 கந்தபுராணம்2 32-48,49,54.

2 மேலது 2-32-55.

3 மேலது 2-32-58.

இந்திரன் கயிலை செல் படலம், அசமுகிப் படலம், இந்திராணி மறுதலைப் படலம், மகாகாளர் வருபடலம், அசமுகி சோகப் படலம் ஆகிய பகுதிகளில் விரிவாகப் கூறப்பட்டுள்ளது.

காஞ்சிப்புராணத்தில் அய்யனார்

மாதவச் சிவஞான முனிவரால் இயற்றப்பெற்ற காஞ்சிப் புராணத்தின் முதற்காண்டத்தில் மாசாத்தன்தளிப் படலம் என்னும் பகுதி அய்யனாரின் வரலாற்றைக் கூறுகிறது. இதில் அய்யனாரின் திரு அவதாரம் பெரும்பாலும் கந்தபுராணத்தை யொட்டியே அமைந்துள்ளது. "மறுவலும் எம்பிரான் வலிந்து பற்றி ஆங்கு இறுகுறத் தழீஇயினன்; இனைய காலையின் உறுபுகழ்ச் சாத்தன் ஊங்கு உவர்க்குத் தோன்றினான்; நிறுமுறை உலகெலாம் நிறுத்தும் கோலினான்."[1] இவ்வாறு தோன்றிய சாத்தனார் சிவபெருமானை வணங்கித் தனக்குரிய பணியையும் தலைமையும் வேண்டினார். அப்போது இறைவன் தலைமை இறையருளால்தான் எய்துமென்றும், அவ்வருளைப் பெற மெய்யன்போடு செய்யப்படும் பூசையே வழியென்றும், அப் பூசைக்குரிய திருத்தலங்களில் காஞ்சி ஏற்றமுடைய தென்றும் உபதேசித்தருளினார். "அரில் அறச் செய்பணி அருளி நின் அருட்குரிய பேரிறைமையும் உதவ வேண்டுமால்; கருவிடம் பருகிய களைகண் எந்தை நின் திருவடிச் சார்புடைச் சிறியனேற்கென", "மறைமிடற்று எம்பிரான் இயம்பும் மைந்த கேள் இறைமை நம் அருளினால் எய்தற் பாலதாம்; அறை தரும் அருளும்மெய் யன்பின் ஆவதுஅப் பொறைகெழு பத்தியம் பூசைப்பேறரோ", "கண்ணகன் புரிசைசூழ் காஞ்சி வைப்பிடைப் புண்ணியச் சிவக்குறி நிறுவிப் பூசித்து விண்ணவர் தவமுனி வேந்தர் யாவரும் எண்ணரும் பேறுபெற்று இன்ப நீடினார்"[2].

இறைவனின் உபதேசப்படிச் சாத்தனார் காஞ்சிபுரத்தை அடைந்து, முருகப்பெருமானை வணங்கி, அவர் துணையால் சிவபூஜை செய்துவந்தார். இறைவன் காட்சியளித்து

---

1 காஞ்சிப் புராணம் I மாசாத்தன்தளிப் படலம் 23
2 மேலது மேலது 25,26,28.

அய்யனாருக்குப் பூதகணங்களின் தலைமைப் பதவியை நல்கினான். "ஆயிடை நீளமை அருச்சித் தேத்துதி; மாயிரும் தலைமைநாம் வழங்கு கேம்எனச் சேயிழை பங்கினான், அருளிச் செய்தலும் காய்இலைப் படையவன் காஞ்சி நண்ணினான்", "உருகெழு பனிவரைப் பிராட்டி ஒண்மலர்த் திருவடிச் சுவடுதோய் செல்வக் காஞ்சியின் மருவிவேற் கடவுளை வழுத்தி ஆங்கவன் அருளினால் சிவக்குறி நிறுவி அர்ச்சித்தான்", "மறைமுதல் விடைமிசைத் தோன்றி மற்றவற்கு அறைகழல் இமையவர் அருகு சூழ்தர முறைகெழு பூதங்கள் முழுதும் காப்புறும் இறைமையின் மணிமுடி இனிது சூட்டினான்".[1]

இவ்வாறு பூதகணத் தலைமை வழங்கப்பெற்ற சாத்தனார் காமக்கோட்டத்தின் அருகே உவகையோடு தங்கியிருந்தார். இவர் யானைவாகனத்தை உடையவர் என்பதும் செண்டாயுதன் என்பதும் இங்குச் சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றன. சாத்தனால் வழிபடப்பெற்ற இலிங்கத் திருமேனி மாசாத்த நாதன் என வழங்கப் படுகிறார். "பல்கரி வீரர்தேர் பரிகள் தம்முடன் நல்கிய தலைமைபெற்று அனைய சாத்தனும் ஒல்கிடை மலைமகள் உவகை மீக்கொள மல்குசீர்ப் பிலத்தயல் மகிழ்ந்து வைகினான்", "கடாநிரை ஏழுயர் கரிகண் மேல்கொடு நடாய்உளங் களித்திறு மாந்து நாடொறும் வடாதுபாற் செண்டணை வெளியின் மாறடும் அடாவலி படைத்தவன் ஆடல் பேணுமால்", "வலம்படர் சிறப்பின்மா சாத்தன் ஏத்திய நலம்படர் கருணைமா சாத்த நாதனைப் புலம்படர் சிந்தையால் போற்றப் பெற்றவர் இலம்படார் இருமையும் இன்பம் எய்துவார்"[2] என்பன சிவஞானமுனிவரின் செந்தமிழ்த் தேனமுது.

காஞ்சிச் சாத்தனும் கரிகாற் சோழனும்

சிலப்பதிகாரத்தின், "புண்ணியத் திசைமுகம் போகிய அந்நாள் அசைவில் ஊக்கத்து நசைபிறக் கொழியப் பகை

1 காஞ்சிப் புராணம் I மாசாத்தன் தளிப்படலம் 29,30,31
2 மேலது மேலது 32,33,34

விலக்கியதிப் பயங்கெழு மலைஎன இமையவர் உறையும் சிமையப் பிடர்த்தலைக் கொடுவரி யொற்றிக் கொள்கையில் பெயர்வோற்கு''[1] என்னும் பகுதிக்கு உரைகாணும் அடியார்க்கு நல்லார், ''பிடர்த்தலையொற்றி என்றது தன்னோடு எதிர்த்து விலக்குதலின் அதனைப் புறங்காண்டற்கும் அதன் வடபாலும் தனது ஆணை சேறற்கும் சாத்தனதருளால் தான் பெற்ற செண்டினாலே அதனை அடித்துத் திரித்துப் பொறித்து மறித்து நிறுத்தான் என உணர்க'' என உரைத்து, ''கச்சி வளைக்கைச்சி காமக்கோட்டம்காவல் மெச்சி இனிதிருக்கும் மெய்ச்சாத்தன்-கைச்செண்டு கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான் செம்பொற் கிரிதிரித்த செண்டு'' என்னும் ஒரு பழைய வெண்பாவை மேற்கோள் காட்டுகிறார். இதனால் காஞ்சி அய்யனாரின் படைவீடென்பதும், அங்கே அவர் காமக்கோட்டத்தின் காவல்தெய்வம் என்பதும், செண்டைப் படைக்கலமாக உடையவர் என்பதும் மிகப் பழைய காலந் தொட்டே வழங்கி வந்த வரலாறென்பது உறுதியாகிறது.

இப்போது கடந்த ஐம்பதாண்டுகளாக இந்தச் சாத்தனார் வழிபாடு சபரிமலை ஐயப்பன் வழிபாடாக-ஒரு பேரியக்கமாக-இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலும் வேகமாகப் பரவி வருகிறது.

இவ்வாறு சங்க காலம் முதல் இன்றளவும் பொதுமக்களால் மிகப் போற்றி வழிபடப்பெறும் அய்யனாரைப் பற்றி இப் பள்ளு குறிப்பிடும் செய்திகள் இனி ஆராயப்பெறும்.

இவர் சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் பிறந்தவர் 3,6,19,43,47,92,143,196); ஒருவரைத் தந்தையின் பெயரை மட்டும் கூறி இன்னார் மகன் என்னும் மரபு பற்றிச் சிவகுமரன் எனல் (2,80,89,128); முருகப் பெருமானின் தம்பி (141); தந்தை என்ற முறையில் சிவபிரானை வணங்குபவர் (173);

இப் பள்ளு அய்யனாரை உத்திரதேசத்திற்கு உரியவர் (92) எனவும், செஞ்சி நகரிற் பிறந்தவர் (153) எனவும், செஞ்சிப் பகுதியிலிருந்து தென்திசைக்கு வந்தவர்(17) எனவும் கூறுகிறது.

---

1 சிலப்பதிகாரம் புகார்க். இந்திரவிழவு 94-98

உத்தரதேசம் என்பதைத் தமிழ்நாட்டின் வடபகுதி என்றே கொள்ளவேண்டும். இவ்வாறு செஞ்சியிற் பிறந்தவராகக் கூறப்படுவதன் காரணம் ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

அய்யனார் கதிரவனைப் போன்று ஒளிவீசும் திருமேனியர் (6); மணம் பரப்பும் மாலையைப் போல் அழகிய திருமேனியர் (139, 154); திருவடிகள் தாமரை போன்றவை (4,11); பல மலர்மாலைகளை அணிந்தவர் (47, 50, 158); முத்துமாலையையும் (150) கண்டிகை மணியையும் (4) பூண்டவர்; முப்புரி நூல் அணிந்தவர் (3,5,11,105,152); பொன்மலைபோல் விளங்குகின்ற புயத்தினர் (11); பொன்னாற் செய்யப் பெற்று (152) நவமணி களிழைத்த (35) சிறந்த மகுடத்தை உடையவர்.

இவருக்குரிய வாகனம் வெள்ளை யானை (153), கோழிக் கொடியை உடையவர் (3, 54, 93, 111, 143); இவருக்குச் சிறப்பாக உரிய படைக்கலம் செண்டாயுதம் (168); இவருடைய திருக்கோயில் மதி தவழ் கோபுரத்தை உடையது (158); அது பொன்னாலான தோரணங்களையும் படிகளையும் உடையது (93); படி யாளிப்படி என வழங்கப்பெறும் (143), இவருடைய கொலு குதிரைகள் (1), யானைகள் (1), கவிகைகள் (1), சிவிகைகள் (1) தேவமகளிரின் ஆடல் (1,147), பாடல் 1), இசைக் கருவிகள் (147), கொடிகள் (1), கவசங்கள் (1) தேவர்களின் கூட்டம் (147), இந்திரனின் வரவு (147) ஆகியவற்றால் எப்போதும் சிறப்புற்று விளங்கும்.

இவர் இரு தேவியர்களுக்குக் கணவர் (87, 136. 145, 146. 159); தேவியர்களின் பெயர் பூரணை புட்கலை (17, 60. 93, 137, 163, 196); தேவியர் திருநாமத்தழகி, தேவியாரம்மன் (3, 6, 13, 196); நூலின் மங்களப் பாடலில் (196) பூரணை புட்கலையவர்க்கும் (அடி 2) தேவியாரம்மனுக்கும் திருநாமழகியற்கும் (அடி 3) தனித்தனியே மங்களம் கூறப்பட்டுள்ளதால் இவர்கள் வேறுவேறானவர் என்பது பெறப்படுகிறது. ஆனால் அய்யனார் நான்கு மனைவிகளை உடையவராகக் குறிக்கப் படாமல் எல்லாஇடத்திலும் இரண்டு மனைவிகளுடனேயே சுட்டப்படுகிறார். இது நன்றாக ஆராயப்பெற்றுத்

தெளிவுபெற வேண்டிய ஒன்று. இந் நால்வருள் திருநாமழகி சிறப்பாக மூன்று பாடல்களில் தனியே இடம் பெறுகிறார். இவள் மாலை அணிவித்ததால் அய்யனார் மகிழ்ந்தார் (145); கருணை மிகுந்தவள் (47); அருள் மழை பொழிபவள் (61); புகழ் மிக்கவள் (47).

இவர் மேல் ஏழு உலகங்கள் கீழ் ஏழு உலகங்கள் ஆகிய வற்றைவிட நிலைபேறுடையவர் (4); சிவகுமாரனாக இருந்த போதிலும் அவராலும் போற்றப்படுவர் (34); பிரமன் (1, 14,) இமயன், குபேரன் (14), இந்திரன் (136) ஆகியவர்களாலும் எல்லாத் தேவர்களாலும் (140, 145) வணங்கப்படுபவர்; வேதங்களாலும் (1, 17, 137), பல ஸ்ம்ருதிகளாலும் (1), முனிவர்களாலும் (1, 146), சித்தர்களாலும் (145), அரசர் களாலும் (136), எல்லாத் தேயத்தினராலும், (15, 139, 145) எல்லா உலகத்தினராலும் (148, 150), முத்தமிழ் அறிஞர் களாலும் (75) பரவப்படுபவர்; முத்தமிழ்க் கவிஞர்பால் சிறப் பான கருணையை உடையவர் (6,146); எட்டுத் திசைகளையும் துட்டர்களின் தீயஆற்றலை அடக்கிப் பாதுகாக்கும் ஆண் சிங்கம் போன்றவர் (149); பெரும்புகழ் பெற்று விளங்குபவர் (102); தெற்கே கொச்சி முதல் வடக்கே கச்சி வரை (இவை முறையே மேற்கும் கிழக்கும்கூட ஆதல் காண்க) திருக்கோயில் கொண்டு விளங்குபவர்.

நகைகள் வேறு வேறாயிருப்பினும் பொன் ஒன்றே ஆதல் போல அய்யனார் நாமரூப பேதங்களுக்கு அப்பாற்பட்டவர் (196); இயல்பாகவே மலங்களினின்றும் நீங்கியவர் (11);என்றும் மூப்பற்ற இளையவர் (63); கருணைக் கடல் (34); அடியார் களின்மீது அன்புடையவர் (5, 141); அன்பர்களின் உள்ளத்தில் வாழ்பவர் (150); அவர்களுக்கு உணவளிப்பவர் (155); அவர் களுக்கு நேரும் இடர்களையும், கவலைகளையும் ஒழிப்பவர் (151, 155, 158); குருநாதனாக விளங்குபவர் (150, 153); தொண்டர்களின் இருவினைகளையும் (151), ஆணவமலத்தை யும் (153) அகற்றுபவர்; அடியார் பிறவிக்கடல் நீந்தத் திருவடியைத் தெப்பமாக வழங்குபவர் (148); அவர்களுக்கு வீட்டின்பத்தை வழங்குபவர் (2, 158).

இவ்வாறு இப்பள்ளில் அய்யனார் பௌராணிகநிலை முதல் பரம்பொருள்நிலைவரை விளக்கப்பட்டிருப்பதால் இதனைச் சிறுதெய்வ வழிபாட்டைக் கூறும் ஒரு பாமர இலக்கியம் என எளிமையாகக் கருதிவிட முடியாது.

இதுவரை கூறப்பெற்றதிலிருந்து திருவேட்டைநல்லூர் அய்யனார் பள்ளாகிய இந்நூல் இலக்கிய ரீதியாகவும், சமய நூலாகவும் சிறந்து விளங்கும் ஒரு சிற்றிலக்கியமாகும் என்பது உறுதியாகிறது.

சுவடி விவரம்

இப் பள்ளின் பதிப்பிற்கு ஆதாரமாக அமைந்தது ஓர் ஓலைச்சுவடி மட்டுமேயாகும். இச் சுவடி மேற்படி திருவேட்டைநல்லூரைச் சேர்ந்த ஆங்கிலப் பேராசிரியர் திரு டி.. எஸ். திருமலைமேலு அவர்களால் தரப்பட்டதாகும். இச் சுவடி 29 செ.மீ. நீளமும் 3 செ.மீ. அகலமும் கொண்ட 61 ஏடுகளால் ஆனது. சுவடியின் முதல் மூன்று ஏடுகளில் சாற்று கவிகள் எழுதப் பெற்றுள்ளன. இச்சுவடியின் கையெழுத்து ஓரளவு தெளிவாகவே உள்ளது. வழக்கமான ரகர, லகர, னகரப் பிழைகளையன்றி வேறு பெரிய பிழைகள் இல்லை. இச்சுவடியை எழுதியவர் சுவடிகளில் நன்கு எழுதிப் பழக்க முள்ளவராகக் காணப்படுகிறார்.

இது இப் பள்ளின் மூலஏடாகத் தோன்றவில்லை. வேறு ஓர் ஏட்டைப் பார்த்து எழுதப்பட்டிருக்கலாம். ஒவ்வொரு பாட்டின்பின்னும் செய்யுள் எண் எழுதுவதற்காக ( ) அடைப்புக்குறி மட்டும் போடப்பட்டு எண் எழுதப்படாமல் உள்ளது. 43,44 ஆம் ஏடுகள் முதலில் காலியாக விடப்பட்டுப் பிறகு வேறு ஒரு கையெழுத்தினால் நிரப்பப்பட்டுள்ளன. சுவடியில் ஆங்காங்கு திருத்தங்கள் காணப்படுகின்றன.

பொதுவாக ஒரு சுவடியை மட்டும் வைத்துக்கொண்டு ஒரு நூலைப் பதிப்பிப்பதில் பல சிக்கல்கள் தோன்றுவது இயல்பே. ஒப்புநோக்க வேறு சுவடிகள் கிடைக்காத நிலையில் இயன்றஅளவு செம்மையாக இப் பதிப்பைக் கொண்டுவர

முடிந்தளவு முயன்றுள்ளேன். இந் நூல் வெளியான பிற காவது வேறு சுவடிகள் கிடைத்தால் இதன் விடுபாடுகளை அடுத்த பதிப்பில் நிரப்ப வாய்ப்பாக இருக்கும்.

களஆய்வாகத் திருவேட்டைநல்லூருக்கு நேரில் சென்று இதில் குறிக்கப்பட்டுள்ள கோயில்கள், பரஞ்சோதி மடம், வயல் கள் ஆகியவற்றைப் பார்த்தும், வழிபாட்டு முறைகளை விசாரித்தறிந்தும், இதில் இடம்பெற்ற பெரியவர்களின் வழி முறையினர் இருக்கிறார்களா எனத் தேடியும் விரிவாக ஆராய விழைந்தேன். எனினும் தவிர்க்க இயலாத பல காரணங்களால் என்னால் அவ்வாறு களஆய்வை மேற்கொள்ள இயலவில்லை. அப்படியொரு ஆய்வை மேற்கொண்டால் இப் பள்ளிற்கே இன்னமும் வேறு சுவடிகள் கிடைக்கலாம் என நம்புகிறேன்.

நன்றியுரை

இத் திருவேட்டைஅய்யன் பள்ளுச் சுவடியைப் பேணிக் காத்து அன்பளிப்பாகச் சரசுவதி மகாலுக்கு வழங்கியதுடன் இப் பதிப்பிற்குச் சிறந்த ஆங்கில அறிமுகவுரை ஒன்றையும் எழுதியுதவியுள்ள பேராசிரியர் உயர்திரு டி.எஸ். திருமலைவேலு எம்.ஏ.,எம்.பில்.,எம்.எட்., அவர்களுக்கு என் மனப்பூர்வமான நன்றியை மகிழ்ச்சியுடன் உரித்தாக்குகின்றேன்.

இதற்குமுன் பல பள்ளு நூல்களைப் பதிப்பித்துள்ள மதிப்பிற்குரிய பதிப்பாசிரியர்களும், ஆய்வாளர்களும் இப் பதிப்பிற்குப் பேருதவி செய்தவர் ஆவர். முன்னால் வருகின்ற நூல்கள்தாம் பின்னால் வருகின்ற நூல்கள் செம்மையடையக் காரணமாக உள்ளன. எனவே அவர்களுக்கெல்லாம் என் உளமார்ந்த நன்றி உரியது.

இந்தத் திருவேட்டைஅய்யன் பள்ளின் பதிப்புப் பணியை என்னைக்கொண்டு முற்றுவித்துத், தமிழ்கூறும் நல்லுலகிற்கு வழங்குகின்ற சரசுவதி மகாலின் இயக்குநர் பன்மொழிப்புலவர் முனைவர் மு. சதாசிவம் அவர்களுக்கும் மேற்படி நூலகத்தைச் சேர்ந்த அனைவருக்கும் என் நன்றி உரியது.

இப் பதிப்பிற்குத் தேவையான சிறப்புப் பெயரகராதி முதலிய அனைத்து அகராதிகளையும் தொகுத்துதவிய திருமதி பாரதிகோபாலகிருஷ்ணன் அவர்களுக்கு என் இனிய வாழ்த்துக்கள்.

இந்த நூலை விரைவில் வெளியிட ஏதுவாக அழகாக அச்சிட்டளித்த சிதம்பரம் ஸ்ரீ வேலன் அச்சகத்தாருக்கு என் நன்றி உரியது.

இப் பதிப்பைக் கண்ணுறும் அறிஞர் பெருமக்கள் இதன் குறைகளைச் சுட்டிக்காட்டினால் அடுத்த பதிப்பு திருத்தமாக அமைய வாய்ப்பாக இருக்கும். எனவே அவ்வகையில் உதவ வேண்டுகிறேன்.

ப. வெ. நாகராஜன்

தஞ்சாவூர்-9
17. 6. 1991

சாற்றுகவிகள்

கிருஷ்ணஅய்யங்கார்

கட்டளைக் கலித்துறை

செகமே புகழ்திரு மாநகர் வாழ்திரு வேட்டைஅய்யன்
மகவான்தன் மீதினில் பள்ளேசல் தன்னை
மகிழ்ந்துரைத்தான்
குகன்தனை ஈன்றருள் மீனாட்சி தாசன் குவளையணிச்
சுகவான்பொன் னம்பல வேள்ஈன்ற சுப்ர மணியனுமே.

மலை திருமலைஅய்யங்கார்

வெண்பா

தேசம் புகழும் திருவேட்டை நல்லூரின்
வாசம் மிகுந்த மலர்ப்பொழிற்கண் – நேசமுடன்
வீற்றிருக்கும் அய்யனுக்கு மிக்கபெரும் பள்ளேசல்
சாற்றினன்பொன் சுப்ரமண்யன் தான்.

கஸ்தூரி திருமலை அய்யங்கார்

அறுசீர் ஆசிரியவிருத்தம்

பாராளும் பாண்டியினில் வடகரைக்கா-
திபன்முதலோர் பணிந்து போற்றும்
தாராளன் திருவேட்டைச் சாத்தாவின்
பள்பனுவல் தன்னைச் சொன்னான்
சீராளன் மதிச்சடிலச் சொக்கேசர்
இடப்பாகச் செல்வி தாசன்
காராளர் குலத்துதித்த பொன்சுப்ர-
மணியனெனும் கவிவல் லோனே.

திருமலாசாரியார்

அறுசீர் ஆசிரியவிருத்தம்

திருஉறை மார்பன் வாழும் திருவேட்டை நல்லூர் தன்னில்
திருஉறை சோலை சூழும் தடங்கடல் வண்ணன் மீது
பெருஉரை பள்ப்ர பந்தம் பேசுமீ னாட்சி தாசன்
வருகன யோகன் சுப்ர மணியநா வலவன் தானே

வெங்கடாசாரியார்

அறுசீர் ஆசிரியவிருத்தம்

தாரணி மீதில் செல்வம் தழைக்கும்நல் திருநல் லூர்வாழ்
காரணி நிறத்தோன் மீது கவினுறும் பள்ப்ர பந்தம்
சீரணி மிகுமீ னாட்சி தேவிமா மலர்த்தாள் போற்றும்
நாரணி குலத்தோன் சுப்ர மணியநா வலன்சொன் னானே

(அடுத்த இரு சிறப்புப் பாயிரங்களையும்
இயற்றியோர் பெயர் அறியக்கூடவில்லை)

இருபத்து நான்குசீர் ஆசிரியவிருத்தம்

தேசங்க ளும்புகழுந் திருநெல்வே லிச்சரகம்
தென்பொதிகை தன்னில்வாழும்
திரிகூட பதியையநு தினமுமே துதிசெயும்
செம்புலிப் பெரிய சாமி
தீரனுக் குதவிடுங் கருணாலய பாண்டியன்
செங்கோன்மை செய்யுநாட்டில்
சேர்ந்திடும் வணிதங்கள் பதினெட்ட தாகவே
செய்யதிரு வேட்டைநகரில்

வாசமே கமழ்கின்ற தண்டலைகள் சூழ்ந்திடும்
வயல்செந்நெல் முத்துவிளையும்
வளமிகுங் கலிங்ககோன் குளத்தினலை மோதியே
வளர்கின்ற நதியுமொருபால்

வரால்கெண்டை வாளைமீன் விளையாடி வாழ்கின்ற
மணங்கமழ் வாவியொருபால்
வாய்ப்பான தேனினம் முரன்றுமது வுண்டிடும்
மல்லிகைவ னங்களொருபால்

பூசுரர்த போதனர்கள் யாகங்கள் செய்துவளர்
புயலுறுஞ் சோலையதனில்
பொற்புமிகு கோபுரமும் அற்புமிகு மண்டபமும்
பொருந்திவளர் கோயிலதனில்
பொன்மாலை யகலாத புஷ்கலா தேவியும்
பூரணத் தம்மாளுடன்
பூதிபொன் நூல் அணியுந் திருவேட்டை நாதன்மேல்
புகழான பள்ப்ரபந்தம்

நேசமுடன் ஆயிரத் (தைம்பதுடன் ஏழாண்டில்)
நிகரற்ற மிதுனரவியில்
நேருற்ற நவமான தெய்தியாந் தசமியென
நேர்ந்தசுப யோகமதனில்
நிதிபெருகு கோபாலர் கிளையோர்கள் அனைவோரும்
நேர்ந்தசன் னிதியிருந்து
நிலைமைபெறு மீனாட்சி தாசன்இப் பனுவலை
நிகழ்த்தினான் வாழ்கவென்றே.

அறுசீர் ஆசிரியவிருத்தம்

திருவுலவுந் திருவேட்டை மாநகரந்
தன்னிலேதான் (செழுமை மிக்க)
கரியுலவுஞ் சோலைதனில் வசிக்கும்செண்-
டாயுதன்பள் ளேசல் (தன்னை)
விரிகடல்சூழ் பூமிதனில் விரித்துரைத்தான்
விளங்குமீ னாட்சி தாசன்
அரியுதவு சகாயனெனும் பொன்சுப்ர
மணியனெனுங் கவிவல் லோனே.

சாற்றுகவிகள் முற்றும்



அருள்மிகு திருவேட்டை நல்லூர் அய்யனார்
(மூலவர்)

திருவேட்டைநல்லூர் அய்யனார் பள்ளு

விநாயகர் வணக்கம்

சிந்து

1 மாவும் யானையும் கவிகையும் சிவிகையும்
வாச ஓதியர் பரதமும் இரதமும்
வாணர் கீதமும் துவசமும் கவசமும்
மருவிய சபையார்

மேவும் ஆயிரம் மிருதியும் சுருதியும்
வீறு சேர்உளம் நனிவரும் முனிவரும்
வேத னும்பர வியதிரு வேட்டை(யின்)
நாதன் பள்ளிசைக்கே

சீவு தெங்குஇள விடலையும் கடலையும்
தேறு போதகம் அரும்பொருள் பெரும்பொருள்
சீத மேருவில் பொறித்திட அறிந்திடும்
திகழ்ஒளி மருப்பார்

தாவும் ஆர்கதிர் தருமணி குருமணி
தான்த ரும்பணைப் புயமுள வயமுள
தான மாரிபெய் கறையடி இறையடித்
தாமரை பணிவாம்.

முருகப்பெருமான் வணக்கம்

சிந்து

2 மங்காமல் தலைவரும் புலவரும்
வந்தார்வத் துதிசெய அதிசய
மன்றாடிக் கொருமகன் திருமகன்
மதியாப் பதவிக்கு

அங்காரக் கனவையும் நினைவையும்
ஐம்பூதப் பலனையும் பலனையும்
அன்பாகத் தருதிரு வேட்டைநம்
பன்பள் இசைக்கே

குறிப்பு: நூலிடையில் வருகின்ற தலைப்புக்களும், யாப்பு வகைகளும் அடைப்புக்குறிக்குள் உள்ள நூற்பகுதிகளும் பதிப்பாசிரியரால் சேர்க்கப்பெற்றவை ஆகும்.

சங்காலச் சகம்பல மகம்பல
சஞ்சாரக் கலைமணி மலைமுனி
தன்காதிற் புகுதிய மிகுதிய
தமிழ்உரைப் பவனைச்

செங்காவித் திருமலை தருமலை
செஞ்சேவற் கொடியுயர் படியுயர்
சிங்காரக் குழகனை அழகனைச்
சிந்தைசெய் மனமே

நாமகள் வணக்கம்

சிந்து

3. சீலக்கறை காலப் பிறைநுதல்
சேமத்திரு நாமத் தழகொடு
தேவிப்பெயர் மாதர்த் துவரிதழ்த்
தேனுண் டருள்வார்

பாலத்திரி சூலற் குரகணிப்
பாயிற்றுயில் மாயற் கொருசேய்
பாழிச்செழுங் கோழிக் கொடியவர்
பள்ளே சலுக்கே

ஆலக்குழல் கோலப் படிகமென்
ஆகத்தினள் நாகத் திளமுலை
யாளைச்சிறு தாளைப் பணிபவர்
ஆம்நூற் கடலோர்

ஞாலத்திறை தாலத் துறைமறை
நாரிக்கிசை கூறிப் புலவர்கள்
நாவிற்பயில் பாவிற் பயில்வுற
ஞானந் தருமே.

அவையடக்கம்

சிந்து

4 முண்டக மலர்பொரு மாசரணர்
கண்டிகை மணித்திரு வாபரணர்
முந்நூல் முறைமுடித் திடுமுரத்தார்
பன்னூல் வரத்தார்

விண்டல முதல்பகர் தலமேழுக்கும்
எண்டிசை புகல்பா தலமேழுக்கும்
மெய்யன் பெரியவி யன்திருவேட்டை
அய்யன் பள்ளிசை

துண்டவெண் பிறைஉருக் கிளர்படலையும்
பண்டுபுன் மலரெருக் கலந்துடலையும்
துப்புள சடைக்கணி பவன்என்ன
ஒப்புவர் பெரியோர்

மண்டவெண் டிரைவரு கடற்புவியிடை
அண்டவிந் திரையருள் துடற்கவியுடை
வல்லவர் முனிந்திகழ் படவுரைக்கில்
நல்லவர் மனதே.

பள்ளியர் தோன்றும் பாங்குரைப் போப் எனல்

வெண்டளைக் கலிப்பா

5 பொன்பயிலும் முந்நூற் புனிதன் அடியார்மேல்
அன்பன் திருவேட்டை அண்ணல்வயற் பண்ணையிலே
தென்பொதிகை மேருஉதவு தேரோன் நிதிகள்என்று
இன்பம்உறு பள்ளியர்வந்து எய்தியது சொல்வாமே.

சிந்து

6 வடக ரைநகர்க் கதிபதி நீதியில்
மனுவின் வரன்முறை இருநிலம் புரந்தவர்
மருவ லார்முடி அடிபடப் பொடிபட
வருதுர கதத்தான்

புடமி டுந்தம னியமலை யெனும்புயப்
புரவ லன்துரைப் பெரியசு வாமிதன்
புகழ தெனவளர் கருஞ்சையிற் பெருமழை
பொழியக்கும் பிடுவார்

அடவு டன்திருத் தேவியென் பவளையும்
அரிம தர்விழித் திருநா மழகையும்
அணிமு லைச்சுவ டழுந்திட முயங்கிய
அவிர்மணிப் புயத்தார்

கடவு ளர்தொழும் அரிஅரன் உதவுசெங்
கதிர்பு ரைகிரி இடபதி கடபதி
கவிஞர் முத்தமிழ்க் கிரங்கிய கருணையங்
கடலடி யவரே.

மூத்த பள்ளியின் தோற்றம்

வெண்டளைக் கலிப்பா

7 கோதிக் குழையும் குழற்சொருகும் நெற்றியில்வெண்
பூதிக் குறியும்உயர் பொன்னாட்டு அரம்பைஎன்ன
ஆதித் திருவேட்டை அண்ணல்பண்ணைக்கு அன்றும் இன்றும்
மூதித் தொழும்பான மூத்தபள்ளி தோன்றினளே.

சிந்து

8 வாய்ந்தி டும்சிலைக் கிணங்கிய நுதலில்
தோய்ந்தி டும்சிறு திலதமும் கழுத்தில் மங்கலமும்
தளிரென வயங்கு பஞ்சிணை அடியும்

பாய்ந்தி டும்விழிக் கெண்டையும் இருளை
வேய்ந்தி டுங்கருங் கொண்டையும் வதன பங்கயமும்
முருந்திள நகையும் செங்கனி இதழும்

காய்ந்தி டும்கதிர் பொருவிய அவிர்ஒளி
பாய்ந்தி டும்பரும் கண்துயி லுடையும் கைக்கிடுகருங்
காப்பும்கல் வடமும் பைக்கடி தடமும்

தேய்ந்தி டும்இடைக்கு அலம்வரும் எனவே
சாய்ந்தி டும்தனக் கோடுகள் அசையத் திருஉறையும்
வேட்டைநல் லூரின் பள்ளிதோன் றினளே.

இளைய பள்ளியின் தோற்றம்

வெண்டளைக் கலிப்பா

9 புயலேறும் ஓங்கற் பொருளைக் கவர்ந்துஉவரிக்
கயலேறும் முத்தாற்றுக் கால்ஏறி வந்தபுனல்
வயலேறும் போதில் வளைஏறும் தண்பழனத்து
இயலேறும் மேனாட்டு இளையபள்ளி தோன்றினளே.

சிந்து

10 கற்றைமென் குழற்சொருகும் முத்துநகை யும்மலர்ந்த
கஞ்சமுறழ் வதனமொடு மஞ்சள் (நிற மும்)மணமும்
சிற்றிடையும் பந்துநிகர் குத்துமுலை யும்மகளிர்
திட்டிபடும் என்னஅயக் காப்பிட்ட செங்கரமும்
தத்தைமொழி யும்வேலுக் கொத்தவிழி யும்எழுத்துச்
சன்னமிட்ட பட்டுடைமேல் வர்ணபட்டி யும் (துலங்க)
நற்றவம்செய்து அவதரித்த இத்தனைவ னப்புஅமைந்த
நன்னகர நாட்டுஇளைய பள்ளியவள் வந்தனளே.

பள்ளனின் தோற்றம்

வெண்டளைக் கலிப்பா

11 பூகனக மேவிப் புயல்வளர்தென் நல்லூரின்
மாகனகம் மேவி வளர்புயத்தில் மூப்புரிநூல்
தேகனக ளங்கன் திருவேட்டை நாதர்அடிக்
கோகனகம் போற்றும் குடும்பன்வந்து தோன்றினனே.

சிந்து

12 ஏராடு சந்தமும்வெண் நீறாடு நெற்றியும்தோள்
ஏற்றாப்பும் கட்கடைவாய்க் கேற்றமீசையும்
கூறான கச்சுடையும் வீறான பொற்சரிகை
கோர்த்தகாவி உருமாலை சேர்த்த(பாரக்)
கொண்டையும்
தாறாடும் பாளைவழிந்து ஆறாத பனங்கள்ளைத்
தாக்கும்வா யால்அடிக்கடி பாக்குத்தின் பதுவும்
சேறாடி நீழலில்கால் மாறாடி அடிவைத்துச்
செந்திருவேட் டைக்குடும்பன் வந்துதோன் றினனே.

13 வட்டிளங் குயவனிதை நெட்டிளங் கண்கெண்டை
காதல்
வாழ்வுதிரு நாமழகி தேவியார் கேள்வன்
அட்டவிந் திரைவ திந்த பட்டணம் நிகரும்இந்த
நல்லூர்
அண்ணலார்க்கு அடிமையாகிப் பண்ணையில்
வந்தோன்

தொட்டறிவித்து எட்டெழுத்தும் முட்டறத்தன்
செவித்துளையில்
சொல்லத் தரியாதகுருங் கல்லுப்போல் நெஞ்சைத்
திட்டுஎன உணர்ந்துஅதனை வெட்டிமன
வயல்திருத்தும்அச்
செந்திருவேட் டைக்குடும்பன் வந்துதோன் றினனே

பள்ளன் தன் இயல்பு உரைத்தல்
சிந்து

14 கதிசேர் தவம்இயற்றும் முதியோரைப் பழித்தாரைக்
காட்டுமாடு என்றுஉழவில் பூட்டுவேன் ஆண்டே
மதியாத எட்டெழுத்தும் பொதியாத நெஞ்சதனில்
வாய்ச்சதரிசு என்றுகொழுப் பாய்ச்சுவேன் ஆண்டே
நதிசேர் குவளைமலைப் பதியானைத் துதியாத
நாக்கையொரு தோற்கிலணையாய் ஆக்குவேன்
ஆண்டே
விதியாளன் தர்மன்இரு நிதியாளன் போற்றுதிரு
வேட்டைஅய்யன் கீர்த்திஎங்கும் நாட்டுவேன்
ஆண்டே.

15 பூதலம் எல்லாம் போற்றும் நாதன்திரு வேட்டை அய்யன்
புண்ணியன் தலத்தைச்சேரார் கால்களை வாங்கிப்
போதவே உழும்க லப்பைக் குத்தியா வெட்டி(ஆங்கே)
பொருந்திய கைகளைஏர்க்காலா ஆக்குவேன்
ஆண்டே
நீதமும் தவறிப் பட்ச வாதமே சொலுவோர் தோலை
நீட்டிய வடம தாகப் பூட்டுவேன் ஆண்டே
சீதரன் பனுவல் தன்னைக் காதினில் கேளார் தம்மைச்
சிறப்புஉள வரப்புஎன்றேநான் செதுக்குவேன் ஆண்டே

பள்ளியர் குடிவரவு பகர்வர் என்றிடல்
வெண்டளைக் கலிப்பா

16 செம்பசிய நெற்றிச் சிலையால் எவரையும்கண்
அம்பசைய எய்யும் அதிரூபப் பள்ளியர்கள்
வம்பசைய விம்மி வளரும் பணைத்தமுலைக்
கொம்பசையத் தத்தம் குடிவரவு சொல்வாரே.

மூத்தபள்ளி கூறுதல்

சிந்து

17 பூரணை புட்கலை மேவும் காரணன் இருந்த செஞ்சிப்
பூமி விட்டுத் தென்தி சைக்குச் சாமி வந்தநாள்
ஆரணம் பரவிய தாரணர் எங்கள் நாய னாருக்கு
ஆதி யில்தொ ழும்பு செய்யும் மூதி முறியாள்;
ஈரணிச் செவிக்குப் பிந்தும் கூரணி முட்கொம்பு அல்ல;
ஏமி என்பேர்; பள்ள னுக்கு மாமி மகள்நான்;
வாரணி தனத்துத் தேவியர் சீரணி அடியா னுக்கு
வாய்த்த நல்லூர் மூத்த பள்ளி நானே ஆண்டே.

இளையபள்ளி கூறுதல்

சிந்து

18 நீண்டதிரி கூடமேவும் தூண்டருஞ் சுடர்க்கொழுந்தும்
நேசமுற்ற நன்னகரத் தேசம்எங்கள்ஊர்
ஆண்டவன்து ரைச்செம்புலிப் பாண்டியன்செண்பகநல்லூர்
ஆலயம்செய் நாளில்பண்ணை வேலையில்வந்தேன்
பூண்டசெழுந் தேமல்முலை தீண்டமனது ஆசைகொண்டு
பூக்கும்முன்னே தாலிகட்டிச் சேர்க்கைபிரியான்
பாண்டவர்ச காயனுக்கும் தாண்டவராயார்க்கும்புத்ரன்
பண்ணைப்பள் ளனுக்குஇளைய பள்ளிநானே.

பள்ளியர் நாட்டைப் பாடுவர் என்றல்

வெண்டளைக் கலிப்பா

19 மாவெடுத்த கோட்டில் வதியும் குயில்எனப்பூங்
காவெடுத்த நல்லூர்க் கடவுள் அடிபணிந்து
ஏவெடுத்த கண்வேல் எறியும்இரு பள்ளியரும்
நாவெடுத்துத் தங்களிட நாட்டுவளஞ் சொல்வாரே.

பள்ளியர் மாறிமாறிப் பாடும் நாட்டுவளம்

சிந்து

20 மஞ்சு மேல்நிமிர் இஞ்சியில் தாவும்
வருக்கை மேல்பஞ் சரக்குயில் கூவும்
கஞ்சம் மீதுஅனம் துஞ்சஅ வாவும்
கலைப்ப வாழைக் குலைப்பழம் தூவும்
செஞ்சொல் மாதர்கண் அஞ்சனம் அவாவும்
திரண்ட போரில் குரண்டங்கள் மேவும்
பஞ்சில் மென்சிறை வண்டுஇசை யோடு
பாடும் கல்லக நாடுஎங்கள் நாடே.

21 கோலம் நோக்கிய ஆலயம் நீடும்
கொடிஎ லாம்விண் முடியிடை ஆடும்
சாலை யாரரி காலையும் பேடு
தணந்தி டாது மணந்திட நாடும்
சோலை வார்மது வேலையில் சாடும்
தோரண மீது சாரணர் கூடும்
பாலை மென்மொழி யார்கள் மங்களம்
பாடும் மேல்திசை நாடுஎங்கள் நாடே.

22 பாவு மாமணித் தூபிகள் தோறும் – செம்
பானு வாம்பரி தான்இளைப் பாறும்
காவு சேர்இளம் கூவிளம் நாறும் – தண்
கான்எ லாம்வரி மீன்எதிர்த்து ஏறும்
மேவு கோகிலம் மூவர்சொல் கூறும் – புல்
மேடுஎ லாம்புனல் ஓடைபட்டு ஊறும்
நாவி னால்தினம் யாவரும் முத்தமிழ் – விண்
நாட்டும் செந்திரு வேட்டைநல் லூரே

23 ஆதி மாமநு நீதியில் நாளும் – வளை
ஆகு வும்விட நாகமும் வாழும்
மோதி வாளைகள் வீதியில் தாழும் – வெள்
மூல மாங்கனி ஆலையில் வீழும்

சேர்தி லாமலர் ஓதியைச் சூழும் - அக்
கோதை மார்விழி காதிடை நீளும்
தீதி லாதபல் சாதியும் வாழும் - அறம்
தேடும் நன்னகர் நாடுஎங்கள் நாடே.

24 கொல்லை மீதுஇள முல்லை வெடிக்கும்
குறும்பர் மேதிகள் கரும்பை ஒடிக்கும்
வல்லை பாய்புலி புல்லைக் கடிக்கும்
வயல்கள் தோறும் கயல்கள் துடிக்கும்
வில்லை ஈனும்முத்து அல்லை முடிக்கும்
வியக்க மேடை மயில்கள் நடிக்கும்
தொல்லை நான்மறை எல்லைஇல் வேதியர்
சொல்ல ஓங்கிய கல்லக நாடே.

25 மூற்று வாய்நிதி பூற்றுக் களிக்கும் - மும்
மாரி பெய்துஅணை ஏரி செழிக்கும்
ஊற்று வால்வளை நாற்றில் ஒளிக்கும் - விண்டு
ஓடு தேன்மலர் ஏடு துளிக்கும்
ஆற்று வாளைஅள் சேற்றில் நெளிக்கும் - வில்
ஆடு மாமணி யோடே கொழிக்கும்
தூற்று சாலியின் ஏற்றவை குன்றெனச்
சூல்மு கில்தவழ் மேல்திசை நாடே.

26 திங்கள் தோறும் மகம்உள்ள நாடு
திவசம் தோறும் சுகம்உள்ள நாடு
சங்கம் ஏறும் புகழ்உள்ள நாடு
சனங்கள் தோறும் மகிழ்வுள்ள நாடு
வங்கம் ஏறும் நதிஉள்ள நாடு
மனைகள் தோறும் நிதிஉள்ள நாடு
பொங்கர் மேவிய பைங்கிளி மென்சுளை
போடும் கல்லக நாடுஎங்கள் நாடே.

27 பாழி மூன்றினில் நாழிஅ முங்கும்
பாட்டும் ஆடலும் மீட்டொடி லங்கும்
வாழி வாய்த்தகண் தோழியர் பொங்கும்
மருந்துஆ னாலும் விருந்தொடுஒ துங்கும்

மேழி வாழ்வுறும் பாழியர் எங்கும்
விசும்பு மாடத் தசும்பிடை தங்கும்
ஆழி ஓதையது ஏழினும் மும்முரசு
ஆர்க்கும் நன்னகர் நீர்த்துறை நாடே.

28 புல்எ லாம்குசை; எல்லைஇல் வாவியில்
போதுஎ லாம்செய்ய தாதுஅவிழ் முண்டகம்;
சொல்எ லாம்தமிழ் வல்லவர் பண்ணுசொல்;
தோப்புஎ லாம்பசும் சீப்புஉள வாழைகள்;
நெல்எ லாம்மறு விலாத பூம்பாளை;
நீர்எ லாம்பொன்னிக் கார்எனும் நன்னீர்
கல்எ லாம்சுடர் வில்விடும் பண்பினைக்
காட்டு வார்திரு வேட்டைநல் லூரே.

29 அஞ்சக் கண்டது நல்குரவு என்றும்
அடுக்கக் கண்டது மேலவர் செல்வம்
துஞ்சக் கண்டது நூற்றினுக்கு அப்பால்
தொடரக் கண்டது புண்ணிய கீர்த்தி
கெஞ்சக் கண்டது சேவல்தன் பெடையை
கிறங்கக் கண்டது தேன்உணும் வண்டு
மிஞ்சக் கண்டது முத்தமிழ் வளமே
மேவும் செண்பகக் காஉள நாடே.

குயிலிசை வேண்டுவர் குடும்பியர் என்னல்
கொச்சகக் கலிப்பா

30 பாட்டின்இசை யிற்பெருகும் பாக்கியம்சேர் நல்லூர்என்
நாட்டின்வளம் வகையாக நவின்றஇரு பள்ளியரும்
தேட்டுவியன் குலவு(கின்ற) தேமாவின் பைந்தளிர்ப்பூங்
கோட்டுவரிக் குயிலதனைக் கூவுஎன்று கூறுவரே.

குயிலைக் கூவுஎனக் கோதையர் வேண்டல்
சிந்து

31 கானமலர்ப் பொழில்உடுத்த அய்யனார் திருக்கோயில்
கற்பகா லம்விளங்கக் கூவாய் குயிலே
ஏனம்அனம் தேடறியாக் கருஞ்சைவனத்து ஈசர்வளர்
இருங்காவில் மழைபொழியக் கூவாய் குயிலே

வானவர்மென் புனலாடும் கருப்பநதித் திரைமோதி
வளர்வெள்ளம் பெருகவே கூவாய் குயிலே
தானதவம் வழுவாமல் நால்வேத நெறிஒழுகும்
சைவசம யம்தழைக்கக் கூவாய் குயிலே.

32 (களங்கரிய பெருமானும் அளக்கர்நிறத் திருமாலும்
கருணையொடு நிதங்காக்கக் கூவாய் குயிலே)
வளஞ்சேர்நல் லூர்சூழ்ந்த குளப்புரவும் காற்புரவும்
வருடமிரு பூவிளையக் கூவாய் குயிலே
இளங்கமுகின் மிடறுடைய கற்பகப்பெண் ணாரமுதம்
இருக்கும்உயர் வரைசெழிக்கக் கூவாய் குயிலே
தளங்குபுனல் தடம்சூழும் நன்னகரத் திருநாட்டைத்
தயவாக வாழ்த்தியே கூவாய் குயிலே.

33 தவளஒளி பழத்துஒழுகு மகுடபதி துரைப்பெரிய
சாமிகிளை தழைத்தோங்கக் கூவாய் குயிலே
புவனமருள் இகழ்ந்துஇதயம் தனித்ததவ முனிவோர்கள்
பூசனைகள் முடங்காமல் கூவாய் குயிலே
பவனநலம் தனில்உதித்த தருமவேள் போத்தியப்பன்
பலகிளையும் தழைத்தோங்கக் கூவாய் குயிலே.
நவமணியின் கதிர்எனத்தேன் மதுரம்வழிந்து ஒழுகுதமிழ்
நாவலரை வாழ்த்தியே கூவாய் குயிலே.

மள்ளர் தெய்வம் வாழ்த்துவர் என்னல்
வெண்டளைக் கலிப்பா

34 இரவை நுகரும்(நம்) ஈசுரர் போற்றும்அருட்
பரவை திருவேட்டைப் பண்ணவன்தன் நாட்டில்முகில்
வரவை உணர்ந்து மழைதேடி மள்ளர்பசுங்
குரவை முழங்கக் குலதெய்வம் போற்றுவரே.

பள்ளர் பற்பல தெய்வம் பரவுதல்
சிந்து

35 மாமணி மகுடம் மின்னும் தாமன்திரு வேட்டை அய்யன்
மகிழவே கட்டளை செய்து புகழப் பணிவோம்
நேமகத் துடனே கந்த சாமியார் கணப திக்கு
நேர்படு தேங்காய் பழமும் வாரிப் படையும்

சேம(மே) மிகுசந் நிதியின் சேரசோழ பாண்டி யர்க்குத்
தேவைபால் பழமும் பொங்கல் அவல் யாவையும்
கோமகன் முதலா யுள்ள நேமியோர் பதமும் வேண்டிக்
கூறிடுந் தெய்வங் களையே நேருடன் போற்றி

36 வீரவாள் கருப்ப னுக்கு நேருடன் கருங்கி டாயும்
மேதினி புகழும் ஏம நீதியா னுக்குப்
பாரமாய்க் கருவல்ச் சுட்டிக் கிடாயையும் பலிகொ டுத்துப்
பாங்குஇரு ளப்ப னுக்குச் செங்கிடாய் வெட்டும்,
சீரன்என் மாட னுக்கும் கருங்கிடாய்ப் பலி(யே) நல்ல
சித்தன்பெரு மாண்போற்றிக்கு ஏற்றம ரைக்கிடாய்
சாரன்பிண மாலை சூடும் பெருமாள் தனக்கே முழுச்
சருவாங்க மாய்க்கரு வறாக்கி டாய்ப்பலி

37 வண்டன் வீரபோத்தி வீரசங்கிலி மாடன் இவர்க்கு
வாகுடன் கருங்கி டாயும் முருகன்முன் பாகக்
கண்டல் உணாநிறக் கிடாய்ப் பலியுங் கொடுத்துக்
காசலை யாய்ப்பல வேசக் காரன் தனக்கே
துண்ட மாகப் பலிக்கு உகந்த போர்க்கி டாய்பின்னும்
சுற்றி லுள்ள தேவதையைப் பத்தியாய்ப் போற்றிக்
கண்டு மொழியாள் கற்பக நாச்சி யாரை மிகக்
கைதொழுது போற்று வோம்நற் செய்கை யுடனே.

38 சித்திரச் செவ்வாய்ச்சி யெனுமுத்தி அரிதக நாச்சிக்குச்
சிறந்திடு மதுப்பொங்கல் நிரந்தர மாக
வெத்திபெறு வாத்தியங்கள் பத்தியாய் முழங்கிடவும்
வேடிக்கை யுடனே ஆடிப்பாடிக் கொள்வோம்
எத்திசையும் புகழும்நல்லூர் சுத்திலுள்ள தெய்வங்களுக்கு
இணக்கமாய் வணக்கப்பூசை மணக்கக் கொடுப்போம்
இத்தைமுதல் பாய்விலகி மூன்றுநா ளுக்குப்பள்ளர்
எல்லோரும் சன்னிதிக்குச் செல்வோம் வாரும்.

மழைவரம் வேண்டி வாழ்த்துவர் என்னல்

வெண்டளைக் கலிப்பா

39 கழைவேண்டி முத்துஒளித்த கல்லகநல் நாட்டில்எதிர்
குழைவேண்டிப் பாயும் கொழுங்கட் கடைசியர்கள்
இழைவேண்டிப் பூரித்து எழுமுலைதோய் மள்ளர்எலாம்
மழைவேண்டித் தெய்வ வரம்கேட்கச் சென்றாரே.

மள்ளர் மழை வேண்டல்

கொச்சகக் கலிப்பா

40 கனிவுபெறுந் திருவேட்டைக் காரணனே மழைதருவீர்
பனுவல்மிகும் சுப்ரமண்யப் பங்கயனே மழைதருவீர்
புனிதர்எனும் சன்னிதியின் பூபால மழைதருவீர்
இனியஉரை அரசர்மகன் எம்பெருமான் மழைதருவீர்

41 அழகொழுகும் கற்பகப்பெண் ணாரமுதே மழைதருவீர்
இளமுலைமாது அரிதகச்சிற் றிடைமயிலே மழைதருவீர்
குளமருகால் ஓடைக்கரைக் குஞ்சரமே மழைதருவீர்
பழமறையின் முன்உதித்த பண்ணவனே மழைதருவீர்

42 நறவொழுகும் தொடைப்பெரிய நாயகமே மழைதருவீர்
திறமதியம் புகுமாடத்து ஈசுரனே மழைதருவீர்
அறநெறிநின்று உயிர்புரக்கும் அடல்முருகா மழைதருவீர்
விறல்அரசர் மகிழ்வரிசை வீரணனே மழைதருவீர்

மழைக்குறி தோன்றியது என்னல்

வெண்டளைக் கலிப்பா

43 நஞ்சுஇருந்து வாழும் நனிஇருண்ட கண்டனுக்கும்
அஞ்சுஇருந்த செங்கை யவற்கும் பொதுப்புதல்வன்
பஞ்சுஇருந்த தாளான் பயிலும்மூ தூர்செழிக்க
மஞ்சுஇருந்து பெய்ய மழைக்குறிஉண் டாகியதே.

மறுநாள் மழைவரும் என்றுஉளம் மகிழ்தல்

சிந்து

44 ஆனமுகில் கூடுவதற்கு இனமும்ஆகுது – குகன்
ஆலயம்சேர் திருச்செந்தூர் மூலைமின்னுது
கூனல்முதுகு இப்பியும்வாய் தானேநீக்குது – சுற்றிக்
கோட்டையிட்டுக் கொண்டுபொழுது ஓட்டமாகுது
கானமிரைந் தேகடந்து பானற்கேகுது - மழைக்
காற்றடிக்குது ஊதினாற்போல் சீற்றைகூவுது
மீனவன்செந் திருவேட்டை வானவன்நல்லூர் - செழிக்க
வேணமழை பெய்யும்நாளை காணும் பள்ளீரே.

45 மாத்தைசந்திப்பு அன்றிப்பாதி ராத்திரிஆனாலும் – மழை
வாரபோது காலணைக்குப் போறதுநாமே
ஊத்திருக்கும் இளமழையாம் தூத்தல்தெரி யாத - விரிசு
ஓலைக்குடை கொங்காணியும் ஏலவே தேடும்
காத்திருந்து குளம்பேண ஏத்தசுழுக் கிரும்பூசிக்
கம்பினொடு தீவட்டிக்கு நிம்பெண்ணெய் வேண்டும்
ஆத்தில்வெகு கோதரியாய் நீத்தம்வரும் போலிருக்கு
அண்ணல்திரு வேட்டைநாதன் பண்ணைப் பள்ளரே.

மனமெலாங்குளிர மழைமிகப் பொழிதல்

வெண்டளைக் கலிப்பா

46 படநாகம் காத்த பசுபதியின் விண்வெளுத்துத்
தடநாகம் காத்த சலதியில்நீர் மொண்டமுகில்
கடநாகம் காத்த கடவுளினும் சூல்கருத்துக்
குடநாகம் காத்த குவட்டில்கால் ஊன்றியதே.

சிந்து

47 ஒருவன் விசும்புக் கிவன்எனும் சுரர்
நிருபன்அ மைத்த பணியினால்
ஒளிபெற்று உயர்ந்த ஆழிப் பொருப்பின்
பொழில்விட்டு எழும்பிப் படலையாய்

இருவர் மதலை தொடையல் செறிந்த
மருமம் முயங்கு தனத்தினாள்
இளகும் கருணைப் பாவை திருநா
மழகுப் பெயரின் வெளுத்தகார்
குருவ மணிகள் கொழிக்கும் கடலில்
பெருவெண் திரையை மேய்ந்துநீள்
குடதி சைக்கிரி மேவி யாங்கவள்
தடவி ழிக்கடை யமையுமப்
புருவம் உறழும் தனுவு கிளர
உருவப் பணியின் நகைமின்னிப்
புரிசை யகன்ற குரிசில் நடையின்
முரசி எதிர்ந்து பொழிந்ததே.

பருவங்கண்டு பெருமகள் புலம்பல்

வெண்டளைக் கலிப்பா

48 சீர்வந்த நல்லூர்த் திருவேட்டை நாதன்வரை
ஆர்வந்த வாளி அனங்கன்எய்யத் தாங்காதே
தார்வந்த சேர்க்கை தணந்தநாள் தாம்உரைத்த
கார்வந்து மீண்டும் கணவன்வரக் கண்டிலனே.

வெள்ளம் வருதல்

குறிஞ்சி

சிந்து

49 இடியைச் சாடும் பள்ளமாய் – மலை
முடியைச் சாடும் வெள்ளமாய்
எதிரும் சாதி வேங்கையும் — சினை
அதிர மோதிக் கோங்கையும்

அடியைப் பிடுங்கிப் புளியுகளையும்
மடியப் பிடுங்கி எறிந்துநீத்து
அடுத்த சிந்துரக் காட்டையும் — சினத்து
எடுத்த சிந்துரக் கோட்டையும்

துடியைப் பறித்து வேத்திரப் — பசுங்
கொடியைப் பறித்துக் கொணர்ந்துபோய்ச்
சுழித்துக் குறவர் வதியும் குடிலை
அழித்துத் துறவர் இதயம்போல்

மருதம்

சிந்து

55 தாரு சேரும் அரம்பையும் - கருஞ்
சேறு சேரும் வரம்பையும்
சாய்த்துப் பனச மூட்டையும் - அறத்
தேய்த்து வனசத் தோட்டையும்

ஊறு நீளும் கூவமும் - பசு
ஏறு சேரும் தாவமும்
ஓங்கு கழையின் வேலியும் - அதன்
பாங்கு விளையும் சாலியும்

ஆறு நீளும் சாலையும் - முகிற்
காரு நீளும் சோலையும்
அழித்துத் தண்டலை நடுவிற்போய் - இடம்
ஒழித்துக் கொண்டலை மடுவிற்போய்

ஏறு பிளியும் பாலையும் - மள்ளர்
கீறு மொழியும் மாலையும்
இடந்து மருதங் கடந்து - குவளை
அடர்ந்து நெய்தற் றொடர்ந்ததே.

வெண்டளைக் கலிப்பா

56 செழிக்கும் திருவேட்டைச் செல்வன் உயர்வரையில்
கொழிக்கும் கடல்வாய்க் கொழுநர்வரக் காணாமல்
வழிக்கும் தடங்கண்ணீர் மாறா நுளைச்சியர்முன்
சுழிக்கும் குறியைத் துடைப்பதற்கோ செல்வாயே.

நெய்தல்

சிந்து

57 பள்ளம் மேடும் ஒன்றுபோல் - மஹழ
வெள்ளம் ஓடும் குன்றுபோல்
பார மகரம் தேடுபாய் - அலைத்
தீரநகரம் ஊடுபோய்த்

துள்ளி வாளை ஏறவும் – திரை
தள்ளித் தாழை பாரவும்
சூழும் வளம்அ நேகமும் – சுவை
காழும் பழம்அ நேகமும்

வள்ள மாடு காயலிற் – புகுந்
தள்ள லோடு தூயகார்
வாரி வழித்துப் பூரிநுளையர்
சேரி அழித்த கோரியாய்

உள்ள வாழி விரிந்தகம்
கொள்ள வூழி பிரிந்ததன்
உடலில் ஓடிப் பரந்த உயிரின்
கடலில் ஓடிப் பரந்ததே.

வெண்டளைக் கலிப்பா

58 கார்காட்டும் மேதிக் கவையடியில் நண்டுஒளிக்கும்
சீர்காட்டும் நல்லூர்த் திருவேட்டை நாதன்வெற்பில்
போர்காட்டும் மாரன் புறங்காட்டக் காதலன்தோள்
தார்காட்டும் கிள்ளாய் தருவன்எனச் சொல்லுதியே.

சிந்து

59 நிலையில் சுரந்த முகிலில் கருஞ்சை
மலையில் சுரந்த பிரளயம்
நெல்லார் கழனி செல்லூர் புரிசை
நல்லூர் நகரை வலஞ்செய்தே

அலையில் தளும்பு கடலின் அகடு
குலையப் புகுந்துஉ லாவலால்
அன்றே பயத்தில் சென்றே கயத்தில்
நின்றே கழித்து மீன்எலாம்

துலையில் குனிக்கும் பரவைச் செழிக்கும்
உலையில் சிவந்த சேல்களும்
துள்மீன் குரவை வெள்மீன் உளுவை
முள்மீன் கெளிறு வாளையும்

கலையில் பிடிக்கும் கசலியும்அணைத்
தலையைக் கடக்கப் பாயவே
கரையைச் சாடும் கற்பக நதி(யின்)
திரையைப் பாரும் பள்ளீரே.

60 கரைகொள் ளாமல் திரைகள் எறியும்
கால வெள்ளம் சூலவேற்
கவுரி கற்பக நாச்சி யார்அருள்
உவரி ஒக்கப் பொங்கியே

பரைஉ லாவும் வரையை நீங்கிப்
பரந்து ளாற்றில் சுரந்துபோய்ப்
பணைமென் தனத்துப் பூரணை புட்கலை
துணைவன் கோயில் இடஞ்செய்தே

விரைவி லேமுள் ளரைசெங் கமலம்
மிடையும் குளத்தில் அடைவதால்
வெளுத்த மசரி கொழுத்த திருக்கை
வெண்ணெய்ச் சாளை எண்ணெய்மீன்

நிரைசெய்து ஏரித் துறையின் ஒதுங்கும்
நெய்மீன் ஆறல் செய்மீனும்
நெருக்கி மதவில் பாய வேகுளப்
பெருக்கம் பாரும் பள்ளீரே.

பண்ணையார் வந்தார் எனல்

வெண்டளைக் கலிப்பா

61 சேலான ஒண்கண் திருநா மழகியருட்
பாலா னதுசொரிந்த பான்மைபோல் மால்வரையில்
சூலான மேகம் சொரிந்துபுனல் வந்ததற்பின்
மேலான பண்ணை விசாரிப்பான் வந்தானே.

பண்ணையார் வருகை

சிந்து

62 கோளி மயிரில் சிலிர்த்த தேளி வீசையும் – பனங்
கொட்டைபோல் தலையும்சோளத் தட்டைபோல் பல்லும்
காளி வெளாவி வைக்கும் தாளி வயிறும் - எலிக்
கண்ணும்ஊளை மூக்குஉறிஞ்சி உண்ணு நாசியும்
வாளி பூரும் ஏறு காதும் தோளில்ஏத் தாப்பும் – சூலை
வந்துமுட மாயொருகால் கிந்துநடையும்
மேளி போல்வ ளைந்த கையும் பாளி வாயுமாய்த் – தூபி
விண்ணையார் சிகரிநல்லூர்ப்பண்ணையார் வந்தார்.

பள்ளியர்கள் வரவேற்றல்

வெண்டளைக் கலிப்பா

63 குழகன் இரவிக் கொழுங்கதிரின் முந்நூல்மார்பு
அழகன் திருவேட்டை அண்ணலார் பண்ணையனைப்
புளகம் உறுமுலையால் பொற்புஏறும் பள்ளியர்கள்
முளகி யவல்தூணி முன்னைவைத்துக் கண்டாரே.

பள்ளியர்கள் பண்ணைக்காரரை வணங்குதல்

சிந்து

64 தாளிவயிற்று அழகரைக் கும்பிடுகிறோம் — புதுச்
சட்டித்தலை அழகரைக் கும்பிடுகிறோம்
தேளிவீசை அழகரைக் கும்பிடுகிறோம் — பீளை
சிந்துஎலிக்கண் அழகரைக் கும்பிடுகிறோம்
மூளிவெண்பல் அழகரைக் கும்பிடுகிறோம் — (மெத்த
மூக்குஉறுஞ்சும் அழகரைக் கும்பிடுகிறோம்
மேளிபோற்கை அழகரைக் கும்பிடுகிறோம்) – திரு
வேட்டையயன் பண்ணையாரைக் கும்பிடுகிறோம்,

பண்ணையாரின் செயல்கள்

சிந்து

65 முன்னைநின்ற மூத்தபள்ளி தன்னைப்பார்ப்பாராம்
– நொண்டி
முத்திமகள் பகல்போதைக்கு அத்தைஎன்பாராம்
தின்னஇலையும் (பாக்குப்)பிளவும் இன்னா என்பாராம்
– பள்ளன்
தேட்டிலே இளையபள்ளி நாட்டம்என்பாராம்
வன்னத்தடிக் கம்பிலேகால் பின்னிநிற்பாராம்– தாடி
வட்டப்பேன் அரிக்குதென்று கிட்டப்போவாராம்
என்னைக்குறித்து ஏசினதுஆர் உன்னைஎன்பாராம்– ஆதி
எந்தைதிரு வேட்டைநாதன் சொந்தப் பண்ணையார்.

வெண்டளைக் கலிப்பா

66 உள்ளநடை சற்றும் ஒருவருக்கும் தோன்றாமல்
கள்ளநடை கற்ற கணவன் குறும்புஅடக்க
மெள்ளநடை கொண்டவள்தன் வெப்பத்தால் மூத்தபள்ளி
பள்ளன்நடை எல்லாம்போய்ப் பண்ணையார்க்குச்
சொன்னாளே.

மூத்தபள்ளி சொல்லுதல்

சிந்து

67 பண்ணை யாரேயோர் விண்ணப்பம் பள்ளனைப்
பார்த்தபேர் பரமார்த்தி தான்என்பார்;
புண்ணி லேதரும் கண்ணில்து ரும்பிட்டுப்
பூரினா லெனவீறு டன்வைவான்;
தண்ணித் தாகத்துக்கு என்ன(தான்) குடித்தாலும்
தாகம் தீருமோ? மோகம்கொண்டார்க்கு
எண்ணல் பேசுவது ஒண்ணல்ல ஏராளம்
எல்லாம் இனிப்பாகும் காண்ஆண்டே.

68 வீறுநான் இட்டசோறும் உண்ணான் சொல்ல
வெட்கக்கேடு அந்தச்சக்க ளத்திக்கு என்று
தேறுமஞ் சளுக்குஆறு பொன்பண் டாரச்
செட்டி(யின்) கையிலே கட்டிக் கொடுத்தான்
மாறுகாண் பிக்கில்அக் கூறும் வரும்வெகு
வம்பனாம் வச்ச கம்புகை தீண்டான்
காறுபா றும்பள்ளப் பேரும் விசாரியாக்
கள்ளன் தானந்தப் பள்ளன்காண் ஆண்டே.

பண்ணையார் வினாவுதல்
வெண்டளைக் கலிப்பா

69 மங்காது இளம்கோவை வாய்திறந்து மூத்தபள்ளி
அங்கே தனித்தோதும் அந்நியாயம் கேட்டதற்பின்
பொங்கார் அழல்காலல் போல்சினந்து, பள்ளனவன்
எங்கே எனக்கேட்க இளையபள்ளி சொல்வாளே.

இளையபள்ளி சொல்லுதல்
சிந்து

70 சென்றபள்ளன் வரவில்லையே பாவம்- வருமுன்னே
தேவரீர்க்கு இதுவென்ன கோவம்
குன்றெனவே முலைதிரளும் முன்பு- தாலிகட்டிக்
குடும்பன்எனைக் கூட்டிவந்த பின்பு
அன்றுமுதல் காலணையைப் பிரியான் - நிசிதோ(றும்)
அணையில்வெள்ளம் சிறுத்தாலும் தரியான்
முன்றிலிலும் வருவதில்லை மீண்டே - தலைவெள்ளி
முளைத்தாக்கால் வருவான்காண் ஆண்டே.

71 இளவழலைப் பாம்புஎன்றும் குறியான் - படம்இருக்கும்
இடத்திலே கைபோடும் சிறியான்
வளவிலே சடைந்திருப்ப தில்லை - செழும்வாளை
வயல்மடையில் புனல்அடைக்கும் தொல்லை
அளவுசே ராதவரை விடுப்பான் - மதவிலே
அருங்கோவைப் பழம்தின்று படுப்பான்
உளவிலே நாளும்அவன் பயந்தே - நடந்தால்
உமக்குஇரக்கம் இல்லை காணயிந்தே.

வெண்டளைக் கலிப்பா

72 வித்தைகற்ற செங்கனிவாய் மேனாட்டுப் பள்ளிபசும்
தத்தையுற்ற சொல்லால் தனைமருட்டும் கள்ளிஎன்றே
பத்தையுற்ற நல்லூரின் பண்ணையான் கண்சிவந்து
எத்தைஉற்றது என்னடி என்றேதான் ஏசினனே.

பண்ணையார் இளையபள்ளியை வினாவுதல்

சிந்து

73 "கருஞ்சை வலக்குழல்உன் கனிஇதழைத் துய்த்தபள்ளன்
கருஞ்சை வலநதியைக் காண்பானோ பள்ளி?

மாறாட்டம் பண்ணாமல் வசத்தோடு வளர்ந்தபள்ளன்
மாறாட்டம் பண்ணாமல் வளர்ந்தானோ பள்ளி?

கலிங்கிகுளம் வயல்விளைந்த கார்நெற்சோறு
உண்டபள்ளன்
கலிங்கிகுளம் வயல்பார்க்கக் காண்பானோ பள்ளி?

அரைப்பணத்துக்குஅடிமையாய் அகம்காக்கும்
அவனைநான்
அரைப்பணத்துக்கு அடிமையாய் அமைக்கிறேன் பள்ளி.

பள்ளன் வருதலும் பண்ணையார் கேள்வியும்

74 தேட்டுக்காரப் பள்ளனைஉன் வீட்டுக்குள்
அமைத்துக்கொண்ட
கூட்டுக்கள்ளி நீயடிமேல் நாட்டுக்கோர் பள்ளி;

குத்திரமாய் எதிர்த்துஎன்னோடு உத்திரம்சொன் னாய்
அவனைப்
பத்திரம்பண் ணினதுஎன்ன சித்திரக் கள்ளி?

உள்ளசெய்தி சொல்லடிஉன் கள்ளம்நான் அறிவேன்" எனப்
பள்ளனும் குடிலைவிட்டு மெள்ளவே வந்தான்;

"அல்லடா இத்தனைபோது கல்லடா உன்மனதுஅப்பான்
நில்லடா பண்ணைக்காரியம் சொல்லடா" என்றான்

பண்ணைச் செய்தி பள்ளன் கூறுதல்

வெண்டளைக் கலிப்பா

75 முத்தமிழோர் போற்றும் முதல்வன் திருவேட்டை
வித்தகனார் பண்ணை விசாரிப்பான் முன்புநின்று
ஒத்துஅவனும் கேட்க உழுமாடும் நெற்றொகையும்
அத்தனையும் பள்ளன் அடக்கமிட்டுச் சொன்னானே.

சிந்து

76 காள மேகம் சொரிந்திடு காலம் - என்
காசலை அறியா தவரல்லவே?
வேள மூர்த்திஎன் ஆண்டவர் பண்ணை
விசால மான இருநில மெங்கும்
பாள மாக வோரா யிரவாய்ப் — பெரும்
பாந்தள் மாமுடிக் கப்பாலும் ஓடிக்
கேள லென்மருப் பிட்டுப் பிளந்ததும்
கேட்டிருந் தென்னைச் சாட்டுவீர் ஆண்டே.

நெல் மறைப்பு

சிந்து

77 மாய்வில் லாத நல்லூர்ப் பண்ணை
வந்த நெல்லுக் கும்தொகை உண்டு
சாய்வில் லாத சொரி குரும்பை
தஞ்சிப் பள்ளியள் நெஞ்சி லிருக்கும்
காய்வில் லாமற் கிடந்த குரும்பையைக்
கன்றும் காளையும் தின்ற தறிவீர்
ஓய்வில் லாமல் தண்ணீர் கட்டி
ஊற்றி யிருப்பதும் பார்த்திரே ஆண்டே.

78 வண்டல் ஓடும் நிலம்தனிலே மணல்
வாரி யளறு வரக்கொண்டு போச்சு
துண்ட மாகக் கருஞ்சூரை ரெண்டையும்
தொக்கிலே செட்டி கையாடிக் கொண்டான்

பண்டு மாமன் பழிகொண்ட வங்கணன்
பாரக் கடுக்கையை வாரிச் சுமந்தான்
திண்டு போல்மலை முண்ட னெல்லெலாம்
சிறைகள் வீழ்ந்துகி டக்கும்காண் ஆண்டே.

79 சங்கம் ஏறும் பெரும்புகழ் ஆதிக்கச்
சார்வு வேண்டி வடகரை யானுக்கு
அங்கை யாரத் திருவேட்டைக் கடவுளர்
ஆனைக் கொம்பனைத் தானே கொடுத்தார்
பொங்க மானசெந் தாளை பொலிந்தொரு
பூவிளைந்து அரிதான விரையெல்லா (ம்)
பங்கயத் திருநா மத்துச் செல்வியம்
பார மீதினில் சேரும்காண் ஆண்டே.

மாட்டு மறைப்பு

80 ஆலம் மேவிய கண்டன் மகன்பண்ணை
யாட்டுள் வைத்துள மாட்டுக்கு என்செய்வேன்
சூல போரனைக் கீழ்திசை மேல்திசை
சோதித் தார்கள் இரண்டுபேர் கூடியும்
கால காலையும் மாலைத் தலையையும்
காணாமல் தேடி வீணில் அலைந்தார்
நீல மால்எருது ஓர்வடம் கண்டாலும்
நீட்டி மெள்ளப் படுக்கும்காண் ஆண்டே.

81 அன்றும் இன்றும்நான் தேடிய கைப்பொரு
ளாகிமுன் நிற்கும் ஆரிய காளை
ஒன்றும் இரண்டு கடங்கொண்ட ஏறுஅதற்கு
ஒப்பில்லை இப்போ சப்பாணிக்கு ஆகும்
நன்று நன்றெனக் கண்டிடு மூவரில்
நடுமா டுஞ்சிரை பட்ட வெண்டலை
என்றும் ஒன்றித் தொடக்கிட்டப் போனாலும்
என்னை கண்டால் பறக்கும்காண் ஆண்டே.

82 புல்லைமால் பதங்கள் என்ற காளையைப்
பூட்டஎன் றால்விண் ணோட்டம் பிடிக்கும்
நல்ல வெள்ளைத் தழுவணை யோபகல்
நாடி டாதுஇ ராத்திரிக் கூடும்
பல்ல வாயிரங் கோடி இருள்நிறப்
பாரிக் காளையை ஓட விரட்டிச்
செல்லச் செம்மரை உள்கொம்பன் கடற்கரை
சென்ற தற்குநான் என்செய்வேன் ஆண்டே.

மேழி மறைப்பு

83 கான மாமலர்த் தண்டலை சூழும்
கனக பூமகள் வாழும்நல் லூரினில்
நான மீறிய மேழியை இப்புவி
நாட்டுங் கங்கைக் குலத்தோர் கொடுபோனார்
ஆன பாலுமுன் னீருங் கலப்பை
அறிந்தெடுக்கு மனத்தையும் காணேன்
தான மேவிய நோக்காலும் கண்ட
தலத்தில் சற்றும் கிடக்குமோ ஆண்டே.

84 மண்ண லாம்ஒரு தோளில் சுமக்க
வளர்ந்த நாளையில் பாதலத் துள்ளே
எண்இ லாதவல் வாயன் ஒருவன்
இரும்பைஆ யிரமும் கொண்டு போனான்;
விண்அ ளாவுதெய் வீக வடங்கேய
வேதி யர்வச மாகஇ ருந்தால்
தண்நி லாவளர் நாளையில் ஏர்இடு
சஞ்சு வம்தனக்கு என்செய்வேன் ஆண்டே.

85 என்செய் வேன்என்ற வஞ்சகப் பள்ளன்தன்
எத்துஎல் லாம்செவி உற்றுக் கேளாமல்
அஞ்சிப் பேசு நெஞ்சறி யும்முதல்
அங்கைதான் புறத் தெங்கும்போ காது
கஞ்ச மீதுஅனம் துஞ்சிய நீள்வயற்
காடுள லாம்நிறைந்து ஆடு மறிக்கச்
செஞ்சி வாசன் தஞ்சை இடையரைத்
தேடிக் கூடிக் கொண்டுவா பள்ளா.

பள்ளன் கிடைவைப்பேன் என்னல்

சிந்து

86 மேரான பொற்புயத்தான் வித்தகன் நல்லருளால்
மாறாமல் ஆடுகொண்டு வருவேன் ஆண்டே
ஆறுகால் கயத்தலையும் அலைமோதச் சினைவரால்
ஏறுகால் புரவுஎல்லாம் எருவைப்பேன் ஆண்டே.
நாடோறும் வளர்ந்தேற நயனாரும் களிகூரக்
கூடெல்லாம் எடுத்துவிட்டுக் கொடுவருவேன் ஆண்டே.

பள்ளன் இடையர்களைத் தேடிச் செல்லல்

வெண்டளைக் கலிப்பா

87 ஏரார்ந்த கற்பார் இருபேரும் சூட்டுபசும்
தாரார் திருவேட்டைச் சாத்தாவின் பண்ணையெலாம்
ஊரார் மகிழ உரம்வைப்பேன் என்றெழுந்து
சீரார் இடையர்மனை தேடி நடந்தானே.

பட்டித்தலைவன் வருதல்

வெண்டளைக் கலிப்பா

88 கானான தோன்றிக் கவின்ஒழுகும் முல்லையந்தார்க்
கோனா னவனுடனே குடும்பன்போய்ச் சொன்னவுடன்
மீனான தோன்றும் விரிபுரவில் ஆடுகொண்டு
தானான பட்டித் தலைவன்வந்து தோன்றினனே.

சிந்து

89 சந்துமுட மாய்ஒருகால் கிந்துநடையும் – வெகு
சட்டமாக இட்டநெத்திப் பட்டைநாமமும்
அந்துவைத்து மந்தங்கொண்ட கந்துசெவியும் – தோளில்
அயக்கருங் கம்பிளியும் கையிலேகோலும்
சிந்துரம ரத்தில்வீழ்ந்த பொந்துபோல்வாயும் – தோன்றத்
திட்டியும்கண் டோர்மகிழப் பட்டியும் கொண்டு
இந்துமுடி ஈசர்மைந்தன் நந்துசெறி பண்ணை – உரம்
ஏற்றுவேன் எனத்துணிந்து மூர்த்திக்கோன் வந்தான்.

90 திங்கள்சேர் சடையன்முக லிங்கக்கோ னவர்பங்கில்
சினையாடு களவிருந்த தென்செய்வேன் குடும்பா
கங்கக்கோன் மழையுறழும்அங்கக்கோன் கிடைமுழுதும்
கார்ப்பரவை கிளர்ந்ததிருப் பாற்பரவை குடும்பா
புங்கக்கோன் தனக்குவரும் பங்கத்தால் நெடுங்காலம்
புனல்தேடிக் கிடந்தகிடை கண்ட்றாவி குடும்பா
சங்கக்கோன் திருவேட்டைத் துங்கக்கோன் பண்ணைவயல்
தான்ஆனாது உரமேற்றும் கோனான்நான் குடும்பா.

பள்ளன் செல்ல மூத்தவள் கோள்கூறல்

வெண்டளைக் கலிப்பா

91 தனியே வயலில் தரித்தகிடை காவாமல்
கனிவாய் இளையாளைக் காக்கப்போ னான்குடும்பன்;
பனிசேர் பூஞ்சோலைப் பழனநல்லூர் மூத்தபள்ளி
தொனியாய்த் தனிச்சாடி சொல்லத் தொடங்கினளே.

மூத்தபள்ளி முறையீடு

சிந்து

92 நித்திரையில் பிரியான் – எனக்குஅவன்
சத்துரு வெறியான் – அடிமைசொல்
நிசம்என்றும் குறியீர் – குடும்பன்தன்
வசம்ஒன்றும் அறியீர்;

பத்திரப் பள்ளன் – செய்தொழிற்
குத்திரக் கள்ளன் – முயற்சியைப்
பார்ப்பதும் தொல்லை – இராக்கிடை
காப்பதும் இல்லை;

பித்தரைப் போலே –பேசுவது
எத்துஒருக் காலே – அவனுக்குஎன்
பேச்சும்ஆ காது – விடும்பெரு
மூச்சும்ஆ காது;

உத்திர தேசத்து – அரிகர
புத்திரன் வாசத் – திருநல்லூர்
உழவுகள் வரும்போது – அறியலாம்
களவுகள் ஆண்டே.

93 காரண முதலும் – எனக்குஇட்ட
சீரண முதலும் – விலைசெய்து
கள்ளுக்கும் ஒழித்தான் – கடற்கரைச்
சுள்ளுக்கும் அழித்தான்;

ஏரணி காளை – மரமடிக்
கோரணி மோளை – பணம்பெற்ற
எருதையும் கொடுத்தான் – சமையும்முன்
மருதையும் தொடுத்தான்;

வாரணக் கொடியார் – தமனியத்
தோரணப் படியார் – பெரும்பண்ணை
மாட்டையும் பிடிப்பான் – களவிலே
சூட்டையும் அடிப்பான்;

ஆரணம் துருவும் – புட்கலை
பூரணம் மருவும் – நாதனுக்கு
ஆளும்பள் வேண்டில் – அடிமைசொல்
கேளுங்கள் ஆண்டே.

94 தெறித்தல்லோ போறான் – வாழ்க்கையைப்
பிரித்தல்லோ வாரான் – இளையவள்
சிரிக்கவும் பேச்சு – அவன்அங்கே
தரிக்கவும் ஆச்சு;

மரித்தாலும் மீளான் – ஓலையில்
பொறித்தாலும் கேளான் – அவள்இட்ட
மருந்துட துடுக்கோ – சமைத்திடும்
விருந்துட மிடுக்கோ

பிரித்துஎறி பாவி – தினம்உமைக்
குறித்துஎனைக் கோவித்து – அடிக்கடி
பேசுவது ஒழியான் – வசைசொல்லி
ஏசுவன் பழியாய்

சொரித்துளை மரத்தில் – கால்ரெண்டும்
முரித்துளே துணித்து – கடுவெயிற்
சூட்டினில் கிடத்திப் – பயம்வரப்
போட்டிடீர் ஆண்டே.

95 பேணினது அறிவீர் – அவன்மனம்
கோணினது அறிவீர் - இளையவள்
பேரிலே நாட்டம் - குறும்புசெய்து
ஊரிலே கூட்டம்;

சோணியைத் தொடுத்தான் - ஏறவிட்டு
ஏணியை எடுத்தான் - நான்இட்ட
சோற்றையும் தீண்டான் - அவள்இட்ட
கீற்றையும் தாண்டான்;

நாணிலை உளத்தில் - பொதுநெல்லை
வீணிலே களத்தில் - கொடுத்தாலும்
நமக்கென்ன போச்சு - தேவரீர்
தமக்கென்ன வாச்சு?

ஆணிலே வலியான் - நறுநெய்
ஊணிலே மெலியான் - அவன்குறும்பு
அடக்கினீ ரானால் - உழவடை
நடக்கும்காண் ஆண்டே

96 குலையடிப் பிடித்த – மலைமுண்டன்
தலையடி யடித்த - நெல்அஞ்சு
கோட்டையும் தேய்த்தான் - வகைதொகை
கேட்டதற்கு ஏய்த்தான்

செலவிலே பெருமை - ஏழுபொன்
விலைபெறும் எருமை - கொடுத்துஒரு
சேலையை எடுத்தான் - கொழுந்தியாள்
மாலைகைக் கொடுத்தான்

உலைவிலை மனமுமைத் - தொட்டும்
அலைவிலைத் தினமும் வேட்டைநல்
ஊருக்கு ருண்வான் - ஊர்முறை
யாருக்கும் அணவான்;

கலவிதம் நடத்திக் – குடிகஞ்சிக்கு
அலைவிதப் படுத்தி - நெஞ்சத்தே
காட்டிடத் துணிந்தே - தடிக்குளிப்
பாட்டுவீர் ஆண்டே.

97 பழியெனும் பாரான் - குடும்பன்என்
வழியினும் வாரான் - பிழைப்பெலாம்
டாழிலே இறைத்தான் - தறுகணன்
நாளிலே உறத்தான்

ஒழிவில்லை செலவு – முறிபட்டும்
குழிவில்லை சொலவும் – மாதம்ஓர்
ஊட்டுக்கு மதிப்பான் - வளைந்துபேய்
ஆட்டுக்குக் குதிப்பான்

தொளியினில் இறங்கான் – இராப்பகல்
வெளியினில் உறங்கான் – அநுதினம்
சுகக்கிடை பார்ப்பான் – இளையவள்
அகக்கிடை கார்ப்பான்

எளிதினில் விடவோ – கரையடிப்
புளிதனில் கொடுபோய் – உமைக்குறித்து
ஏசின வாயில்க் – கசையதைக்
கொண்டுவீறு ஆண்டே.

பள்ளன் உரம் வைத்ததாகச் சொல்லுதல்

கலிப்பா

98 நாறோடு இளம்கயல்சேர் நல்லூராள் மூத்தபள்ளி
சீரோடு அநியாயம் செப்பிஅவள் போனபின்பு
தாரோடு அரம்பை தலைவணங்கும் பண்ணைஎல்லாம்
கூரோடு உரம்ஏற்றும் குடும்பன்போல் வந்தானே.

சிந்து

99 மானிய நிலங்கோனார் குளமுற்றும் - திசை
வடக்கில் இடைச்சிப் பாறைசூழ் பற்றும்
பூநலம் பெறுஞானி யார்குளமும் - மேல்
புறத்திற் சின்னணைஞ்சு சமுத்திரத்துக்கணாறும்

சோனைசேர் திருமேனிப் பெரும்பற்றும் - எங்கும்
சூச்சக்கோன் குளப்பற்றும் சங்கரன்குளமும்
கானம்பெருகும் பாண்டியன் குளமும் - நல்ல
காவல்காரர் ஏரிப்புரவும் சீவித வயலும்

100 ஏலவேஅநு கூலநீத்தம்பாய் கலிங்கி குளத்தில்
ஏகமாய்ப் புரவும்இடை விடாமல் நாகலடித்தட்டும்
சாலிமென்பயிர் சூலக்கால்வைத்து எந்த நாளிலும்
தரிசுஇல்லாத கரிசல்புரவும் அரசடி வயலும்
மாலைசேர்நெடு வாலக்கட் டளையும் நாச்சியார்
வயல்நிலமும் மாயாண்டி முகில்தெப்பக் குளச்சுத்தும்
காலமேகரு வேலன்குளப்பத்தும் இரவும் பகலும்
காத்திருந்துஎரு நாத்தமாய்உரம் ஏத்தினேன் ஆண்டே

பள்ளனைப் பண்ணையார் அடித்தல்

கலிப்பா

101 சீற்றம் வளரத் திருநல்லூர்ப் பண்ணைஉரம்
ஏற்றும் திரங்கள் இளையவட்குச் சொல்எனவே
கூற்றும்வெருவக் குடும்பனைப்போய்ப் பண்ணையர்கோன்
மாற்றால் புடைத்துஅதிக வார்த்தைவசை சொன்னானே.

பண்ணையார் பள்ளனைத் திட்டுதல்

சிந்து

102 சீர்த்திவளர் திருவேட்டை மூர்த்தி வயலில்உரம்
ஏற்றினது அறிவேன்வெகு நேர்த்திதான் பள்ளா;

திட்டமாய் இளையபள்ளி வட்டமுலைக் கோடுஅழுந்தக்
கொட்டிலில் உறங்கினது சட்டம்தான் பள்ளா!

சாற்றுமறை யும்சுரரும் போற்றும்எங்கள் திருவேட்டை
பார்த்திபன்பண் ணைக்குடும்பை மாறறுவேன் பள்ளா!

ஊரடாஎல்லாரும்பகைஆரடாபிணை சொல் என்வாய்
நீரடாநீ படும்பாடு பாரடா என்றான்.

பள்ளனைக் குட்டையில் போடுதல்
வெண்டளைக் கலிப்பா

103 பண்டு விதனமுற்ற பண்ணையான் கண்சிவந்து
கொண்டல் திருவேட்டைக் கோமான் அடியானைத்
தண்டல் திரத்தான் தருமன் வசமாக்கி
வண்டு துளையா மரக்குட்டை சேர்த்தானே.

பள்ளன் வேண்டுதல்
சிந்து

104 சதிகாரி வெகுவேலை காணும் - திருவேட்டைச்
சாத்தாவின் திருவுளத்தில் தோணும்
மதிகேடி மூத்தபள்ளி கொடுமை - அவள்முடித்த
வசம்என்னை ஆளுவீர் அடுமை
எதிராளியோ உமக்குச் சிறியேன் - குடித்தஉடன்
எவர்என்றும் தெரியாத வெறியேன்
மதிகோபம் தீர்ந்துபோச்சு உமக்கு - நாள்தோறும்
மருண்டபயம் தீர்ந்துபோச்சு எனக்கு.

இளையபள்ளி வருதல்
வெண்டளைக் கலிப்பா

105 பொன்செய்த முந்நூற் புனிதர்பண்ணைப் பள்ளனைத்தான்
முன்செய்த சூதால் முழுமரத்திற் போட்டதற்பின்
கொன்செய்த வேற்கண் குவிமுலையில் முத்துஉதிர்ப்ப
என்செய்வேன் என்ன இளையபள்ளி வந்தாளே.

இளையபள்ளி இரங்கல்
சிந்து

106 கலிகாலம் இழுக்குவந்தது எனக்கு - அவள்முகத்தைக்
கண்டவுடன் அயர்த்துப்போம் உனக்கு
எலிநாளும் பூனைஉள்ள வீட்டில் - கிளைசூழ
இருக்கும்எனக் கேட்டிலையோ நாட்டில்
மெலியாத உடல்மெலிந்து போச்சே - திருவேட்டை
வித்தகனுக்கு இதுசம்மதி ஆச்சே
பலியாது நான்சொல்வதும் இடும்பா - எனக்கும்அந்தப்
பண்ணையார் கைப்பிடியோ குடும்பா.

பள்ளன் இளைய பள்ளியைச் செல்எனல்

107 செல்லாத காலம்இது எனக்கு - மனம்திகைப்பு
ஆனதுஅலைச் சல்வந்தது உனக்கு
அல்லாமல் இங்குவர லாமோ - வந்தவிருந்து
அயல்வீட்டில் போஎன்றால் போமோ?
நில்லாதே உந்தனுட மதியோ - இந்தவினை
நீலியால் வரவும்எந்தன் விதியோ
பொல்லாத மூத்தபள்ளி கள்ளி - வரும்வேளை
போய்விடடி மேனாட்டுப் பள்ளி.

மூத்தபள்ளி பள்ளனுக்காகப் பண்ணையாரைப் பார்த்தல்

வெண்டளைக் கலிப்பா

108 பெண்பாலுக்கு உள்ளமனப் பேதகமே ஆனாலும்
உண்பாளோ சோறும் உறுதுயரம் நெஞ்சில்உற்றால்?
பண்பான நல்லூராள் பள்ளனைஉள் ளாக்குதற்கே
நண்பான பண்ணைநயி னாரிடத்தில் வந்தாளே.

பள்ளனுக்கு உணவளிக்க அநுமதி வேண்டல்

சிந்து

109 பட்டினியே கிடக்கிறான் பள்ளன்அடிமை சொல்லப்
பயமாக இருக்குது இதுவரைக்கும்
ஒட்டாமல் குடும்பன் இருந்தாலும் இரவுபகல்
உறக்கமில்லை காய்ச்சிப் பாலுடனே
இட்டசோறு ஒருபிடி உண்டாலும் அதுவாய்விட்டு
இறங்குதில்லை எதுக்களிக்குது எனக்கு
குட்டையிலே கிடக்கும் குடும்பனுக்குச் சோறுமட்டும்
கொண்டுபோய்க் கொடுக்கிறேன் ஆண்டே.

மூத்தபள்ளி பள்ளன்பால் வருதல்

வெண்டளைக் கலிப்பா

110 ஆறுகொண்டு மேனாட் டவள்போன பின்புமன
வீறுகொண்டு நல்லூர் விருப்புற்ற மூத்தபள்ளி
நாறுகொண்டு பண்ணை நயினார்க்குச் செய்திசொல்லி
சோறுகொண்டு பள்ளன்பால் துணிவோடும் வந்தாளே.

மூத்த பள்ளி கூற்று

சிந்து

111 அன்றுநீ சொல்லின் ஆம்அவர் என்னை
அஞ்சப் பார்த்ததுஉன் நெஞ்சுஅறி யாதோ?
ஒன்றுபோல் கறிவைத் திட்டசோற் றுணவு
ஒட்டு மோஅவள் இட்ட மருந்து?
இன்று காறும்நீ செய்த நிட்டூரம்
இறந்து போயும் மறந்துபோ காது;
வென்றி சேவற் பதாகைநல் லூர்வளர்
வித்தகன் பண்ணைக் குத்திரப் பள்ளா.

பண்ணையாரிடம் சொல்லித் தன்னை விடுவிக்குமாறு பள்ளன் வேண்டல்

சிந்து

112 கோணம் வைத்துக் கொண்டுஊணிப் பாராதேஎன்
குட்டுஅவர்க்குச் சொல்ல நட்டம்உனக்கே
நாணம்இல் லைஎன் னாதே பேசவும்
நாக்குஉண் டோஇனிப் போக்குஇல்லை கண்டாய்
வேணபேர் சொல்லி ஆவது என்னசிறை
மீட்டாலும் இன்னம் போட்டாலும் நீதான்
தோணப் பண்ணை நயினார்க்குஎன் செய்தியைச்
சொல்லிப் பாரடி நல்லூர்ப் பள்ளி.

மூத்தபள்ளியின் பதில்

113 சாதியும் சனமும் இன்றி உனக்கென்று
தன்னிலே வந்த நன்னகர்ப் பள்ளிக்குப்
பாதிவாழ்வைப் பகிர்ந்து கொடுத்துஅவள்
பட்ச மேஉனக்கு உச்சிதம் ஆகி
ஆதி நாள்முதல் என்னைப் பலிசத்துரு
ஆக்கி னாய்அந்த நாக்கைத் துணித்திட
ஏதி நெஞ்சுஉறைக் குள்ளே கிடந்ததற்கு
என்செய் வேன்வினை முன்செய்த பள்ளா.

பள்ளன் மூத்த பள்ளியைக் கெஞ்சல்

சிந்து

114 பல்லைக்காண் பித்துக் கெஞ்சப்பண் ணாதேநீ
பாத்துக் கீறின கீத்தைக் கடவேன்
வில்லைக்கொண்டு எய்த அம்புஉரம் பாயுமுன்
வித்தைக் கோபத்தீ பத்தவை யாதே
தொல்லைப் பாடுப டுத்திடக் குண்டணி
சொல்லா தேஉனை அல்லா தேபுகல்
இல்லை பண்ணை நயினார்க்குப் போதித்து
ஏத்துக் கால்மரம் மாத்தடி பள்ளி.

மூத்தபள்ளி மனமிரங்கல்

வெண்டளைக் கலிப்பா

115 அயமான வன்கண் அகம்இரங்கி மூத்தபள்ளி
செயமாகப் போய்உன் சிறைமீட்பேன் என்றுஎழுந்து
குயமான பாற்குடம் கோகுலம் போல்அசைய
நயமான பண்ணை நயினார்முன் வந்தாளே.

மூத்தபள்ளி பண்ணையாரிடம் பள்ளனை விட்டுவிட வேண்டல்

சிந்து

116 வேறுபரா முகமோஉமைக் கும்பிட்டேன் ஆண்டே - ஒரு
விண்ணப்பம் செய்யஅடியாள் வந்தேன் ஆண்டே
தாறுமாறா கத்திரிந்த குடும்பனுக்கு ஆண்டே - புத்தி
தன்னிலே வந்துசலங்கிப் போனான் ஆண்டே
காறுபாறு தொடுத்திலாத குண்டணி ஆண்டே - தொண்டிக்
கள்குடித்த வெறியால்முற் சொன்னேன் ஆண்டே
தீறவதூறு என்தலைமேல் வாராமல் ஆண்டே - உங்கள்
சித்தம்இரங்கிச் சொற்குற்றம் பொறுத்திடும் ஆண்டே

117 எத்தனையா னாலும்என் குலநாய னாண்டே - ஒரு
ஏழையைநன் றாய்எதி ராளிபண்ணீர் ஆண்டே
உத்தரவா தம்பண்ணா மல்அயலூருக்கு ஆண்டே ஒளித்து
ஓடிப்போ னாலும்அவனுக்கு நான்பிணை ஆண்டே

வித்தேசம் பார்க்கில்அவன் இலக்கல்லவே ஆண்டே – திரு
வேட்டைநயி னாருக்காட்சிப் பள்ளல்லவோ ஆண்டே
புத்திவரச்செய்ததுஇம்மட்டும்போதுங்காண்ஆண்டேஇனிப்

போட்டமரத் தைக்கழற்றி விடும்பண்ணை ஆண்டே.

பள்ளன் விடுபட்டுப் பண்ணைச் செய்திகளைக் கூறுதல்
கலிப்பா

118 பள்ளத் தடாகநல்லூர்ப் பள்ளிசொன்ன சொற்படியே
மள்ளத் தலைவனைக்கால் மரம்வெட்டி விட்டபின்பு
உள்ளத்து அறிவால் உடல்செலவுஎல் லாம்போக்கி
எள்ளத் தனைகுறையாது இருப்புவகை சொன்னானே.

வித்துவகை
சிந்து

119 சொலவரி தான விரைசொரி குரும்பை
துய்யமல்லி மணல்வாரி வீதிவி டங்கன்
கலவன்நில் லாச்சடையன் காடைக் கழுத்தன்
கருஞ்சூரை பெருவெள்ளை முத்து விளங்கி
அலவன் கிளைக்கவளர் புழுதி பிரட்டி
ஆனைக்கொம்பன் செம்முளகி சித்திரைக் காலி
செலவுஎல்லாம் போக்கிஇரு பூவுக்கும் காணச்
சேர்நிரம்ப வித்துவகை கட்டினேன் ஆண்டே.

மாட்டுவகை

120 விரிமருப்புக் கரும்போரான் வெள்ளை மயிலை
வெண்டலையன் கட்டுக்கொம்பன் சுட்டிச்செம்
போறான்
எரிகழுத்தன் செம்மறையன் குத்துக் குளம்பன்
எண்ணெய்ச்சி வலைகமலப் புல்லைமால் காளை
வரிமுருக்கும் கருங்கண்ணன் தளுவணை மேளை
மட்டைக்கொம்பன் ஏறுவாலன் கட்டைவால்க் கூளை
சரிபிடிப்புக் கோர்ஆயிரம் ஒன்றைப்பார்க் கொன்று
தண்டாத மாடுஅனேகம் உண்டுகாண் ஆண்டே.

121 தண்மதி தழுவும்மலர்ச் சண்பகக் காவில்
சந்தன மரமும்சுருக்கிக் குத்தித்தான் ஒன்று
உண்மதியாற் சிற்பியர்செய் மேழிதான் ஒன்று
உழும்ஏர்க்கால் ஒன்றுநுகம் ஒன்றுகோல் ஒன்று
மண்மகள் உளம்களிப்பப் பண்ணை நாள்ஏர்க்கு
வாய்த்தஉழவு எத்தனங்கள் சேர்த்தினேன் ஆண்டே,

122 செம்பொன்னை வைத்துருக்கிப் பாளமாய்ச் சேர்த்துத்
திரட்டிஅ டித்துநீட்டும் பொற்கொழு ஒன்று
பைம்பொற் கொழுவுக்கு இசைந்தகொண்டி தான்ஒன்று
பலவரிக்கட் கொல்புலித்தோல் வடக்கயிறு ஒன்று
இம்பர்கிட் டாதமுதல் முன்புளோர் தேடும்உழவு
எத்தனம்உண்டு என்வசத்திற் சாத்திர ரோடு
நம்பன்திரு வேட்டைநாதன் பண்ணைநாள் ஏர்க்கு
நல்லதினம் கேட்டுஎனக்குச் சொல்லுவீர் ஆண்டே.

நாள் கேட்டல்

வெண்டளைக் கலிப்பா

123 மங்கலம்சேர்ந்து ஓங்கும் வளர்கிழமை பூர்வபக்கம்
சங்கையுடன் நட்சத்ரந் தான்யோக வேளைகளும்
இங்கிதபூ மான்பரசு ராமய்யர் சொற்படிக்கே
சிங்காரப் பண்ணையில்நாள் செய்தினம்என்று
என்றனனே.

சோதிடர் நல்லநாள் கூறுதல்

சிந்து

124 சீலமறை யோன்கணித்து வாக்கியம் சொல்வான்
சித்திரைத் திங்கள்அதிக உத்தி ராயணம்
மூலம்ஏறு ராசிபதினொன்றில் வெள்ளியும் கூடி
முகுர்த்த விசேஷம் இன்றைக்கு அமுர்தமா யோகம்
காலமே குளப்புரவில் பண்ணை வயலிற்
கடிகைஏழே முக்காலில் நாள்ஏர் இட்டால்
சாலவேமுப் பூவிளையும் மாநிலம் எல்லாம்
தக்களன் பஞ்சாங்கப் பலன்படிக்கு என்றான்.

உழவர் பொன்னேர் பூட்டுதல்

வெண்டளைக் கலிப்பா

125 வேதம் பயில்மறையோன் விள்ளத் திருவேட்டை
நாதன் துணைச்சரணம் நம்பும் அடியவர்கள்
சீத வயல்உழவு சீர்நிற்கச் சிந்தைசெய்து
ஏதம்அகல் நாளேர் இடத்துணிந்து சென்றாரே

சிந்து

126. உழவுமள்ளர் திரண்டு சஞ்சுவங் கொண்டு
உழுங்காளை கள்அனைத்தும் பற்றிக் கொடுபோய்
புலவர்தமிழ் மணக்கும் நல்லூர்த் தருமன்
பிள்ளையார் குளப்புரவில் உட்கிடைச் செய்யில்
வலவர்அடி யில்நின்ற செடியும் வெட்டி
வரம்பில் மடைஉயர்த்திப் புனல் நிறுத்திக்
குலவு கணக்கன் ஓரை ராசத வேளையும் வந்து
கூடும் கடிகையில் நாளேரைப் பூட்டினரே.

127 சடையான் அழகன் குழகன் சாத்தன் கூத்தன்
சங்கன் புங்கன் பொதுவன் தவிடன் செவிடன்
உடையான் பெருமான் பூலான் உருதன் மருதன்
உமையன் கருப்பன் புதியான் ஊதன் தாதன்
குடையான் பெரியான் அரியான் தாக்கன் மூக்கன்
குடியான் தடியன் சிவனான் குறுகன் வெயிலான்
மடைவாய் வன்னியன் வாலன் அழகு வாலன்
மாடக்குடும் பனுடன் கூட உழுதார்.

கலிப்பா

128 உடுவை நகும்பால் ஒளிவாய் மதிமிலைந்து
கடுவை நுகரும் கடவுள்சேய்ப் பண்ணையனும்
மடுவைக் கொடுபோய் மத்தித் தலைதடவிக்
கொடுவையுள காளைகளைக் கொண்டுவா என்றானே.

குடும்பனை ஒரு காளை முட்டிச் சாய்த்தல்

சிந்து

129 புல்லில் மிடியற மேய்ந்து சிமிழ்பெருத்த
புத்தரக்கன் காளைகளைப் பூட்டும் பொழுது
சல்லிக்கட்டு கலைந்ததுபோல் உழும்மள்ளர்ச்
சச்சரவைக் கண்டு கலைந்துஊடு விழுந்து
சில்லறைக் கருமயிலைக் காட்டைப் பார்த்தோடத்
திருவேட்டைக் குடும்பன் வந்து மறித்தான்;
வல்லமைக் குடும்பன்பேரில் காளை திரும்பி
மருப்பால் கோதிஎறியப் பொருப்பெனச் சாய்ந்தான்.

பள்ளியர் இருவரும் பள்ளன்பால் ஓடிவருதல்

கலிப்பா

130 சீறிவரும் காளைகொம்பால் சிம்பக் குடும்பன்அங்கே
மாறிவிழும் போதுகண்டு மனது தரியாமல்
ஆறிஅமையாது அருந்துயரச் சொல்பலவும்
கூறிஇரு பள்ளியரும் குடும்பனிடத்து உற்றாரே.

மூத்தபள்ளி புலம்புதல்

சிந்து

131 விடிவுஏது பொல்லாத வேளை - தொடர்ந்துஉன்னை
மிதித்தேறிப் பாய்ந்ததோ காளை
படிமீதில் முடிசாய்ந்தது ஏனோ - மேனாட்டுப்
பள்ளிஇட்ட மருந்துவெறி தானோ
கொடிதான அவமிருத்துஅது உண்டோ - நாளேரில்
குத்துக்கல்லு மாடன்குறை உண்டோ
அடியூன்றி எழுந்திராய் இடும்பா - திருவேட்டை
அய்யனார் பண்ணைஉழும் குடும்பா.

இளையபள்ளி இரங்குதல்

132 செழுந்தரங்கக் கிருபையாற்கு அடிமை - குடும்பன்மனத்
திடம்போனதுஏது இதுஎன்ன கொடுமை
குளிர்ந்தமுகம் ஒளிமங்கிப் போச்சே - மூத்தபள்ளி
கொடுதாறி நினைத்தபடி ஆச்சே

விழுந்தவனை எழுப்புவதும் இலையோ - திருவேட்டை
வித்தகனும் நமக்குநடுவு இலையோ
எழுந்தமலை முறிக்கும்புயப் பலவா - துயர்நீங்கி
எழுந்திராய் இளந்தாரித் தலைவா.

பள்ளன் தெளிந்தெழுதல்

வெண்டளைக் கலிப்பா

133 கண்ணீர் சொரியக் கனதனத்துப் பள்ளியர்கைத்
தண்ணீர் சொரிந்து தலையைமெள்ளத் தாங்கிமிசு
விண்ணீர் சொரிந்துபயிர் மேல்ஆடும் தன்மையென
எண்ணீ றொழிந்தாங்கு எழுந்துபள்ளன் நின்றானே.

தெளிந்த பள்ளன் பயிர்த்தொழிலில் ஈடுபடல்

134 பாகத்தில் கிடந்தகம்பு எடுத்தான் - மூத்த
பள்ளிமடி யில்சற்றே படுத்தான்
வேகத் துடன்எழுந்து தொடுத்தான் - மாட்டை
மீட்டுக் கொடுவந்து கொடுத்தான்

விடுத்தே பூட்டிஏரை நிரைத்தான் - புல்லு
மிதக்கச் சாலடிஎன்று உரைத்தான்
அடுத்து நாலுழவும் கரைத்தான் - மரம்
அடித்துத் தொளியில்விரை விரைத்தான்

முளைத்தண்ணீரை அடைத்து இறுத்தான் - பயிர்
முகத்தைக்கண்டுவேலி நிறுத்தான்
இளைத்த வரம்பில்கரை அறுத்தான் - நாற்று
எழும்பும் வரைக்கும்மனம் பொறுத்தான்

எண்ணில்லா மகிழ்வினில் நின்றான் - பள்ளர்
எவரும் திரண்டுவரு கென்றான்
பண்ணையா ரிடத்தினில் சென்றான் - நல்ல
பருவம் பிடுங்கிநட என்றான்.

பண்ணையார் நடுகைக்கு ஆணையிடல்

வெண்டளைக் கலிப்பா

135 ஆற்றுப் புனல்மருவும் அய்யனார் கால்புரவில்
நாற்றுப் பிடுங்கி நடப்பருவம் வாய்த்ததென்றே
சேற்றுக்கால் செல்வன் தெரிந்துரைக்கப் பண்ணையர்கோன்
சாற்றும் பணிகேட்டுத் தாங்குபள்ளன் மீண்டானே.

நடவுக்குப் பள்ளியர் வருதல்

வெண்டளைக் கலிப்பா

136 விண்ணைமுற்றும் காக்கும் விறல்வேந்த னும்கடல்சூழ்
மண்ணைமுற்றும் காக்கும் மனுவும் பரவுஇரண்டு
பெண்ணைமுற்றும் காக்கும் பெருமான் மருவுநல்லூர்
பண்ணைமுற்றும் காக்கும்நடப் பள்ளியர்வந் துற்றாரே.

நடுகைச் சிந்து

137 வாத வயலில் மோத உழுது
மறுத்தி ளந்தொளி யறுத்துநீள்
வரம்பை யொடுக்கித் திரும்ப மடக்கி
மரம்விட் டுத்தொளிச் சமைந்தபின்

சீத வயலில் மோதும் நாற்றைச்
சிமையில் அமையக் கொடுவந்து
சிதறி முடியில் முகிலி படியும்
சிகரிப் பிள்ளையார் திருத்திலே

வேதம் பரவும் நாதன் செந்திரு
வேட்டை யய்யனை நாட்டமாய்
விடுத்து முடியை எடுத்துப் புட்களை
மின்பூ ரணத்தைக் கும்பிட்டுப்

போத மள்ளர்தம் காது குளிரப்
பொலியுங் குரவை யொலியிலே
பொழியும் மழையில் விளைய நடுகை
போட வேணும் பள்ளீரே.

138 பொயிலி உருதி அருதி பொதுவி
பூலி வேலி அம்மச்சீ
பொடிசி சிவனி அழகி முளகி
புலிச்சி சுலிச்சி மொட்டைச்சீ

குயிலி அணஞ்சி செகிடி இருளி
குழலி தவிடி கட்டச்சீ
குமுக்கி முருக்கி சடைச்சி உடைச்சி
குன்னாலி மாடி பொத்தச்சீ

மயிலி பெருமி ராக்கி மூக்கி
மருதி திருவி செம்பிச்சீ
வடிவி வெளுதி உலகி கருப்பி
மங்கி சங்கி கொன்னச்சீ

வெயிலி அரசி பரமி யாரும்
வியக்கத் திரண்ட குமரியர்
விரசி நடுகைச் சுருதி கருதி
விரைய வேணும் பள்ளீரே.

139 தேசம்புகழும் சீர்த்தியார் – மலர்
வாசம்கமழும் மூர்த்தியார்
செய்யவன்திரு வேட்டைவித்தகன்
அய்யன்அமுதக் களத்திலே

நேசம்பெறவே பள்ளியர் – கதை
பேசிவாளை வயலிலே
நேர்த்தியுடனே நாற்றைஎடுத்து
சாத்திரப்படி நடையிலே

பாசமுடனே ராக்கன் – மகளை
மாசமூன்றுந் துசங்கட்டி
பயல்கருப்பனு மயல்மிகுத்துமே
பதுங்கியொதுங்கி நாடியே

தோசம்என்பதும் ஓராமல் – மன
ரோசம்என்பதும் பாராமல் – சின்னச்
சோங்கில்மாடி யைத்தொடர்ந்துஒரு
பாங்குசெய்கிறான் பள்ளீரே – இது
நாங்கள் கண்டிலோம் பள்ளீரே.

140 அண்டர்கள் ஏத்திடும் பாதன் – புவி
எண்டிசை போற்றிடும் நாதன்
அய்யனார் பண்ணைச் செய்யெனும் – பலா
அடிவ யல்த்தடி நடையிலே

பண்டுள ராமனும் மண்டையன் மாடனும்
பரமனும் ஒரு திறமுமாய்ப்
பருத்த புயத்துச் செங்கானும் – மிகப்
பெருத்த வயத்த மொங்கானும் – இசை
பாடிக்கூடி நாற்றுமுடியை ஓடியாடி விளம்பவே

வண்டக் கருப்பியும் நொண்டித் திருவியும்
மாலையுஞ் சின்னச் சோலையும்
வரிசை யாகவே வாங்கிக் கைத்தலம்
மடக்கி நடுகை போடையில்

சண்டித் தனமாச் சுண்ட னெலிசுட்டுத்
தாரேன் என்று கூறியே
குட்டச் சங்கியைப் புங்க நிழலில் கிடத்தியே
தாக்குறான் பாரும் பள்ளீரே – காலைத்
தூக்குறாள் பாரும் பள்ளீரே.

141 நலம்செய் பவருக்கு அன்பராம் – மயில்
வலம்செய் பவர்க்குப் பின்பராம்
நாட்டுஞ் செந்திரு வேட்டை நாதனைச்
சூட்டுங் கலிங்கன் குளத்திலே

பலம்செய் சித்திரைக் காலி – மிளகி
வலஞ்சுத் திப்புளி வயலிலே
பதியும் நாத்தைப் புதியவளுடன்
பரமிக் கிளைய பெருமியும்
பக்குவத்துடன் ஒக்கத்திரண்டு
கொக்கரித்துக் கொண்டாடியே

அலங்கும் நடுகை போடவே – முலை
குலுங்கிக் கடுகி ஆடவே
அந்தச் சமயம் பொந்த னும்மொரு
சிந்தை யாக வெண்ணியே

துலங்கு முத்தியைத் தூக்கிக் – கொடுபோய்
விலங்கி நாணல் மறைவிலே
சுள்ளும் கள்ளும் கொடுக்கவே – மனம்
கொள்ளுறாள் காணும் பள்ளீரே – பின்னைத்
தள்ளுவ ளோகாண் பள்ளீரே.

142 மத்தி மடுவில் சுத்தி ததுவரில்
மறையுஞ் சிவலைப் பிறைவிட்டு
வல்லார் இருக்கும் நல்லூர் புரக்கு
வந்தவர் வரம் தந்தவர்

வெத்தித் துவசம் பெத்தியதிரு
வேட்டை வித்தகன் நாட்டிலே
விரசிப் பள்ளியர் கலிங்க கோன்குளத்து
அரச டித்தடி நடையிலே

முத்தி மகளை நத்தி இருளன்
முலைரெண் டும்சிறு மலையென்றான்
முக்கா லும்உனக்கு எக்கா லும்அவள்
அக்காள் அலவோ முறைக்கென்றான்

எத்திப் பயலும் பத்தித் துகிலை
இழுக்கவே அவள் மழுக்கவே
ஏச்சையும் அவன்பேச்சையும் வில்லைப்
பூச்சையும் பாரும் பள்ளீரே – பெரு
மூச்சையும் பாரும் பள்ளீரே

143 கொச்சி வரைக்கும் கச்சி வரைக்கும்
குலங்கள் தோறும் துலங்குவோர்
கோழிக் கொடிக்கும் சூழக் கிடந்த
யாளிப் படிக்கும் நாயகர்

எச்சில் தசையைப் பட்சித் தருளும்
ஈசற் கும்கடல் வாசற்கும்
இருவர்க் கும்மகன் நிலத்திலேஇருந்து
ஒருவர்க் கொருவர் நடச்செய்தே

மச்சான் மகளுக்கு இச்சித்து இளிகண்
மாட னும்சின்ன வேடனும்
மட்டித் தனத்துச் சுட்டிப் பயல்கள்
ரொட்டி குடித்த வெறியிலே

நொச்சிப் புதையில் உச்சிப் பொழுதில்
நொண்டிப் பூவியைக் கொண்டுபோய்
ரோசம் பாராமல் காலைப் பிடிக்கும்
மோசம் பாரும் பள்ளீரே – இது
தோசம் பாரும் பள்ளீரே.

144 மஞ்சு சூழும் போரிலே – தனம்
மிஞ்சி வாழும் ஊரிலே
மான வன்திரு வேட்டை வித்தகன்
மீன வன்வயல் நடையிலே

பஞ்ச வாளி பாயவே – மதம்
மிஞ்சி நாளி சாயவே
பாலக் குடும்பன் மாலை யிடத்தில்
பட்டப் பகலே கிட்டப்போய்த்

தொஞ்சு போன கிடுபடி – அவள்
நெஞ்சு மீதில் அடிபடும்
தோப்பை முலையைப் பிடிக்கவே – அவள்
காப்புக் கைகொண்டு அடிக்கவே

நஞ்சை மத்தியில் நில்லாமல் – அவன்
அஞ்ச வுத்தியும் சொல்லாமல்
நாத்தி என்கிற காத்தி போர
நேத்தி பாரும் பள்ளீரே – அவள்
நூத்தி பாரும் பள்ளீரே.

145 நங்கை கமலச் செங்கையால் – திரு
நாம மழகித் தாமஞ்சேர்
நம்பன் உரவுத் தோளினான் – விசும்பு
உம்பர் பரவும் தாளினான்

மங்கை இருவர் பங்கி லுறையும்
வார ணம்பரி பூரணம்
வையம் பரவும் அய்யன் கோயில்ச்
செய்யில் நடுகை போடையில்

கொங்கை அசையச் செங்கை இசையக்
கூந்த லவிழ்ந்து சோர்ந்திடக்
குழையிற் பசும்பொன் திவளவே - சிறுத்து
இழையில் நுசும்பு துவளவே

அங்கி திருவி வெங்கியுங் கொன்னை
அருதி மருதி உருதியும்
அளிய உழுத தொளியிலே கும்மி
அடிப்பதைப் பாரும் பள்ளீரே - தலை
முடிப்பதைப் பாரும் பள்ளீரே.

146 சீர்வி ளங்கிய தேவி யர்இரு
பேருடன்அமர்ந் தருளுவோன்
சித்தர் முனிவரர் நித்தம் பணிபுரி
உத்த மன்என வளருவோன்

பார்வி ளங்கிய பனுவல் பாடிய
பத்த ருக்கொரு சித்தமாய்ப்
பால னந்தரு சீலன் நன்பணைச்
சேல்வ ளம்மிகுஞ் செய்யிலே

பேர்வி ளங்கிய இருளி யும்கடிப்
பேச்சி யும்கொன்னு வாச்சியும்
பெத்தி யென்கிற பித்தி யும்மொரு
மித்து நடுகை போடையில்

ஊர்வி ளங்கிய மாட னென்பவன்
உருத மாடியைக் கூட்டிப்போய்
ஓடை மணலில் கிடத்திச் செய்யிற
சாடைபாரும் பள்ளீரே - இது
வாடை பாரும் பள்ளீரே.

147 அரம்பை நடனம் புரிந்திட - நல்ல
அமரர் பணிந்து செறிந்திட
அந்தர துந்துபி முழங்கிடச் - செய
இந்திரன் வந்து புழங்கிடக்

குரம்பை தங்கிய பூவை பாடவும்
கோல மயில்கள் ஆடவும்
கோதி லாத்திரு வேட்டை அய்யனார்
நீதன் கலிங்கன் குளத்திலே

திரம்மி குந்தவன் உதிர மாலைநன்
செல்வ னோடைப் பள்ளத்தில்
திருவி சிவனி வெயிலியும் கட்டச்
செங்கான் மாடி மயிலியும்

வரம்பை யடுத்து நாத்தை எடுத்து
வரிசை யாக நடையிலே
வன்னியன் என்பவன் சின்னக் கருப்பியை
வடக்குப் பள்ளத்துக் கிழுக்கவே
வலது கையினா லிடது கன்னத்தில்
மழுக்கிறாள் பாரும் பள்ளீரே - பயல்
வழுக்கிறான் பாரும் பள்ளீரே.

148 சொல்லாப் புவனம் பல்லா யிரமும்
தோத்தி ரஞ்செயும் கீர்த்தியார்
தொழும்பர்க்கு இரங்கிப் பிறவி கடக்கச்
செழும்பொற் சரணம் அளிப்பவர்

அல்லா மல்தமிழ் வல்லோர் இருக்கும்
நல்லூர் வித்தக நாட்டிலே
ஆச்சி அற்புத வாச்சி கற்பக
நாச்சி யார்வயல் நடையிலே

எல்லா மறிந்த வில்லாக் குடும்பன்
இளைய மச்சினன் வெளியனும்
இழுப்புக் காலன் கொழுப்புச் சுத்தி
ஏமி மகன்தன் மாமியைப்

பொல்லா விகடன் கல்லா முகடன்
பொட்டிப் பாம்பு காட்டியே
புரச நிழலில் இருந்து கொண்டுகைச்
சரசம் பண்ணுறான் பள்ளீரே - பயல்
அரசம் கண்ணுறான் பள்ளீரே.

149 அட்ட திசையும் துட்ட விசையும்
அடங்கப் புரக்கும் மடங்கல்ஏறு
ஆண்ட வன்திரு வேட்டை வித்தகன்
பாண்டி யன்குள நடையிலே

பொட்டல் வயலில்ச் சட்ட முடனே
பூமக் குடும்பன் காமநோய்
பொறுக்கக் கூடலை வாஎன்றான் – அவள்
வெறுக்கக் கூடலை போஎன்றாள்

இட்ட பணியும் வட்ட முலையும்
இலங்கத் துலங்கக் குலுங்கவே
ஈச்சன் புதையில் பூச்சி பிடிக்கும்
நாச்சி சொல்லவும் கேளாமல்

பட்டம் அறிந்து நட்ட திருவி
பயல்பிற காலே மயல்கொண்டு
பரிஞ்சிட்டாள் கையில் எடுத்த நாத்தையும்
எறிஞ்சிட்டாள் பாரும் பள்ளீரே – நம்மை
அறிஞ்சிட்டாள் பாரும் பள்ளீரே.

150 முத்துச் சரம்அணி ஆகன் – செய
வித்தைக் குருபர யோகன்
முன்புறு மண்டபஞ் சிறந்தோன் – நல்ல
அன்பர்கள் பங்கினில் உறைந்தோன்

எத்தல மும்புகழ் சித்தன் திருவேட்டை
உத்த மன்கீழ்ப் பத்திலே
ஏமரு ணாசலம் பழன வயல்தனில்
இளமைப் பெண்டுகள் நடையிலே

சித்திரப் பள்ளியும் குத்திர வள்ளியும்
செம்பி என்கிற வம்பியும்
சேர்ந்து நடுகை போடவே - துகில்
சோர்ந்து நழுவி யோடவே

அத்தை யென்பதும் எண்ணாமல் - முழு
லுத்தன் பெரியான் இழுக்கவே
ஆண்டிக் குடும்பன் கண்டு சாடி
அடிப்பதைப் பாரும் பள்ளீரே - சண்டை
பிடிப்பதைப் பாரும் பள்ளீரே.

151 தீராத வினைதீர்த்தவர் - இடர்
வாராமல் மனைகாத்தவர்
திரியுஞ் சூழச் சுத்திலும் - கயல்
சரியும் கீழப் பத்திலும்

ஓராமல் குளிர் கொடுகையில் - நிலை
பேறாமல் தொளி நடுகையில்
ஒயிலிக் கிளைய பொயிலி கிட்ட
வெருகன் மருகன் முருகன்போய்ச்

சாராயவெறி மீறியே - மனப்
பூராயம்தடு மாறியே
தடியில் தவறித் தோய்ந்த தெனவவள்
மடியில் தவறிச் சாய்ந்திட

ஓராமற்சினம் எழுந்தபின்முகம்
பாராமல்அவள் கொழுந்தன்போய்
எடுக்கிறாப் போலே நோக்கால்பூசை
கொடுக்கிறான் பாரும் பள்ளீரே - விசும்பு
ஒடுக்கிறான் பாரும் பள்ளீரே.

152 பொன்னின் மகுடம் இலங்கவே - புயம்
மின்னும் புரிநூல் துலங்கவே
பூத ரன்திரு வேட்டை அய்யனார்
ஆத ரன்கீழ்ப் பத்திலே

வன்னம் பெருகும் பண்ணை வயலில்
வரிசை யாகவே துரிசமாய்
மாடி இருளி சங்கியும் - நல்ல
வடிவி கருப்பி வெங்கியும்

புன்னைக் கிளைய ராக்கியும் - அந்தப்
பூவி கூட நடையிலே
பூல னென்பவன் வேல மறைப்பில்
போவென்று கண்ணைக் காட்டவே

சன்னைக் கிசைய ஓடவே - பயல்
ஆத்தி ரத்துடன் கூடவே
தமையன் என்கிற உமையன் ஓடி
சாத்துறான் பாரும் பள்ளீரே - விசும்பு
ஆத்துறான் பாரும் பள்ளீரே.

153 செஞ்சி மாநகர்ப் பிறந்தோன் - வெள்ளைக்
குஞ்ச ரம்மதிற் சிறந்தோன்
தேசி கத்திரு வாசன் - தொண்டர்
மாச கற்றிடு மீசன்

மஞ்சு தண்டலை சூழும் - குயில்
கொஞ்சு கிள்ளைகள் வாழும்
மான வன்திரு வேட்டை வித்தகன்
மீன வன்கீழ்ப் பத்திலே

விஞ்சை தெரிந்த பலத்தினான் - அதி
விசுவ குலநன் னலத்தினான்
விளங்கு கயிலா சத்தின் வயலில்
இலங்கு பள்ளியர் நடையிலே

பஞ்சலை மீனது பாயவே சொக்கி
பருவ முலைப்பால் சாயவே
பாந்த முடனே திருவன் இருகை
ஏந்தி உண்ணுறான் பள்ளீரே - அவள்
சாந்தம் எண்ணுறாள் பள்ளீரே.

154 விரைஉ லாவும் வரைகு லாவும்
மெய்ய னார்என் அய்யனார்
மீன வன்தொழும் வான வன்திரு
வேட்டை வித்தகன் நாட்டிலே

கரைகொள் ளாமல் திரைகள் மோதும்
கற்ப கம்பெ ருக்கமாய்க்
கணையிற் பாயும் மடைக்கண் நாற்று
பணையிற் பள்ளியர் நடையிலே

புரைவி டாமல் நிரைந டாமல்ப்
பொடிசி போய்த்தன் குடிசையில்
புகுதும் போதில் அகுதன் ஓடிப்
புடவை யைப்பி டித்திட

அரையிற் சேலை தரையிற் சோர
அல்குல் தானத்து எல்கையை
அங்கை யாலே மூடிக் கொள்ளுற
சங்கை பாரும் பள்ளீரே - அவள்
மங்கை பாரும் பள்ளீரே.

155 பத்த ருக்குஅமுது அளிப்ப வர்மனச்
சுத்த ருக்குஇடர் ஒழிப்புவர்
பண்ண வன்திரு வேட்டை வித்தகன்
கண்ண கன்குளப் புரவிலே

முத்திக் கிளைய தவிடியும் கொன்னை
பொத்திக் கிளைய செவிடியும்
முச்சால் அடித்த தொளியி லேவெகு
சச்சா டிக்கொண்டு கூட்டமாய்த்

தத்த ரத்திலே நிரைஎல் லாம்ஊர்
உத்த ரத்திலே நடையிலே
சண்டித் தாதன் லண்டிப் பயலும்
ஒண்டி யொண்டி கிட்டப்போய்

சித்தி லைச்செடி மறைவி லேஇள
வெத்தி லைகொடுத்து உறவிலே
சின்ன முத்தியைத் தூக்கிக் கொடுபோய்
என்ன செய்யிறான் பள்ளீரே அவள்
அன்னம் பாறினாள் பள்ளீரே.

156 ஆடிச் செய்யில் கூட்டமாய்ப் பள்ளர்
பாடித் தையில் நாட்டமாய்
ஆச்சுப் பூப்பனை வேலை யாளெனச்
சூச்சக் கோன்குளப் பற்றிலே

கூடித் திரண்ட குமரி யர்நடந்து
ஓடித் திரண்டு நடையிலே
கூத்தக் குடும்பன் ஊத்துக் கண்ணன்
சாத்தக் குடும்பன் மருமகன்

மாடிக் கிளைய பொதுவியை மனமும்
நாடிக் கொடுபோய் இருவரும்
மனது பொருந்தி ஓடை மணலில்
தனது பொருந்திக் கூடையில்

தேடித் திரிந்து தாடிக் கருப்பன்
திடியன் முரட்டுத் தடியினால்
சிறுக்கி யோடு பயலைப் போட்டு
நொறுக்குறான் பாரும் பள்ளீரே விண்டு
உருக்கிறான் பாரும் பள்ளீரே.

157 தட்டைத் தலைச்சி யரமியும் - சிறு
வட்ட முலைச்சி பெருமியும்
தரத்துப் பெண்டுகள் ஞானி யார்குளத்
திருத்துக் குண்டுகள் நடச்செய்தே

எட்டத் திரும்பி முடங்கி வயலை
நட்ட கருப்பி அலுத்துப்போய்
இறங்கும் பொழுதில் எருமை போல்க்கிடந்து
உறங்கும் பொழுதில்ப் பெருமான்போய்த்

துட்டக் கழுவன் கிட்ட அடுத்துக்
கட்டிப் படுத்துக் கிடக்கிறதால்
துடுக்கன் சிறுக்கி காலைக் கதிக்கத்
தாக்கும் போதில் நோக்கலாய்

முட்டப் பகைய னொட்டக் குயர
முத்தன் பயந்த சித்தன்போய்
முடுக்கி முடுக்கித் தாரு கம்புகொண்டு
அடிக்கிறான் பாரும் பள்ளீரே - மயிர்
பிடிக்கிறான் பாரும் பள்ளீரே.

158 மதித வழ்கோ புரத்தினான் - அதி
நதிவ ளம்மிகும் புரத்தினான்
மணக்கும் செண்பகம் பிச்சி முல்லையும்
இணக்க மாகவே சூடுவோன்

கதிகொ டுக்கிற கிருபையான் - தொண்டர்
கவலை நீக்குற பிரபையான்
கடைச்சி யர்மகிழ் இடைச்சிப் பாறைக்
குளத்தில் மடைக்கண் ஆற்றிலே

அதிவ ளம்மிகு பெரியசாமி துரை
அழகன் மான்ய வயலிலே
அரியாள் பெரிய கருப்பி மாத்தி
ஆகப் பள்ளியர் கூடியே - நய
பாகத் துடனே நடையிலே

தநியில் கருப்பன் முறுக்கு கடலை
தாரேன் என்று மாடியைச்
சங்கமறைவிற் கிடத்தியே - பயல்
மொங்கான் வைக்கிறான் பள்ளீரே
நுரையங் கேக்கிறான் பள்ளீரே.

159 பணைமி குந்திடுங் காவினான் - அதி
குணந்தகும் பச்சை மாவினான்
பாண்டிய சோழனும் வேண்டிய சேரனும்
பார்த்திபர் புத்திரன் மூர்த்திகள் சூழ்ந்திட
கணைநி கர்ந்ததுஎன் விழியினார் - (மது)
கனிந்தொ ழுகுநன் மொழியினார்
கார்பொ ருங்குழல்த் தேவி யார்இரு
பேரு டன்அமர்ந் தருளுவோன்
பணையெ னாவளர் இடைச்சிப் பாறைப்
பத்தில் நதிகுல திலகனாம்
பார்த்தி பன்சங் கரநா ராயண
பூமன் பழனம் தன்னிலே
இணையில் லாமல் நடுகையில் - ஒரு
சுணையில் லாத வீரனும்
ஏய்த்து ராமியை மடைம றைவினில்
சாய்த்துச் செய்யறான் பள்ளீரே - பயல்
கூத்தன் வையறான் பள்ளீரே.

கலிப்பா

160 நாளும் தவம்புரக்கும் நல்லூர்ப் பரிசனரை
ஆளும் திருவேட்டை அய்யனார் பண்ணைமுற்றும்
வாளும் பொருவு வரித்தடங்கண் பள்ளியர்கள்
நீளும் புரவெல்லாம் நிரைநடுகை செய்தனரே.

பள்ளியர் பணிமுடிந்து திரும்புதல்

சிந்து

161 பழன நடுகை செய்தார்................ ....
பள்ளியர் யாரும் சென்றார் பருவம் நன்றாய்க்
கழனி விளைக வென்றார் வரம்பில் நின்றார்
கழறு வளநீர்த் தடந்தோய்ந்தார் மலர் வேய்ந்தார்
....
வளர் செந்நெல்முடி எடுத்தார் நடையடுத்தார்
துழனி பரவை மட்டார் குரவை யிட்டார்
தொழுதார் மனதுகந்தார் நகரில் வந்தார்.

மூத்தபள்ளி பண்ணையாரைக் காணல்
வெண்டளைக் கலிப்பா

162 விண்டுவந்து தாவும் வியன்புரிசை நல்லூரில்ப்
பண்டுவந்த சாத்தாவின் பண்ணைவிசா ரிப்பானைக்
கண்டுவந்து மூத்தபள்ளி கையால் செழுநாற்றைக்
கொண்டுவந்து முன்புவைத்துக் கும்பிட்டு நின்றானே.

பள்ளியர் வாழ்த்து
சிந்து

163 திங்களில்மும் மாரிபெய்து செயம்பெறமுப் பூவிளைந்து
திருநல்லூர்ச் செழுங்கழனிச் செந்நெல்முத்துங் கொழித்திடவே
கொங்குகமழ் மலர்ப்பாதப் பூரணைபுட் கலைமுயங்கும்
குழகன்ஆ லயம்நோக்கிக் கும்பிடுவோம் பள்ளியரே;

நித்தம்முகிற்கு இணைத்தடக்கைத் தர்மவேள் போத்தியப்பன்
நிதிபதியின் திருவெய்தி நெடுங்காலம் வாழ்ந்திடவே
மைத்தடங்கண் அருட்கவுரி கற்பகப்பெண் ணாரமுதம்
வளர்குடுமி வரைநோக்கி வணங்குவோம் பள்ளியரே;

கவின்உற்ற திருநல்லூர்க் கரையாளர் பரிசனமும்
கமலவிழிக் கடைநோக்காம் கருணைவளம் சுரந்துஓங்கப்
புவிமுற்றும் தொழுதுஏத்தும் திருவேட்டை நாதன்வளர்
பொற்கோயில்நோக்கியேபோய்ப்பணிவோம் பள்ளியரே;

தென்கூடற் பதிவாழும் சிலைச்சிலைக்கைச் சொக்கேசர்
செல்வமீ னாட்சியம்மை சீர்பாதம் போற்றியே
தென்கூடற் கோமதியாம் செல்வியையும் மதிச்சடிலச்
சிவசங்க ரேசரையும் வாழ்த்திடுவோம் பள்ளியரே.

தினம்பாடித் திரிகூட மலைபாடித் திருமலையின்
சீர்பாடிச் செழுங்கருஞ்சை வரையார் வளம்பாடி
(வனம்பாடிக்) கற்பகமா நதிபாடித் திருநல்லூர்
வயல்பாடி அநுதினமும் வாழ்ந்திருப்போம் பள்ளியரே

பண்ணையார் பரிசளித்தல்

வெண்டளைக் கலிப்பா

164 கைவரிசை செய்வார் கழனிச் செழுநாற்றை
மெய்வரிசை செய்து விளையாடும் பள்ளியர்க்குப்
பைவரிசை செய்யும் பழக்கத்தால் பண்ணையனும்
செய்வரிசை செய்தவரைச் சேரிக்கு அனுப்பினனே.

செந்நெல் விளைந்தது

சிந்து

165 வாய்ந்ததொளி உறவாகி .. ..யா நன்றாகி
வாயடர்ந்து சட்டி மூடு கட்டி
தோய்ந்தநிலங் குளிர்ந்து குருத் தெழுந்து
தோகைவள முரண்டு அரை திரண்டு
ஏய்ந்தபொதி முன்காட்டிக் கதிர்முன் நீட்டி
இளங்கதிர்பால் அடைத்துக் கால் சடைத்துச்
சாய்ந்துஅபரி மிதமாய்ப் பணை சுகமாய்த்
தளிமுத்துச் செழுநெல்லும் விளைந்தனவே.

பண்ணையார் நாட்கதிர் அறுத்துவரச் சொல்லல்

கலிப்பா

166 முழவாளை பாய்ந்துதிரை மோதி வரம்பினில்
பழவாழைத் தாரீர்க்கும் பழனம் விளைந்ததற்பின்
உழவாளை நோக்கி உவந்துபண்ணை யான்விரைவில்
குழவாளை நாட்கதிர் கொண்டுவரச் சொன்னானே.

நாட்கதிர் படைத்தல்

சிந்து

167 சூன்முதிர்ந்து பூதரத்தின் கண்ணிருண்டு பெய்தகார்ச்
சும்மையின் அரங்கம்எங்கும் மும்முர சார்ப்ப
வானவர் காவலன் இருந்தான் இருந்த திசைபோற்றி
மள்ளர்தே வர்க்குஉறவு உள்ள வாரத்தில்

கூனிரும்பிற் கொய்துதொங்கல் பூநிறைந்த சிவிகைமேல்
கொண்டுவந்து பண்ணையானைக் கண்டுசேவித்துத்
தேனருந்தி வண்டிரங்கும் மேல்நிவந்த சூழல்வைகும்
செய்யன்எங்கள் திருவேட்டை அய்யன்முன் வைத்தார்.

உழவர் அறுவடைக்குச் செல்லல்

வெண்டளைக் கலிப்பா

168 விண்டுவந்து கூடி மிகுந்த மழைபொழியக்
கண்டுவந்த வாளை கயல்குதிக்கும் நன்னதிசூழ்
செண்டுவந்த கையுடையார் செய்யில் வளம்சுரப்பக்
கண்டுவந்த மள்ளர் கதிர்அரியச் சென்றாரே.

அறுவடை

சிந்து

169 வைகறைத்துயில் வெல்வார் விரைவில் செல்வார்
வயல்நீர் வடிப்பார் கயல் பிடிப்பார்
கையினில்தடி கொள்வார் அளவு விள்வார்
கழனிமுற்றும் பகுவார் நிரை புகுவார்
தொயில்மேல்நெற்குலை கொய்வார் உலரச் செய்வார்
துணைக்கைதனில் பறிப்பார் அரி விரிப்பார்
செய்தொழிற்பயன் மெய்ப்பார் அடிசில் துய்ப்பார்
திகழ்பாக் கநுபவிப்பார் மிக்கு உவப்பார்.

அடுத்த பணிகளை ஆவலாய்ச் செய்தல்

170 திரத்தில் புரிமுருக்கிச் சுமையிறுக்கிச்
செழுங்கதிர்க் கட்டேற்றிக் களப்படுத்தி
மரத்துக் ....
மறுநாள் எழுந்திருந்து போர்விரித்துமுன்
நிறத்துப் பகடனைத்தும் மரபிணைத்து
நிகரில் உரத்தெளித்து மறுவொழித்து
முறத்திற் பதர்வெருட்டிப் பொலிதிரட்டி
மூலப்பொருள் வளர்ப்பார் பொலி அளப்பார்.

பலர்க்கும் விளைவைப் பகிர்ந்து தருதல்
வெண்டளைக் கலிப்பா

171 உடையான் திருவேட்டை உம்பர்கோன் பண்ணைமுற்றும்
கொடையால் பெரிய குடும்பன் விளைந்தநெல்லைக்
கடைவாய் வழிந்தொழுகக் கள்ளுண்ணும் தாஷ்டீகன்
சடையாது ஒருகொடுங்கை தாங்கி அளந்தானே.

சிந்து

172 சைவமட பதியோர்க்கும் செம்புலிப் பெரியசாமி
சத்திரத்திற் கும்சிறிது தாங்கி யளந்தான்
தெய்வமறை யோரர்க்கும்கற் பகநாச்சி யார்கோவில்
சிறப்புக்கும் சிறிதுநெல் வாரிக் குவித்தான்
கைவருந்தப் பணிசெய்யும் தருமக்கட் டளைக்குக்
கணக்குவழக் கில்லாமல் கட்டி யளந்தான்
அய்யன்கோவில் பூசனைக்கும் தலத்தார் படிக்கும்
அளந்துகுவித் தான்பண்ணை யாண்டவர் முன்னே.

குடும்பன் நெல்கணக்கு உரைத்தல்
வெண்டளைக் கலிப்பா

173 அரவு தவழ்சடிலத்து அண்ணலார் பாதம்
பரவு திருவேட்டைப் பண்ணவர்தம் பண்ணையான்முன்
புரவும் பயிரும் பொலிகண்ட போதரவும்
வரவும் செலவும் வகையாகச் சொன்னானே.

சிந்து

174 மழையோங்கிய நல்லூர்ப்பணை வரத்தும்தலச் செலவும்
கிளைதாங்குவிர் அடியேன்சொலக்கேளும்பணை யாண்டே!

அரியரபுத் திரன்கோயிற்கு ஆறுஆமி ரம்கோட்டை
பெரியமடைப்போக்கில்வந்தபெருவெள்ளைநெல்
அளந்தேன்;

ஓடைக்கரை நயினார்தளி ஊட்டுக்கொரு தொகையாய்க்
காடைக்கழுத் தானுந்தனிக் கருஞ்சூரையும் அளந்தேன்;

மதுராபுரி மீனாம்பிகை வளர்கட்டளை தனக்கே
பதிவாகிய நெல்ஆயிரம் கோட்டைபகிர்ந்து அளந்தேன்;

இந்திரசாலம் மகேந்த்ரசாலம் இயல்பாய்ச்செய்யும்
புலமைத்

தந்திரன் வெள்ளைவடகாசிக்குச்சம்பாப்பத்துக்
கோட்டை

கவிநாவலர் தமக்கும்ஒரு கணக்குஆயிரம் கோட்டை
செவிகேட்டிடும்பெருமான்வசம்செம்பாளைநெல்
அளந்தேன்;

தொகையாயிரங் கோட்டைபரஞ் சோதிமட பதிக்கு
வகையாய்ப்பள்ளர் சமுதாயத்தில் மலைமுண்டன்நெல்
அளந்தேன்;

மணல்வாரியும்பூம்பாளையும்வகைக்குஆயிரம் கோட்டை
அணைவேலைக்கும் கால்வேலைக்குப் அரியான்வசம்
அளந்தேன்;

மறைவேதியர் செலவும்செல மற்றுளநெலும் விரையும்
இறைஆயிரம் கட்டும்சிறை இட்டேன்பணை யாண்டே.

மூத்தபள்ளி முறையிடலுறுதல்

வெண்டளைக் கலிப்பா

175 பாராமல் தன்முகத்தைப் பார்ப்பேர் உளதும்இன்று
தாராமல் போனபள்ளன் தன்சூதை நெஞ்சிலுற்றும்
கூறாமல் மூத்தபள்ளி குன்றா பொருமல்வெப்பம்
தீராமல் பள்ளியர்முன் சென்றுமுறை யிட்டாளே.

மூத்தபள்ளி முறையீடு

சிந்து

176 தட்டத்தலைப் பண்ணைக்காரன் ஞாயங்கேளானோ - பருந்
தாளிபோலும் வயிற்றழகன் ஞாயங்கேளானோ
ஒட்டவைத்த காதழகன் ஞாயங்கேளானோ - ஊளை
ஊற்றொழுகும் மூக்கழகன் ஞாயங்கேளானோ
சுட்டகரு வாட்டழகன் ஞாயங்கேளானோ - பருஞ்
சோகிபோல் வெளுத்தபல்லன் ஞாயங்கேளானோ
வெட்டவிடக் கத்தன்இந்த ஞாயங்கேளானோ-திரு
வேட்டையண்ணல் பண்ணைக்காரன்
ஞாயங்கேளானோ

177 குளமலனைகா ராமல்அவள் குடிகாத்து வம்பன்
குட்டையிற்கா லோட்டித்துன் புற்றும்அறி யானாய்க்
களநிலமும் பிள்ளையார் உழவுப்பட் பேறுங்
கார்யவச மாய்க்கள்ளி பார்சமதில் விட்டான்;

அளவுரைநெல் லுடன்புழுதி கலந்துஎனக்கு நேரே
அளந்து,''சரி இட்டோம்''என்றுஎழுந்திருந்துபோனான்
வளமுள்ள நாட்டிளைய பள்ளியுடன் நாளும்
வாழும்பள்ளன் வஞ்சகத்தைக் கேளும்பள் ளீரே.

இளையபள்ளியும் மூத்தபள்ளியும் வாதிடுதல்

178 அநியாயப் பட்டதுஎன்ன மூத்தபள்ளத்தி - உங்கள்
அப்பன்முதல் ஏதாகிலும் தந்ததுண்டோடி?
கனிவாய் ஒழுகப்பேசும் இளையபள்ளத்தி - உந்தன்
கற்பனை அல்லோ குடும்பன் சற்பனை செய்தான்.

179 குண்டணி பலதுஞ் சொல்லி மூத்தபள்ளத்தி - கொண்ட
குடும்பனைக் கால்அழுகக் குட்டையில் போட்டாய்;
பண்டுபோன காரியத்தை ஏன்இழுக்கிறாய் - ஆசைப்
பள்ளனுக்குப் பிணைபட்டு மீட்டதுண்டோடீ!

180 அதியாரி பண்ணைக்காரன் கைப்பிடியானால் - குட்டை
அடிக்கவும் கழற்றவும் அருமையோ பள்ளி?
மதியாமல் அவள்சொன்ன சன்னைப்பேச்சுக்கு - நொண்டி
மாடிமக ளேஇங்குச் சாட்சி நீயடீ.

181 சாட்சியென்ன தலைகாணிமந்திரம்சொன்னால் - பண்ணைத்
தலைவனைச் செவிபிடித் தாட்டலாமடீ
சூட்சமாகக் குத்திப்பேசும் இளையபள்ளத்தி - என்மேல்
தோசமில்லை நானும்உன்னைச் சுளிக்கப்பேசுவேன்.

182 உள்ளதுசொன் னால்நிலைக்கும் மூத்தபள்ளத்தி - இந்த
ஊரைவாய் மூடவொரு மூடியுமுண்டோ?
துள்ளாதே எட்டிப்போடி மேனாட்டுப்பள்ளி - செடி
தூத்ததொகை இத்தனையென்றேத்திப் போடுவேன்

183 பள்ளிப்பண்ணைநயினாரோடுநல்லூர்ப்பள்ளி -கண்மாய்ப்
பங்கிலே கிடந்தவட்குச் சங்கையென்னடி
கள்ளிக்கு மனம்துள்ளாதோ இளைபபள்ளத்தி - கூனற்
காக்கனைக் கிடந்தாய்க்கு நாக்கும்உண்டோடீ!

184 பூத்திருக்கும் குச்சுக்குள்ளே மூத்தபள்ளத்தி - முழிப்
பூசனைக் கிடந்தாய்க்கு ரோசமென்னடி?
வீத்திவீட்டுக் கோடியிலே இளையபள்ளத்தி - சுட்டி
வீணனைக் கிடந்தாய்க்கு நாணமென்னடி?

185 வார்த்தைமிஞ்சிப்பேசவேண்டாம்நல்லூர்ப்பள்ளி - நீஉன்
மட்டிலே பேசடி வெட்கங் கெட்ட'மாங் கொட்டாய்!
தாழ்த்துப் பேசுவனோ இக்கி மேனாட்டுப்பள்ளி-கொலுத்
தாசியென்று பேரெடுத்த தோசிக்கெதிராய்?

186 உள்ளதுநீ சொன்னதெல்லாம் மூத்தபள்ளத்தி - நெஞ்சை
உற்றுப்பார்த்துப் பேசடிஉன் புத்தி பேசாதே.
கொள்ளிகொண்டுசொரியாதேஇளையபள்ளத்தி - இக்கிக்
கொஞ்சக்காரி உனக்குநான் அஞ்சுவேனோடி?

187 நோக்கம்இல்லாமல் குடும்பன் மூத்தபள்ளத்தி - உன்னை
ரோசம்கெட்ட மூளியென்று ஊசப்போட்டிட்டான்
வாக்குவாதம் உண்டாக்கிநீ நன்னகர்ப்பள்ளி - உன்கண்
மாயையில் அகப்பட்டவன் பாயல். பிரிவனோ?

188 ஆளடிமை யோஉனக்கு மூத்தபள்ளத்தி - கோபம்
ஆறிப்பேசு நானும்பாதிக் காரியல்லவோ?
பாழிலே செருப்புத்தேய நாளிலே நடந்து - உன்னை
பண்டுள்ள பரிசமிட்டுக் கொண்டதாரடி?

189 வீத்தாதே போடி போடி மூத்தபள்ளத்தி – முழம்
மிச்சமடி நானுனக்குக் கச்சக்காய்ப்பள்ளி
கூத்திக்கள்ளி நீகீறுங் கீத்திலே நிற்க – இன்னம்
கோட்டம்வச்சுப் போட்டடிமுன் இட்டமருந்தை.

190 அச்சியென்று பார்த்திருந்தால் சரசங்கொள்ளாதே – சற்றே
அஞ்சிப்பேசு வார்த்தைவசை மிஞ்சிப் பேசாதே
நச்சுவாய்ப் பள்ளத்திஉனக்கு அச்சியாரடி – வாயில்
நஞ்சுமிழும் பாம்புமெலிக்கு அஞ்சுமோ பள்ளி?

191 வெட்கமென்ன நீயும்எனக்கு அச்சியல்லவோ – என்னை
மிஞ்சிப் பேசினால் உனக்குக் கொஞ்சமல்லவோ?
....
....

192 ....
....
அச்சியென்றுசொன்னதினால்முக்கியமுண்டோ –பண்ணை
ஆண்டவரை ஏண்டி முன்னே தூண்டிப்பேசுறாய்?

193 தெரியாமல் தின்றதொன்றை நெஞ்சுதனிலே – அதைச்
சீயென்று போடாமல் நீயல்லோ சொன்னாய்?
மரியாதை வார்த்தையானால் ஏன்வருகுது – சற்றே
மார்க்கமில்லையோசொன்னாலும்கேட்கலா காதோ?

194 கொண்டகள்ளு லாகிரியென் மண்டை கொண்டதால்
கடுங்கோபம் வந்துவைதேன் பாவமுண்டோதான்?
விண்டுபேச வெட்கக்கேடு பேசாதேயினி – எனை
மிஞ்சிப்பேசி னாலும்மானக் கொஞ்ச முனக்கே.

195 நாதன்திரு வேட்டையண்ணல் பாதம்போற்றியே – குற்றம்
நானும்பொறுத் தேனடிநீ தானும் பொறுப்பாய்
சோதிகிளரத் தளிர்த்துஆல் அருகுபோல் – கிளை
சூழ்ந்திருக்க ஊழிகாலம் வாழ்ந்திருக்கலாம்.

மங்களம்

196 தெரிவரிதாய்ப் பணிகளிடைப் பொன்னனநிலைபெற்றவிர்
திருவேட்டை வித்தகற்கும் மங்களஞ் செயமங்களம்!
புரிகுழற் காவியங்கட் செய்யவாய்த் துவரிதழ்ப்
பூரணைபுட் கலையவர்க்கும் மங்களஞ் செயமங்களம்!
அரியரபுத் திரர்பங்கில் தேவியா ரம்மனுக்கும்
அருள்திருநா மழகியற்கும் மங்களஞ் செயமங்களம்!
கரியவனின் சோதரியாள் அரிதக நாச்சியம்மை
கற்பகக் கௌரிக்கும் மங்களஞ் செயமங்களம்!

வாழ்த்து

வெண்டளைக் கலிப்பா

197 சீர்வாழி காவித் திருமா மலைவாழி!
ஏர்வாழி ஆறணைகால் ஏரி பணைவாழி!
கார்வாழி நல்லூர்க் கடவுள்அய்ய னார்வாழி!
பார்வாழி மூதூர்ப் பரிசனமும் வாழியவே!

குறிப்புரை

(எண்: பாடல் எண்)

1. மா-குதிரை; கவிகை-குடை; சிவிகை-பல்லக்கு; ஓதியர்-கூந்தலையுடைய மகளிர்; பரதம்-நாட்டியம்; இரதம்-இனிமை, நடனத்தால் பெறும் எழிற்சுவை; துவசம்-கொடி; கவசம்-(வீரர்கள் அணியும்)உலோகத்தாலான சட்டை; மிருதி-ஸ்ம்ருதி, தருமசாத்திரம்; சுருதி-வேதம்; ஈண்டு ஆயிரம் என்றது பல என்னும் பொருட்டு; வேதன்-பிரமன்; போதகம் - யானை, இங்கு விநாயகர்; தேறு-தெளிகின்ற. சிறந்த உணவாகத் தெளிந்து உண்கின்ற என்பது கருத்து; அரும் பொருள் பெரும் பொருள் - அரிய பொருட்சிறப்புடைய பெரிய பாரதத்தை; சீத-குளிர்ந்த; மருப்பார் - கொம்பையுடைய விநாயகர்; இவர் பாரதத்தை மேரு மலையில் எழுதியது வெளிப்படை; தாவும்-பரவுகின்ற; ஆர்கதிர் - தன்பாற் பொருந்தியுள்ள கிரணங்களை; தாவும்கதிர் ஆர்கதிர் என இயையும்; தரும்-உண்டாக்கும்; அணி-அழகிய; குருமணி-ஒளி வீசும் இரத்தினம், இங்கே முத்து; பணை-மூங்கில், தோளுக்கு உவமை; மூங்கில் முத்துப் பிறக்கும் இடங்களுள் ஒன்று; வயம்உள-வலிமையுடைய; தான மாரி-மதமாகிய மழை, உருவகம்; கறையடி இறை-யானைமுகனாகிய கடவுள்; புயம்உள இறை, வயம்உள இறை, மாரி பெய்கின்ற இறை என இயையும்.

2. மன்றாடி - நடராசர்; துதிசெய் அ அதிசயமன்றாடி என்க, அகரம் சுட்டுப் பொருளது; ஒரு மகன் - ஒப்பற்ற புதல்வன்; மதியா-அடியார்களை மதித்து; பதவி - வீடுபேறு; பதவிக்கு அங்கு ஆர் அ கனவு-முத்தியின்கண் பொருந்திய அந்த எதிர்பார்ப்பு; நினைவு-(வீட்டின்பம் பெறும்) எண்ணம்; பலன்-முன்னது வலிமை, அடுத்தது பயன்; ஐம்பூதத்தின் வலிமை என்றது மிக்க வலிமையாகிய மனத்திண்மையை; ஐம்பூதப்பயன் என்றது ஐந்து பூதங்களின் சேர்க்கையாகிய உடலால் பெற வேண்டிய பயனாகிய வீட்டுப்பேற்றை; நம்பன் - இறைவன்; சங்கால-விரைவாக, சங்காலச் சஞ்சாரம் என இயையும்;

சகம் பல-பற்பல உலகங்கள்; மகம்-வேள்வி; கலை-இங்கு தமிழ்; கலைமுனி மலைமுனி-தமிழ் முனிவராகிய பொதியை மலை அகத்தியர்; புகுதிய-புகுத்திய, உபதேசித்த. கெடுதல் விகாரம்; "சிவனைநிகர் பொதியவரை முனிவனக மகிழஇரு செவிகுளிர இனியதமிழ் பகர்வோனே" என்பது திருப்புகழ் (23); செங்காவித் திருமலை-பண்புளிப் பட்டினத்திலுள்ள மலை குவளைமலை எனப்படும்; "மருமலர்ச் செங்காவிமலை" (திருமலையாண்டவர்குறவஞ்சி 8); தருமலை - காட்டுகின்ற மலைபோன்ற முருகப்பெருமான்; படிஉயர்-உலகத்தில் உயர்ந்த; குழகன்-இளம்பருவத்தோன், சேய்.

3 சீல-அழகிய; கறை கால-(மேக மூட்டத்தால்) இருண்ட கார் காலத்தில்; சேம -(அடியார்களுக்குச்) சேமநிதி போன்ற, இக்கருத்திலேயே திருமால் வைத்தமாநிதி எனப்படுவார்; திரு நாமத்தழகி - ஓர் அம்மனின் பெயர்; தேவிப்பெயர் மாதர்-தேவியாரம்மன்; துவர் இதழ்-பவளம் போன்ற உதடுகள்; பால-மழுவை ஏந்திய; உரக அணிப் பாய்-பாம்பாகிய அழகிய படுக்கை; ஒருசேய்-ஒப்பற்ற குழந்தை; திரிசூலற்கும் மாயற்கும் ஒரு சேய் என்க, ஈரிடங்களிலும் எண்ணும்மை தொக்கது, அரிகரபுத்திரர் என்றவாறு; ஆலக்குழல் - நஞ்சினைப்போல் இருண்ட கூந்தல்; கோல - அழகிய; படிக மென் ஆகத்தினள் - பளிங்கின் நிறத்தையும் மென்மையையும் பெற்ற திரு மேனியை உடையவள்; நாகத்து-மலையைப் போன்ற; ஞாலத்து இறை - உலகைப் படைத்த தலைவனாகிய பிரமனின்; தாலத்து-நாவின்கண்; உறை - வசிக்கின்ற; மறை நாரி - வேதவல்லி, கலைமகள்; "அஞ்சத் துவசம் உயர்த்தோன் செந் நாவும் அகமும் வெள்ளைக் கஞ்சத் தவிசொத்து இருந்தாய்" என்பார் குமரகுருபரர் (சகலகலாவல்லி மாலை 5); மறைநாரிக்கு இசை கூறிப் பாவில் பயில்வுறப் பள்ளேசலுக்கே ஞானம் தருமே என்பது முடிபு.

4 முண்டகம்-தாமரை; கண்டிகை மணி - உருத்திராக்க மாலை; முந்நூல் - பூணூல்; முறை-முறைப்படி; உரத்தார்-மார்பினர்; விண்டலம்முதல் பகர்தலம் ஏழாவன:- பூலோகம், புவலோகம், சுவலோகம், சனலோகம், தபோலோகம்,

மகாலோகம், சத்யலோகம் என்பன; அதலம், விதலம், சுதலம், தராதலம், மகாதலம், இரசாதலம், பாதாளம் என்பன பாதலம் ஏழு; துண்ட-கீற்றாகிய; உருக்கிளர்-அழகிய; படலை, தொடலை-மாலை; துப்புள-சிவந்த; இறைவன் சிறந்த பிறையோடு எருக்கையும் விரும்பி ஏற்றதைப் போலப் பெரியோர் உயர்ந்த காப்பியங்களோடு இந்த எளிய பள்ளேசலையும் அங்கீகரிப்பர் என்பது கருத்து. இச் சிந்தின் ஈற்றடி தெளிவாக விளங்கவில்லை.

5. மேரு-இங்கு மலை; பொதிகை உதவு தேர்-தென்றல்; தேரோன்-மாரன்; வடக்கோடு தேர் உடையான் என்பார் சிவப்பிரகாசர் (தனிப்பாடல்) நிதிகள் என்று-செல்வங்களைப் போன்று.

6 வடகரை நகர்க்கதிபதி - சொக்கம்பட்டி ஜமீன்தார்; மருவலார்-பகைவர்; முடி-தலைகள், கிரீடங்கள் எனினுமாம்; அடிபட- (குதிரைகளின்) கால்களிற்பட்டு; துரகதம் - குதிரை; தமனியம்-பொன்; புரவலன்-வள்ளல்; கருஞ்சை - கருஞ்சிவனப் பேரி என்னும் குளம். இதன் கரையில் உள்ள சிவாலயத்தின் இறைவர் திருநாமம் கருஞ்சிவலிங்கம்; இறைவியின் திருப்பெயர் பெரியநாயகி; இங்கே வழிபட்டு வேண்டினால் தவறாமல் மழை பொழியும் என்பது அநுபவ பூர்வமான நம்பிக்கை; கருஞ்சையின் நீர்நிலை வளர்வதற்கு வடகரையதிபதி பெரியசாமித்துரையின் புகழ் வளர்தல் உவமை; அடவுடன் - அடைவுடன், முறையாக; திருத்தேவி - தேவியாரம்மன்; அரி-கண்களின் வரி; மதர்விழி-எழிலால் களிப்பு மிக்க கண்கள்; அவிர்மணி-ஒளிவீசுகின்ற இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற அணி கலன்கள், வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை; செங்கதிர் புரை - சூரியனைப் போன்ற; கிரி - மலையைப் போன்றவர், ஐயனார்; இடபதி - வானுலகின் தலைவர்; கடபதி - யானைகளுக்குத் தலைவர்; புயத்தார், கிரி, இடபதி, கடபதி, கருணையங்கடலாகிய அய்யனாரின் அடியவர் கருஞ்சையிற் பெருமழை பொழியக் கும்பிடுவார் என்பது முடிபு.

7. குழை-காதணி; வெண்பூதி-திருநீறு; ஆதி-முதன்மையான; மூதித் தொழும்பான-பண்டைய நாளிலிருந்தே குற்றேவல் புரிகின்ற, "ஆதியில் தொழும்பு செய்யும் மூதி முறியாள்" என்பார் பின்னும் (17).

8. சிலை-வில்; நுதல்-நெற்றி; வதன பங்கயம்-முகத் தாமரை; முருந்து-மயிலிறகின் அடி; நகை-பல்; செங்கனி-வீழிக்கனி; மூன்றாமடியின் பொருள் தெளிவாக விளங்கவில்லை; கருங்காப்பு-இரும்புக் காப்பு, "அயக் காப்பிட்ட செங்கரம்" என்பார் பின்னரும் (10). ஒப்பு: "பற்றிய கரும் பொற் காப்பும்" (முக்கூடற். 6) கல் வடம் - இரத்தினமாலை; பை-பாம்பின் படம்; கடிதடம்-அல்குல்; அலம்- துன்பம்; தனக்கோடுகள்-நகிலாகிய மலைச்சிகரங்கள்; ஒப்பு: "இரு கோடுற்ற கருப்பு இன்னுமெதிர்ந்தால் விரிந்திடும் என்றெண்ணிச் சற்றே சரிந்த தனமும்" (முக்கூடற். 6); 'நெருங்கிய குரும்பைகள் சாய்ந்திருந்ததுபோல் எழில் கனிந்திடு மூர்க்கம்கொடு மெள்ளக் குனிந்திடு தனமும்" (கண்ணுடையம்மன்பள்ளு 6).

9. புயல்ஏறும் - மேகங்கள் கூட ஏறித்தொட வேண்டிய அளவு உயர்ந்த; ஓங்கற்பொருள் - மலைபடு திரவியங்கள்; உவரி-கடல்; கால்-வாய்க்கால்; வளை-சங்கு; முத்தாற்றில் மலைபடுபொருள்களும் கடல்வாழ் கயல் மீன்களும் காணப் படுகின்றன; இந் நீர் வாய்க்கால்களின் வழியே வயல்களிற் பாயும்போது சங்குகளும் கழனிகளை அடைகின்றன என்பது கருத்து; தண் பழனம்-குளிர்ந்த வயல்கள்; இயல் ஏறும் - சிறப்பை உடைய, வயல்களாற் சிறப்புற்ற என்றவாறு; மேல் நாடு-நன்னகர நாடு.

10. கஞ்சமுறழ்-தாமரை போன்ற; திட்டி-கண்ணேறு, திருஷ்டி; அயக்காப்பு-இரும்புக் காப்பு; தத்தை-கிளி; வர்ண பட்டி-நிறம் வாய்ந்த முலைக்கச்சு.

11. பூசு-திரட்சியான; நகம்-மலை; புயல்-மேகம்; மா கனகம் மேவி-ஒளிமிக்க பொன்னை நிகர்த்து; தேகன்-திருமேனியை உடையவர்; அகளங்கன் - மாசற்றவன்;

அடிக்கோகனகம் - திருவடித் தாமரை; தென்நல்லூரின் திருவேட்டைநாதர் என இயையும்; குடும்பன்-பள்ளர் தலைவன்.

12 ஏராடு-அழகிய; சந்தம்-சந்தனப் பொட்டு, "நெற்றியில் வெண்ணீறுமிட்டு மற்றொருசந் தனப்பொட்டும் நேர்த்தியா யணிந்து" (செங்கோட்டுப். 25) ஏற்றாப்பு - அங்கவஸ்திரம்; கூறான-தன்மை பெற்ற, செவ்விய; கச்சு உடை - கச்சினால் இறுக்கிக் கட்டப்பெற்ற ஆடை; வீறான-கம்பீரமான; தாறு-பனங்குலை; கால்மாறாடி அடிவைத்து - (கள்வெறியால்) கால்கள் தடுமாற.

13. வட்டு-சூதாடு கருவி, வல்; குயவனிதை-நகில்களை உடைய பெண்; நெட்டிளங் கெண்டைக்கண் எனக் கூட்டுக, புகழுவமையணி; கேள்வன் - கணவன்; அட்ட இந்திரை - தனலட்சுமி, தான்யலட்சுமி, தைர்யலட்சுமி, சந்தானலட்சுமி வித்யாலட்சுமி, விஜயலட்சுமி, கீர்த்திலட்சுமி, இராஜ்யலட்சுமி என்னும் எண்மர்; வதிந்த-வசித்த; கேள்வன் நல்லூர், நிகரும் நல்லூர், இந்த நல்லூர் எனத் தனித்தனி இயையும்; தொட்டு அறிவித்து-அநுபவ ஞானத்தை உண்டாக்கி, "தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது" என்பது பழமொழி; முட்டற-தடையின்றி; தரியாத - ஏற்றுக்கொண்டு பயன்பெறாத; திட்டு-வயலில் உள்ள மேடை; ஒப்பு: "இன்னம் இவள் துணை என்று எண்ணிடாதவர் நெஞ்சை இருத்தி மண்வெட்டிக் கொட்டால் திருத்திடுவேன்" (கண்ணுடை. 14).

14 மதியாத எட்டெழுத்தும் ...... கொழுப்பாய்ச்சுவேன் ஒப்பு: "ஒருபோது அழகர் தாளைக் கருதார் மனத்தை வன்பால் உழப்பார்க்கும் தரிசு என்று கொழுப்பாய்ச்சுவேன்" (முக்கூடற்.11) கதி-வீடுபேறு; குவளைமலைப் பதியான்-திருமலை முருகன்; "அல்லேறு குவளைமலை அண்ணல் (திருமலையாண்டவர் குறவஞ்சி11) தோற்கிணை-தோலால் மூடப் பெற்ற கிணைப்பறை, இது மருதநிலத்திற்குரியது; விதியாளன்-பிரமன்; தர்மன்-இயமன்; இரு நிதியாளன்-குபேரன், சங்கநிதி பதுமநிதி ஆகிய இரு நிதிகளை உடையவன்.

15. பூதலம் .. ஏர்க்காலா ஆக்குவேன்-ஒப்பு: "பெருமாள் பதிநூற்றெட்டும் மருவி வலம் செய்யார்தம் பேய்க்காலை வடம் பூட்டி ஏர்க்கால் சேர்ப்பேன்.(முக்கூடற். 11); பட்சவாதம்-நடு நிலையற்ற ஒருதலைப்பட்சமான மொழி; சீதரன் பனுவல்-திரு மாலைப் போற்றும் நூல், சிறப்பாக நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தைக் கொள்ளலாம்; இக் குடும்பன் திருமால், திரு மலை முருகன், திருவேட்டை ஐயன் ஆகிய மூவர் மீதும் அன்பு மிக்கவன் என்பது விளங்குகிறது.

16 பசிய நெற்றிச் செஞ்சிலை-பசுமையான நெற்றியாகிய சிறந்த வில், சொல் முரண்தொடை; நெற்றி வில்லாகவும் கண்கள் அம்பாகவும் உருவகம்; ஒருபுடையொப்புமை:" புருவச் சிலையைக் குனித்துமைக் கண்ணம்பு போக்கிநெஞ்சம் உருவச் செய்து"(திருக்கழுக்குன்றக் கோவை7) வம்பு-கச்சு; பணைத்த-பருத்த; கொம்பு-யானைத் தந்தம்.

17 திருவேட்டைஐயனார் செஞ்சிப்பதியில் தோன்றியவர், "செஞ்சிமாநகர்ப் பிறந்தோன்" என்பார் பின்னும் (153). சாமி வந்த நாள் மிகப்பழங்காலம், அக்காலந் தொட்டு எங்கள் குடி அய்யனாருக்குத் தொண்டு செய்து வருகிறது என்றபடி; ஆரணம்-வேதம்; தாரணர் - அனைத்தையும் தாங்கியிருப்பவர், கடவுள்; மூதி முறியாள் - பழமையான அடிமை; ஈர் அணிச் செவி-இரண்டு அழகிய காதுகள்; பிறவியிலேயே தோன்றிய செவியைவிடப் பின்னால் முளைத்த கொம்பு வலிமை பெற்றுச் செல்வாக்குடன் விளங்குவதைப் போல் இளையவள் இருக்கிறாள்; ஆனால் பள்ளனுக்கு மாமி மகளான உரிமைப் பெண்ணாகவும் முதல் மனைவியாகவும் இருப்பதால் மூத்தவள் முதல் உரிமை வாய்ந்தவள் நானே என்கிறாள்; சீர் அணி அடியான்- கருணையைப் பொருந்தி யுள்ள குடும்பன்.

18. பூக்கும் முன்னே-பருவமடையுமுன்பே, "குன்றெனவே முலைதிரளு முன்பு தாலிகட்டிக் குடும்பனெனைக் கூட்டிவந்த பின்பு" என்பாள் பின்னரும் (70). சேர்க்கை-கூட்டம்; குடும்பன் தானாகக் கண்டு ஆசைப்பட்டு மணந்து கொண்டதால் தனக்கும் உரிமை உண்டு என்கிறாள் இளையபள்ளி. "கஞ்சிக்குக்

தன்னிலேநான் கெஞ்சிப்பு குந்தவளல்ல; கண்டாசைப்பட்டே கொள்ளும் பெண்டானவள்'' (முக்கூடற். 14); பாண்டவர் சகாயன்-திருமால்; தாண்டவராயர்-நடராசன்; புத்ரன்-ஹரி ஹர சுதனாகிய ஐயனார்.

19 மா எடுத்த கோடு-மாமரத்தில் தோன்றிய கொம்பு; வதியும்-வசிக்கும்; ஏ எடுத்த-கூர்மை பொருந்திய.

20. மஞ்சு-மேகம்; இஞ்சி - மதில்; வருக்கை-பலாமரம்; பஞ்சரம்-கூடு; கஞ்சம்-தாமரை; கஞ்சம்மீது அனம் துஞ்ச அவாவும், ஒப்பு – "சேல்உண்ட ஒண் கணாரின் திரிகின்ற செங்கால் அன்னம் மால் உண்ட நளினப் பள்ளி" (கம்பர். பால. நாட்டுப். 13). பார்க்க இந்நூல் பாடல் 85; அஞ்சனம்-மை; அவாவும்-விரும்பியேற்கும்; போர்-நெற்போர்; குரண்டம்-கொக்கு; பஞ்சில்-பஞ்சைப் போன்ற. ஒப்பு: "எடுத்த, அரம்பைகள் கால் அசைத்திட் டாடுதலால் மாறா வரம்படைத்த கோட்டு வளத்தால்-திரம்பெறவே மெச்சு ரவிசுருகி மேவுதருச் சோலையால் அச்சம்மிகல் வானவரை யாக்குதலால்-நிச்சயமாய்க் காதலைமேற் கொண்டதடங் கண்ணிறைந்த தால்வேள்வி நாதனைநேர் கல்லகநன் னாட்டினான்'', (வெள்ளையராசேந்திரன் துகில்விடுதூது கண்ணி 70-73.)

21. கோலம் நோக்கிய-அழகுமிக்க; சாலை-கரும்பு ஆலை; அரி - ஆண் வண்டு; பேடு-பெண் வண்டு; தணந்திடாது - பிரியாமல்; மணந்திட-புணர; வார் மது-பொழிகின்ற தேன், வினைத்தொகை; வேலை-கடல்; தோரணம்-கோபுரவாயில்; சாரணர்-தெய்வச் சாதியினர்;கூடும் - கூடுவர் எனற்பாலது இயைபுத்தொடை நோக்கித் திணை வழுப்பட்டது.

22. பாவுமா மணி-பரப்பப் பெற்ற சிறந்த இரத்தினங்கள்; தூபி-தூண்; பானு-சூரியன்; வாம் பரி-பாய்கின்ற குதிரைகள்; காவு-சோலை; "கலந்தபொற் காவு காண்பான் காமுறப் புக்க தேபோல்'' (சீவக சிந்தாமணி 2710); கூவிளம்-வில்வம்; கான்-காட்டாறு; கோகிலம்-குயில்; மூவர் சொல்-தேவாரம்.

23. வளை-வங்கு; ஆகு-பெருச்சாளி; கோது இலா-குற்றமற்ற; ஓதி-மகளிர் கூந்தல்; கோதைமார்-பூமாலையைப் போன்ற மகளிர்.

24. கொல்லை-சோலை; குறும்பர்-இடையர்; மேதிகள்-எருமைகள்; வல்லை-வேகமாக; புல்லை-புல்வாயெனப்படும் மானை; புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது என்பதற்கு முரணாகத் தோன்றும்படி புலி புல்லைக் கடிக்கும் என்றது நயம்; வில்லை ஈனும்-ஒளியை உண்டாக்கும்; அல்லை-இருளை.

25. முதல்வரி விளங்கவில்லை; நன்னகர் நாட்டின் அணைச்சிறப்பைக் குற்றாலத் தலபுராணமும், "ஆறுதுறை தோறும் நிரையாய் அணைவகுப்பார்" (திருநாட்டுச். 1) எனச் சுட்டுகிறது. வால்-ஒளிமிக்க; வளை-சங்கு; விண்டு ஓடு- சிதறிப் போகின்ற; ஏடு-பூவிதழ்; மலர்ஏடு விண்டு ஓடு தேன் துளிக்கும் என இயையும்; வாளை-ஒருவகை மீன்; அள்-நெருங்கிய; வில் ஆடு-ஒளி வீசுகின்ற; சாலி-நெல்; ஏற்ற-உயர்ந்த, ஏற்றமுடைய; வை - வைக்கோல்; சூல் முகில் வைக்கோற் போரைக் குன்றெனக் கருதித் தவழும் என்றது மயக்க அணி.

26. மகம்-வேள்வி, கல்லக நாட்டில் ஒவ்வொரு மாதமும் யாகம் நடக்கும் என்றவாறு; திவசம்-நாள்; சங்கம்-தமிழ்ச் சங்கம்; வங்கம்-படகு; பொங்கர்-சோலை.

27 மீட்டொடு-வீணை வாசித்தலுடன், இது பிற இசைக் கருவிகளுக்கும் உபலட்சணம்;வாழிவாய்ந்த கண்-மதர்ப்பினைப் பெற்ற விழிகள், இளமைச் செருக்கைக் காட்டுகின்ற கண்கள் என்றபடி; "வாழிமால் யானை வனமுலையா ளுக்குரிய தோழிமார்" என்புழிப் போல (செண்டலங்காரன் விறலி விடு தூது. 234); பொங்கும் - பொலிந்து விளங்குவர், இயைபுத் தொடை நோக்கிய திணைவழுவமைதி; "மருந்தே ஆயினும் விருந்தோடுண்" (கொன்றை வேந்தன் 70) பாழியர்-ஊரர் மருதநிலத்திற்குரியவர்; விசும்பு - மேகம்; மாடத் தசம்பு - உப்பரிகையாகிய கொப்பரை, உருவகம்; ஆழி-கடல்; ஓதை - ஒலி; ஏழு ஆழி ஓசையினும் மும்முரசு ஆர்க்கும் என்க; மும்முரசு - வீர முரசு, கொடை முரசு, மணமுரசு.

28. குசை–தருப்பை; போது–மலர்; தாது அவிழ்-இதழ்கள் விரிகின்ற; முண்டகம்–தாமரை; பன்னு–கூறுகின்ற; பூம்பாளை–ஒருவகை நெல்; இவ்வூரில் உள்ளவை அனைத்தும் அந்த அந்த இனத்தின் மிகச்சிறந்ததுவே என்றவாறு.

29. நல்குரவு–வறுமை; துஞ்ச–இறக்க; இந்நாட்டினர் நூறு வயதிற்கு மேல்தான் இறப்பர் என்றவாறு; கிறங்கல்–மயங்குதல்.

30. நல்லூர் என்–நல்லூர் என்கின்ற; தேட்டு – ஆசைப் பட்டு; வியன்–பெருமை; கோட்டு–கிளையில் உள்ள; வரிக்குயில் – இசை பாடுகின்ற குயில்.

31. கான–மணம் மிகுந்த; கற்ப காலம்–நீண்ட நாள்; ஒப்பு: "கருநெடும் புயல் அழகர் மருவு சந்நிதி கற்ப காலங்கள் விளங்கவே கூவாய் குயிலே" (முக்கூடற். 30), "சுகந்தமலர்ச் செழுங்கமலக் கண்ணுடையாள் சந்நிதிநற் சொர்ணமய மாய்த்துலங்கக் கூவாய் குயிலே" (கண்ணுடை. 39) ஏனம்–(சிவபெருமானின் அடியைத் தேடிப்) பன்றியாகச் சென்ற திருமால்; அனம்–அன்னப் பறவையாகச் சென்ற பிரமன்; கருப்ப நதி–சொக்கம்பட்டி மலையில் தோன்றி ஹனும நதியில் கலக்கும் ஓர் ஆறு; கருப்ப நதியில் தேவர்களும் நீராடுகின்றனராம்; திரைமோதி-அலையெறிந்து.

32. களம் கரிய–கழுத்தில் ,கருநிறத்தைப் பெற்ற; அளக்கர் – கடல்; புரவு – தானம், இங்கு ஆகுபெயராகக் கொடையாக வழங்கப்பெற்ற நிலத்தைக் குறித்து நின்றது; பூ போகம்; கமுகு–பாக்கு மரம்; மிடறு-கழுத்து; சொக்கம் பட்டி மலையில் தென்மேற்கிலிருந்து மூன்று கல் தொலைவில் ஓர் ஆழமான குகை உள்ளது. அது சுமார் 100 அடி அகலமும் 30 அடி ஆழமும் உடையது. அதில்தான் கற்பக நாச்சியம்மனுக்கும் பிற தெய்வங்களுக்கும் சந்நிதிகள் உள்ளன; தளங்கு புனல்-அசைகின்ற நீர், வினைத் தொகை.

33. தவளஒளி-வெண்மை, புகழை வெண்மையெனல் இலக்கியமரபு; மகுடபதி – முடிமன்னன் கிளை-வழித்தோன்றல்

கள்; புவனமருள்-உலக மாயை; முடங்காமல்-தடைபடாமல்; கதிர்-ஒளிக்கதிர்; இலக்கியத்தில் கூறப்படும் ஒன்பது சுவைகள் நவமணிகளின் ஒளிக்கு உவமை; தேன் மதுரம் - தேனின் இனிமை; ஒப்பு; "இசைக்கவிசொல் பாவலரும் மிகவாழக் கூவாய் குயிலே" (கண்ணுடை 41)

34. இரவை-பிச்சையெடுத்த உணவு, ஆகுபெயர். இது பிட்சாடனரை நினைந்து கூறியது; அருட்பரவை-கருணைக் கடல்; மள்ளர்-விவசாயிகள்.

35. தாமன்-பெருமையை உடையவன்; கட்டளை-வழக்கமாக விடாமல் செய்யவேண்டிய வழிபாடு; நேமகம்-பழைய மரபு; நேர்படுதல் - ஒப்பி ஏற்றுக்கொள்ளல்; வாரிப்படை - தானியமாகிய நிவேதனப்பொருள்; சேமம்-இன்பம்; ஆவல் ஆயவை - விரும்பப்பட்டவை; கோமகன்-அரசர் மகன் எம்பெருமான் என்பார் பின்னும்(40); நேமியோர்-மன்னர்கள்; போற்றி என்னும் வினையெச்சம் 38-ஆம் பாடலிலுள்ள ஆடிப்பாடிக் கொள்வோம் என்னும் தொடரைக் கொண்டு முடிகிறது; 35 முதல் 38 முடிய உள்ள பாடல்கள் குளகம்.

36. இப்பாட்டில் ஆட்டின்வகைகள் கூறப்படுகின்றன.

37. கண்டல் உணா-தாழம்பூச் சோறு; காசலை-அக்கறை; பலவேசக்காரன்-பலவேசக் கருப்பன்; கண்டு-கற்கண்டு.

38. சித்திரச் செவ்வாய்ச்சி-அழகிய சிவந்த வாயை உடையவள்; மதுப்பொங்கல்:- பொங்கலிடுவதற்கு ஒருவாரம் முன்பு கட்டிச்சம்பா நெல்லை முளைக்கட்டி ஊறவைத்து நான்கு நாள் வைத்திருந்து பிறகு உலர்த்துவர். அதற்கு இரண்டு மடங்கு வீதிவிடங்கன் என்னும் நெல்லையும் சேர்த்துக் கைக்குத்தலாகக் குற்றி அப்படியே உமியோடு வேக வைத்துச் சோறாக்குவர். அச்சோற்றில் ஒருவாரம் புளித்த பசுவின் தயிரைக் கூட்டி நன்றாகப் பிசைவர். இதனைப் பானையில் நிறைத்து இரண்டு நாள் கழித்து வடிகட்டுவர். வடிகட்டிய மதுவை ஒரு குடத்தில் நிரப்பிப் பூப்பெய்தாத குழந்தைகளோ

அல்லது மாதவிலக்கு நின்ற சுமங்கலிப் பெண்களோ தலையில் சுமந்துவந்து அம்மன் கோயிலில் படைப்பர். இது மதுப்பொங்கல் எனப்படும். படைக்கப்படும் இம் மது பொங்கி வழிந்தால் ஊர் வளம் பெறும் என நம்பப்படுகிறது; இத்தை முதல் -இன்று தொடங்கி; பாய் விலகி- இணை விழைச்சைத் தவிர்த்து, பிரமசரிய விரதத்தைக் கடைப்பிடித்து.

39, முத்து கழை வேண்டி ஒலித்த என்க; கழை வேண்டி-மூங்கிலை விரும்பி; முத்துப் பிறக்கும் இடங்களுள் மூங்கிலும் ஒன்று; எதிர் குழை - மலைகின்ற காதணி, வினைத்தொகை; இழை-அணிகலன்; பூதித்து-பரித்து.

40. கனிவு பெறும்-கருணை மிகும்: பனுவல்-நூல், இங்கு தோத்திரப் பிரபந்தங்கள்.

41. குஞ்சரம்-யானை, விநாயகர்; பண்ணவன்- கடவுள்.

42. நறவு-தேன்; தொடை-பூமாலை; அடல்-வலிமை.

43. நனி-நன்றாக; அஞ்சு-தண்டு, வில், சங்கு, சக்கரம், வாள் என்னும் திருமாலுக்குரிய ஐந்து படைக்கலங்கள், தொகைக்குறிப்புப் பெயர்; பஞ்சிருந்த-பஞ்சினைப் போன்று மிருதுவான; மஞ்சு-மேகம்; இருந்து பெய்ய-நிலையாகத் தங்கி மழை பொழிய.

44. இப்பி-கிளிஞ்சல்; கோட்டை-பரிவேடம், சந்திரனைச் சுற்றிச் சிலசமயம் காணப்படும் ஒளிவட்டம்; ஒப்பு: "நீடுமதி தன்னில்பரி வேடமிடுது" (கண்ணுடையம்மன். 63) கானம்-வானம்பாடி; பானல்-வயற்புறம்; மீனவன்-பாண்டியன்.

45. கால் அணை-வாய்க்காலில் கட்டப்பெற்றுள்ள அணை; கொங்காணி- கோரைப் புல்லால் பின்னப்பட்டுத் தலையிலிருந்து முட்டுக்கால்வரை அணியப்படும் மழைச்சட்டை; சுழுக்கு-மதகுப் பலகையாகிய சீப்பின் இடைவெளி; இரும்பு ஊசிக்கம்பு-இரும்பினாலாகிய குத்துக் கம்பு; கால்வாய், அணை ஆகியவற்றின் மதகுகளிலே மதகுப் பலகையாகிய சீப்பின் இடைவெளியாகிய சுழுக்குகளிலே தண்ணீர் வெளியேறாமல் அடைத்துவைக்க இரும்பு ஊசிக்கம்பிகள் தேவைப்படும்: நீத்தம்-வெள்ளம்; நிம்பெண்ணெய்-வேப்ப எண்ணெய்.

"இக்கரைக்காலிற் பொருநை அக்கரைக் காலின் மழைக்கு ஏமமென்றும் சாமமென்றும் நாமல்லோ போவோம் தக்கதோணி வைத்துறைபிற் சிக்கெனக் கட்டும் படல் தாழைக் குடை கொங்காணியும் வேளைக்கே வேண்டும்; பக்கமே ஊசிக் காம்பு சுழுக்குவாய்க்கிடும்; சீலைப்பந்தமும் விளக்கெண்ணெ யும் முந்தவே தேடும்'' என்னும் முக்கூடற் பள்ளின் பாடல்(36) இங்கு கருதத்தக்கது.

46. பட நாகம்-படத்தை உடைய பாம்பு; காத்த-சுமக்கின்ற; பசுபதியின்-இன் உவமஉருபு; தட-பெரிய; நாகம் காத்த-ஒலிக்கின்ற; சலதி-கடல்; தடச்சலதி, நாகங்காத்த சலதி என இயையும்; கடநாகம்-மத யானை, இங்கு கஜேந்திரன்; குடநாகம்-மேற்குமலை; குவட்டில்-சிகரத்தில்; வெளுத்து நீர்மொண்ட முகில் கருத்துக் கால் ஊன்றியது என்பது முடிபு; அரிகர புத்திரன் இந்நூலுக்குடையவராதலின் சிவபிரான், திருமால் இருவரையும் இணைத்துக் கூறினார்.

47. விசும்புக்கு இவன் ஒருவன் எனும் சுரர் நிருபன் அமைத்த பணியினால் என இயையும். சுரர் நிருபன் - தேவேந் திரன்: ஒருவன்- (இங்குத்) தலைவன்; ஒப்பு:" பாகசாதனன் ஏவல் கொண்டொரு மேகமானது படிந்துமே'' (செங் கோட்டுப்.328) ஆழிப்பொருப்பு- சக்கரவாளகிரி; படலையாய் பரந்துபட்டு; இருவர் மதலை-ஹரிஹரபுத்திரர்; தொடையல்-மலர்மாலை; மருமம்-மார்பு; பெயரின்-புகழைப்போன்று, புகழ் வெண்மையானது எனல் மரபு; குருவமணி-செந்நிற முடைய பவளம், இதுகடல் படுதிரவியம் ஐந்தனுள் ஒன்று, மற்றவை அக்கு, உப்பு, சங்கு, முத்து; கொழிக்கும்-கரையில் ஒதுக்கும்; திரை-அலை; குடதிசை-மேற்கு;அவள்-திருநாமழகி; உறழும்-நிகர்க்கும்; தனுவு-வில், இங்கு வானவில்; கிளர-தோன்ற; உருவப்பணி-நிறங்களால் சிறந்த அணிகலன்கள்; அகன்ற புரிசைக் குரிசில் நடையின் எனக் கொண்டு கூட்டுக, பெரிய மதிலையுடைய திருக்கோயிலில் வீற்றிருக்கும் அய்யனின் வாசலில் போல; முரசி-முழங்கி.

பெயரின் வெளுத்த கார் பணியினால் பொழில்விட்டு எழும்பிப் படலையாய் மேய்ந்து, கிரிமேவி, தனுவு கிளர, மின்னி, முரசி, எதிர்ந்து பொழிந்தது என்பது பொருண்முடிபு.

48. வரை-மலையில்; ஆர் வந்த-கூர்மையான; வாளி-அம்பு; அனங்கன்-உடலற்றவன், மன்மதன்; தார் வந்த சேர்க்கை-திருமணத்தால் ஏற்பட்ட கூட்டம்; தணந்த-பிரிந்த; உரைத்த-இன்ன பருவத்தில் திரும்ப வருவேன் எனக் கூறிய; கார்-மழைப்பருவம்; ஒப்பு:“கொண்மூக் கருக்கொண்டு வந்தது இன்னம் வந்திலார் நமைக்காப்பவரே” (திருவாவடுதுறைக் கோவை 287)

49. அடிக்கடி இடி வீழ்வதால் பள்ளம் இடியைக் சூடிந்து கொள்கிறதாம்; மழைவெள்ளம் மலையையே தன்னுள் அழுத்திக்கொண்டு விடுகிறது; சாதி வேங்கை-சிறந்த வேங்கை மரம்; சினை - கிளை; கோகையும் - கோங்க மரத்தையும்; களையும்-புல்லைக்கூட, இழிவு சிறப்பு; சிந்துரக் காடு-வெட்சி வனம்; சிந்துரக்கோடு-யானைத்தந்தம்; துடி-அகில்; வேத்திரம் - பிரம்பு; வதியும் வசிக்கின்ற; குடில்-குடிசை; குறவர்வதியும் குடிலை அழித்து-ஒப்பு: “குறவர் பரணையும் அவர்க்குரிய குடில் அம்பு அரணையும்...... எடுத்து” (வையாபுரிப். 56) வெள்ளம் தன்னால் ஏற்பட்ட அழிவுகளைப் பற்றிச் சற்றும் வருத்தமோ, தன்பால் வந்தடைந்த விலையுயர்ந்த பொருள்களால் சற்றும் மகிழ்ச்சியோ கொள்ளாமல் பாலை நிலத்தில் புகுந்ததால் துறவர் இதயம் போல் என்றார்; கடலை உடுத்த படியைப் பொடியைக் கொடுத்துப் புரக்கும் நாதன் என்க; பொடி--திருநீறு; படி-உலகம், ஆகுபெயராக மக்களைக் குறித்தது; வாம-அழகிய; கதியில்-நடையில்; வெள்ளத்தின் செலவிற்குக் குதிரைப்படையின் ஓட்டம் உவமை; குகனைப்பரவி-முருகன் குறிஞ்சித் திணைத் தெய்வமாதலின் அவரை வணங்கி விடை பெற்றுப் பாலையிற் புகுந்தது என்றவாறு; இதுபற்றியே, “தெள்ளு செந்தமிழ் வள்ளி கொழுநன் திருவடித் துணை பரவியே” என்று குருகூர்ப்பள்ளுடையாரும் (17), “வேலைத் தரித்த குகனைத் துதித்துப் பாலை நிலத்தில் எதிர்ந்ததே” எனச் செங்கோட்டுப் பள்ளுடையாரும் (329) கூறுகின்றனர்

குறிஞ்சிக்குரிய வேங்கை, கோங்கு, வெட்சி, யானைக்கோடு, அகில், பிரப்பங்கொடி முதலிய மலைபடு பொருள்களைப் பாலைக்குக் கொணர்ந்து சேர்த்தலின் திணைமயக்கமாயிற்று.

50. இப்பாடல் தலைவன் கூற்று; நறை-வாசனை, எதுகை நோக்கி நரை என நின்றது; தார்- மலை; கார்தேறும் போது-கார்காலம் என்று உறுதிப்படுத்தும்போது; உயிர்த்தோழி என்றது தலைவியை; ஓதிமம்-அன்னப்பறவை.

ஓதிமமே! நாதன் வெற்பில் என் உயிர்த்தோழிக்கு (அவளுடைய) கண் கார்தேறும்போது (என்) உரை அடைந்து சேருமோ எனக் கூட்டுக. மேகத்தையே தலைவியிடம் தூதாக அனுப்பிய தலைவன், "கார் காலத்தின் வரவைக் கண்டு தலைவி வருந்துவாளே, அவ்வாட்டத்தைப் போக்க மேகம் என் தூதுச் செய்தியைக் கூறியிருக்குமோ" என அன்னத்தைக் கேட்கிறான்; பிரிந்து சென்றுள்ள கணவனின் தூதாகக் கார் மேகத்தைக் கூறும் இலக்கிய மரபை, "எனதுஉயி ராகிநிற் பார்தம் இடரகலச் செம்மைப் பொருண் முற்றியான் வருமாறு முன்சென்று உரைப்பீர் ...... முகிலினமே"(திருக் கழுக்குன்றக் கோவை 290) என்பதாலும், தலைவனின் தூதாகக் கார்காலம் வந்துள்ளது எனப்பாங்கி தலைவியை ஆற்றும் அகப்பொருள் துறையாலும் அறியலாம்.

51. திரை-அலை; வெள்ளம் நீரில் இருப்பதை நிலத்திலும் நிலத்தியல் பொருள்களை நீரிலுமாக மாற்றுகிறது; சூரை-காஞ்சூரை மரம்; காரைத்தூர்-மழுக்காரைச் செடியின் புதர்; சுரம்-பாலை நிலத்தில் செல்லும் வழி; வள்ளும்- துண்டுத் துணியையும் (தலையில் போர்த்துக்கொள்ள); புரம்-தோல், இங்குச் செருப்பு; தரிக்கிலார்- (வெம்மையைத்) தாங்க இயலாதவர்கள்; உதிர்-முத்தக்காசு, கோரைக்கிழங்கு எனப் படும்; மருந்து-கொடிகள், ஓடதி; வெதிர்-மூங்கில்; இருந்தை-கரி; உடை-குடைவேலமரம்; அவாறு-அவ்வாறு; கயற்கட் கவுரி- அங்கயற்கண்ணம்மை; வள்ளம்- சூதாடுகருவி, இது நகிலுக்கு உவமை; குயம்-நகில்; ஒல்லையில்-விரைவாக; சாயும் பண்பால்-இறங்குதல் போல; முல்லை-காடும் காட்டைச் சார்ந்த பகுதியும்.

பாலைக்குரிய தெய்வம் காளி எனினும் இப் பள்ளாசிரியர் மீனாட்சிதாசன் ஆதலின் அங்கயற் கண்ணம்மையைத் தொடர்பு படுத்திக் கூறுகிறார்.

52. மால்வரை-பெரிய மலை; அன்றில்-கிரவுஞ்சப் பறவை; ஒன்றிக்கொடுங்கை உதவும் — தானே வலியவந்து கைகளை உட்புறமாக வளைத்து இறுகக் கட்டித் தழுவும், "புன்மூரல் கொண்டு சொக்க வெலுவாள் கொடுங்கை கோத்தாள்" (ஆண்டுகொண்டான்வண்ணம் கலை 7) "வலிய அணைந்த சுகம்போலே" என்னும் பஞ்சரத்னத் திருப்புகழ்த்தொடரின் கருத்தும் இது; கார் விவசாயத்திற்கு உதவுவது மட்டுமன்றிப் பள்ளியுடன் இணைந்து வாழவும் துணை புரிகிறதாதலின் பள்ளன் நன்றி பாராட்டுகிறான்.

53 பிரளயம்-வெள்ளம்; மூட்டை-மிகுதி, பனச மூட்டை என்பார் பின்னரும் (55); குல்லை - வெட்சி, துளசியும் ஆம்; புருவைப்பறழ் - ஆட்டுக்குட்டி, பறள் என்றது பேச்சுவழக்கு; பாடி-முல்லை நிலத்து ஊர்; துருவை-செம்மறியாடு; துரியம்-பொதி எருது; பரிகம்-மதில்; தருக்கு - இறுமாப்படைகின்ற; ஞமலி-நாய்; முடி-மொக்கு; சிமிலி - பூளைச்செடி; குருந்து-குருந்தமரம்; அளித்து-சினந்து; பொதுவர் - இடையர்; இரிய-அஞ்சும்படி; நறவு-தேன்; அளி-வண்டு; துளபம்-துளசி; துன்ன-நெருக்கமாக; வனையும்-ஒப்பனை செய்துகொள்ளும்;முகுந்தன்-திருமால்: இவர் முல்லைத்திணைக் கடவுள்; ஒப்பு: முல்லை வனத்துட் புகுந்து குல்லை முகுந்தனைத் தொழுது அகன்று" (குருகூர்ப்பள்ளு. 18).

54 படி-உலகம்; வாரணப் பசும்பொற் கொடி- அழகிய சேவற்கொடி, இது ஐயனாருக்குரியது; துடிசேர்மருங்கு-உடுக்கையின் நடுவிடம் போல் சுருங்கிய இடை; நாம் அற்று-நம்மைப்பற்றிய நினைவே முற்றிலும் அகன்று; அவளாக-தலைவியாகவே; தலைவியின் நினைவில் தலைவன் தன்னையே முற்றிலும் இழந்துவிட்டான்; இத்துறையைத் தலைவியின் உருவெளியைத் தலைவன் காண்டல்" எனினுமாம்.

55. தாரு-தார், குலை; அரம்பை-வாழை; வரம்பு-வரப்பு; பனசம்-பலா; வனசம்-தாமரை; தோடு-இலை: ஊறுநீர்:ஊறுகின்ற நீர், ஊற்று; கூவம்-கிணறு; பசு ஏறு-பசுவும் எருதும்; தாவம்-காடு; கழை-கரும்பு; பாங்கு-அருகே; சாலி-நெல்; ஆறு நீளும்-ஆற்றைப் போல் நீண்டு செல்லும்; முகிற்காரு-மேகம், ஒருபொருட்பன்மொழி; தண்டலை-சோலை; இடம் ஒழித்துக் கொண்டு அலைமடுவிற் போய் என்க; அலைமடு- அலைகின்ற குளம், வினைத்தொகை; ஈற்றடி தெளிவாக விளங்கவில்லை.

56. கொழிக்கும் - (எல்லாப் பொருள்களையும் அலைகளால்) ஒதுக்குகின்ற; கடல்வாய்க் கொழுநர்-கடலில் மீன் பிடிக்கச் சென்ற தலைவர்; நுளைச்சியர்-நெய்தல்நில மகளிர்; சுழிக்கும் குறி-தலைவனைப் பிரிந்த தலைவி பார்க்கும் குறியாகிய கூடல்; "கூடற் பெருமானைக் கூடலார் கோமானைக் கூடப்பெறுவேனேல் கூடென்று கூடல்இழைப்பாள்போற் காட்டி" (பெருந்தொகை 668); பரதவ மகளிர் கடற்கரையில் பிரிந்த தம் கணவரை நினைந்து கூடல்இழைக்கின்றனர். அவ்வட்டங்களை அழிப்பதற்காகவோ நீ வேகமாகப் பாய்கிறாய் என வெள்ளத்தை நோக்கிக் கேட்கப்படுகிறது. கவிக்கூற்று.

57. பார மகரம்- பெரிய முதலை: பாய் அலை-பாய்ந்து வருகின்ற அலைகளை உடைய கடல், வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; முதலை தேடி வாழும் கடல் என்றவாறு; தீரம்-கரை; நகரமூடு என்புழி இசைநோக்கி அத்துச் சாரியை கெட்டது; பாரவும்-வணங்கவும்; சுவை காழும்-உருசிமிக்க; வள்ளம்-சிறுபடகு; காயல்-கழிமுகம்; அள்ளல்-சேறு; கார்-ஆவணி, புரட்டாசி மாதங்களில் விளையும் நெல்; கார் என்பதுடன் எண்ணும்மையைக் கூட்டிக்கொள்க; பூரி-நிறைந்து; நுளையர்-பரதவர்; கோரி-கொடுமையை (கோரம்) உடையது, இங்கு வெள்ளம்; ஆழி-கடல்; அகம்-தன்னுள்ளே; ஊழி-பூமி; பிரிந்து அதன் உடலில் ஓடி என்க: உயிரின்-உயிரைப்போலே; "ஓதிய உடம்புதோறும் உயிர்என உலாயதன்றே" என்றார் கம்பரும் (பால.ஆறு,20).

வெள்ளம் நகரத்தூடு போய், வாளை ஏறவும், தாழை பாரவும் காயலிற் புகுந்து வளம் அநேகமும் பழம் அநேகமும் அள்ளலோடு காரும் வாரி வழித்துக் கோரியாய் ஆறிஅகம் கொள்ள ஊழி பிரிந்து அதன் உடலில் ஓடிக் கடலில் ஓடி உயிரின் பரந்தது என்பது பொருள் முடிபு.

58 மேதி-எருமை; கவையடி-பிளவுபட்ட குளம்பையுடைய கால், இங்கு அதனால் ஏற்பட்ட பள்ளத்தைக் குறித்து நின்றது; கிள்ளாய்! மாரன் புறம் காட்டக் காதலன் தோள் காட்டும் தார் தருவன் எனச் சொல்லுதியே என்பது முடிபு.

இது தலைவி ஆற்றியிருக்குபடி நல்லவார்த்தை கூற வேண்டுமெனத் தோழி கிளியை வேண்டியது; அல்லது தலைவியே வேண்டியது எனினுமாம்.

59 கருஞ்சைமலை-கருஞ்சிவனப்பேரி மலை; செல் ஊர் புரிசை-மேகங்கள் தவழ்கின்ற மதில்; தளும்பு-அசைகின்ற அகடு-வயிறு; கடலின் அகடு குலையப் புகுந்து- ஒப்பு: "கடலின் உதரங்கீறி அதிரும்நீர்" (முக்கூடற்.50) "அக்கடல் அகடு கிழியப் புகுந்ததே" (திருமலை. 63) அன்றே-அப்பொழுதே; கயம்-அகழி; துலை-மதகு; குளிக்கும்-அசையும்; பரவை-கடல்; உலை-கொல்லன் உலையில் உள்ள நெருப்பு; குரவை, உளுவை கெளிறு, வாளை, கசலி-மீன் வகைகள்; கற்பக நதி-கருப்பாறு.

60. காலவெள்ளம்-உரிய பருவத்தில் பெருகும் வெள்ளம்; அருள் உவரி-கருணைக்கடல்; பரை-இறைவி; வரை-இங்குக் கருஞ்சைமலை; பணை-பருத்த; முள்அரை-முள்ளினை உடைய தாள்; அரைச் செங்கமலம் என இருத்தற்பாலது இசை நோக்கி விகாரம் பெற்றது; மசரி, திருக்கை, வெண்ணெய்ச் சாளை, ஆறல்-மீன் வகைகள்; மதவு-மதகு, பேச்சுவழக்கு.

61. ஒண்கண்-ஒளிமிக்க விழிகள்; புனல்-தண்ணீர்; ஒப்பு: "வீறுதரும் பண்ணை விசாரிப்பான் வந்தானே"(முக்கூடற். 52) "விசாகனார் பண்ணை விசாரிப்பான் வந்தானே' (வையாபுரிப்.69)

62 கோளி மயிரில்-கோழியின் உரோமங்களைப் போல; சிலிர்த்த-நேராக நிற்கின்ற; தேளி-ஒருவகை மீன்; வீசை - மீசை; காளி-நூலாசிரியரின் காலத்திருந்த சலவைத் தொழிலாளியின் பெயர் போலும்; வெளாவி-வெள்ளாவி, துணிகளைக் கொதிக்க வைத்தல்; தாளி-தாழி, பெரிய பானை, ஒப்பு: "மூரலிட்ட தாழிவயிறும்" (வையாபுரிப். 70); ஊளை...நாசியும் "ஊளை நாசியும்" (மேற்படி) "சீறு சளியால் பெருத்த துள்ளு நாசியும்" (பறாளை.80) வாளி-காதணி; பூரும்-பொலியும்; ஏறுகாது-ஒப்பு: "வேறுகீறி ஒட்ட வைத்த ஏறுகாதுமாய்" (முக்கூடற். 53); ஏத்தாப்பு-அங்கவஸ்திரம், ஏற்றாப்பு (12); சூலைவந்து முடம்-ஒப்பு "வாதஞ்சேர் நெட்டைக் காலும்" (தண்டிகைக்,107) "வாதம்பிடித்த பொற்காலனாரே" (கதிரை. 53) கிந்து நடை - நொண்டி நடத்தல்; கிந்துக்கால் பண்ணைக்காரன்" (திருமலை. 87); மேளி-மேழி; பாளி-பாழி; அகன்ற தூபி-கோபுர கலசம்; சிகரி-கோபுரம்; வானளாவிய கோபுரத்தைப் பெற்ற நல்லூர் என்றவாறு.

63. குழகன்-இளையவன்; இரவி-சூரியன்; கதிரின்-கிரணத்தைப் போல் ஒளிவீசுகின்ற; புளகமுறு-புடைத்தெழுந்த; பொற்பு-அழகு; முளகி-ஒருநெல்; தூணி-நான்கு மரக்கால் ஒப்பு: "மாறனார் உண்மைப் பண்ணைக் காரனார் தம்மைக் காண வாரும் என்று அவலும் கோழியும் நேருடன் எடுத்தே" (குருகூர்ப்.27), "வட்டமிட்ட கோழி ஒரு பெட்டி அவலும் பந்தியாகவைத்து" (வையாபுரிப்.71) "பருங்கோழியும் அவலும் வைத்துக் கும்பிடுகிறோம்" (திருமலை.71)

64. தேளிவீசை-தேளி மீன் போன்ற மீசை; இப்பாடல் பெரும்பாலும் 62ஆம் கவியைப் பின்பற்றியது.

65. பகல் போதைக்கு அத்தை என்றதால் இரவில் காமக் கிழத்தி என்பது குறிப்பு; இன்னா-தீயவை; பண்ணைக்காரர் வெற்றிலை போடாதவர். "பாக்கிலை தின்று அறியாத வாயினழகுப் பண்ணைக் காரனாரும் வந்து தோன்றினாரே" (திருவாரூர்ப். 32); தேட்டு-செல்வம், இளைய பள்ளி குடும்பனின் செல்வத்தை விரும்பிவந்தவள் என்பது குறிப்பு; அகப்பொருளின்

வண்டோச்சி மருங்கணைதல் என்னும் துறையைஎண்ணிநகைச் சுவையாகப் பண்ணையார் தன் தாடியில் பேன் அரிக்கிறது என்று பள்ளியர்பால் நெருங்குவதாகப் பாடுகிறார்; என்னைக் குறித்து-தன்னோடு கள்ளத்தொடர்புடையதாகக் கூறி.

66. உள்ளநடை எண்ணம்; வெப்பம்-பொறாமை; பள்ளன் நடை-குடும்பனின் ஒழுகலாறுகள்.

67. பரமார்த்தி-சுயநலம் இல்லாதவன்; முக்கூடற்பள்ளில் தன் மனைவியைப் பாதுகாக்காததால் பள்ளனைப் பண்ணையார் பரமார்த்தி என்கிறார். ''காத்திராத பள்ளனைப் பரமார்த்தி என்பாராம்'' (முக்கூடற். 54); அதே கருத்து இவ் விடத்தும்; புண்ணிலே தரும் கண்-புண்ணின் திறந்தவாய்; பூரினால் என-அடைப்பதைப் போல; வீறு-வெறுப்பு; குடும்பன் இளையவள் மேல் தீராத மோகம் கொண்டுள்ளான், அவனுக்கு அவளே எல்லாம் என்பது கருத்து.

68. பண்டாரச் செட்டி-பண்டகசாலைப் பொறுப்பிலுள்ள செட்டியார்; மாறு-பகைமை; கூறு-தன்மை; கம்பு-தாற்றுக்கோல்; ஒப்பு: ''கைக்கோலுங் கைதீண்டான் காலணை பாரான்'' (வையாபுரிப்.75) காறு பாறு-கட்டளை விசாரிக்கும் அதிகாரி.

69, இளம்கோவை-முற்றாத வீழிக்கனி; அந்நியாயம்-அந்த வழக்கு, பள்ளனின் அநியாயம் என இரட்டுற மொழிதல்; பொங்கு அழல், ஆர் அழல் என்க; காலல்-கொழுந்துவிட்டு எரிதல்; அங்கே மூத்த பள்ளி தனித்து ஓதும் அந்நியாயம் கேட்டதற்பின் (பண்ணையார்) சினந்து, எங்கே எனக் கேட்க, இளையபள்ளி சொல்வாள் என்பது முடிபு.

70. காலணை-வாய்க்காலில் உள்ள மதகு; நிசி-இரவு; தரியான்-வீட்டில் வாளா இரான்; இளையபள்ளி தான் இளம்பிராயத்திலேயே பள்ளனால் முறைப்படி திருமணம் செய்து அழைத்துவரப்பட்டவள் என்பதையும், வெறும் காமக் கிழத்தி அல்லள் என்பதையும் வலியுறுத்துகின்றபோதே குடும்பனின் கடமை உணர்வும் மிக மேலானது என்கிறாள்; எனினும்,

தொனிப்பொருளாக அவன் தன்னையே சுற்றித்திரிந்துகொண்டுள்ளான் என்பதையும் கூறிவிடுகிறாள், கால் அணையைப் பிரியான்-அழகிய படுக்கையைவிட்டு அகலான்; நிசி தோறும்-ஒவ்வொரு இரவிலும்; அணையில்-கலவியுள்; வெள்ளம்-சுரத நீர்; முன்றிலும்-(அறையை விட்டு வீட்டின்) வெளிப்பாகத்திற்கும்; தலை வெள்ளி முளைத்தாக்கால் - தலை முழுவதும் நரைத்துக் கிழவனான பின்பே, அதாவது காம உணர்வுகள் மாய்ந்த பின்னரே; பள்ளனைக் கட்டுப்படுத்துதல் கடினம் என்றவாறு.

71. வழலை-ஒருவகை நச்சுப்பாம்பு; வளவு-வீடு; சடைந்திருப்பது-ஓய்ந்திருத்தல்; மடை-மதகு; புனல்-தண்ணீர்; தொல்லை-இங்கு வேலைப்பளு; அளவு சேராதவரை-செயல் திறமையில் தனக்கு இணையாகாத பிற பள்ளர்களை; அயிந்தே-ஐயா; பாம்பு முதலியவற்றிற்கும் அஞ்சாமல் வயலில் நீர் பாய்ச்சுகிறான். வீட்டில் சற்றும் ஓய்ந்திருப்பது இல்லை. மற்றவர்கள் அனைவரும் அளவாகப் பணிபுரிய இவன்மட்டும் அவர்களைவிட்டுப் பிரிந்து, நல்லுணவும் உறக்கமும் இல்லாமல் அஞ்சியஞ்சி உழுதொழில் செய்கிறான் என்றவாறு; இங்கும் பள்ளனின் உண்மை நிலை தொனிக்கிறது. படம்-இளையாள் அல்குல்; வாளை வயல்-ஒலி ஒற்றுமையால் வாழை வயலாகிய தொடைகள்; அளவு சேராத வரை-அடங்காத நகில்கள்; கோவைப் பழம்-உதடுகள்; உளவிலே-இரகசியமாக; இவற்றை ஏற்றபெற்றி விரித்துக்கொள்க.

72. வித்தை கற்ற-ஒப்பு: "திசைபோன சூதுகற்ற தென் மருதூர்ப் பள்ளி" (முக்கூடற். 61) தத்தை-கிளி; மருட்டும்-ஏமாற்றும்; பத்தை உற்ற-பல வளங்களையும் தன்பாற்பெற்ற என்ற அளவில் நின்றது; எத்தை-ஏமாற்றுவதை.

73. சைவலம்-பாசி, கூந்தலுக்கு உவமை; கருங்குழல், சைவலக்குழல் என்க; இனிக் கருஞ்சைவலம் என்றே கொண்டு இல்பொருளுவமை யாக்கினும் அமையும். கருஞ்சை வல நதி-கருஞ்சைமலையிலிருந்து வரும் வலிய ஆறு; மாறாட்டம் பண்ணாமல்-1) வறுமையில் தடுமாறாமல்2) ஏமாற்றாமல்;

கார்நெல்-கார்காலத்தின் நெல்; அரைப்பணம்—1) இடையில் உள்ள பாம்புப்படம் போன்ற அல்குல்; "ஐந்து பொன்னும் வாங்கார் அரைப்பணமே போதும் என்பார்" (கூளப்பநாயக்கன் விறலிவிடு தூது267) ஒரு பணத்தில் பாதி (அந்நாளைய இரண்டு அணா).

74. தேட்டுக்காரன்-வருமானம் உள்ளவன்; குத்திரம்-வஞ்சகம்; உத்திரம்-மறுமொழி; பத்திரம் பண்ணினது-கண்ணில் படாமல் ஒளித்து வைத்தது; என-என்று பண்ணையார் சினந்து கூற; அல்லடா இத்தனை போது-நீ வெளியேவர இத்தனை நேரமாயிற்றோ என்றவாறு, இதுவரை இருட்டோ? இப்போதுதான் விடிந்ததோ என்றவாறுமாயிற்று; என்றார்-பண்ணையார் கேட்டார்.

75. அவன் - பண்ணையார்; அடக்கமிட்டு-மொத்தமாக; வேறொரு பொருளையும் மறைத்து வைத்து என்பது தொனி.

76. காசலை-அக்கறை; வேளமூர்த்தி-யானை வாகனத்தை உடைய அய்யனார்; பாந்தள்-பாம்பு; கேளல்-கேழல், பன்றி, மருப்பு-கொம்பு; திருமாலாகிய ஆதிவராகத்தின் கொம்பு, நிலத்தைக் கீறி, அதனைச் சுமந்துள்ள ஆதிசேடனின் முடியையும் கடந்து இறங்கிற்று என்றவாறு; தான் உழவுப் பணியை முடித்து விட்டதை இவ்வாறு மிகைப்படுத்திக்கூறுகிறான்; ஒப்பு: "உழவுதான் ஒருபன்றி உழும்தரை ஒன்று அல்லாமல் இரண்டு எனக்கில்லை" (முக்கூடற்.67).

77. சாய்வு இல்லாத—1. தரம் குறையாத 2. தொங்கி விடாமல் பூரித்துள்ள; சொரி குரும்பை-ஒரு வகைநெல், காதலனால் வாஞ்சையுடன் சொரியப்படுவதும், தென்னங் குரும்பையைப்போன்றதுமான நகில்; ஒப்பு: "சொலவொணாத் தெய்வ தாசிகளுக்கே சொரிகுரும்பை விற்றார் பலர் ஆண்டே" (முக்கூடற். 68). தஞ்சிப் பள்ளியள்-தஞ்சி எனப் பெயர் பெற்ற பள்ளி; குரும்பை-ஒருவகை நெல்.

78. மணல்வாரி-ஒருவகை நெல்; அளறு-சகதி; கருஞ்சூரை-ஒருவகை நெல்; தொக்கிலே-எளிமையாக; கையாடிக்

கொண்டான்-திருடிக் கொண்டான்; இனித் துண்டமாகக் கருஞ்சூரை இரண்டையும் செட்டி தொக்கிலே கையாடிக் கொண்டான் எனக் கூட்டிக் கரியநிறத்தினனான சூரபன்மன் (மயில், சேவல் என்ற) இரு பகுதிகளாக வர எளிமையாக முருகன் (ஊர்தியும் கொடியுமாக) வசப்படுத்திக் கொண்டான் என்பது தொனி; ஒப்பு— "ஈடிலாக் கருஞ்சூரை முத்தையர் இரண்டு புள்ளுக்கும் பங்கிட்டுப் போட்டார்" (திருமலை. 96)

பாரக் கடுக்கை-ஒருவகை நெல்; முற்காலத்தில் தன் மாமனாராகிய தக்கனைத் துன்புறுத்திய சிவபெருமான் நிறையக் கொன்றை மலர்களை வாரி அணிந்து கொண்டார் என்பது சிலேடைப் பொருள். இளமையில் தன் தாய்மாமன் கம்சனை வாட்டிய திருமால் (கண்ணன்) கனமான (கோவர்த்தன) மலையைப் பெயர்த்தெடுத்து (குடையாகச்)சுமந்தான் என்பதும் மற்றொன்று. அடுக்கப்பட்டது அடுக்கல் என்பது போலக் கடுக்கலை (உயருதல்) உடைய மலை கடுக்கை எனப்பட்டது.

மலை முண்டன்-ஒருவகை நெல்; சிறை-மதிற்சுவர், இறகு; மலை முண்டன் நெல் மதிலருகே திண்டுபோல் கிடக்கும் என்பது நேர்பொருள்; சிலேடையில் மலைமுண்டன் எல் எலாம் எனப்பிரிந்து, மலையாகிய முரடன் (கரடுமுரடான மலை) நாள் எல்லாம் இறகுகள் அரியப்பட்டுப் பறக்க முடியாமல் விழுந்து கிடக்கும் எனப் பொருள்படும். இந்திரன் பண்டைக் காலத்தில் மலைகளின் இறகுகளை வெட்டி விட்டான் என்பது புராண வரலாறு.

79. சங்கம் ஏறும்-தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றப்படும்; புகழும் சார்வும் வேண்டி என உம்மைகளைக் கூட்டுக; வடகரையான்—1) வடகரை என்றழைக்கப்படும் சொக்கம்பட்டிச் சமீன்தார் 2) வட எல்லையாகிய கயிலாயத்தில் உள்ள சிவபிரான்; ஆனைக்கொம்பன்-1) ஒரு நெல் வகை 2) விநாயகர்; சிவபெருமானுக்குப் புகழும் தலைமையும் வேண்டி அய்யனார் விநாயகரை அளித்தார் என்பது சிலேடை; செந்தாளை-1)ஒரு நெல் 2) ஒரு மலர்; ஒருபூ-ஒரு போகம்; விரை-விதைநெல்; அம்பாரம் - குவியல்; அழகிய செந்தாழை செழித்து அதில்

ஒப்பற்ற மலர்கள் தோன்றி அவற்றின் நறுமணம் முழுவதும் திருநாமத்துச் செல்வியம்மனின் அழகிய தனபாரங்களில் விளங்கும் என்பது தொனி; செந்தாழை நெல்லுக்கும் மலருக்கும் செம்மொழிச் சிலேடையாவதை, "வளமைசேர் வையாபுரிக் குளத்திலே மதகடியிற் செந்தாழை பயிராச்சு" என வையாபுரிப் பள்ளிலும் காணலாம் (90).

80. ஆலம்–ஆலகால விடம்; கண்டன்–கழுத்தை உடைய வன், சிவபிரான்; சூலபோரன்–ஒரு மாடு, முத்தலைச் சூலத் தால் போர் புரிபவன், சிவபிரான், இப்பொருளில் பகரமெய் விகாரத்தால் கெட்டது; இரண்டு பேர்–திருமால், பிரமன்; காலகால்-1) வாதநோய் கொண்ட கால்களை உடைய ஒருமாடு 2) (காலனுக்கு) காலனாகிய திருவடிகளை; மாலைத்தலை–1) நோயுற்ற தலையைஉடைய மாடு 2) (கொன்றை, ஆத்தி முதலிய) மாலைகளை அணிந்த தலை (சிவபிரானுடையது); நீலமால் எருது–1) கரிய பெரிய காளை2) நீலவண்ணத் திரு மாலாகிய ஏறனையவன் (சிவபிரானின் ஊர்தியாகிய ஏறும் திருமாலே எனலாம்). வடம்-1) கயறு 2) ஆலிலை; பெரிய எருது கயற்றைப் பார்த்த மாத்திரத்தில் படுத்துக் கொண்டு விடும் எனவும், திருமால் ஆலிலையில் படுத்துக் கொள்வார் எனவும் இருபொருள் காண்க.

81. ஆரிய–சிறந்த; நான் ஈட்டிய செல்வமாக விளங்கும் சிறந்த எருது என்றபடி; இரண்டு கடம்கொண்ட ஏறு–மத்த கத்தை உடைய ஆண் யானை; ஆரிய காளைக்கு யானையும் நிகராகாது என்பது கருத்து; கடங்கொண்ட ஏறு என்புழிக் கடனுக்கு வாங்கிய எருது எனத்தொனி; அவ்வளவு சிறந்த மாடு இப்போது அடிமாடாகத் தான் உள்ளது என்றபடி; மூவர்–பிரமன், திருமால், உருத்திரன்; நடுமாடு–இடைப்பட்ட வரும் செல்வம் போன்றவரும் ஆகிய திருமால்; சிரைபட்ட வெண்டலை என்று – குடுமியாகச் சவரம் செய்யப்பட்ட வெண்மையான தலையின் ஒளியையுடைய பிரமன்; என்னை — என் + ஐ, என் தலைவன், சிவபெருமான்; பறக்கும்–இங்கு பிரமவிட்டுணுக்களுக்கு அகப்படாமல் வளர்ந்து கொண்டே

இருப்பார் என்பது கருத்து; நடுமாடும் வெண்மையான ஓர் எருதும் தம்முள் கூடிக் கொண்டு என்னைப் பார்த்த உடனே ஓடிப்போகின்றன என்பது பள்ளன் கூற்று.

82. புல்லை—1) வெண்மை கலந்த சிவப்பு நிறம் 2) திருப் புல்லாணி என்னும் திருப்பதி; பதங்கன்-1) ஓர் எருதின் பெயர் 2) கருடன்; புல்லை நிறங்கொண்ட பெரிய காளையாகிய பதங்கனை ஏரில் பூட்ட முயன்றால் எகிறித் தாவியோடும் என்பது கருத்து. திருப்புல்லாணியில் எழுந்தருளியுள்ள திருமால் கருடவாகனத்தில் செல்லக் கருதிய மாத்திரத்தில் வான் வழியே அவரைத் தாங்கிப் பறக்கும் என்பது தொனி; தழுவணை -1) ஒருமாடு 2) அணைக்கும் தலையணை; "பட்டுத் தலையணையும் பாரத் தழுவணையும்" (செண்டலங்காரன் விறலி விடு தூது 265); வெண்மையான தழுவணை என்னும் மாடு பகல் நேரங்களில் வராமல் இரவில்தான் பட்டியை யடையும் என்றவாறு. அணைத்துப் படுத்துக் கொள்ளும் வெள்ளைத் தலையணை இரவில்தான் பொருந்தும் என்பது; தொனி.

மிகக் கருப்பான பெரிய காளையை விரட்டிவிட்டு நல்ல சிவந்த நிறமுடையதும் உள்பக்கமாக வளைந்த கொம்பை உடையதுமாகிய ஓர் எருது கடற்கரைப் பக்கம் சென்றுவிட்டது என்னால் ஒன்றும் செய்ய இயலவில்லை என்றவாறு; இனிச் சிலேடையாக :- இருள்நிறப் பாரிக்காளை-கரிய நிறங் கொண்ட அரக்க வீரர்கள், "பாபநிறத்தின் தாருகவர்க்கம்" என்பார் அருணகிரிநாதர்; செல்ல செம் மறை—அன்பிற்குரிய சிவந்த மான், இங்கு மானின் மகளாகிய வள்ளிநாயகி; உள்—நினைக்கின்ற, காதலிக்கும்; கொம்பன்—யானையைப் போன்ற முருகன், வள்ளிக் கொடிக்குக் கொழு கொம்பாக இருப்பவன் எனினும் ஆம்; கடற்கரை-திருச்செந்தூரைக் குறித்தது. முருகப் பெருமான் அசுரக்கணங்களை அழித்துவிட்டுச் செந்திலில் கோயில் கொண்டுள்ளார் என்பது தொனிப் பொருள்.

83. கானம்-நறுமணம்; கனக-பொன் நிறம்பெற்ற; பூமகள்-திருமகள்; நானம் மீறிய மேழி - ஆழ உழுவதால் நன்றாகச் சேற்றில் முழுகுகின்ற கலப்பை; புவி நாட்டும்—

உலகைக்காப்பாற்றும். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் ஆதலின் வேளாளர்களைப் புவி நாட்டும் கங்கைக் குலத்தோர் என்றார். மேழிக்கொடி அவர்கட்குரியது. "மேழிக் கொடியொடு வெண்ணிறக் குடையும் காவி மாலையும் கங்கைசே யினர்க்கே" என்பது அறுவகை இலக்கணம் (நூற்பா 593); ஒப்பு: "மேழியை, விந்தையாகிய வேளாளர் எங்கள் விருதென்றே கொண்டு போனார்" (செங்கோட்டுப். 427, 428).

ஆன பாலும் முன் ஈரும் கலப்பை அறிந்து எடுக்கும் மனத்தையும் காணேன்-வாய்க்கப்பெற்ற இடத்தை முன்னால் பிளக்கின்ற கலப்பைகளுள் சிறந்ததைத் தெரிவு செய்து எடுக்கும் உள்ளம் இல்லாதவன் ஆனேன். இனி இதனையே, ஆன பாலும் முன்நீரும் கலப்பை அறிந்து எடுக்கும் அனத்தையும் காணேன் எனப்பிரித்து, பாலும் நீரும் தம்முள் கலந்த கலவையை மீட்டும் தெரிந்து பிரித்தெடுக்க வல்ல அன்னப்பறவை இருக்குமிடம் தெரியவில்லை எனச் சிலேடைப்பொருள் காண்க. தன் தகுதியை அறிந்து பண்ணையார் தன்னைச் சிறப்பிக்கவில்லை எனக் குறிப்பாலுணர்த்துகிறான்; ஈற்றடி தெளிவாக விளங்க வில்லை.

84. மண்-நில உலகம்; வளர்ந்த-சிறப்புடன் விளங்கிய; வல் வாயன் ஒருவன்-வாயிலே வலிமை உடைய (நச்சுப்பல்) பாம்பாகிய ஒப்பற்ற ஆதிசேடன்; இரும் பை-பெரிய (பாம்புப்) படம்; சேடனுக்கு ஆயிரம் தலைகளாதலின் இவ்வாறு கூறப் பட்டது; அவன் உலகைத் தலையிற் சுமக்கிறான் என்பது மரபாயினும் சுமத்தல் தொழில் பற்றித் தோளிற்சுமக்க எனப் பட்டது; இனி வல்வாயன், இரும்பு என்பனவற்றிற்கு முறையே வம்பு செய்பவன், அரிவாள் எனப் பொருள்கொண்டு ஒரு வல்வாயன் ஆயிரம் அரிவாள்களையும் கொண்டு போய் எங்கோ புதைத்து விட்டான் என்க; வடம்-கயிறு. 1) ஏர்பூட்டும் கயறு 2) பூணூல்; கேய-வேதியர்-வேதங்களைப் பாடுகின்ற அந்தணர்; நிலா வளர்நாள்-வளர்பிறை; சஞ்சுவம்-முயற்சி; கயிறு அந்தணர்களிடம் உள்ளது. வளர்பிறையில் நல்ல நாள் பார்த்து ஏர் பூட்டவேண்டுமென்றால் கயிறு இல்லாமல் நான் என்ன செய்வேன் என்றபடி.

85. இப்பாடலின் தொடக்கம், "ஏது செய்வேன் என்று ஓதிய பள்ளன்றன் ஏய்ப்புக் கேட்டந்தப் பேய்ப்பண்ணைக் காரன்" எனும் முக்கூடற்பள்ளின்(75) அடியை நினைவூட்டு கிறது; எத்து-ஏமாற்றுப் பேச்சு; முதல்-நெல், மாடு முதலிய முதலீட்டுப் பொருள்; அங்கைதான்-உன் வசத்தில்தான் (கைகளில்தான்); புறத்து-வெளியே; கஞ்சம்-தாமரை; துஞ்சிய-துயில்கின்ற. கஞ்சம் மீதனம் துஞ்ச அவாவும் என்றார் முன்னும் (20).

86. மேருஆன-மேரு மலையைப் போன்ற; கால்-வாய்க் கால்; கயம்-குளம்; தலை என்னும் ஏழன் உருபை ஆறு முதலிய மூன்றனொடும் கூட்டுக; ஏறு-நீரை எதிர்த்துச் செல்கின்ற; ஈரடிக் கண்ணிகளானமைந்த இச்சிந்தில் இன்னமும் ஒரு கண்ணி இருந்திருக்க வேண்டும்.

87. கற்பார்-கற்பினை உடைய தேவியர், பூரணை புட்கலை; பள்ளன் தோன்றா எழுவாய்.

88. நான்கடிகளிலும் ஆன பகுதிப்பொருள் விகுதி; கான்-நறுமணம்; கவின் ஒழுகும்-அழகிய; கோனான்-இடையன்; விரி புரவு-இடமகன்ற வயல்; பட்டித்தலைவன்-கிடைகளுக்கு உரியவன்.

89. சந்து-இடுப்பு; கிந்து-நொண்டுகின்ற; சட்டமாக-சம்பிரதாயப்படி; பட்டை நாமம்-ஒப்பு: "பட்டை நாமங்கள் எங்கும் பழுக்கவே போட்டு" (வையாபுரிப்.109) அந்து வைத்து-(கிழிந்து போனதால் மறுபடியும்) தைக்கப்பட்டு, ஒப்பு: "வேறு கீறி ஒட்டவைத்த ஏறுகாதுமாய்" (முக்கூடற். 53); மந்தம் கொண்ட-கேட்கும் திறன் குறைந்த; கந்து - (நாளுக்கு நாள் கெடுக்கின்ற; அய-ஆடு, இங்கு ஆட்டு உரோமத்தாலான என்பது பொருள்; சிந்துர மரம்-புளியமரம்; திட்டி-மகிழ்ச்சி; பட்டி-பட்டியில் அடைத்தற்குரிய ஆட்டுமந்தை; இந்து முடி ஈசர்-சந்திரசேகரர்; நந்துசெறி-சங்குகள் நிறைந்த; ஈசர் மைந்தனுக்குரியதும் நந்து செறிந்ததுமான பண்ணை என்றவாறு.

90. திங்கள் - சந்திரன்; முகலிங்கக்கோன் - கரிவலம்வந்த நல்லூரில் கோயில் கொண்ட சிவபெருமான்; சினை ஆடு—

1)கொம்புகள் அசைகின்ற 2) சூலுற்ற ஆடு; களவு-1) களாமரம், கரிவலம்வந்த நல்லூர்த் தலவிருட்சம் 2) திருட்டு; மாதத்திற் கொருமுறை வருகின்ற சடையன், முகலிங்கக் கோனார் ஆகியவர்களிடம் சினையாடுகள் திருட்டுத்தனமாக வைக்கப் பட்டுள்ளன என்கிறான். திருக்கருவையில் இறைவனுக்கு அருகே கொம்புகளை அசைத்துக் கொண்டு தலவிருட்சமாகிய களாமரம் நிற்கிறது என்பது சிலேடைப் பொருள்.

கங்கக்கோன்-கருடவாகனராகிய திருமால்; மழை உறழும்-மேகத்தைப் போன்ற; அங்கக்கோன்-திருமேனியை உடைய திருமால்; கிடை—1) படுக்கை 2) ஆட்டுப்பட்டி; கார்ப்பரவை கிளர்ந்த திருப்பாற்பரவை—1) அழகுமிகுந்த இலக்குமியின் கூத்து விளங்குகின்ற திருப்பாற்கடல் 2) வெள்ளாடுகளின் மிகுதியும் (கடல்) அவ்வொழிந்து ஒளிவீசுகின்ற அழகிய பாலின் மிகுதியும், இப்பொருளில் இருபரவையிலும் உம்மை கூட்டுக; திருமால் திருப்பாற்கடலில் பள்ளி கொண்டுள்ளார் என்பதும், கரிய கங்கக்கோனாரின் பட்டியிலே வெள்ளாடு களும் அவற்றின் பாலும் மிகுதியாக உள்ளன என்பதும் இரு பொருள்களாம்.

புங்கம்-அம்பு; புங்கக்கோன்-அம்பு எய்வதில் இணையற்ற இராமபிரான்; பங்கம்-இழிவு; புனல்தேடி-கடலுக்கரசனான வருணனைப் பார்க்க விரும்பி; கிடந்த கிடை-(தருப்பைப் புல்லைப் பரப்பி அதன் மேல்) படுத்திருந்த கோலம், சேதுவி லுள்ள தருப்பசயனத்தை நினைந்து கூறியது; கன்ட்றாவி-கண் ணராவி, பரிதாபத்திற்குரியது; இராமர் கடலைத் தாண்ட வழிவேண்டி வருணனைக் குறித்துத் தருப்பசயனத்தில் தவ மிருந்த கோலம் பரிதாபத்திற்குரியது என்பதும், புங்கக் கோனார் ஒருசமயம் தனக்கேற்பட்ட துன்பத்தால் தண்ணீரும் கிடைக்காமல் வீழ்ந்திருந்த நிலை இரங்கத்தக்கது என்பதும் இருபொருள்கள்.

சங்கக்கோன்-விருப்பத்திற்குரிய தலைவன்; துங்கக்கோன்-உயர்ந்த தலைவன்; ஆனாது-(வளத்தில்) குறைவுபடாமல்; வயலிற்கு நான் நன்றாக உரமிடுவேன் என்பது கருத்து.

91. தொனியாய்-கூச்சலிட்டு; சாடி-கோள்.

92. பிரியான்- இளையவளைத் தூக்கத்திலும் பிரிய மாட்டான்; ஒப்பு: ''கனவிலும் அங்ஙே பிரியான்'' (முக்கூடற். 87)'' அவள்தனைக் கனவிலும் பிரியான்'' (செங்கோட்டுப்.467); பத்திர-எப்போதும் இன்பத்துறையில் ஈடுபட்டுள்ள; குத்திரம்-வஞ்சகம்; ஒப்பு: ''அவன்வெகு குச்சிரக் கள்ளன்'' (வையாபுரிப் 112); பித்தரைப்போலே - ஒப்பு: ''பிச்சனை வெல்வான்'' (மேற்படி 76); உத்திர தேசத்து - வடதமிழ் நாட்டின், செஞ்சிமா நகர்ப் பிறந்தோன் என்பார் பின்னும் (153); செஞ்சிப்பூமி விட்டுத் தென்திசைக்குச் சாமி வந்த நாள் என்றார் முன்னே (17).

93. காரணமுதல்-குடும்பத்தின் தலைமையான செல்வம்; சீர் அண் அ முதல்-சீதனமாகப் பொருந்திய அச்செல்வம்; கள் - கருவாடு, ஒப்பு: ''பரத்திகைச் சுள்ளும் அக்கரைத் திருத்தினிற் கள்ளும்'' (முக்கூடற்.86), ''பாணான் கைச்சுள்ளும் ஈழுவச்சாணான் கைக்கள்ளும்'' (வையாபுரிப்.116); ஏர் அணி-அழகு பொருந்திய; மரமடிக் கோரணி - மரத்துப் போன மடியாகிய நோயைஉடைய, பால் சுரக்காத; மோழை-மோழை, கொம்பற்ற. பசு; தொடுத்தான் - வைப்பாகக் கொண்டான்; தமனியத் தோரணப்படி - பொன்னாலாகிய கோபுர வாயிற்படி; சூடு-நெற்குவியல்; ஆரணம் - வேதம்; துருவும்-தேடும்; ஆளும்பள்-ஆளப்படுகின்ற பள்ளன், அந்தர்ப் பாவிதணிச்; அடிமை-இங்கு மூத்தபள்ளி, ஒப்பு: ''அழகருக்கு உதவும் பள்வேண்டில் அவன் இனிப்பதனங்காண் ஆண்டே'' (முக்கூடற். 87).

94. தரித்தல்-நிலையாகத் தங்குதல்; துடுக்கு-வேகம் மிடுக்கு-வலிமை; விருந்தும் மருந்தும்-ஒப்பு: ''அவள் விருந்திட்ட கறிசோறு உண்டு அவள் மருந்திட்டது அறியான்'' (திருமலை. 79) ''அவள் இட்ட விருந்தால் மயங்கி விட்டான் காண் ஆண்டே'' (கதிரை. 54). உமைக்குறித்து எனைக் கோவித்து - மூத்தபள்ளிக்குப் பண்ணையாரிடம் செல்வாக்கு இருப்பதால் பள்ளன் அவளைத் தலறாகக் கருதி ஏசுகிறான்;

சாரித்துளை மரம்-குட்டை; பயம்வர-ஒப்பு: "பயப்படப் பிடித்தது பிடியாய்க் குட்டை; அடித்திடும் ஆண்டே" (க்கூடற். 90).

95 பேணினது-(பள்ளன் முதலில் மூத்தவளைப்) போற்றிப் பாதுகாத்தது, சோணி-ஒருத்தியின் பெயர்; நான் இட்ட தீண்டான்-ஒப்பு: "என்கையிற் சோறும் கசந்து" (வையாபுரிப் 114); நாணிலை - "வரவரக் கூச்சத்தை மறந்தான்" (முக்கூடற் 90), "வரவர லச்சையும் விட்டான்" (வையாபுரிப். 112) உழவடை-விவசாயம்; அடக்கினீரானால் உழவடை நடக்கும் ஒப்பு; "கடுஞ் சிறைச்சாலையில் போட்டால் வளைவான் வேலையில் ஆண்டே" (முக்கூடற். 85), "கடுஞ்சிறைச்சாலையில் போட்டால் வளைவான் வேலையில் இவனும்" (செங்கோட்டுப் 497).

96 குலை அடிப்பிடித்த- நன்றாகக் கதிர்பிடித்த; மலை முண்டன்-ஒருவகைநெல்; தலை அடி அடித்த-முதன் முதலாகப் போரடிக்கப் பெற்ற; தேய்த்தான்-வீணில் செலவிட்டான்; மாலை-மைத்துனியின் பெயர்; எருமை விற்றுக் கொழுந்திக்குச் செலவிட்டது-ஒப்பு: "ஆனைக் குட்டியைப்போல் எருமையை ஞானிச் செட்டி கைக்கே பணம் பதினஞ்சுக்குக் கொடுத்தான் கொழுந்தியார் குஞ்சுக் கிட்டெடுத்தான்" (முக்கூடற்.89); மனம் உலையும் இல்லை என உம்மையை மாற்றுக; உள்ளத்தில் அச்சம் சற்றும் இல்லாமல் தீய செயல்களைச் செய்கிறான் என்றபடி ;உமைத்தொட்டும் அலைவு இலை-பண்ணையாராகிய உம்மை எண்ணியும் (ஏமாற்றுகிறோமே) என வருத்தம் இல்லை, உம்மை உயர்வு சிறப்பு; ருணவான் - கடமைப் பட்டவன்; அணவான்-சேரமாட்டான்; கலம் - துஷ்டத்தனம், இங்கு கடுமையான தண்டனை; தடிக் குளிப்பாட்டுவீர்- கோலால் அடியுங்கள்.

97. தறுகணன் - கொடியவன்; நாளிலே - வாழவேண்டிய காலத்திலே; உறைத்தான் - தாக்கினான், கொடுத்தான் என்றபடி; முறிபட்டும் - உடைந்தும். ஏழ்மையடைந்தும்; குழிவு - தாழ்ச்சி, பேச்சில்கூடப்பணிவில்லை என்றபடி; ஊட்டுக்கு - புதிய அநுபவத்திற்கு; பேயாட்டு-கள்ளுண்டல்

ஒப்பு, "பேய்க் கொடை மட்டுக்கட்டில்லான்" (முக்கூடற். 86). "தேடியே பேய்த்தண்ணீர்க் கிறைத்தான்" (வையாபுரிப். 117), "பணத்தையும் பேய்த்தண்ணிக் கிறைத்தான்" (செங்கோட்டுப். 495).

தொளி - சேறு; வெளியினில் உறங்கான் - இளையவளுடன் அறைக்குள்ளேயே தூங்குவான் என்றவாறு; கரையடிப் புளி- ஏரிக்கரையில் உள்ள புளியமரம்; உமைக்குறித்து ஏசினவாய்- "தினம் உமைக் குறித்து எனைக் கோவித்து அடிக்கடி பேசுவது ஒழியான் வசைசொல்லி ஏசுவன் பழியாய்" என்றார் முன்னும் (94); கசை-சவுக்கு.

98. நாற்றோடு எனற்பாலது எதுகை நோக்கி நாறோடு என நின்றது; சீரோடு - செம்மையாக; தார் – வாழைத்தார்; அரம்பை-வாழை மரம்; கூரோடு - மிகுதியாக, அறிவோடு எனினும் ஆகும்.

99. பல வயல்கள் குறிக்கப்பெறுகின்றன; பூநலம்-தாமரை யால் சிறப்பு; சோனை-மழை.

100. ஏலவே-மிகவும்; அநுகூல-நன்மை புரிகின்ற; நீத்தம்- வெள்ளம்; இங்கும் பல வயல்களின் பெயர்கள் இடம்பெறு கின்றன.

101. சீற்றம்-சினம்; திரங்கள் - சாமர்த்தியம்; வெருவ- அஞ்சும்படி; மாற்றால்-துடைப்பத்தால்.

102. கொட்டில் - கொட்டகை; சட்டம்-இங்குச் சரியான செயல்; குடும்பு - பள்ளனின் தலைமைப்பதவி; ஊர்ப்பகை - ஒப்பு "இந்த ஊருக்கும் நயினாருக்கும் ஆகாய்" (திருமலை.118)

103. பண்டு – முன்பே; விதனம் - கவலை; தண்டல் திரத்தான் - தண்டல்காரன், தலையாரி; தருமன் - இந்த நூலாசிரியர் காலத்திருந்த தண்டல்காரனின் பெயர் போலும்; வண்டு - அம்பு; வண்டு துளையா - அம்பாலும் தொளைக்க முடியாதபடி வைரம் பாய்ந்த.

104. வெறியேன்-போதையை உடையவன்; மதிகோபம் - (நாளுக்கு நாள்) வளர்கின்ற சினம், வினைத்தொகை; மருண்ட- அஞ்சிய; மூத்தவள் பல நாளாக உம்மிடம் கோள்சொல்லி உங்கள் கோபத்தை வளர்த்து வருகிறாள். அதனால் ஏதாகுமோ என அஞ்சிக் கொண்டே இருந்தேன். உங்கள் சினமும் என் பயமும் இன்று நிறைவேறிவிட்டது என்பது கருத்து.

105. முன் செய்த - மூத்தபள்ளி செய்த அல்லது பள்ளன் முன்பு பண்ணைக்காரனை ஏமாற்றியதால் எனினுமாம்; முத்து -கண்ணீர்த்துளி.

106. எனக்கு அந்தப் பண்ணையார் கைப்பிடியோ - மூத்தவள் சொல்வதையெல்லாம் பண்ணையார் கேட்பார், அவர் அவள் வசமானவர், நான் சொன்னால் என்ன நடக்கும் என்றவாறு.

107. மதியோ-உன் அறிவைக்கொண்டு மாற்ற முடியுமோ என்றபடி; நீலி - இங்கு மூத்தபள்ளி; வரும்வேளை - ஒப்பு: "குண்டுணிக்காரி மூத்தபள்ளிபார்க்க வருவாள்" (முக்கூடற். 95)

108. பேதகம் - பேதம், பகையுணர்வு; உள்ளாக்குதற்கு- வசப்படுத்த.

109. எதுக்களிக்குது - குமட்டுகிறது.

110. ஆறுகொண்டு - விடைபெற்று; மனவீறு-துணிச்சல்; நாறுகொண்டு - நிலைகெட்டு, வருந்தி.

111. அன்று - இளையவள் என்னைச் சிறுமைப்படுத்திய நாளையில்; நிட்டூரம் - கொடுமை. இளையாள் இட்ட மருந்தால் தான் தரும் உணவு பள்ளனுக்கு ஏற்காது என மூத்தாள் கூறுகிறாள். ஒப்பு: "உனக்குச் சோறு பகையல என்றே சோறு நான் கொண்டுவந்தேன்; இதை உண்ணச் சொல்லக் கூசிப் பின் சொன்னேன்; மனத்தில் ஏறுமோ? மனங் கொள்ளாமல் சத்தி எடுக்கினும் சற்றுத் தின்னடா பள்ளா" (திருமலை. 120)

112. கோணம் - அங்குசம்; குட்டு - இரகசியம்; அவர் - பண்ணையார்; போக்கு - தப்புவதற்கு வேறுவழி; தோண - மனதில்படுமாறு; ஒப்பு: "செஞ்சிப் பண்ணை நயினாருக்கு மன்னிப்புக் கேட்டுப் பாரடி முக்கூடற் பள்ளி" (முக்கூடற். 99).

113. பலி சத்துரு - அழிக்க வேண்டிய பகைவன்; ஏதி-வாள்; நெஞ்சு உறை - உள்ளமாகிய வாட்கூடு, உருவகம்; நீ செய்த தீச்செயல் நானறியாமலே என்னுள் இருந்து உனக்குத் தீமை செய்தது என்பது கருத்து.

114 கீற்றைக்கடத்தல், "இனி நீயிட்ட, கீற்றையும் கடவேன்" (பறாளை. 99) கோபத்தீ பத்த வையாதே: "பஞ்சில் பற்றும் நெருப்பு போல் நெஞ்சில் பழம்பகை இன்னம் பற்றவையாதே" (முக்கூடற். 99); குண்டணி–கோள், ஏத்துக் கால்மரம்-குட்டை, மாத்தடி-மாற்று அடீ, இதிலிருந்து விடுவி.

115. அயமான-இரும்பைப் போன்ற; வன்கண்-கொடுமை; குயம்-நகில்.

116. சலங்கிப் போனான்-கட்டுப்பட்டுவிட்டான்; காறு பாறு தொடுத்திலாத - கட்டாயம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தில்லாமல்; தொண்டிக்கள்-நெல்லாலான கள்; ஒப்பு; "பொல்லாத் தண்ணீர் குடித்த வெறியால் முதல் சொன்னேன்" (முக்கூடற். 106), "நானும் சாராய வெறியிலே தப்பிதம் சொன்னேன்" (வையாபுரிப். 138), "சாராயங் கள்ளுக் குடித்த வெறியாலே ஆண்டே வாய்த்தப்பிதமாகவே தாறுமாறாய்ச் சொன்னேன்" (செங்கோட்டுப். 682) தீர் அவதூறு – நிச்சயமான பழி, கணவனை வருத்தினாள் என்பதோடு பண்ணைக்காரனுடன் தொடர்பு கொண்டவள் என்பதும் உறுதியாகும், எதுகை நோக்கித் தீறவதூறு என விகாரப்பட்டது.

117. என்குல நாயன்–என் கணவன், எங்கள் பள்ளர்குலத் தலைவன் எனினுமாம்; மூத்த பள்ளி பிணையாதல் — "பள்ளன்தான் ஓடிப் போனாலும் நானும் பிணையல்லோ

ஆண்டே" (வையாபுரிப். 140), "பள்ளன் ஓடியே போனாலும் நானும் பிணையல்லோ ஆண்டே" (செங்கோட்டுப். 691); வித்தேசம் - வித்வேஷம், பகைமை; இலக்கு அல்லவே-உமக்கு நிகரானவன் அல்லன்; ஒப்பு: "வன்மத்தைப் பார்த்தால் அவன் இலக்கல்லவே ஆண்டே" (முக்கூடற்.104).

118. மள்ளத்தலைவன்-உழவர்களின் தலைவன்.

119. சொரி குரும்பை முதலிய பல நெல் வகைகள் கூறப் பட்டுள்ளன; இருபூ-இரண்டு போகம்; சேர்-போர்.

120. பலவகையான மாடுகள் கூறப்பெறுகின்றன; கரும் போர் ஆன்-கரிய நிறமுள்ள சண்டைக் காளை; சரி பிடிப்புக்கு-ஏரில் இணைசேர்த்துப் பூட்டுவதற்கு; தண்டாத-குறையாத.

121. சுருக்கி-துண்டாக்கி, பெரிய கிளையை வேண்டும் அளவில் நறுக்கிக் கொண்டு என்றபடி; ஒன்று-ஓர் ஏர்; உள்மதி-கருதப்படுகின்ற அறிவு, தொழில் திறமை; மேழி-ஏர்; நாள்ஏர்-பொன்னேர் பூட்டுதல்; எத்தனங்கள்-முயற்சிகள், இங்குத் தேவையான பொருள்கள் என்ற கருத்தில் ஆட்சி; இச்சிந்தில் இன்னமும் ஓரடி இருந்திருக்க வேண்டும்.

122. கொண்டி-கொழுவை மாட்டுகின்ற இரும்பாலாகிய உறுப்பு; இரண்டாமடியின் பிற்பாதி விளங்கவில்லை; சாத்திரர்-சோதிடர்.

123. பரசுராம அய்யர் என்ற சோதிடர் இந்த நூலாசிரியர் காலத்தே வாழ்ந்திருந்தவர் போலும்.

124 மூலம்-மூல நட்சத்திரம்; ஏறு ராசி-ரிஷப லக்கினம்; பதினொன்றில்-பதினொன்றாமிடமாகிய மீனத்தில்; வெள்ளி-சுக்கிரன்; ரிஷபலக்னத்திற்கு இலக்கினேசன் ஆகிய சுக்கிரன் பதினொன்றில் உச்சம் பெற்றிருப்பதால் மிகச்சிறந்த முகூர்த்தம் என்றவாறு; காலமே-காலையில், பேச்சுவழக்கு; கடிகை- நாழிகை, 24 நிமிடம் கொண்ட கால அளவு; ஏழே முக்கால் கடிகை-சூரியன் உதித்து மூன்று மணி பதினெட்டு நிமிடங்களில், காலை சுமார் 9:15 மணி எனலாம்.

125. சீத குளிர்ச்சியான; ஏதம் அகல்-குற்றமற்ற.

126. சஞ்சுவம்-தேவையான ஏற்பாடுகள்; தருமன்-அற வடிவினராகிய; உள்கிடைச்செய்-உட்புறமாக உள்ள வயல்; வலவர்-திறமை மிக்க விவசாயிகள்; கணக்கன்-புதன்; ஓரை-குறிப்பிட்ட கோளின் செல்வாக்கு மிக்க நேரம், இது ஒரு மணி நேர அளவுள்ளது; இராசத வேளை- முக்குண வேளையில் ஒன்று.

127 உழுதொழிலில் ஈடுபட்ட பள்ளர்களின் பெயர்கள்.

128. உடு-நட்சத்திரம்; நகும் - நிகர்க்கும்; ஒளிவாய்மதி-பிரகாசம் வாய்ந்த சந்திரன், வாய்மதி-வினைத்தொகை; மிலைந்து-அணிந்து; கடு-ஆலகாலவிடம்; கடவுள்-சிவபிரான்; சேய்-மகனாகிய அய்யனார்; பின்னிரண்டு அடிகள் தெளிவாக விளங்கவில்லை.

129 சிமிழ்-திமில்; புத்தரக்கன் காளை-உழவில் பழக்கப் படுத்துவதற்காகப் புதியதாக ஏரில் பூட்டப்பெற்ற செந்நிறக் காளை, "பூட்டுங் காளையைவிட்டுப் பூட்டாக் காளையை' என்பார் முக்கூடற்பள்ளுடையார் (115); சல்லிக்கட்டு-மஞ்சு விரட்டு; சில்லறை-சிதறியவற்றுள் ஒன்றாகிய; மருப்பால்-கொம்புகளால்; கோதி-தொளைத்து; பொருப்பு-மலை.

130 சிம்பல்-தூக்கி எறிதல்.

131. படி-நிலம்; மருந்து வெறி - முன் 94ஆம் பாடலிலும் இளையவள் மருந்து வைத்து விட்டதாகக் கூறினாள் ஒப்பு: "இளையபள்ளி மருந்தினிட லாகிரியின் வெறியோ" (செங்கோட்டுப். 768); "சக்களத்தி புலைமருந்தின் வெறியோ" (முக்கூடற். 197) "இளைய குள்ளி மருந்தீட்டின் மயக்கோ" (பறாளை. 109)" ஊட்டியகள்ளில் இட்ட மருந்தால் உனக்கு வந்த பொல்லாப்போ" (கதிரை. 91) அவமிருத்து - விபத்து முதலியவற்றால் சாவு; குத்துக்கல்லுமாடன் - ஒரு சிறுதெய்வம்; இடும்பா - உடல்வலியால் வருந்துபவனே.

132. செழும் தரங்கக் கிருபையான்-வளமிக்க கடலைப் போன்று கருணை மிக்கவன், கருணைக் கடலாகிய அய்யனார்;

கொடுதாறி-பாவி; நடுவு - நியாயம் செய்பவர்; எழுந்த - உயர்ந்த; பலவா-பலத்தை உடையவனே; இளந்தாரி-வாலிபன்.

133. விண்நீர்-மழை; பயிர்மேல் ஆடும் தன்மை எனவும், எண் ஈறு ஒழிந்தாங்கும் என்று எண்ணும்மைகளை விரிக்க; எண் ஈறு-அஞ்சத்தக்க சாவு; ஆங்கு-போல, உவம உருபு.

134. பாகத்தில் - பக்கத்தே; நிரைத்தான் - வரிசைப் படுத்தினான்; புல்லு மிதக்க-உழும் ஆழத்தால் புல்லின் வேர்களற்று அவை மேலே மிதக்கும்படி; விரைத்தான்-விதைத்தான்; நிறுத்தான்-நிலைபெறச் செய்தான், கட்டினான் என்றபடி.

135. சேற்றுக்கால் செல்வன்-சேற்றில் இறங்கி வேலை செய்கின்ற சிறப்பினை உடையவன்; தாங்கு பள்ளன்-உழவுத் தொழிலின் பொறுப்பை ஏற்றுள்ள குடும்பன், வினைத்தொகை; ஈற்றடி ஒப்பு: "கூறும் பணிதலைமேற் கொண்டுபள்ளன் மீண்டானே" (முக்கூடற். 124).

136. விறல்-வலிமையுள்ள; வேந்தன்-இந்திரன்; மனு - சக்கரவர்த்தி; பரவு பெருமான், காக்கும் பெருமான் எனத் தனித்தனி இயையும்; காக்கும் பள்ளியர் நடவந்துற்றாரே எனக் கூட்டுக.

137. சிமையில் அமைய-தலைமேல் வைத்து; முகிலி - மேகம்; முடியில் முகிலி சிதறிப்படியும் சிகரி என இயையும்; சிகரி - கோபுரம்; திருத்து - வயல்; முடியை எடுத்து - நாற்று முடியைக் கையிலேந்தி; போத மள்ளர் - (விவசாயத்தைப் பற்றிய) அறிவு மிக்க உழவர்.

138. பள்ளியரின் பெயர்கள் கூறப்படுகின்றன; விரசி - நெருங்கி; நடுகைச்சுருதி-நடவுப்பாட்டு; சுருதி-சுருதியுடன் பாடப்படுவது; கருதி-இங்கு இசைத்துக்கொண்டு என்பது கருத்து.

139. வாளை வயல் - வாளை மீன்கள் நிறைந்த வயல்; நடையிலே - நடும்போது, பேச்சுவழக்கு; துசம்கட்டி-துவசம் கட்டி, பெருமுயற்சி செய்து; சோங்கு-மலையில் உள்ள சோலை,

இங்குப் பொதுவாகப் பூஞ்சோலை; பாங்கு பண்ணல் – உரிமை கொண்டாடல், கொஞ்சுதல் என்பது கருத்து.

140. அண்டர்-தேவர்; தடி-வயலின் ஒரு சிறுபகுதி; விளம்ப-பிரித்துக் கொடுக்க, பரிமாற எனப் பொருள் தரும் வட்டார வழக்கு.

141. மயில் வலம் செய்பவர் - மயில்வாகனன், முருகன்; பின்பர் - தம்பி; பலம்செய் - நல்ல விளைவைத் தரும்; சித்திரைக்காலி, மிளகி-நெல் வகைகள்; வலம் சுத்திப் புளிவயல்-ஒரு வயலின் பெயர்; மனம் கொள்ளுறாள் – (கூடுவதற்கு) இசைகிறாள்.

142. முதலடியின் முற்பாதி தெளிவாக விளங்கவில்லை; வெத்தித் துவசம்–செயக்கொடி; பெத்திய - பெற்ற என்ற கருத்தில் ஆட்சி போலும்; அரசடித்தடி-அரசமரத்தின் அருகே உள்ள வயல்; நத்தி-விரும்பி; மழுக்கல் - அடித்தல்.

143. கொச்சியும் கச்சியும் தமிழகத்தின் மேல் கீழ் எல்லைகளாவதோடு தென் வடல் எல்லைகளாகவும் உள்ளன. காஞ்சிபுரம் அய்யனாருக்குரிய சிறப்புத்தலமாகும். குலங்கள் - கோயில்கள், ஒரானோர் தேவகுலம் என்பதைப் போல; சிற்றூர்களில் தனிக்கோயில் கொண்டும், பெரிய சிவத் தலங்களில் பரிவாரதேவதையாகவும் எல்லா இடங்களிலும் அய்யனார் விளங்குகிறார்; எச்சில் தசை-கண்ணப்ப நாயனார் கடித்துக் கொடுத்த இறைச்சித் துண்டு; கடல்வாசர்-திருமால்; இளிகண்- பீளைக்கண்; ரொட்டி-கள்; நொச்சிப்புதை-நொச்சி மரத்தின் மறைவு.

144. மஞ்சு-மேகம்; தனம்-செல்வம்; மானவன்-சிறப்பை உடையவன்; பஞ்சவாளி - மாரனின் ஐந்து மலர்க்கணைகள்; நாளி–கள்; சாயவே-நிலைதடுமாறச் செய்ய, அந்தர்பாவிதணிச்; தொஞ்சு - தொய்ந்து, தளர்ந்து, தோப்பை - திண்மையின்றிப் பருத்தது, ஒப்பு: "தோற்றமிகு வல்லிக்குத் தோப்பைமுலை யர்க்கினான்" (தனிப்பாடல்); காப்புக்கை-காப்புகளை அணிந்துள்ள கரம்; நஞ்சை-நன்செய்; உத்தி–(தப்பிக்கும்) யோசனை;

நாத்தி – கணவனின் சகோதரி; நேத்தி-நேர்த்தி; நூத்தி; இளக்காரம்.

145. தாமம் - திருநாமமழகியாகிய மாலை, உருவகம்; உரவு-வலிமை மிக்க; விசும்பு உம்பர் - தேவர்; வாரணம்-யானை; பரிபூரணம் - பரம்பொருள், அய்யனார்; இசைய-ஒன்றோடு ஒன்று பொருந்த; குழை-காதணி; திவள-அசைய, இங்கு ஒளிவீச; சிறுத்து-மெலிந்து; இழையில்-நூலைப் போன்று; நுசும்பு-இடை; அளிய-நன்றாகப் பதமாகும்படி; தொளி-சேறு.

146 பணை-பண்ணை; கடி-அழகிய; பித்தி-மயக்கம் கொண்டவள், பித்துடையவள்.

147. குரம்பை – கூடு; பூவை – நாகணவாய்ப்புள்; மழுக்கிறாள்-அடிக்கிறாள்; வழுக்கிறான்-தப்பிக்க முயல்கிறான்'

148. தொழும்பர்–அடியார்; அல்லாமல்–அய்யனார் மட்டு மன்றித் தமிழ் வல்லோரும் உள்ள நல்லூர் என்றவாறு; விகடன்–கோமாளி; முகடன்–மூடன்! பாம்பைக் காட்டி மாமியை அச்சுறுத்தித் தன் அருகே இழுக்கிறான் என்பது கருத்து; அரசு அம்–அரசு இலை போன்ற அழகிய அல்குல்; "மாரன் அரசொழிய மற்றோர் அரசிலை என் றாரமயல் பூட்டும் அரசிலையாய்" (வருணகுலாதித்தன் மடல்.58) கண்ணுறான்–கருதுகிறான்.

149. அட்டதிசை–எட்டுத் திக்குகள்; துட்டவிசை–தீய சக்திகள்; மடங்கல் ஏறு-ஆண் சிங்கம்; கூடலை–1) இயல வில்லை –2) (என்னைச்) சேராதே; பணி–அணிகலன்கள்; ஈச்சன்புதை–ஈச்சமரத்தின் மறைவு; பட்டம்–நடுகைக்கு உரிய காலம்; பரிஞ்சிட்டாள்-இணங்கிவிட்டாள், பரிவு கொண்டாள்; நம்மை அறிஞ்சிட்டாள்–நாம் காண்பதை உணர்ந்து விட்டாள்.

150. ஆகன்–மார்பன்; கீழ்ப்பத்து-கிழக்கில் உள்ள வயல்; பழன வயல்–ஒருபொருட்பன்மொழி; குத்திர–வஞ்சனை மிக்க; லுத்தன்–உலுத்தன், பேராசைக்காரன்; சாடி–வைது.

151. குளிர்–சிறு கத்தி; பூராயம்–அறிவுடைமை; விசும்பு–வீம்பு.

152. பூதரன்–உலகைக் காப்பவன்; ஆதரன்–அன்புடையவன்; துரிசம்–துரிதம், வேகம்; வேல மறைப்பு–வேலமரத்தின் மறைவு; சன்னை–சாடை; ஆத்துறான்–ஆற்றுகிறான், தணிவிக்கிறான்.

153. குஞ்சரம்–யானை; தேசிகத் திருவாசன்–குருத்துவம் மிக்க தெய்வீகமான உபதேசத்தை உடையவர், குருநாதன் என்றபடி; விஞ்சை-வித்தை, கல்வி; விசுவகுலம்-பொற்கொல்லர் மரபு; கயிலாசம்–இந்நூலாசிரியர் காலத்தே வாழ்ந்த ஒரு விசுவகுலச் செல்வர் போலும்; பாந்தமுடனே–ஒழுங்காக, முற்றிலுமாக எனப்பொருள் கொள்ளலாம்; சாந்தம் எண்ணுறாள்–(சினம் கொள்ளாமல்) பொறுமையாக இருக்கிறாள்.

154. விரை - நறுமணம்; வரை குலாவும் – மலைகளை விரும்பும்; மீனவன்–பாண்டியன்; கற்பகம்–கருப்பாநதி; கணையில்–கரும்புப் பயிரில்; புரை விடாமல் – திருட்டுத்தனமாக; நிரை நடாமல்–வரிசையில் நின்று நடுதலைச் செய்யாமல் தானம்–இடம்; எல்கை–எல்லை, பாண்டிநாட்டு வழக்கு; சங்கை–அச்சம்; மங்கை–இங்குப் பருவம் சுட்டாமல் பொதுவாகப் பெண் என நின்றது, பெண்மைக்குரிய நாணம் மிக்கவள் என்பது கருத்து.

155. கண் அகல்–இடமகன்ற; சச்சாடிக் கொண்டு–கூச்சல் போட்டுக் கொண்டு; தத்தரம்–அதிகமான வேகம்; நிரை – பள்ளியர் கூட்டம்; உத்தரத்திலே–வடதிசையில்; லண்டிப்பயல்–முரடன்; சண்டித்தாதன் ஆகிய லண்டிப்பயல் என்க; ஒண்டி–ஒதுங்கி, யார் கண்ணிலும் படாமல் என்பது கருத்து; சித்திலை–சிற்றிலை, குன்றிமரம்; அன்னம் பாறினாள்-புலம்பினாள்.

156. ஆடிச்செய்யில்-நாற்று நடும் பருவமாகிய ஆடி மாத வயலில்; தையில்–தை மாத அறுவடையின் மிகுதியில்; ஊத்துக் கண்ணன் – கண்களில் எப்போதும் ஊற்றைப் போல் நீர் வடிக்கின்றவன்; விண்டு – மாறுபட்டு; உருக்கிறான்–உருக்குகிறான், வாட்டுகிறான்.

157. தரத்து-ஒரே வகையைச் சேர்ந்த; திருத்து - பயிர் நிலம்; குண்டு-சிறிய வயல்; ஞானியர் குளத்திலிருந்து பாசனம் பெறுகின்ற நிலத்திலுள்ள சிறிய வயல்கள் என்பது கருத்து; இறங்கும் பொழுதில்-அந்தி சாயும் நேரத்தில்; அடுத்து-நெருங்கி; கதிக்க-வேகமாக; முட்டப்பகையன்-முழு விரோதி; தாரு - மரக்கொம்பு; தாரு கம்பு-ஒருபொருட் பன்மொழி.

158. புரம் - ஊர்; கடைச்சியர் - கடைசியர், பள்ளியர். நடையிலே-நடுகையிலே.

159. பணை - உயரம்; கா-சோலை; காவினான் என்றது கற்பகச்சோலைக்குரிய இந்திரனை, "இந்திரன் வந்து புழங்கிட" என்றார் முன்பும் (147); மா-வாகனம், இங்கு மயில்; மாவினான் என்றது முருகப்பெருமானை; பார்த்திபர் புத்திரன்-அரசர் மகன் எம்பெருமான்; மூர்த்திகள்-திருமேனிகள்; திருவேட்டை அய்யன் திருக்கோவிலில் உள்ள சந்நிதிகள் இவை; கணை - அம்பு; கார்பொரும் குழல் - மேகத்தைப் போன்ற கரிய கூந்தல்; பணை-வயல்; நதிகுல திலகன்-வேளாளர் இனத்தில் தோன்றியவர்களுள் சிறப்புடையவன்; பார்த்திபன், பூமன் என்ற அடைமொழிகள் சங்கரநாராயணருக்கிருந்த பெருஞ் செல்வத்தையும் அதிகாரத்தையும் காட்டுகின்றன; சுணை - தன்மானம்; வையறான் - வைகிறான், வசை கூறுகிறான், பேச்சுவழக்கு.

160. பரிசனர் - தொண்டர்; வாளும் பொருவு - வாட் படையையும் நிகர்க்கின்ற, இந்த உவமை கயல், வேல் போன்ற பிற உவமைப் பொருள்களையும் தழுவியது; நீளும்-நீண்ட; புரவு-வயல்; நிரை-வரிசையாக.

161. இச் சிந்து முதலில் ஒருவாறு எழுதிப் பிறகு ஆங்காங்கு மாற்றப் பட்டுள்ளது திருத்தியபோது சில வரிகள் விடுபட்டன போலும். துழனி-ஓசை; பரவை-கடல்; கடல் வரை கேட்குமாறு.

162 விண்டு - மேகம்; வியன்-பெரிய; புரிசை-மதில்; பண்டுவந்த-முற்காலத்தில் எழுந்தருளிய, "செஞ்சிப் பூமிவிட்டுத் தென் திசைக்குச் சாமி வந்த நாள்" என்றார் முன்னும் (17).

163. கொங்கு-தேன்; குழகன்-அழகன், இங்கு ஐயனார்; மூகிற்கு இணை-மேகம்போல் வழங்குகின்ற; நிதிபதி-குபேரன்; கரையாளர்-கோயிலுக்கு உரிமை உடையவர், காணியாளர் எனச் சில பகுதிகளில் வழங்கப்படுவர்; புவனி-உலகம்; சிலைச் சிலைக்கை - (இமய) மலையை வில்லாக ஏந்திய கைகளை உடைய; இந் நூலாசிரியர் அங்கயற்கண்ணம்மையின்மீது பெரும் பக்தி கொண்டவர் என்பது இந்நூலின் சிறப்புப்பாயிரப் பாடல்களால் விளங்குகிறது. தென்கூடல்-சங்கரநாராயண சுவாமி கோவில்; உக்கிரபாண்டியன் நாள்தோறும் மணலூரில் இருந்து மதுரை சென்று ஆலவாயழகரை வழிபட்டு வந்தான். அவ்வருத்தம் நீங்க இறைவன் அவனுக்குச் 'சங்கரன் கோயிலில் இலிங்க உருவைக் காட்டி அவ்விடத்திலேயே வழிபடுமாறு ஆணையிட்டார். வடக்கே உள்ள மதுரையம்பதிக்குப் (கூடல்) பதிலாகத் தோன்றியதால் இத்தலம் தென்கூடல் எனப்படுகிறது.

"கொங்குஉலாம்மலர்தூய் ஏத்தக் கூடலம் பதியில் நாளும்
பொங்கிய உவகை யோடு போதரும் வருத்தம் நோக்கி
அங்கயற் கண்ணி யோடும் ஆலவாய் அமர்ந்த அண்ணல்
இங்குஎழுந் தருளி நின்றான் இருநிலம் புரக்கும் கோவே"

என்பது தலபுராணம் தரும் செய்தி (உக்கிரன் வழிபடு சருக்கம் 27). மதிச்சடிலம் - பிறையணிந்த சடை; கருஞ்சை வரை-கருஞ்சிவனைப்பேரி மலை.

164 கைவரிசை செய்வார்-திறமையாகப் பணிபுரிவோர்; பைவரிசை-பசுமையாக்குகின்ற பரிசு, வாழ்வை வளமாக்கும் கொடை, வினைத்தொகை; செய் வரிசை - செய்ய வேண்டிய சடங்கு, அதாவது நடவு முடிந்து பள்ளியர் பண்ணையாரிடம் வந்து விளக்குமுன்னே நெல்முடி வைத்தபின்பு பண்ணையார் அவர்களுக்கு மஞ்சள், குங்குமம், சந்தனம், வெற்றிலை, பாக்கு, பழம், எண்ணெய் முதலியவற்றோடு ஒரு பணமும் வழங்குதல்.

165. தோகை-நெற்கதிரின் மேல் தோல்; அரை-தாள்; பொதி-அரும்பு; கால்-முளை; சடைந்து-கிளைத்து நெருங்கி;

சாய்ந்து-தலைவணங்கி; அபரிமிதமாய்-மிக அதிகமாக; பணை சுகம்-பருத்த உடம்பு, வினைத்தொகை; தளி-வெளியே தள்ளி; முத்துச் செழுநெல்-முத்துப் போன்றதும் செழித்து வளர்ந் துள்ளதுமாகிய நெல்.

166. முழவாளை-ஒருமுழ நீளம் உள்ள வாளை மீன்; தார்-குலை; உழவு ஆளை - உழுபவனை; குழ – இளமையான; வாள் – ஒளிவீசுகின்ற, நிறம் வாய்ந்த; ஐ–தலைமையான; நாட்கதிர்–வயலில் முதலில் தோன்றிய புதிய கதிர்;

பழனம் விளைந்ததற்பின் பண்ணையான் உழவாளை நாட் கதிர் கொண்டுவரச் சொன்னான் என்பது முடிபு. கதிர் விளைந்ததும் அறுவடைக்குமுன் உழவன் நாட்கதிர் அறுத்துக் கொடுக்கப் பண்ணையார் அதைவாங்கி இறைவன் கோவிலில் வைத்துப் பூசித்து நல்ல மகசூல் கிடைக்கவேண்டுமென் இறைஞ்சுவது மரபு.

167. பூதரத்தின்கண்–மலையில்; சும்மையின் – ஒலியைப் போன்று; மும்முரசு–வீரமுரசு, கொடை முரசு, மணமுரசு ஆகிய மூன்று; வானவர் காவலன் இருந்த திசை–அமரர் கோனாகிய இந்திரனுக்குரிய கிழக்குத் திசை. கூன் இரும்பு – வளைந்த அரிவாள்; தொங்கல்பூ–மலர்மாலை, முன்பின்னாகத் தொக்க மூன்றன் உருபும்பயனும் உடன்தொக்க தொகை; சிவிகை - பல்லக்கு; இரங்கும் - ஒலிக்கும்; மேல் நிவந்த – மேலே உயர்ந்துள்ள.

மள்ளர் திசை போற்றி, வாரத்தில் கொய்து, கொண்டு வந்து, கண்டு, சேவித்து அய்யமுன் வைத்தார் என்பது முடிபு.

168. விண்டு - மேகம்; செண்டு உவந்த கையுடையார் - அய்யனார்; நன்னதிசூழ்செய், கையுடையார்செய் எனத் தனித் தனிக் கூட்டுக; கண்டு உவந்தமள்ளர் கதிர் அரியச் சென்றார்.

169. தடி-அளவுகோல், அறுவடைக்கு இன்னின்னாருக்கு இன்னின்ன பகுதி என அளப்பதற்கு ; விள்வார்-சொல்லுவர்;

பகுவார்-பங்கிடுவார்; தொயில்மேல்-தோகைக்கு மேல் உள்ள; குலை-கதிர்; அரி-வைக் கோல்; மெய்ப்பார்-உண்மையாக்குவர், கைக்கொள்வர் என்றபடி; பாக்கு மற்ற போகப்பொருள்களுக் கும் உபலட்சணம்.

170. பகடு-எருது; மரபு-வலம், இடம், முன், பின் வழக்கப்படி; மறு-மாசு, இங்கு குப்பை; பதர்-உள்ளீடற்ற நெல்; பொலி திரட்டல்-நெல்லைக் காற்றில் தூவிப் பதர் நெல்லைப் பிரிக்கும் செயல்; மூலப்பொருள்-கண்டுமுதல், நெல்.

171. தாஷ்டீகன் - திறமையும் துணிவும் உடையவன்; சடையாது - சலிப்படையாமல்; கொடுங்கை - உட்பக்கம் வளைந்த கை, வள்ளங்கொண்டு அளக்கும்போது வளைகிறது. தாஷ்டீகன் ஆகிய கொடையால் பெரிய குடும்பன் பண்ணை முற்றும் விளைந்த நெல்லை ஒரு கொடுங்கை தாங்கிச் சடை யாது அளந்தான் என்பது பொருண்முடிபு.

172. தலத்தார் படி-திருக்கோயில் ஊழியர்களின் ஊதியம்

173. அரவு-பாம்பு; சடிலம்-சடை; அண்ணலார் - சிவ பெருமான்; பரவு-தருமமாக வழங்கப்பெற்ற நிலங்கள்; போதரவு-மொத்த விளைச்சல்; குடும்பன் தோன்றா எழுவாய்.

174. கிளை தாங்குவிர்-எம் குடியைக் காக்கின்ற பண்ணை யாரே, விளி; தளி-கோயில்; ஊட்டு-உணவருந்தச் செய்தல், இங்கு வழிபாடு; பதிவாகிய-அதற்கென்று வழக்கமாக அளிக்கப்படுகின்ற; கோட்டை-இருபத்து நாலுமரக்கால்; செவி கேட்டிடும் பெருமான்-அக்காலத்திருந்த ஒரு புலவரின் இயற் பெயர் போலும்: பரஞ்சோதி எனற்பாலது ஓசை நோக்கி நீண்டது; இதே கல்லக நாட்டின் சண்பக நல்லூரில் 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வெள்ளைய ராசேந்திரன் என்னும் வள்ளல்மீது இயற்றப்பெற்ற துகில்விடு தூது ஒன்றில், "தென்மதுரைச் சுந்தரனைப் போற்றுபரஞ் சோதிமுனி பாத மலர் சிந்தனைவைத் தாணை செலுத்துவோன்" (91-92) என வருகிறது. திருவிளையாடற் புராணம் பாடிய பரஞ்சோதி முனிவர் 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். எனவே இவர்

அவரல்லர். இதனால் இக்கல்லக நாட்டில் பரஞ்சோதி முனிவரின் பெயரிலமைந்த மடம் ஒன்று சமயப்பணிசெய்து வந்த செய்தி உறுதியாகிறது. அணைவேலை - அணையைப் பாதுகாக்கும் பணி; கால் வேலை - வாய்க்கால்களைப் பேணும் பணி; அரியான்-நீர்ப்பாசனப் பணி தொடர்பான ஓர் ஊழியன் போலும்; விரை-விதைநெல்; இறை-அரசுக்குச் செலுத்த வேண்டிய வரி; சிறையிட்டேன் - பத்திரப்படுத்தினேன்; இப் பாடலில் பலவகையான நெல்லின் பெயர்கள் வந்துள்ளன.

175. பள்ப்பேர் உளதும்-பள்ளுத் தொழிலுக்காக அமைந்த கூலி நெல்லும்; குன்றா - மனங்குன்றி, செய்யா எனும் வாய்பாட்டு வினையெச்சம்; பொருமல் - சினமும் துயரமும் மிகுதல்; வெப்பம்-இங்கு மனவேதனை; பொருமலால் உண்டான வெப்பம் என்க.

தனக்குரிய கூலிப் பங்கைக்கூடத் தராத பள்ளனுடைய ஓரவஞ்சனையை உள்ளத்தே அடக்கிக் கொண்டு மூத்தபள்ளி பேசாமல்தான் இருந்தாள். ஆனால் இன்று தன்னையும் மீறிய வேதனையால் முறையிடத் தொடங்கினாள் என்பது கருத்து; ஒப்பு: "முக்கூடல் மிக்கபள்ளி தன் பொருமல் நில்லாமல் பள்ளியர்முன் நிட்டூரஞ் சொன்னாளே" (முக்கூடற்.149).

176. பள்ளன் செய்யும் வஞ்சனையைப் பண்ணைக்காரன் அறிந்து தடுக்காததால் மூத்தவள் அவனையும் இகழ்கிறாள்.

காது - "கீறி வேறு தசை ஒட்டிவைத்திடு காதும்" (பறாளை 80); "ஒட்டற்காது மாகவே" (தண்டிகைக். 107) "சற்று அப்பாலே விட்டுப்போன ஒட்டற்காதும்" (கதிரை.51). சோகி-சோழி, இது ஓரளவு மஞ்சள் நிறம் பெற்றிருக்கும், தூய வெண்மையன்று; "சோகிப் பாகில் பல்லின் அழகும்" (பறாளை.80) வெட்ட-கடுமை; விட-நஞ்சைப்போன்ற;கத்தன்-தலைவன்; இந்நூலின் 62,64ஆவது பாடல்கள் இங்கு நினைவு கூரத்தக்கன.

177. குளம்-நீர் நிலைகள் அனைத்திற்கும் உபலட்சணம்; மனை-மனைவி, மூத்தபள்ளி இளையவளை மனைவியாகக் கருதாமல் பள்ளனின் வைப்பாகவே நினைப்பதால் தன்னை

மட்டும் மனைவி என்கிறாள்; குளமனை-உம்மைத்தொகை; பள்ளன் புறவாழ்விற்கு இன்றியமையாத நீர்நிலைகளையும் அகவாழ்விற்கின்றியமையாத மனைவியையும் பேணத் தவறிய வன் என்பதால் இணைத்துக் கூறுகிறாள்; அவள்-இளையவள், நெஞ்சறிசுட்டு; குடி காத்து - (இளையபள்ளியின்) குடும்பம் முழுவதையும் தானே செலவுசெய்து தாங்கி; களநிலம் - நெற்களத்தை நிர்வகிக்கும் பொறுப்பு, ஆகுபெயர்; பிள்ளை யார உழவு பள்ப்பேறு-முதல் உழவுக்குப் பள்ளியர்களுக்குக் கொடுக்க வேண்டிய பங்கும் முறைநெல்லும்; காரியவசமாய்-ஒரு காரியத்தை நினைத்து; கள்ளி பார்சம் - திருட்டுத் தனமுடைய இளையாள்வசம்; மூத்தவள் இளையவளை மதித்து அவள்பாற் சென்று தன் பங்கைக் கேட்கமாட்டாள் என்பதற்காகப் பள்ளன் இவ்வாறு செய்தான்; ஒப்பு: "நின்ற முறைநெல்லும் பிள்ளையார் அடிநெல்லையும் சொந்தமென்றே வாரி அவள் கூடையில் இட்டான்; என்றன் சுவந்தர நெற் கொடுக்கக் கைநடுங்குதே" (வையாபுரிப். 203). "முறை நெல்லையும் பிள்ளையார் அடிநெல்லையும் சொந்தமுடன் வாரி அவள் கூடையில் இட்டான்; என் சுயந்தர நெல் தர அவன் கை எழும்பாது" (செங்கோட்டுப். 849)

178. கற்பனை-சொல்லிக் கொடுத்த பாடம்; சற்பனை - சதி.

179. குண்டணி - கோள்; பிணைபட்டு - உத்திரவாதங் கொடுத்து.

180. அதியாரி - அதிகாரி, பேச்சுவழக்கு; கைப்பிடி - சொன்னபடி கேட்கிறவன்; சன்னைப் பேச்சு-சாடை வார்த்தை, மூத்தபள்ளிக்கும் பண்ணையார்க்கும் ஏதோ தொடர்பு இருப் பதாகத் தொனிக்கும் உரை. முக்கூடற் பள்ளில் இளையவள், "குட்டை சாத்துவாய் கழற்றுவாய் உன் தந்திரமடி" (159) என்பதுவும் இத்தொனியே, வையாபுரிப் பள்ளிலும் இது "போடி வாடி என்று மிஞ்சிப் பேசும் சலுகை அந்த புதுப் பண்ணைக்காரனார் சலுகையல்லவோ" என (209) இடம் பெற்றுள்ளது.

181. இளையவள் நேராகவே குற்றம் சாட்டுகிறாள். சூட்சமாக - குறிப்பாக; தோசம்-குற்றம்; சுளிக்க-கோபம் வரும்படி, அருவருப்பினால் முகம் சுளிக்குமாறு எனினும் ஆம்; குற்றமற்ற என்னை அபாண்டமாகப் பழித்தால் நானும் வாயில்வந்தபடி ஏசுவேன் என்பது கருத்து.

182. "நீ பொய்யாக என்மேல் பழி கூறினால் நிலைக்காது; ஆனால் இப்போதே உன்னைப்பற்றி அனைவரும் இழிவாகத் தான் பேசுகின்றனர்" என்கிறாள் இளையவள்; ஒப்பு: "ஊரை உலை மூடிகொண்டு மூடலாமோடி" (குதிரை. 57) செடி தூத்த தொகை-ஏதோ வசவு போலும்.

183. பள்ளிப்பண்ணை-கோவிலுக்குரிய வயல்கள்; கண் மாய்ப்பங்கு - ஏரிக்குப் பக்கத்திலுள்ள (வயற்) பகுதி; சங்கை- மதிப்பு, பெறுமானம். காக்கனை-காக்கன் என்பவனுடன், உருபுமயக்கம்.

184. பூத்து இருக்கும் குச்சு-மாதவிடாய்க் காலத்தில் இருக்கும் குடிசை; வீத்தி-ஒருபள்ளி; சுட்டி-மதித்து, விரும்பி என்பது கருத்து.

185. மாங்கொட்டை, இக்கி-வசவுகள் போலும், ஒப்பு: "சந்தியில் மாங்கொட்டை போடி" (முக்கூடற். 160) கொலுத் தாசி-சபையிலே ஆடுகிறவள், நாணமற்றவள்; தோசி-குற்ற முடையவள், "கிழத் தோசியவள் பணத்தாசையினால்" (திருவிடைமருதூர் நொண்டி. பக். 35).

186. புத்தி பேசாதே-இல்லாததைக் கற்பனை செய்து சொல்லாதே என்பது கருத்து; கொள்ளி கொண்டு தலை சொறியலாமா எனபது பழமொழி.

187. நோக்கம்-விருப்பம்; ஊசப்போடுதல்-பதனழியுமாறு விட்டு விடுதல்; பாயல்-படுக்கையை விட்டு.

188. பாதிக்காரி - (உன் கணவனின்) பாதியைப் பகிர்ந்து கொண்டவள். நாமிருவரும் சக்களத்திகள் என்றவாறு;

நாளிலே-உரிய காலத்திலே; பண்டு உள்ள - பழமையான மரபுப்படி; மூத்தவள் இளையபள்ளிக்கு மனைவி என்ற தகுதியைத் தருவதே இல்லை.

189. வீத்தாதே - வீண்பெருமை பேசாதே; முழம் மிச்சமடி-ஒருமுழம் உயர்ந்தவள், பெருமை மிக்கவள் என்றவாறு; கச்சக்காய்ப்பள்ளி - ஏதோ வசவு போலும்; ஒப்பு: "வாய் தைச்சுப்போடுவேன் மருதூர்க் கச்சற்காய்ப் பள்ளி" (முக்கூடற். 63) "கச்சைக்காய்ப்பள்ளன் அவன் வெகு குச்சிரக்கள்ளன்" (வையாபுரிப். 112) கூத்திக்கள்ளி - திருட்டுத் தனங்கொண்ட வேசி; நீ கீறும் கீத்திலே நிற்க - (பள்ளன்) முற்றிலும் உன் சொற்படி நடக்க; கோட்டம்-பசு முதலிய வற்றிற்கு மருந்து புகட்டும் மூங்கில் பாத்திரம்; போட்டிட- புகட்டிட; நீ பள்ளனுக்கு வசிய மருந்து வைத்துள்ளாய்; மேலும் அதிகமாக வை என்றபடி; முன் 94, 131 ஆம் பாடல் களிலும் இந்தக் குற்றச்சாட்டு இடம்பெற்றது.

190. அச்சி-தமக்கை, பள்ளர் வழக்கு; நீ என் கணவனின் மூத்த மனைவி எனக்கருதி வாளா இருக்கிறேன் என்கிறாள்; சரசம் கொள்ளாதே - விளையாடாதே. மூத்தவள் இளையவளைக் குடும்பனின் மனைவியாகவே கருதுவதில்லை; அவனுடைய வைப்பு என்கிறாள்; எனவேதான் இளையவளைத் தன் சக்களத்தியாக ஏற்றுக் கொள்ளுவதில்லை.

191. இளையவள் தான் பள்ளனால் முறையாகத் திருமணம் செய்து கொள்ளப்பட்டதால் மூத்தவளைச் சக்களத்தியாக ஏற்றுக் கொள்கிறாள்; மூத்தவள் தன் உண்மை நிலையை ஏற்றுக் கொள்ளுவதில் நாணம் என்ன வந்தது என்பது இளையவளின் வாதம். இருவரும் ஒருவனின் மனைவியர். எனவே யாருக்கு இழிவு ஏற்பட்டாலும் இருவருக்குமே அவமானம்தான் என்பது இளையவள் கட்சி.

192. இப்போது மூத்தவள் விட்டுக் கொடுக்கத் தொடங்கு கிறாள். நீ என்னை அக்கா என அழைத்து உறவு கொண்டாடுவதால் சிறப்பு ஒன்றும் இல்லை; நம் சண்டையில்

வீணாகப் பண்ணைக்காரனை இழுத்து ஏன் அவதூறு கூறுகிறாய் என்கிறாள்.

193. நீதானே முதலில், "உந்தன் கற்பனை அல்லோ குடும்பன் சற்பனை செய்தான்" (178) என என்னைப் பழிக்கு முற்பட்டாய் என்கிறாள் இளையவள்.

194. இப்போது இளையவள் இறங்கி வருகிறாள். தான் மனமறிய மூத்தவளின் ஒழுக்கத்தைக் குறை கூறவில்லை என்றும், கள் குடித்த போதையில் ஏற்பட்ட பெருஞ்சினத்தால் அவ்வாறு கூறியதாகவும் இது தவறில்லை எனவும் வாதிடு கிறாள். மூத்தவளும் விட்டுக்கொடுக்கிறாள். மானக் கொஞ்சம்-அவமானம்.

195. பள்ளியர் இருவரும் சமரசமாகின்றனர்.

196. தெரிவரிதாய் - (இறைவனின் தன்மை இத் தன்மைத்து என எளிதில்) உணர முடியாதபடி; பணி - அணி கலன், நகைகள் பலவானாலும் பொன் ஒன்றே. அவ்வாறே பெயரும் வடிவமும் பலவாயினும் பரம்பொருள் ஒன்றே. அப்பரமே திருவேட்டை வித்தகராகவும் விளங்குகிறது என்பது கருத்து; புரிகுழல்-சுருண்ட கூந்தல்; காவி-குவளைமலர்; துவர்- பவளம்.

197. காவித்திருமாமலை - இந்நூல் இரண்டாம் பாடல் காண்க; கால்-வாய்க்கால்; ஏர், ஆறு, அணை, வாய்க்கால், ஏரி, வயல் அனைத்தும் வாழ்த்தப்பெறுகின்றன; பரிசனம் - தொண்டர்.

———C———

ஆங்கிலக் கல்வி மிகுத்தவன் அய்யன் அடிபணியும்
தீங்கிலாச் செல்வன் திருமலை வேற்பெயர் சேர்அளியான்
ஈங்குள பள்ளினை அச்சினிற் காட்டென ஏடதனை
வாங்கிய நாகரா சப்புல வோன்நூல் வழங்கினனே.

சிறப்புப் பெயர் அகரநிரல்

(எண்: பாடல் எண்)

(இதே பெயர் வேறு சொல்லால் வந்த பாடல் எண் நகவளைவில் கொடுக்கப்பெற்றுள்ளது.)

அய்யன் சா. க. 2, 172
அய்யனார் 31, 140, 197.
அய்யனார் கால்புரவு 135.
அரசடி வயல் 100.
அரசர் மகன் எம்பெருமான் 40 (35).
அரம்பை 7.
அரவுதவழ் சடிலத்து அண்ணலார் 173.
அரிதக நாச்சியார் 38, 41, 196.
அரியர புத்திரர் 196
அரியர புத்திரன் 92, 174.
அரியரன் (உம்மைத்தொகை) 6.
அரியான் (ஓர் ஊழியர்) 174.
ஆலம் மேவிய கண்டன் 80.
ஆனைக்கொம்பன் (நெல்) 79, 119.
இடைச்சிப்பாறைக்குளம் 158.
இடைச்சிப்பாறைப் பத்து 99, 159.
இந்திரன் 147.
இருநிதியாளன் (குபேரன்) 14.
இருளப்பன் 36.
உத்திரதேசம் 92.
உதிரமாலைதன் செல்வன் ஓடைப்பள்ளம் 147.
ஏமநீதியான் 36.
ஏமருணாசலம் பழனவயல் 150.
ஓடைக்கரைக் குஞ்சரம் 41.
ஓடைக்கரை நயினார் 174.
கங்கைக் குலத்தோர் 83.
கச்சி 143.
கடந்தைப் பாறை 44.
கடல்வண்ணன் (அய்யனார்) சா. க. 4.

கடல்வாசர் (திருமால்) 43.
கணபதி 35.
கந்தசாமி (முருகன்) 35.
கரிசல் புரவு 100.
கருஞ்சூரை 78, 119.
கருஞ்சை 6.
கருஞ்சை மலை 59.
கருஞ்சை வரையார் 163.
கருஞ்சை வல நதி 73.
கருஞ்சை வனத்தீசர் (சிவபிரான்) 31.
கருணாலய பாண்டியன் சா. க. 6.
கருப்ப நதி (கற்பக நதி) 31.
கருவேலன்குளப்பற்று 100.
கல்லக நாடு 20, 24, 26, 39.
கலவன் 119.
கலிங்கக்கோன் குளம் 142, சா. க. 6.
கலிங்கன் குளம் 141, 147.
கலிங்கிகுளம் 73. 100
கலைமுனி மலைமுனி (அகத்தியர்) 2.
கற்பகக்கௌரி 196.
கற்பக நதி 59, 154, 163, (31).
கற்பக பெண்ணாரமுத வரை 32, 41, 163.
கற்பக நாச்சியார் 37, 60, 148, 172.
காடைக்கழுத்தன் 119.
கார்அணி நிறத்தோன் (அய்யனார்) சா. க. 5.
காராளர் குலம் சா. க. 3.
கால்(ப்) புறவு 32.
காவல்காரர் ஏரிப்புறவு 99.
காவித் திருமாமலை 197 (2, 14).
காளிவண்ணான் 62.
குகன் சா. க. 1, 44, 49.
குடதிசைக் கிரி 47.
குடநாகம் காத்த குவடு 46.
குத்துக்கல்லு மாடன் 131.
குரும்பை 77.

குவளைமலைப் பதியான் 14 (2, 197).
குளப்புரவு 32, 124.
கொச்சி 143.
கோமகன் 35.
கோமதி 163.
கோழிக் கொடியவர் (அய்யனார்) 3, 143.
கௌரி (பார்வதி) 51, 60, 163.
சங்கரன் குளம் 99.
சங்கிலி மாடன் 37.
சடையன் (நெல்) 119.
சண்பகக்கா 121.
சந்நிதியின் பூபாலர் (சேர சோழ பாண்டியர்) 40 (35).
சித்தன் பெருமான் 36.
சித்திரைக்காலி 119, 141.
சிவசங்கரேசர் (கோமதிசமேதர், தென்கூடல்) 163.
சின்னணைஞ்சு சமுத்திரம் 99.
சீதரன் பனுவல் (திவ்வியப்பிரபந்தம்) 15.
சீவித வயல் 99.
சுப்பிரமணியன் (நூலாசிரியர்) சா. க. 1.
சுப்பிரமணிய நாவலவன் (நூலாசிரியர்) சா. க. 4,5.
சுப்பிரமணியப் பங்கயன் (முருகக் கடவுள்) 40.
சுரர் நிருபன் (இந்திரன்) 47.
சூச்சக்கோன் குளப்பற்று 99, 156.
சூலபோரன் 80.
செங்காவித் திருமலை 2 (14, 197)
செஞ்சிப்பூமி 17.
செஞ்சி மாநகர்ப் பிறந்தோன் (அய்யனார்) 153.
செஞ்சி வாசகர் தஞ்சை இடையர் 85.
செண்பகக்கா நாடு (நன்னகர் நாடு) 29.
செண்பக நல்லூர் 18.
செம்புலிப் பாண்டியன் 18.
செம்புலிப் பெரியசாமி சா. க. 6.
செம்புலிப் பெரியசாமி சத்திரம் 172.
செம்மிளகி 119, (141).

செவி கேட்கும் பெருமான் 174.
சேர சோழ பாண்டியர் சந்நிதி 35, (40).
சேவற்கொடி உயர் குழகன் (முருகன்) 2.
சேவற்பதாகை (அய்யனாருடையது) 111.
சைவசமயம் 31.
சைவமடபதியோர் 172.
சொக்கேசர் சா. க. 3, 163.
சொரிகுரும்பை 77, 119.
சோணி (பள்ளி) 95.
ஞானியர் குளம் 99, 157.
தஞ்சை இடையர் 85
தண்டல் எனும் திரத்தான் தருமன் 103.
தர்மன் (இமயன்) 14.
தருமன் (தண்டல் ஊழியர்) 103.
தாண்டவராயர் (சிவபிரான்) 18.
திரிகூடபதி சா. க. 6.
திரிகூடமலை 18, 163.
திருஉறை மார்பன் (திருமால்) சா. க. 4.
திருச்செந்தூர் 44.
திருத்தேவி (தேவியாரம்மன்) 6 (196)
திருநல்லூர் சா. க. 5, 101, 163.
திருநல்லூர்க் கரையாளர் 163.
திருநாமத்தழகு 3, 6.
திருநாமத்துச்செல்வி 79.
திருநாமழகி 145, 196.
திருநாமமழகி தேவியார் 13, 61.
திருநாமழகு 47.
திருநெல்வேலிச் சரகம் சா. க. 6.
திருமலை 163.
திருமாநகர் (திருவேட்டைநல்லூர்) சா. க. 1.
திருமேனிப் பெரும்பற்று 99.
திருவேட்டை அண்ணல் 5, 7, 63, 176, 195.
திருவேட்டை அய்யன் சா. க. 1, 4, 14, 15, 35, 64, 137, 167.

திருவேட்டை அய்யனார் 131, 147, 152, 160.
திருவேட்டை உத்தமன் 150.
திருவேட்டைக் கடவுள் 79.
திருவேட்டைக் காரணன் 40.
திருவேட்டைக் குடும்பன் 12, 13, 129.
திருவேட்டைக் கோமான் 54, 103.
திருவேட்டைக் கோன் 90.
திருவேட்டைச் சாத்தா சா. க 3, 87, 104.
திருவேட்டைச் செல்வன் 56.
திருவேட்டை நகர் சா. க. 6.
திருவேட்டை நம்பன் 2
திருவேட்டை நயினார் 117.
திருவேட்டை நல்லூர் சா. க. 2, 4, 22, 28, 96.
திருவேட்டை நாதன் சா. க. 6, 1, 11, 45, 48, 50, 58, 65, 122, 125, 141, 163.
திருவேட்டைப் பண்ணவன் 34, 173.
திருவேட்டைப் பார்த்திபன் 102.
திருவேட்டை மூர்த்தி 102.
திருவேட்டை வானவன் 44.
திருவேட்டை வித்தகன் 52, 75, 106, 132, 142, 144, 149, 153, 154, 155, 196.
துரைப் பெரியசாமி 6, 33, 158
தென்கூடல் (மதுரை, சங்கரன் கோயில்) 163.
தென் நல்லூர் 11.
தென்பொதிகை மேரு சா. க. 6.
தேவியாரம்மன் 196.
நகரிப்பிள்ளையார் திருத்து 137.
நதிகுல திலகன் சங்கரநாராயண பூமன் 159.
நல்லூர் 13, 17, 19, 30, 32, 38, 44, 48, 50, 58, 59, 62, 72, 77, 83, 91, 92, 98, 110, 111, 136, 142, 148, 160, 162, 174, 197.
நல்லூர்த் தருமன் பிள்ளையார் குளப்புறவு 126.
நல்லூர்ப்பள்ளி (மூத்த பள்ளி) 112,118 183,185
நல்லூராள் (மூத்த பள்ளி) 108.

நன்னகர்ப் பள்ளி (இளைய பள்ளி) 113,187.
நன்னகரத் தேசம் 18.
நன்னகர நாடு 10,23,27,32.
நாகலடித்தட்டு 100.
நாச்சியார் வயல் 100.
நெடுவாலக் கட்டளை 100.
நேமியோன் (திருமால்) 35.
பசுபதி (சிவபிரான்) 46.
படியைப் புரக்கும்நாதன் (திருமால்) 49.
பதங்கன் (கருடன்) 82.
பரசுராமய்யர் (சோதிடர்) 123.
பரஞ்சோதி மடபதி 174.
பலவேசக்காரன் (கருப்பசாமி) 37
பழமறையின் முன்உதித்த பண்ணவன் 41.
பாண்டவர் சகாயன் (திருமால்) 8.
பாண்டி (பாண்டி மண்டலம்) சா. க. 3.
பாண்டிய சோழனும் வேண்டிய சேரனும் (சந்நிதி) 159,
(35,40)
பாண்டியன் குளம் 99.
பார்த்திபர் புத்திரன் (அரசர் மகன் சந்நிதி) 159, (35,40).
பிணமாலை சூடும் பெருமாள் 36.
புட்கலை பூரணம் மருவும்நாதன் 93.
புட்கலையின் பூரணம் 137.
புல்லை (திருப்புல்லாணி) 82.
புழுதிபுரட்டி 119.
புஷ்கலா தேவி 6.
பூமகள் (திருமகள்) 83.
பூரணத்தம்மாள் சா. க. 6.
பூரண புட்கலை 196.
பூரண புட்கலை துணைவன் 60
பூரண புட்கலை முயங்கும் குழகன் 163.
பூரண புட்கலை மேவும் காரணன் 17.
பெரியசாமி (துரை) 6, 33, 158.
பெரிய நாயகம் (தெய்வம்) 42.

பெரிய மடைப்போக்கு 174.
பெருவெள்ளை (நெல்) 119
பொன் சுப்பிரமணியன் (நூலாசிரியர்) 2, 3.
பொன்னம்பலவேள் (நூலாசிரியர் தந்தை) சா. க. 1.
போத்தி (தெய்வம்) 37.
போத்தியப்பன் (தெய்வம்) 33, 163.
மணல்வாரி 78, 119
மதுராபுரி மீனாம்பிகை கட்டளை 174.
மருதை (பள்ளி) 93.
மல்லி 119.
மலைமுண்டன் 78.
மன்றாடி (சிவபிரான்) 2.
மாடத்து ஈசுரன் 42.
மாடன் (தெய்வம்) 36.
மாயாண்டி முகில் தெப்பக்குளம் 100.
மாரன் (காமன்) 58.
மால் (திருமால்) 82.
மாலை (பள்ளி) 96.
மானிய நிலங்கோனார் குளம் 99.
மிளகி 141.
மீனவன் 154.
மீனாட்சிதாசன் (நூலாசிரியர்) சா. க. 1, 4, 6.
மீனாட்சியம்மை சா. க. 1, 35 163.
முகலிங்கக்கோன் (சிவபிரான்) 90.
முகுந்தன் 53.
முத்தாறு 9.
முத்துவிளங்கி 119.
முருகன் 37, 42.
மூவர் சொல் (தேவாரம்) 22.
மேரு 1.
மேல் திசை நாடு 21, 25.
மேல் நாட்டுப் பள்ளி (இளையபள்ளி) 107, 131. 182, 185.
மேல்நாடு (நன்னகர் நாடு) 9, 74.
மேனாட்டவள் (இளைய பள்ளி) 110.

யாளிப்படி (அய்யனாருக்கு உரியது) 143.
வடகரைக் கதிபன் சா. க. 3
வடகரை நகர் 6.
வடகரையான் 79.
வண்டன் (தெய்வம்) 37.
வாரணக்கொடியார் (அய்யனார்) 93.
விசுவகுல கைலாசம் (ஒரு செல்வர்) 153.
விதியாளன் (பிரமன்) 14.
வீதிவிடங்கன் 119.
வீரணன் (தெய்வம்) 42.
வீரவாள் கருப்பன் (தெய்வம்) 36.
வீரன் (தெய்வம்) 37
வெள்ளை வடகாசி (சாலம் செய்பவர்) 174.
வேட்டை நல்லூர் 44.
வேதன் 1.
வேளமூர்த்தி 76.

செய்யுள் முதற்குறிப்பு அகரநிரல்

(எண்: பாடல் எண்)

அச்சியென்று 190
அஞ்சக்கண்டது 29
அட்டதிசையும் 149
அண்டர்கள் ஏத்திடும் 140
அதிகாரி பண்ணைக்காரன் 180
அநியாயப்பட்டது 178
அயமான வன்கண் 115
அரம்பை நடனம் 147
அரவு தவழ்சடிலத்து 173
அழகொழுகும் 41
அன்றுநீ சொல்லின் 111
அன்றும் இன்றும் 81
ஆடிச் செய்யிலே 156
ஆதி மா மநு 23
ஆலம் மேவிய கண்டன் 80
ஆளடிமையோ 188
ஆற்றுப்புனல் 135
ஆறுகொண்ட 110
ஆனமுகில் 44
இடியைச் சாடும் 49
இரவை நுகரும் 34
இளவழலைப் பாம்பு 71
உடுவை நகும் 128
உடையான் திருவேட்டை 171
உழவுமள்ளர் 126
உள்ளது சொன்னால் 182
உள்ளது நீ சொன்னது 186
உள்ள நடை சற்றும் 66

எத்தனையானாலும் 117
என்செய்வேன் என்ற 85
ஏராடு சத்தமும் 12
ஏரார்ந்த கற்பார் 87
ஏலவே அநுகூல 100
ஒருவன் விசும்புக்கு 47
கண்ணீர் சொரிய 133
கதிசேர் தவம் 14
கருஞ் சைவலக் குழல் 73
கரை கொள்ளாமல் 60
கலிகாலம் 106
கழை வேண்டி 39
கள்ள மேகம் 76
களங்கரிய பெருமானும் 32
கற்றை மென்குழல் 10
கனி பெருகும் 40
கார்காட்டும் மேதி 58
காரண முதலும் 93
கான மலர்ப்பொழில் 31
கான மாமலர் 83
கானான தோன்றி 88
குண்டணி பலதும் சொல்லி 179
குல மனைக் காராமல் 177
குலையடிப் பிடித்த 96
குழகன் இரவி 63
கேணம் வைத்துக் 112
கைவரிசை செய்வார் 164
கொச்சி வரைக்கும் 143
கொண்ட கள்ளு 194
கொல்லை மீது 24
கோதிக் குழையும் 7
கோலம் நோக்கிய 21
கோளி மயிரில் 62
சங்கம் ஏறும் 79
சடையான் அழகன் 127

சந்து முடமாய் 89
சாட்சி என்ன 181
சாதியும் சனமும் 113
சித்திரச் செவ்வாச்சி 38
சீர்த்திவளர் திருவேட்டை 102
சீர்வந்த நல்லூர் 48
சீர்வாழி 197
சீர்விளங்கிய 146
சீலக்கரை 3
சீல மறையோன் 124
சீற்றம் வளர 101
சீறிவரும் காளை 130
சூன்முதிர்ந்து 167
செகமே புகழ் சா. க. 1
செஞ்சி மாநகர்ப் 153
செம்பசிய நெற்றி 16
செம்பொன்னால் 122
செல்லாத காலம் 107
செழிக்கும் திருவேட்டை 56
செழுந்தரங்கக் கிருபை 132
சென்ற பள்ளன் 70
சேலான ஒண்கண் 61
சைவ மடபதியோர்க்கும் 172
சொல்லாப் புவனம் 148
சொலவரிதான 119
தட்டத்தலைப் 176
தட்டைத் தலைச்சி 157
தண்மதி தழுவும் 121
ததிகால வெகுவேலை 104
தவள ஒளிபழுத்து 33
தனியே வயலில் 91
தாரணி மீதில் சா. க. 5
தாரு சேரும் 55
தாளி வயற்று 64
திங்கள் சேர் சடையன் 90

திங்கள் தோறும் 26
திங்களில் மும்மாரி 163
திரத்தில் புரமுருக்கி 170
திருஉலவும் திருவேட்டை சா. க. 7
திருஉறை மார்பன் சா. க. 4
தீராத வினை 151
தெரியாமல் தின்றது 193
தெரிவரிதாய 196
தெறித்தல்லோ போறான் 94
தேசங்களும் புகழும் சா. க. 6
தேசம் புகழும் கீர்த்தியார் 139
தேசம புகழும் திருவேட்டை சா. க. 2
தேட்டுக்காரப் பள்ளனை 74
தேடித்தளரும் 53
நங்கை கமலச் 145
நஞ்சிருந்து வாழும் 43
நரைசேரும் தார் 50
நலம் செய்பவருக்கு 141
நறவொழுகும் 42
நாதன் திருவேட்டை 195
நாரோடு இளம்கயல் 98
நாளும் தவம் 160
நித்திரையில் 92
நிலையில் சுரந்த 59
நீண்ட திரிகூடம் 18
நோக்கம் இல்லாமல் 187
பட்டினியே 109
படநாகம் காத்த 46
படிஏழு உருவ 54
பண்டு விதனமுற்ற 103
பண்ணையாரே 67
பணை மிகுந்திடும் 159
பத்தருக்கு அமுது 155
பல்லைக் காண்பித்து 114
பள்ளத் தடாக 118

பள்ளம் மேடும் 57
பழன நடுகை 161
பழியெனும் பாரான் 97
பாகத்தில் கிடந்த 134
பாட்டின் இசையில் 30
பாராமல் என் முகத்தை 175
பாராளும் பாண்டியினில் சா. க. 3
பாவு மாமணி 22
பாழி மூன்றினில் 27
புயலேறும் ஓங்கல் 9
புல்எலாம் குசை 28
புல்லில் மிடியற 129
புல்லை மால் பதங்கன் 82
புள்ளிப் பண்ணை 183
பூகனகம் மேவி 11
பூத்திருக்கும் குச்சு 184
பூதலம் எல்லாம் 15
பூரணை புட்கலை 17
பெண்பாலுக்குள்ள 108
பேணினது அறிவீர் 95
பொயிலி உருதி 138
பொன்செய்த முந்நூல் 105
பொன்பயிலும் முந்நூல் 7
பொன்னின் மகுடம் 152
மங்கலம் சேர்ந்து 123
மங்காது இளம் கோதை 69
மங்காமல் தலைவரும் 2
மஞ்சு சூழும் போரிலே 144
மஞ்சு மேல் நிமிர் 20
மண்எலாம் ஒருதோளில் 84
மத்தி மடுவில் 142
மதிதவழும் கோபுரத் 158
மழையோங்கிய 174
மாத்தை சந்திப்பு 45
மாமணி மகுடம் 35

மாய்வில்லாத நல்லூர் 77
மாவும் யானையும் 1
மாவெடுத்த கோட்டில் 19
மானிய நிலம் 99
முண்டக மலர்பொரு 4
முத்தமிழோர் போற்றும் 75
முத்துச்சரம் அணி 150
முழவாளை பாய்ந்து 166
முன்னை நின்ற 65
மூற்றுவாய் நிதி 25
மேரான பொற்புயத்தான் 86
வட்டிளங் குய 13
வடகரை நகர்க் 6
வண்டல் ஓடும் நிலம் 78
வண்டன் வீரன் 37
வாத வயலில் 137
வாய்ந்த தெளி 165
வாய்ந்திடும் சிலைக்கு 8
வார்த்தை மிஞ்சிப் 185
விடிவு ஏது 131
விண்டு வந்து கூடி 168
விண்டு வந்து தாவும் 162
விண்வணை முற்றும் காக்கும் 136
வித்தை கற்ற 72
விரி மருப்புக் 120
விரை உலாவும் 154
வீத்தாதே 189
வீரவாள் கருப்பனுக்கு 36
வீறுநான் இட்ட 68
வெட்கமென்ன 191
வென்றி திருவேட்டை 52
வேதம் பயில் மறையோன் 125
வேறு பராமுகமோ 116
வைகறைத் துயில் 169

உதவி நூற்பட்டி

1 கதிரைமலைப் பள்ளு
(பதி.) திருமயிலை சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை
முதல் பதிப்பு. சென்னை. 1935.

2 கந்தபுராணம்
ஸ்ரீகாசிமடப் பதிப்பு. முதல் பதிப்பு.

3 காஞ்சிப்புராணம்
(பதி.) ஞானசம்பந்தம் பிள்ளை
முதல் பதிப்பு. வெகுதானிய புரட்டாசி.

4 சிலப்பதிகாரம்
டாக்டர் ஐயரவர்கள் பதிப்பு.
9-ஆம் பதிப்பு. சென்னை. 1978.

5 சுவாமிநாதம்
(பதி.) டாக்டர் செ. வை. சண்முகம்
அண்ணாமலைப்பல்கலைக்கழகம். முதல் பதிப்பு. 1975.

6 செங்கோட்டுப் பள்ளு
(பதி.) கவிஞர் ந. கந்தசாமி.
முதல் பதிப்பு. இராசிபுரம். 1967.

7 சென்னைக் கந்தசாமிக் கலம்பகம்
வண்ணச்சரபம் சுவாமிகள்.
கல்யாணம் அண்ட் கம்பெனி, சென்னை.

8 ஞானப்பள்ளு
(பதி.) ஆ. சதாசிவம்
அரசு வெளியீடு, இலங்கை. முதல் பதிப்பு. 1968.

9 தண்டிகைக் கனகராயன் பள்ளு
(பதி.) திருமயிலை சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை
முதல் பதிப்பு. சென்னை. 1932.

10 தமிழ் இலக்கியக் கொள்கை-6
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை. 1981.

11 திருச்சுழியற் பிள்ளைத்தமிழ்
திருச்சுழியல் தேவஸ்தானம். 2-ஆம் பதிப்பு. 1965.

12 திருப்பேரூர்க் கலம்பகம்
தவத்திரு. சிரவை. கந்தசாமி சுவாமிகள்
சிரவைக் கௌமார சபை. முதல் பதிப்பு. 1978.

13 திருப்பேரூர்ப் புராணம்
பேரூர் பட்டிலிங்கர் தேவஸ்தானம். 2-ஆம்பதிப்பு.
1930.

14 திருமலை முருகன் பள்ளு
(பதி.) மு. அருணாசலம்
சக்தி காரியாலயம். சென்னை. முதல் பதிப்பு. 1944.

15 திருவிடைமருதூர்க் கலம்பகம்
திருவிடைமருதூர் தேவஸ்தானம். 1963.

16 தேவாரம் - அடங்கன் முறை (இரு தொகுதிகள்)
சமாஜப் பதிப்பு. சென்னை. 1953.

17 நவநீதப்பாட்டியல்
டாக்டர் உ. வே. சா. நூல் நிலையம், சென்னை
1961.

18 நாட்டரசன்கோட்டை அருண்மிகு கண்ணுடைய
நாயகியம்மன் கும்பாபிஷேக நகரத்தார் திருப்பணி
மலர் 6—9—1976.

19 பதினொன்றாம் திருமுறை
ஸ்ரீகாசிமடப் பதிப்பு. 1950

20 பள்ளு இலக்கியம்-பேரா. ந. வீ. செயராமன்
மணிவாசகர் நூலகம், சிதம்பரம். முதல்பதிப்பு 1980.

21 பறாளை விநாயகர் பள்ளு
(பதி.) திருமயிலை சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை
சென்னை. 3ஆம் பதிப்பு. 1956.

22 பன்னிரு பாட்டியல்
(பதி.) கா. ர. கோவிந்தராஜ முதலியார்,
சை. சி. நூ. கழகம், சென்னை 1978.

23 பிரபந்தத் திரட்டு
(பதி) முனைவர் அன்னிதாமசு
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. 1980.

24 பிரபந்த தீபிகை
(பதி.) முனைவர் அன்னிதாமசு
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. 1982.

25 புறநானூறு
டாக்டர் ஐயரவர்கள் பதிப்பு.
த. ப. க நிழற்படப் பதிப்பு. 1985.

26 புறப்பொருள் வெண்பாமாலை
டாக்டர் ஐயரவர்கள் பதிப்பு.
சென்னை. 9ஆம் பதிப்பு. 1963.

27 பெரியபுராணம்
ஸ்ரீகாசிமடப் பதிப்பு. 1950.

28 மயிலாசலக் கலம்பகம்
வண்ணச்சரபம் சுவாமிகள்
மாதைக் கௌமார மடாலயப் பதிப்பு.

29 முக்கூடற்பள்ளு
(பதி.) வித்துவான் ந. சேதுரகுநாதன்
சை. சி. நூ. கழகம், சென்னை. 1984.

30. வையாபுரிப்பள்ளு
(பதி.) அ. அருணாசலம் பிள்ளை
பழனி தண்டாயுதபாணி தேவஸ்தானம். 1943.

31. The Village Gods of South India
Rt. Rev. Henry Whitehead D.D.
Asian Educational Service, New Delhi. 1983.

தமிழில் உள்ள பள்ளு இலக்கிய அகரநிரல்

(ஒவ்வொரு பள்ளைப்பற்றியும் இப் பதிப்பாசிரியர் அறிந்த செய்திகள் மட்டும் தரப்படுவதால் இப்பட்டியல் அமைப்பில் ஒரேமாதிரியாக இருக்க வாய்ப்பில்லை. கொடுக்கப்பெறாத தகவல்கள் அறியப்பெறவில்லை எனக் கொள்க.)

1 அகத்தியர் பள்ளு — இது மருத்துவமா?
பதி. அப்துல்லா முகம்மது. 1907.

2 அம்பலப் பள்ளி — ஏசற்பள்ளு என்பதுவும் இதுதானா?
தில்லைவிடங்கன் மாரிமுத்துப்பிள்ளை.

3 இராசநகர்ப் பள்ளு — இராசைப் பள்ளு.

4 இரும்புலிப்பள்ளு

5 இளசைப்பள்ளு

6 ஈரோடை ஐயனாரப்பன் பள்ளு — ஈரோட்டுப்பள்ளு இதுவா?
முத்துக்கருப்பப் புலவர். சஞ்சீவி என்பவரால் நடிக்கப் பெற்றுள்ளது.

7 உரிமை நகர்ப்பள்ளு

8 ஏசற்பள்ளு — அம்பலப்பள்ளி என்பது இதுவா?
தில்லைவிடங்கன் மாரிமுத்துப்பிள்ளை

9 ஏம்பல் முத்தையசாமி பள்ளு —
மாபாடிக்கோட்டை அப்புசாமிப் புலவர்

10 கட்டி மகிபன் பள்ளு

11 கண்ணுடையம்மை பள்ளு — பனசைப் பள்ளு இதுவே.
முத்துக்குட்டிப்புலவர், நாட்டரசன் கோட்டையில் 6—9—1976-இல் வெளியான கும்பாபிஷேக மலரில் உள்ளது.

12 கதிரைமலைப்பள்ளு
பதி. திருமயிலை சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை 1935.

13 கழுகுமலைப்பள்ளு
எட்டையபுரம் ஆ. கருத்நமுத்துப்பிள்ளை.

14 கன்னிவாடி ஜமீன்தார்ப் பள்ளு — பங்காரு அப்பைய
நாயகர் மீது காளி இராமசாமிப் புலவர்

15 குருகூர்ப்பள்ளு
ஆழ்வார் திருநகரி சடகோபப் புலவர்

16 கூடற்பள்ளு

17 கொடுமளூர் முருகன் பள்ளு
இராமநாதபுரம் நல்லவீரப்பப் பிள்ளை

18 கொடுமுடிப்பள்ளு

19 கோட்டூர் நயினார் பள்ளு

20 சங்கிலி வீரபாண்டிய வன்னியனார் பள்ளு
நகரம் முத்துசாமிக் கவிராயர்

21 சாத்துடையான் பள்ளு
மோசுகுடி குப்பண்ணப் புலவர்

22 சிவகங்கை மருதப்பன் சேர்வைகாரர் பள்ளு
சிங்கவனம் சுப்பிரமணிய பாரதி

23 சிவசயிலப் பள்ளு
இராமநாதன் கவிராயர்

24 சீகாழிப் பள்ளு
சீகாழி அருணாசலக் கவிராயர்

25 சீரங்கராயன் பள்ளு
பேரூராதீனச் சுவடி எண் 267

26 செண்பகராமன் பள்ளு

27 சேமூர்ப் பள்ளு
முருகதாசர் (வண்ணச்சரபம் அல்லர்)

28 சேற்றூர்ப் பள்ளு (ஜமீன்தார் மீது)
சங்கரமூர்த்திக் கவிராயர்

29 ஞானசித்தர்ப் பள்ளு
வேலாயுத அடிகள்

30 ஞானப்பள்ளு (கிருத்தவம்)
தெல்லிப்புழை பேதுருப்புலவர்
பதி. ஆ. சதாசிவம். இலங்கை 1968.

31 தஞ்சைப் பள்ளு

32 தண்டிகைக் கனகராயன் பள்ளு
மாவைச் சின்னக்குட்டிப் புலவர்
பதி. திருமயிலை சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை. 1932.

33 தருமசாத்தா பள்ளு (பெருங்கரை ஐயனார்மீது)
கவிகுஞ்சர பாரதி. 1828

34 தியாகராசப் பள்ளு
அருணாசலப் புலவர்

35 தியாகேசர் பள்ளு
சுப்பிரமணிய தாசர்

36 திருக்கோட்டியூர்ப் பள்ளு

37 திருச்செங்கோட்டுப் பள்ளு
பொன்னுச் செல்லைய பாரதி
பதி. கவிஞர் ந. கந்தசாமி. 1967

38 திருச்சுழியற் பள்ளு
1964இல் வெளிவந்த திருச்சுழியல் துணைமாலை யம்மன் பிள்ளைத்தமிழில் 6 பாடல்கள் உள்ளன.

39 திருச்செந்திற் பள்ளு

40 திருநீலகண்டன் பள்ளு

41 திருப்புடைமருதூர்ப் பள்ளு
இராமநாதன் கவிராயர்.

42 திருப்புனவாயிற் புள்ளு
சிறுகம்பையூர் சருக்கரைப்புலவர் II

43 திருமக்காப் பள்ளு (இசுலாமியம்)
பதி. இரகீம் கான் சாயபு. 1990

44 திருமலை முருகன் பள்ளு
பெரியவன் கவிராயர்
பதி. மு. அருணாசலம். 1944.

45 திருவாரூர்ப் பள்ளு-ஞானப்பள்ளு, ஆதிப்பள்ளு இதுவே
கமலை ஞானப்பிரகாசர்

46 திருவிடைமருதூர்ப் பள்ளு

47 திருவேட்டை அய்யன் பள்ளு
பொன். சுப்பிரமணிய நாவலர்
பதி. ப. வெ. நாகராஜன். 1991

48 தில்லைப் பள்ளு — அம்பலப்பள்ளி, ஏசற்பள்ளு இதுவா?
தில்லைவிடங்கள் மாரிமுத்துப் பிள்ளை

49 தென்காசிப் பள்ளு

50 தென்காசைப் பள்ளு
இராமநாத கவிராயர்

51 நாட்டரசன் கோட்டைப் பள்ளு
காண்க. கண்ணுடையம்மன் பள்ளு

52 நெல்லைப் பள்ளி
சிதம்பரத் தொண்டைமான்

53 பறாளை விநாயகர் பள்ளு
சின்னத்தம்பிப் புலவர்
பதி. திருமயிலை. சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை
3ஆம் பதிப்பு 1956.

54 புதுவைப் பள்ளு
பொன்னுச் செட்டியார்

55 பெருநாழி வில்லியணைத் தேவர் பள்ளு
முதுகுளத்தூர் பிச்சைப் புலவர்

56 பொய்கைப் பள்ளு
அங்கமுத்துப் புலவர்

57 போடிநாயக்கனூர்ப் பள்ளு (ஜமீன்தார் மீது)
பெரியகுளம் சிந்தூரப்பொட்டுக் கவிராயர்.

58 போரூர்ப்பள்ளு

59 மன்னார் மோகனப் பள்ளு - மோகனப்பள்ளு இதுவா?

60 மாந்தைப் பள்ளு
சிதம்பரதாண்டவ மதுரகவிராயர்
பதி. சங்கரலிங்க பாரதி

61 முக்கூட்டுப் பள்ளு
தென்பழனிப் பிள்ளை

62 முக்கூடற்பள்ளு
விரிவு. என்னயினாப்புலவர்
பதி. ந. சேதுரகுநாதன். 1984

63 முதலிகாமிண்டன் பள்ளு
பேரூராதீனச் சுவடி எண் 191

64 மோகனப் பள்ளு
தத்துவலிங்க ஐயர்

65 மோரூர் நல்லபுள்ளியம்மன் பள்ளு
கல்வெட்டறிஞர் புலவர் செ. இராசு அவர்களிடம் சுவடி உள்ளது.

66 வடகரைத்துரைப் பள்ளு.
வடகரை ஜமீன் பிரபந்தத் திரட்டில் உள்ளது 1917.

67 வேளாளர் பள்ளு
எட்டையபுரம் ஆ. கருத்தமுத்துப்பிள்ளை

68 வைசியப் பள்ளு

69 வையாபுரிப் பள்ளு
குமார விசயகிரி வேலச்சின்னோவையன்
பதி. அ. அருணாசலம் பிள்ளை. 1943.

(இவற்றைத் தவிர சிங்கவனம் சுப்பிரமணிய பாரதி "சில பள்ளுகள்" இயற்றியுள்ளார் என அறியப்படுகிறது. அவற்றுள் சிவகங்கை மருதப்பன் சேர்வைகாரர் பள்ளு ஒன்றைத்தவிர மற்றவற்றின் விவரம் தெரியவில்லை.)

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
6	26	slso	also
8	27	pecpal	pipal
8	30	endowmen	endowment
9	25	kshathiya	kshathriya
14	2	பூடிட்	பூட்டி
42	2	60 ஆம் பாடல்	50 ஆம் பாடல்
51	30	இவ்வராறு	இவ்வரலாறு
58	1	முடிந்தளவு	முடிந்த அளவு
66	2	கலைமணி	கலைமுனி
102	18	செம்முளகி	செம்மிளகி
109	8	வயத்த	வயத்து
133	7	மூன்றாமடியின் பொருள்	மூன்றாமடியின் வடிவம்
138	14	மிகக்சிறந்ததுவே	மிகக்சிறந்ததுவே
154	29	ஏர்பூட்டும் கயறு	ஏர்பூட்டும் கயிறு
157	14	கள்	சுள்
158	3	க்கூடற்.	முக்கூடற்.
170	24	அய்யமுன்	அய்யன்முன்

வேண்டுகோள்!

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை, பல்வேறு இடங்களில் உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்கு முன் எம்மிடம் அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

எம்மிடம் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை எமது சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின், சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப் பதிப்பில் 5 பிரதிகளும் பெறுவர்.

எனவே "நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளை எமது மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

இயக்குநர்

தஞ்சாவூர் **சரசுவதி மகால் நூலகம்**